# மதுரகவி
# திருமலைத் திருப்பிரபந்தங்கள்

பதிப்பாசிரியர்
இரா. கோவிந்தராஜன்

உரையாசிரியர்கள்
கம்பன்
செல்வி ஆ பூமா எம்.ஏ., எம்.எட்.,

விற்பனை உரிமை
**வேதா பப்ளிகேஷன்ஸ்**
8, நரசிம்மபுரம், மைலாப்பூர்,
சென்னை-600 004.

விலை ரு 45/-

தி-1 ஏ

I. S. B. N. 81-900287-4-0

Title : Thirumalai Thirupirapanthangal

Language : Tamil

Author : Madurakavi Srinivasa Iyengar

First Edition : 1992

Editor : Sri. R. Govindarajan

Commentators : Kamban and Miss. A. Bhooma M.A, M.Ed ,

Copy rights reserved with

Sri. R. Govindarajan
8. Narasimhapuram, Mylapore
Madras - 600 004

Size : Demy

Printed at : Caxton Press, G. T Madras-1

Copies can be had from

VETHA PUBLICATIONS
8. Narasimhapuram
Mylapore
Madras - 600 004

Price : Rs. 45/- Postage Extra

---

"This Book is published with the financial Assistance of Thirumala Thirupathi Devasthanams, Thirupathi, A.P., under their scheme aid in Publishing Religious books."

## Poem and Literature related to life

As in architecture or painting, the beauty of lyric or other poetry is in its form, not in bricks or stones, the builder uses or the colours the painter's brush picks up to make the picture. Even the emotions that go to form the substance of a poem are so intimately blended with the form that it is as diffiault to translate it as it is to rebuild pomegranate fruit or an orange or a rose

Although the highest literature transcends regionalism and through it, when we are properly attuned, we can realise the essential oneness the human family, in most cases, so long as that family divided into nations, litarature cannot escape the effect of such a division. Literature is closely related to life. The realities of life, are idealised by genius and given the form that makes drama, poetry, or even great prose. That form perishes when translated from one language into another, The material part of the narrative or the thought can of course be conveyed, but poetry does not lie their. At the most, the scientific curiosity of the students of comparative literature may be satisfied, but the function of the poetry is outside that field. Most healthy men and women are alike, if we gather and compare information about their height and other physical particulars, but beauty is of infinite variety.

C. Rajagopalachari,
Governor General of India.

# பதிப்புரை

மதுரகவி ஸ்ரீநிவாச அய்யங்கார் சுவாமிகள் ஒரு இலட்சத்திற்கும், அதிகமான செந்தமிழ்க் கவிதைகள் அடங்கிய பல நூல்களை இயற்றி உள்ளார். இவர் இயற்றிய நூல்கள் பலவும் இன்றும் கிடைக்கவில்லை. கிடைத்த நூல்களில் ஒரு சிலவே இதுவரை வெளிவந்துள்ளன.

மதுரகவியும் அவர் குடும்பத்தில் பலரும் கவிஞர்கள் இவர்கள் அனைவரும் திருமலை ஆண்டவனைப் பற்றிப் பல ஆயிரம் கவிதைகளை இயற்றி உள்ளனர். இவரும் பல ஆயிரம் கவிதைகளைத் திருவேங்கடமுடையான் மீது பாடி உள்ளார். அவ்வாறான நூல்களுள் 1) திருமலைத் திருப்புகழ் 2) திருமலைச் சிந்து 3) ஸ்ரீ வேங்கடேசன் சந்திரகலாமாலை 4) ஸ்ரீ வேங்கடேசன் திருப்பதிகம் 5) ஸ்ரீநிவாசன் துதி 6) ஸ்ரீ வேங்கடேசன் பலசந்தமாலை 7) திருமலை மால் சப்தமணி மாலை எனும் ஏழு நூல்களும் இப்பதிப்பில் இடம் பெறுகின்றன. திருமலைத் திருப்புகழ், திருமலைச் சிந்து ஆகிய இரு நூல்களும் 'கம்பன்', என்ற திரு. எம். கே. இராமன் அவர்கள் செய்த அரிய உரையைப் பெற்றுள்ளன. பிற ஐந்து நூல்களுக்கும் பேராசிரியப் பெருந்தகை சி. ஜெகந்நாதாசாரியார், அவர்கள் துணையுடனும், செல்வி எம். ப. சியாமளா எம்.ஏ., எம்.பில்., உதவியுடனும், செல்வி பூமா எம்.ஏ., எம்.எட்., தனது அரிய உரையை வழங்கி உள்ளார்.

மதுரகவியாரின் வாழ்க்கை வரலாறும், அவர் இயற்றிய நூல்கள் விவரங்களும், ஏழு மலையான் மீது அவர் இயற்றியுள்ள ஏழு கவிதைப் பிரபந்தங்கள் உரையுடன் வெளிவருகின்றன. இந்த நூலின் மெய்ப்புத்

தாள்களைச் சிறப்புடன் திருத்தி, அரிய ஆலோசனை பலவும் வழங்கி உதவிய நண்பர் திரு ஆ. தசரதன் அவர்களுக்கு நன்றி பல உரித்தாகுக. இந்த நூல் வெளி வரப் பல அரிய குறிப்புக்களும், விவரங்களும், உதவி களும் செய்து தந்த திருமதி வேதவல்லி, திரு கே. ராஜ கோபால் நாயுடு, திருமதி கே. லதா, திருவாளர்கள் ஏ. ஆர். வி. இராஜு, வெ. பாலகங்காதரன், செந்தில் குமார் போன்றவர்களுக்கும் நன்றி.

திருமதி வேதவல்லி எழுதி உள்ள, **வட வேங்கடவனின் வரலாறும்** இங்கு இடம் பெறுகின்றது. பேராசிரியப் பெருந்தகை சி. ஜெகந்நாதாசாரியார் அவர்கள், மனமுவந்து ஒரு அழகிய அணிந்துரையை இங்கு வழங்கிப் பெருமை செய்துள்ளார். செல்வி பூமாவின் முன்னுரையும் இங்கு இடம் பெறுகின்றது.

கண்கண்ட தெய்வமாகக் கலியுகத்தில் விளங்கும் திருமலை வாசன் மீது இயற்றப் பெற்றுள்ள இந்த ஏழு நூல்களும், **"திருமலைத் திருப்பிரபந்தங்கள்,"** என்ற தலைப்பில் ஒரே நூலாக வெளிவருகின்றன.

இந்த நூலை வெளிக் கொண்டுவரப் பொருள் உதவி செய்து சிறப்பித்த திருமலை திருப்பதி தேவஸ் தானத்திற்கும், குறிப்பாக அதன் ஆசிரியர் குழுவுக்கும், சிறப்பாக ஆணையாளர் அவர்களுக்கும் ஏனையோருக் கும் நன்றி பல.

மிகவும் சிறந்த முறையில் இந்த நூலை அச்சிட்டுத் தந்த காக்ஸ்டன் அச்சகத்தாருக்கும், குறிப்பாக, திரு பிரகாஷ் அவர்களுக்கும் நன்றி பல உரித்தாகுக. அட்டைப் படத்தை நன்கு வரைந்த ஓவியர் திரு சித்ர லேகாவுக்கும் நன்றி பல,

இந்த நூல் சிறப்பாகவும், விரைவாகவும் வெளிவருவதற்கு அருளாசி வழங்கிய திரு சக்கரவர்த்திப் பெருமானுக்கும், ஆஞ்சநேய பகவானுக்கும் ஆயிரம் ஆயிரம் அஞ்சலிகள்.

வேதா பப்ளிகேஷன்ஸ் மூலம், இந்த நூல் வெளிவருகின்றது. இந்த அரிய நூலைத் தமிழ் மக்களின், பொன்னார் திருவடிகளில் வைத்து வணங்குகின்றோம்.

வணக்கம்

இரா. கோவிந்தராஜன்

8, நரசிம்மபுரம்
மைலாப்பூர்
சென்னை-4
2-10-92

## எத்தகைய கவிதை இயற்கை இன்பத்தைத் தரும்?

அதுவே கனிந்து அங்கிருந்து
அதுவே நழுவி அது விழுந்து

அதுவே கவியாய் நற்சீராய்
அதுவே அமைந்ததென் றக்கால

முதுமா மறைக்கு முதல்வோனும்
முகுந்தன் எனுமிந் திரனும்

புதிதாம் என்ன அதிசயிப்பார்
புத்தகத் தைக்கற் றோரே

— **மேல் மாயில் முனிவர் ஸ்ரீ விலட்சணானந்தர்**

# அணிந்துரை

பேராசிரியர் சி. ஜெகந்நாதாசார்யர்

எம். ஏ., (வரலாறு), எம். ஏ. (தமிழ்), எல். டி, பி. ஓ. எல்.,
டிப்ளமோ (புவியியல்)
வித்வான், யு. ஜி. சி. பேராசிரியர்
முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர்,
விவேகாநந்தர் கல்லூரி, மயிலை,
சென்னை-4

... . ...

தொண்டர்தமக் கமுதுண்ணச் சொன்ன விந்தத்
தேறியநல் ஸ்ரீநிவாஸன் துதியி னோடு
பண்டைமுறை பிறழாமல் ஸ்ரீவேங்க டேச
மாலைதனை நன்னடையிற் பனுவ லாக்கித்
திண்ணமுடன் சுவைபலவும் தோற்றும் வண்ணம்
தீட்டியசீர் மதுரகவி செய்த சேவை
எண்பெருசந் திரகலா மாலை ஸப்த
மணிமாலை பலசந்த மாலையெனத் திகழும்.

புலவர்க்கு நல்விருந்து பேராப் பிறவிச்
செலவிற்கு நல்மருந்து மாயோன் - நலத்தின்
புதுவைப்பு நற்றமிழ்க்கோர் பாமாலை என்னே!
மதுரகவி யார்செய் திறம்.

திருவேங்கடமலையில் திருக்கோயில் கொண்டுள்ள ஸ்ரீநிவாஸன் மீது செந்தமிழ்ப் பாண்டி நன்னாட்டு, அநுமந்த நகரம், ஸ்ரீ. உ. வே. மதுரகவி ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமிகள் இயற்றிய பாடல்கள் அனந்தம். அவற்றுள் ஸ்ரீநிவாஸன் துதி, ஸ்ரீ வேங்கடேசன் திருப்பதிகம், ஸ்ரீ வேங்கடேசன் சந்திரகலா மாலை, திருமலைமால் ஸப்தமணிமாலை, ஸ்ரீ வேங்கடேசன் பலசந்த மாலை திருமலைத் திருப்புகழ், திருமலைச்சிந்து என்ற ஏழு பிரபந்தங்கள் தனிச் சிறப்பு வாய்ந்து, அவர் திருவேங்கடமுடையானிடத்துக் கொண்ட காழ்ந்த பக்திக்குச் சான்று பகர்வனவாகும். இப் பாடல்களில் வைணவ

விசேஷார்த்தங்கள் பொதிந்திருத்தல் மாத்திரமேயன்றி, "சொல் நோக்கும் பொருள் நோக்கும், தொடை நோக்கும், நடை நோக்கும், துறையின் நோக்கோடு எந்நோக்கும்" காண இலக்கியமாகின்றன. சுருங்கக் கூறின், விழுமிய கருத்துக் களோடு செறிந்து இலங்குவது இப்பாடல்களின் தொகுப்பாகும். இப்பாடல்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள், கற்போர் சிந்தனையைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளன. ஒரு சில கருத்துக்களைக் காண்போம்.

I **ஸ்ரீ நிவாஸன் துதி :-** இதனில் மூவாசைகளின் பொல்லாமையையும், செல்வம் வந்துற்றகாலை தெய்வம் சிறிதும் பேணாமையையும், ஆசார முறை நீதி வழுவுதலின் இழிவையும், ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் ஆழங்காற் படாமையின் மடமையையும் எடுத்துக்காட்டி நமக்கு அறிவுறுத்துகிறார் மதுரகவியார். "அந்தர் பஹிபர்ச தத்ஸர்வம் வ்யாப்யம் நாராயண ஸ்தித :" என்ற சுருதி வாக்கியத்தை நினைவுறுத்துகிறார்.

இப்பாடல் பதினான்கு சீர்கள் கொண்ட, அரையடியாகி, ஓரடிக்கு இருபத்தெட்டுச் சீர்கள் கொண்டு வந்து, மொத்தம் கழிநெடிலடிகள் நான்கு கொண்ட இருபத்தெண் சீராசிரிய விருத்தம்.

II **ஸ்ரீ வேங்கடேசன் (திருப்பதிகம்) :-** இது பன்னிரண்டு பாடல்கள் கொண்ட பதிகமாகத் திகழ்வது. பதிகமென்பது - தெய்வத்தைப் பற்றிப் பெரும்பாலும் பத்துச் செய்யுட்களால் பாடப்பெறும் பிரபந்தம். இதனுள், திருவேங்கடமுடையானின் திவ்விய ஸ்வரூபமும், காமம் முதலாய மனமாசு நீக்கி, அருள் புரியும் தன்மையையும் பிறப்பறுக்கும் பெற்றிமையையும், "**தத்துவமஸி**" என்ற சுருதி வாக்கியத்தின் ஆழ்பொருளை உணர்த்தும் வகையில் அவனது பரத்துவத்தையும், தன் பக்தர்களைப் புரக்கும் தகைமையினையும், அவனருட்கண் பார்வையொன்றே அல்லல் அனைத்தையும் போக்கி,

வீட்டின்பம பயக்கும் தன்மையையும், கதியென்றும தானாவான் அவனே, என்பதையும், "ஸ்ரீ விலட்சணானந்தன்" என்ற பக்தனுக்குக் காட்சி தந்த, கருணையையும் எடுத்துக்கூறி, மங்களா சாஸனத்தோடு தலைக்கட்டுகிறார் மதுரகவியார். இத்திருப்பதிகம் எண்சீராசிரிய விருத்தம்.

**III ஸ்ரீ வேங்கடேசன் சந்திரகலா மாலை :-** இது காப்புச் செய்யுளோடு பதினாறு பாடல்களைக் கொண்டுள்ளது. சந்திரனுக்குக் கலைகள் பதினாறு. ஆதலின் அதனைப் பின்பற்றி இப்பிரபந்தம், இப் பெயர் இடப் பட்டுள்ளது. (ஆண்டாள் சந்திரகலாமாலை என்ற நூற் பெயரும் நினைக). இதன் காப்புச் செய்யுள், அனுமந்த நகரத்திலே கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அநு மனைப் பற்றியது. சிறிய திருவடியாகிய அநுமனைக் காப்பாகக் கொண்டது பெரிதும் பொருத்தமுடைத்தாகும்.

இப்பிரபந்தத்தில், திருவேங்கடத் துறையும் பெருமானின் பாதாதிகேச வருணனையழகு மாறாடிக் கிடக்கும் அநுபவ ரஸத்தையும், வினைகள் அனைத்தையும் சூரியன் முன் இருள் போல இழிந்தோடச் செய்யும் அருளின் திறத்தையும், மங்கையர்பால் நாசமானம் பாசம் விட்டு நன்னெறி செலுத்தி, யமபயம் போக்கும் பெற்றிமையையும், வேதமும் தொடர நின்ற பாதாரவிந்த மலரின் பெறலருமையையும், மன்னா மனிசரைப் பாடித் திரிவாரை நாக்கொண்டு மாணிடம் பாடாதவாறு, அருள் புரியும் தன்மையையும், நாத்தழும் பேற நாத்திகம் பாடித் திரியும வரையும் தன்காற்காட்டி அருளும் சீர்மையையும், மட் பூவினையிட்டு வழிபட்ட தன் பக்தன் குலாலன் ஒருவன் மீது கருணை சுரந்த வகையினையும், "தாரமே கிளை மக்கள் மாதர்" என்று நோயே பட்டு உளைவோரையும், தமது கடைக் கண் விழியால் ஈடேற்றும் சிறப்பினையும், தோஷபூயிஷ்ட ரானாரையும், பரம கிருபா நலம் பாலித்து உய்விக்கும் தகைமை யையும், அத்துவித மார்க்க நெறியுற்றவருக்குத் தோன்றாத

அற்புதத்தையும், சரணாகத வத்ஸலன் என்னும் படியும், அநாதரக்ஷகப் பரந்தவன் என்னும் படியும் போற்றப்படும் புகழினையும், அலர்மேல் மங்கையுறை மார்பனான ஏற்றத்தையும் மனமடக்கித் தமதடிமலரை நாடுவோரை வாழ்விக்கும் பெருமையினையும், வேத வேதாந்த ஆகம புராண மனுநீதி முதலியவற்றுக்கு ஆதியாய் இலங்கும் பெற்றிமையையும், அவனே காத்தற் கடவுளாகும் வீறுடைமையையும், அவனது கோயில் வலம் வந்து, வழிபாடு செய்து அவன் சேவையையும் காணும் அடியார்கள் நல்வாழ்ச்சி பெறச் செய்யும் கருணையையும், விளக்கமுற எடுத்துக் கூறித் தலைக் கட்டுகிறார் மதுரகவியார்.

இந்நூற் செய்யுட்கள், பதினான்கு சீர் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

IV **திருமலைமால் ஸப்தமணி மாலை:** இப்பிரபந்தம் ஏழு பாடல்களைக் கொண்டு மிளிர்வது. "ஸப்த" என்ற வட சொல், ஏழு என்று பொருள்படும். (ஏழாவது திதி ஸப்தமீ எனப்படுதல் காண்க) இதில் கூறப்படும் பொருட்சுருக்கம் வருமாறு :- ஆசிரியர் திருவேங்கட முடையானின் வடிவழகு காண விழைந்து, நைச்யானு ஸந்தானம் செய்து. சரணடைந்த தம்மை வரவேற்று அருளும் படியும், அநந்ய கதித்வம், அநந்ய சரணத்வம் தெரிவித்துத் தம்மைப் புரந்து, தயை பண்ணும் படியும், இறுதியாக அவனது மலரடிமேல் அன்பு மாறாத இன்பத்தைப் பெறல் வேண்டியும் பிரார்த்தனை செய்து தலைக் கட்டுகிறார்.

இப்பிரபந்தத்திலுள்ள முதலிரண்டு செய்யுட்கள் எழுசீராசிரிய விருத்தமாகவும், ஏனைய ஐந்தும் அறுசீராசிரிய விருத்தமாகவும் வந்துள்ளன காணலாம்.

V **ஸ்ரீ வேங்கடேசன் பலசந்த மாலை :** இப்பிரபந்தம் இருபத்தைந்து செய்யுட்கள் கொண்டு அமைந்து மங்கள வாழ்த்தோடு முடிகின்றது. இருபத்தைந்து தத்துவங்களுக்குச் சூசகமாக இருபத்தைந்து செய்யுட்கள் அமைந்துள்ளன.

இதனில், பலவகைச் சந்தக் குழிப்புகள் வருவதைக் காணலாம். இதன் செய்யுட்கள் - வெண்பா (செ. 15), கலிவிருத்தம், தரவு கொச்சகக் கலிப்பா, அறுசீர், எழுசீர், எணசீர் ஆசிரிய விருத்தங்கள் கொண்டு வந்துள்ளமை காணலாம். மாலை மாற்று அணிபட வந்த செய்யுட்களும் (செ. 12, 13) உள.

இதனில், யமபயம் நீக்குமாறும் (செ. 2, 17, 25), காமப்பித்து நீக்கித் தம்மை ஏற்குமாறும் (செ.3), தம் பாதத்தில் சேர்த்தருளுமாறும் (செ. 7, 5), தமக்கு இரங்குமாறும் (செ.19), தம் அகந்தையைக் கடியுமாறும் (செ 23) வேண்டுகிறார், மற்றும், தாய் இரங்கல் (செ. 6, 11), இற்செறிப்புற்ற தலைவி வருந்தல் (செ.10), தலைவனைப் பிரிந்த தலைவி குயிலை நோக்கி இரங்கிக் கூறுதல் (செ.6 11) முதலிய அகத்துறைகள் பயில வைத்துள்ளார். மற்றும், திருவேங்கடவன், ஸர்வ வியாபி (செ.4) என நிலைநாட்டுகிறார். மேலும், கோழிக்கோன் குலசேகரனைப் பின்பற்றிக் கிருஷ்ணனுக்குத் தாலாட்டுப் பாடியது (செ.5) பாராட்டத்தக்கது. இங்ஙன் பல. இந்தப் பலசந்த மாலை படிக்கப்படிக்கத் தெவிட்டா இன்பம் பயக்குமென்பது ஒருதலை.


VI **திருமலைத் திருப்புகழ்** : 32 திருப்புகழ்ச் சந்தப் பாடல்கள் கொண்டு அமைந்த நூலாகும் இது. முப்பத்திரண்டு பாடல்களும், முப்பத்திரண்டு வெவ்வேறு சந்தங்களைக் கொண்டு அமைந்துள்ளன. தொட்ட இடமெல்லாம் இந்நூல் தித்தித்துச், சந்த நயம் துள்ளிக் களிநடம் புரிய மதுரகவியார் திருமலைத் திருப்புகழை இயற்றி உள்ளார்.

VII **திருமலைச் சிந்து** : மதுரகவியார், காவடிச் சிந்து அமைப்பில் திருவேங்கடத்து உறையும் எம்பிரான் மீது 10 சிந்துப் பாடல்களை, அகத்துறை அமைப்பில் நயம் மிக யாத்துள்ளார். சந்தநயமுள்ள இப்பாடல்கள் திருவேங்கடமுடையான் மீது சாத்தப் பெற்ற வாடா மலராகும்.

அநுமந்த நகரம் ஸ்ரீ. உ. வே. மதுரகவி ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமிகளுக்குத் திருவேங்கடத்தானிடம் பெரிதும் ஈடுபாடு உண்டென்பது இப்பிரபந்தங்களால் விசதமாகிறது. ஆகவே, அவரது பாமாலைகளை உரையுடன் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினர் வெளியிடுவது ஸ்ரீ வேங்கடேசப் பெருமானின் திருவுள்ளத்துக்குப் பேருகப்பாகும். இந்த நற்பணியில் அடியேனையும் அணிந்துரை வழங்கி ஈடுபடும்படி செய்த செல்வி ஆ. பூமா, எம். ஏ., எம் எட் அவர்களுக்குச் சகல சௌபாக்கியங்களையும் அருளவேண்டுமெனத் திருவேங்கடவனைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன். மற்றும், அலர்மேல் மங்கையுறை மார்பன் திருவடிகளை அனவரதமும் வழுத்துகின்றேன்.

இங்ஙனம்
சி. ஜெகந்நாதாசார்யர்

திருவல்லிக்கேணி,
சென்னை-5.
2-10-92



# முன்னுரை

செல்வி ஆ. பூமா எம்.ஏ., எம்.எட்.,

செந்தமிழ்ப் பாண்டி நன்னாட்டு, அனுமந்தம்பட்டி என்ற ஊரில் எழுந்தருளியிருந்த, மதுரகவி ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஸய்யங்கார் சுவாமி அவர்கள் இயற்றியருளி யிருக்கின்ற, ஸ்ரீநிவாஸன் துதி, ஸ்ரீ வேங்கடேச திருப்பதிகம், ஸ்ரீ வேங்கடேசன் சந்திரகலாமாலை, திருமலைமால் ஸப்தமணி மாலை, ஸ்ரீ வேங்கடேசன் பல சந்தமாலை என்கின்ற அரிய ஐந்து நூல்களுக்கும் உரை எழுதும் படியாக ஸ்ரீமான் ஆர். கோவிந்தராஜன் அவர்கள் பணித்தபடி, அடியள் உரை வரைந்துள்ளேன்.

மேலும் மதுரகவி அவர்களின் மேம்பாட்டிற்கேற்பப் பல வைணவக் கருத்துக்கள் மிளிரும்படி இவ்வுரையை வரைந்துள்ளேன். இதன் மூலம் திருவேங்கடவனின், பரத்துவமும், அவர் அடியார்களுக்கு அருளும் திறமும், அவரது கல்யாண குணங்களும் ஆங்காங்கே காட்டப் பட்டுள்ளன.

இப்பிரபந்தங்களில், வருணனைகள், சொல்லணி, பொருளணிகள், புராண வரலாறுகள், நைச்சியானு சந்தானங்கள், வைணவச் சிந்தாந்தப் பேருண்மைகள், அடியவர் பக்திச் சிறப்பு இன்னோரன்னவை மெருகுறச் சிறந்து மிளிர்கின்றன. சுருங்கக் கூறின், இந்நூல்களை ஓதுகின்றவர்கள், இதனில் ஈடுபடாமலிரார். இத்தகைய நூல்களுக்கு, என்னுடைய சிறுமையையும், மதுரகவி அவர்களின் பெருமையையும், நன்கு உணர்ந்தவளா யினும், திருவேங்கடவனின் அருளை முன்னிட்டே, இவ் வுரையை எழுதத் துணிந்தேன்.

''கம்பரொரு நூல் படைத்தார் ; கவியரசன் உள்ள
மது களித்துப் பொங்கு
உம்பரெலாம் நிறைவு பெற உரைகண்ட'

உரையாசிரியச் சக்கரவர்த்தி ஸ்ரீ வைஷ்ணவத்தின் பூஷணம் ஸ்ரீ வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் அவர்களின் பெருமை அம்புவியில் தோன்றவென, ஆவல் உந்தக் கம்பரென, கலைஞரென, கவிதையென, குவலயத்தோர் பருகவென, பரக்க வாய்ந்த, அடியளது ஆசிரியப் பெருந்தகை, ஸ்ரீ உ. வே. சி. ஜெகந்நாதாசாரியரவர்களின் ஆசியை முன்னிட்டு இவற்றை வரைந்துள்ளேன்.

இந்நற்பணிக்கு, பல்லாற்றானும் உதவிய அடியளது உடன்பிறவாச் சகோதரி, செல்வி எம். ப. சியாமளா, எம்.ஏ., எம்.ஃபில்., (பி.எச்.டி., ஆய்வு மாணவி) அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது காலத்தையெல்லாம் வீணாக்காமல், தமிழ்த் துறையிற் செலுத்தி, எனக்குத் தோன்றாத் துணையாய் நின்று, திருவருள்புரியும் அருட்பெருங்கடலாகிய திருவேங்கடவனின் திருவடிகளை அனவரதமும் வாழ்த்தி வழுத்துகின்றேன்.

1-10-92 இங்ஙனம்,
திருவல்லிக்கேணி, ஆ. பூமா
சென்னை-5

# மதுரகவி
# திருமலைத் திருப்பிரபந்தங்கள்

## பொருளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| பதிப்புரை | V - VI |
| அணிந்துரை | VIII - XIII |
| முன்னுரை | XIII - XV |
| வடவேங்கடவன் வரலாறு | XVII - XLIII |
| மதுரகவி திருமலைத் திருப்புகழ் | 1 - 64 |
| ,, திருமலைச் சிந்து | 65 - 128 |
| ,, ஸ்ரீ வேங்கடேசன் சந்திர கலாமாலை | 129 - 162 |
| ,, ஸ்ரீ வேங்கடேசன் திருப்பதிகம் | 163 - 184 |
| ,, ஸ்ரீநிவாசன் துதி | 190 - 192 |
| ,, ஸ்ரீ வேங்கடேசன் பலசந்தமாலை | 193 - 218 |
| ,, திருமலைமால் சப்த மணிமாலை | 219 - 228 |
| மதுரகவி வாழ்க்கை வரலாறு | 229 - 234 |
| மதுரகவி இயற்றிய நூல் விவரங்கள் | 235 - 240 |


---

# வடவேங்கடவன் வரலாறு

## திருமலை வாசன் திருப்புகழ்

சொன்னால் விரோதம்இது ஆகிலும்
சொல்லுவன் கேண்மினோ
என்னாவில் இன்கவி யானொரு
வர்க்கும் கொடுக்கிலேன்
தென்னா தெனாவென்று வண்டு
முரல்திரு வேங்கடத்து
என்னானை என்னப்பன் எம்பெரு
மானுள னாகவே —ஆழ்வார்

மதுரகவி இயற்றிய **திருமலைத் திருப்பிரபந்தங்கள்** என்ற இந்த நூலில், ஏழு பிரபந்தங்கள் இடம் பெறுகின்றன. இவை ஏழும் ஏழுமலையானின் பெருமைகளை எடுத்து இயம்புகின்றன. நரகவி பாடாத வரகவியான இவரது மதுரமான வாக்கினால் கலியுக வரதனாக விளங்குகின்ற வடவேங்கடவன் பெருமைகளை இங்கு அறிவோமாக!

மதுரகவி ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஒரு பரம்பரைக் கவிஞர். இவரின் குடும்பத்தில் வந்த கவிஞர்கள் அனைவரும், திருமலையானின் பெருமைகளைத் தங்களுடைய தேனினும் இனிய செந்தமிழ்க் கவிதைகளில் பாடிப் பரவசமானவர்கள். இவரது தந்தை, மதுரகவி சுந்தரராஜ அய்யங்காரும், அவரது தந்தை அழகரும், அவரது தந்தை அண்ணாவும் திருமலை ஆண்டவனைப் பாடியிருக்கிறார்கள். சுந்தரராஜ அய்யங்கார் இயற்றிய **''சேடகிரிப் பதிகம்''**, என்ற அரிய நூல் நமக்குக் கிடைத்துள்ளது. மதுரகவிக்குப் பெண் தந்த மாமா, வீரராகவ சுவாமிகள், **''திருவேங்கடத்தல புராணம்''** என்ற அரிய பெரிய நூலை இயற்றியுள்ளார். மதுரகவியின் கனிஷ்ட சகோதரரும்

விடுதலை வீரருமாகிய ஆசுகவி, அ. சு. கிருஷ்ணசுவாமி அய்யங்கார் "திருப்பதிப் பதிகம்" என்ற நூலை இயற்றி யுள்ளார்.

மதுரகவியாரின் மருமகனாரான மேல்மாயில் ஸ்ரீ விலக்ஷணானந்த சுவாமிகள் ஸ்ரீ வேங்கடநாதனைப் பற்றிப் பாடாத நாளே இல்லை என்று கூறலாம். அவர் இயற்றியுள்ள கவிதைகளும், பிற நூல்களும் வடவேங்கடவனின் பெருமை களைப் பல இடங்களில் பலவித வண்ணத்திலும், எண்ணத் திலும் எடுத்துரைக்கின்றன. அவற்றில் சிலவற்றை இங்குக் காண்பது சாலப் பொருந்தும்.

கிரேதாவில் தோத்தாதிரி, திரேதாவில் சேஷாத்திரி, துவா பராவில் அஞ்சனாத்திரி, கலியில் வெங்கடாத்திரி என்று பெயர் வாய்ந்த திருவேங்கட பர்வதத்தில், ஸ்ரீ நிவாஸப் பெருமாள் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள தலத்தில், உத்திர திசையில், ஒரு யோசனை தூரத்தில், அமைந்துள்ள சனத் குமார தீர்த்தக் கரையில் தவம் செய்யப் புறப்படுவதற்கு முன், மலையில் இருந்து கீழே இறங்கி வரும்போது, "தபோ நாதம்" என்ற ஒருஅரிய நூலை, விலக்ஷணானந்தர் திருவாய் மலர்ந் தருளினார். இந்த நூல் வேங்கடவனின் பெருமையை நன்கு எடுத்து உரைக்கின்றது.

ஆதி நாரணனே! போற்றி
அலர்மேலு நாதா போற்றி
வேத பூரணனே போற்றி
வேங்கடத்து உறைவாய் போற்றி
போதலர் பொருளே போற்றி
புண்ணிய சொருப போற்றி
சீதரா துளப மாலே
திருவடி போற்றி! போற்றி!

திருவேங்கட மலையில் பல்வேறு புண்ணிய தீர்த்தங்கள் இருக்கின்றன. ஸ்ரீ விலக்ஷணானந்த சுவாமிகள் எல்லோரும் உய்யும் வண்ணம், வேங்கடேச அதர்வசீர்ஷம், ஸ்ரீ வேங்கடேச கவசம் என்ற அரிய வேத பொக்கிஷத்தை உபதேசம் மூலம், நித்திய பாராயணத்திற்கு அன்பர்களுக்கு வழங்கினார். இந்த நூலை, குரு பகவான் மூலம் பெற்றவர்கள் ஏராளம்! ஏராளம்! **ஸ்ரீ வேங்கடேச கவசம்** என்ற இந்த வேத நூலில்,

சுவாமி புஷ்கரணி, ஸகிதாய, வராகதீர்த்த, சக்ரதீர்த்த, பில்வதீர்த்த, கோகர்ப்ப பாண்டவதீர்த்த, பாபநாச அந்தர்க்கங்க நாகதீர்த்த, ஸ்வர்ணமுகி கபில தீர்த்த, சரஸ்வதி தீர்த்த, ஜாபால கடதீர்த்த, வைகுண்ட தீர்த்த, பிரம்ம தீர்த்த, சேஷ தீர்த்த, சீதா தீர்த்த, பீம தீர்த்த, துல்ய தீர்த்த, அனந்த தீர்த்த, நாரத தீர்த்த, துவாதசாதித்ய தீர்த்த, சனக சனந்தன சநாதன சனத் குமார தாரா அஷ்டோத்தர சததீர்த்த, ராமகிருஷ்ண தீர்த்த, தும்புரு தீர்த்த, சிம்ஹ தீர்த்த, கோதீர்த்த, கல்ய தீர்த்த, கஷ்யப மார்கண்ட கருட தீர்த்த, சண்முக தீர்த்த, சிவதீர்த்த, தாடன தீர்த்த, பத்மகோஸ பௌருஷதீர்த்த, பத்மதீர்த்த, இந்திரதீர்த்த ஆகிய சர்வ தீர்த்தங்களும், இந்தத் திருமலையில் இருக்கின்றன.

**எம்பெருமான்:** இங்குக் கோவில் கொண்டுள்ள எம்பெருமான் எல்லோருக்கும் எளியனாய் விளங்குபவன். இவனுடைய மகிமைகளைக் காண்பதற்கு முன் இவனையே ஸ்ரீ விலக்ஷணானந்தரின் வேதவாக்கியங்கள் மூலம் பிரார்த்தனை செய்வோம்.

"எங்கும் நிறைந்ததாய், யதார்த்தமானதாய், ஜோதி ஸ்வரூபமாய், சர்வ ஜீவ தயாபர சொருபமாய், உபாசந்த உண்மையாய், மதங்களுக்கு அப்பாற் பட்டதாய், துவைத ரகித அத்வைதமாய். வேத வாக்கியங்களுக்கு எட்டாததாய், இருதயங்கள், பிராண, இந்திரிய, வர்க்கங்களுக்கு, அகோசரமாய், மற்றொரு வஸ்துவால் அறியக் கூடாததாய் ஸகல, வடிவ சாம்ராஜ்யமாய், சதோதயமாய், சர்வ சாட்சியாய், இன்பதுன்ப ரகிதமாய், இச்சையில்லாதவர்களுக்கு விளங்குவதாய், சர்வாத்ர சொரூபமாய், அபேதமாய், உப்சாந்த நிமல

பாய், அகண்டகார வடிவமாய்ப் பிரகாசிக்கப்பட்ட பிரம்ம சொரூபப் பரம்பொருளை, எனது அன்னியமில்லாத பாவனையால் வேற்றுமையற்ற நமஸ்காரம் செய்து விடுகின்றேன்.

**எல்லாம் கொண்ட ஏகாந்தம்**

எல்லாம் செய்யவல்ல எமது இறைவனே !
எங்கள் ஆண்டவனே ! சுயம் சோதி வடிவப்
பரம்பொருளே ! பிரகிருதிக்குக் அப்பாற் பட்ட
பரதெய்வமே ! மூலமாயை கடந்த இடத்து
உதிக்கும் மூலப் பொருளே !
மும்மலங்கள் அற்றவர்க்கும்
முன்னிற்கும் மோனமே, துரிய,
துரியாதீதத்து உச்சியில்
விளங்கும் சோதிமயமே சத்திய சாந்த
சமரச சமயாதீத வஸ்துவே சகல
ஆன்ம கோடிகளும் ஏகமாக வணங்கும் சத்தா
மாத்திரமே எங்கள் அன்பு மயமே
பிரபஞ்சத் தொடரிடர் தீர்க்கும் பேரின்பமே
சாந்தியில் உதயமாகும் சற்குணமே
சச்சிதானந்த வடிவம் தாங்கிய சமரஸமே
சங்கற்பமில்லாதவரிடம் விளங்கும் சகச வாழ்வே
சர்வ சக்திகளுக்கும் ஆதார பூதமே
எமது சகுன ரூப உபாஸனா முகூர்த்தமே,

என்ற அந்த, ஸ்ரீ வெங்கடேஸ்வர பரப்பிரம்மத்தை வணங்கி நிற்போம்.

கலியுக வரதன், கண்கண்ட தெய்வம் என்று போற்றி வணங்கப்படுகின்ற, திருவேங்கட நாதனைப் பாடாத கவிஞர்களே இல்லை என்று கூறினோம். திருவேங்கடமுடையான், ஸ்ரீநிவாசன், அலர்மேல்மங்கைத் தாயார், ஆனந்த

விமான நிலையம், சேஷாசலம், ஏழுமலை, சுவாமி புஷ்கரணி, பாபவிநாஸம், கோகர்ப்ப தீர்த்தம், ஆழ்வார் தீர்த்தம், ஆகாச கங்கை இவையெல்லாம் திருமலையில் பிரசித்தம். வேங்கடம் என்றால் அழிவற்ற, குறைவற்ற செல்வம் என்று பொருள். தொண்டரடிப்பொடி ஆழ்வாரைத் தவிர மற்ற ஆழ்வார்கள் அனைவரும் 202 பாடல்களால் இந்தத் திரு வேங்கடமுடையானை, மங்களாசாசனம் செய்து மகிழ்ந்தனர்.

## 2. பிருகு முனிவர் கொண்ட பெருங்கோபம்

''யானும் தானாய் ஒழிந்தானை
யாதும் யவர்க்கும் முன்னோனைத்
தானும் சிவனும் பிரமனும்
ஆகிப் பிணைத்த தனிமுதலைத்
தேனும் பாலும் கன்னலும்
அமுது மாகித் தித்தித்தென்
ஊனில் உயிரில் உணர்வினில்
நின்ற ஒன்றை உணர்ந்தேனே!

என்ற நம்மாழ்வார் பாசுரப்படி, நமது ஊனிலும், உயிரிலும் கலந்து நிற்பவன், இந்தக் கலி காலத்திலே, கண் கண்ட தெய்வமாய் விளங்குகின்ற திருவேங்கடமுடையான் என்பதை ஒவ்வொருவரும் தன்னுடைய அனுபவ ரீதியில் உணர்ந்திருப் பார்கள். ஸ்ரீயப்பதியான திருவேங்கடமுடையான் எல்லாச் சேதனர்களுக்கும் உய்வு தர வேண்டும் என்பதற்காகவே எல்லோரும் வணங்குவதற்கு ஏற்றபடி, பரவாசுதேவராக, அர்ச்சா அவதார மூர்த்தியாக, திருமலையில் எழுந்தருளியிருக் கின்றார். பதினொரு ஆழ்வார்கள் (தொண்டரடிப் பொடியாழ் வார் தவிர) இந்தத் திருவேங்கடமுடையானைப் பாடிப் பரவச மாகியிருக்கின்றார்கள். ஆழ்வார்களால் மங்களா சாசனம் செய்யப்பட்ட திருத்தலங்கள் மட்டுமே, திவ்ய தேசங்களாகச், சிறப்புடன் பேசப்படுகின்றன. இந்த முறையில் பதினொரு

ஆழ்வார்களால் மங்களா சாசனம் செய்யப் பெற்ற இந்தத் திரு மலையின் சிறப்பும், பெருமையும் உயர்ந்துள்ளன.

கச்சியப்பர், அத்திரி, பிருகு போன்ற முனிவர்கள் ஒன்று கூடிக் கங்கை நதிக்கரையில் உலகர் உய்ய, ஒரு பெரிய யக்ஞம் செய்து கொண்டு இருந்தார்கள். வேள்வி முடிந்ததும் ''வேள்வியின் பலனை மும்மூர்த்திகளில், எவர் மக்கள் பால் அதிக அன்பும், ஆர்வமும் கொண்டு மோட்சத்தை அளிக்கும் ஆற்றலைப் பெற்றுத் திகழ்கின்றாரோ, அவர்க்கு மட்டும் யக்ஞ பலனைக் கொடுங்கள்'' என்று கூறிவிட்டு வழக்கம் போல, நாராயணா! நாராயணா! என்று கூறிவிட்டு நாரத முனிவர் நகர்ந்தார்.

நாரத முனிவர் சென்ற பிறகு, முனிவர்கள் அனைவரும் யக்ஞ பலனை யாருக்கு அளிப்பது என்று ஆலோசித்தார்கள். மும்மூர்த்திகளையும் சோதனை செய்து அறிய வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். இதன்படி மும்மூர்த்திகளையும் சந்தித்துச் சோதனை செய்து, உண்மையை அறிய, பிருகு முனிவரைத் தேர்ந்தெடுத்தனர். இவர் சத்திய லோகத்திறகுச் சென்று பிரம்ம தேவனைப் பார்த்தார். பிருகு முனிவரை வரவேற்காமல் படைப்புத் தொழிலிலேயே, பிரம்மன் கண்ணும் கருத்துமாக இருந்தார். நீண்ட நேரம் காத்திருந்த பிருகுமுனிவர், பிரமனுக்கு எதிரில் தானாகவே ஒரு ஆசனத்தில் அமர்ந்தார். "வீடு தேடி வந்த என்னை வரவேற்கவும் இல்லை, ஆசனமும், அளிக்கவில்லை. கடமையி லிருந்து வழுவிய உனக்குப் பூவுலகில் கோவிலே இல்லாமல் போகட்டும். வந்தவரை வரவேற்காத உன்னை எவரும வணங்கி வழிபட மாட்டார்கள்'', என்று சாபமிட்டுப் பிருகு முனிவர் அகன்றார்.

மும்மூர்த்திகளில் ஒருவரான சிவனைப் பார்க்கக் கயிலாயததிற்குப் பிருகு முனிவர் சென்றார். அந்தப்புரத்தில் இருந்த சிவனைப் பார்க்க, அங்கேயே பிருகு முனிவர் சென்று விட்டார். தனிமையில் இருக்கும் போது, தன்னிடம் வந்த பிருகு முனிவரைக் கோபத்துடன், சிவன் நோக்கினார். இதனைக் கண்ணுற்ற பிருகு முனிவர், ''முக்கண்ணா! மக்கள் பால் அன்பு செலுத்தி அவர்களை வழி நடத்த வேண்டும். இலாத

விட்டு விட்டுப் போக போக்கியத்தில் மூழ்கி உள்ள உன்னைப் பூவுலகில் உள்ள மக்கள் இலிங்க வடிவில் பூஜிக்கக் கடவர்'', என்று சாபமிட்டு, வைகுண்டத்திற்குச் சென்றார்.

வைகுண்ட வாசன், ஆதிசேஷன் மீது அரிதுயில் கொண்டிருந்தார். பிருகு முனிவர் வருவதையும் அறிந்து கொண்டார். அங்குச் சென்ற பிறகு, சிறிது நேரம் காத்திருந்து கடுங்கோபம் கொண்ட பிருகு, கார் வண்ணனின் மார்பில் காலால் எட்டி உதைத்தார்.

உதை வாங்கிய அரி திடுக்கிட்டு எழுந்தார். உதைத்த பிருகு முனிவரின் கால்களைப் பிடித்துக் கொண்டு. ''ஐயோ மலர் போன்ற உனது மெல்லிய பாதம், இரும்பு போன்ற என் மேனியில் பட்டதினால் கன்னிப் போய் விட்டதே, வலிக்கிறதா என் மடி மீது அமர்ந்து கொள்'', என்று கூறிப் பிருகு முனிவரின் உதைத்த பாதத்தைத் தடவிக் கொடுத்து ஆறுதல் கூறினார். மகா விஷ்ணுவின் அன்பு கனிந்த, ஆறுதல் மொழிகளைக் கேட்ட பிருகு முனிவர் உள்ளம், கசிந்துருகினார். திருமாலின் பாதத்தைப் பிடித்துக் கொண்டு, ' இறைவனே இந்தச் சிறுவனை மன்னித்து விடுங்கள். மக்கள் பால் அன்புள்ள மகேஸ்வரனைத் தேடி வந்தேன்.

ஓரா யிரமாய் உலகேழ் அளிக்கும்
பேரா யிரம்கொண்ட தோர்பீ டுடையன்
காரா யினகாள நன்மே னியினன்
நாரா யணன்நங் கள்பிரான் அவனே,

இனியறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம்
இனியறிந்தேன் எம்பெருமான் உன்னை—இனி
யறிந்தேன்
காரணன் நீ கற்றவைநீ கற்பவை நீ நற்கிரிசை
நாரணன்நீ நன்கறிந்தேன் நான்—

மகா விஷ்ணுவை நன்கு தெரிந்து கொண்டேன்

என்று பிருகு கூறி, அவரிடம் அருளாசி பெற்றுச் சென்றார். பிருகுவின் ஆலோசனைப்படி, கங்கைக் கரையில் நடந்த அந்த யாகத்தின் பலனை, மகாவிஷ்ணுவுக்கே அந்த முனிவர்கள் வழங்கிப் பெருமை செய்தனர்.

பிருகு முனிவர் பெருமாளை உதைத்ததினால் மகாலட்சுமி மிகவும் கோபம் கொண்டு, "தங்கள் மார்பில் வாழும் என்னை, ஒரு முனிபுங்கவன் உதைப்பதா? அவ்வாறு என்னை உதைத்தவனைத் தண்டிக்காமல் அவன் கால்களை தடவிக் கொடுத்து, அன்பு காட்டிய உங்களுடன் என்னால் வாழ முடியாது. நான் இனி உங்களுடன் இருக்க மாட்டேன்" என்று கோபத்துடன் கூறிவிட்டு இலட்சுமிதேவி, பூவுலகை அடைந்தாள். அங்குக் கொல்லாபுரம் என்ற ஊரில் வசித்து வரலானாள். திருமாலை விட்டு மகாலட்சுமி, பிரிந்ததும், திருப்பாற்கடல் முழுவதும் களையிழந்து, வெறிச்சோடி விட்டது. மகாவிஷ்ணுவும் பித்தனைப் போலாகி, சித்தம் கலங்கி மகாலட்சுமியைத் தேடிக் கொண்டு பூவுலகம் சென்றார்.

## 3. வகுளா தேவி பெற்ற வரம்

உளன்கண்டாய் நல்நெஞ்சே உத்தமன் என்றும்
உளன்கண்டாய் உள்ளுவார் உள்ளத்து—உளன்
கண்டாய்
வெள்ளத்தில் உள்ளானும், வேங்கடத்தில் உள்ளானும்
உள்ளத்தில் உள்ளான்என்று ஓர்.

இராமாவதாரத்திற்குப் பிறகு வந்த கிருஷ்ணாவதாரத்தில் பல ஆன்மாக்கள், தங்களுடைய விருப்பங்களை இறைவன் மூலம் தீர்த்துக் கொண்டனர். இது போலவே, கிருஷ்ணா வதாரத்தில் வளர்ப்புத் தாயாக யசோதை விளங்கினாள் திருமணத்திற்குப் பின் யசோதையை மறந்து, தன் தேவிமார் களுடன் கண்ணன் வாழ்ந்து வந்தான். தாயை முன்போலச் சந்திக்க இயலவில்லை.

## XXV

இறுதிக் காலம் வரை, கண்ணனுக்குத் தான் சேவை செய்யவில்லை என்ற வருத்தம் யசோதைக்கு இருந்தது. கண்ணனைத் தனியாகச் சந்தித்த போது, யசோதை தன் வருத்தத்தைத் தெரிவித்தாள். 'ஆளே மாறி விட்டாய், என்னையும் மறந்து விட்டாய்'' என்று யசோதை வருத்தத்துடன் கண்ணனிடம் கூறினாள். உனக்குப் பணிவிடை செய்யும் பாக்கியம் மீண்டும் கிடைக்குமா'', என்று கவலையுடன் கேட்டாள்.

''தாயே, கவலைப்பட வேண்டாம், வேங்கடவனாகப் பூலோகத்தில் நான் வருகின்ற போது, எனக்கு மீண்டும் பணிவிடை செய்யும் வாய்ப்பைப் பெற்று விடுவீர்கள்'' என்று கண்ணன் வரம் வழங்கினான்.

வைகுந்தத்தை விட்டு வெளியேறிய வாசுதேவன் வையம் எங்கும் சுற்றி அலைந்தார். எந்த இடமும் அவருக்குப் பிடிக்கவில்லை. இறுதியாக வடவேங்கட மலைக்கு வந்தார். அங்குள்ள மரங்களும், செடிகளும், கொடிகளும், மலர்களும், அருவிகளும், குருவிகளும், அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. ஏழு மலைமேல் இருக்கும், சுவாமி புஷ்கரணி என்ற தீர்த்தக்கரையில் உள்ள ஒரு மரத்தினடியில் தங்கினார். அங்கு ஏற்கனவே கோவில் கொண்டுள்ள வராகப் பெருமான், இவரைக் கண்ணுற்றுத் தன்னிடம் அழைத்துக் குசலம் விசாரித்தார்.

''பிருகு முனிவர் வந்த விவரத்தையும், நடந்த கதையையும் கூறி இதனால் கோபம் கொண்ட மகாலட்சுமி, கொல்லாபுரத்தில் வசிக்கின்றாள். வைகுண்டத்தில் தனியாக இருக்கப் பிடிக்காமல் இங்கு வந்து விட்டேன். தங்குவதற்கு ஒரு இடம் வேண்டும்'' என்று வராகமூர்த்தியிடம் கேட்டார். ''தங்கும் இடத்திற்குப் பொன்தர வேண்டும்'', என்று வராகமூர்த்தி கேட்டார். ''மகாலட்சுமி போனதால் என்னிடம் பொன்னும், மணியும் இல்லை. நான் இங்கு வாசம்

செய்தாலும், பக்தர்கள் உம்மைக் கண்டு வணங்கிய பிறகே, என்னைக் கண்டு பூஜையும், நிவேதனமும் செய்யும்படி ஏற்பாடுகள் செய்கின்றேன். இதுதான் என்னால் செய்ய முடியும்.'' என்றார் திருமால்.

அவர் மேல் அன்பு கொண்ட ஆதிவராகப் பெருமாள் வேங்கடவனாக, வடவேங்கடத்திற்கு வந்திருக்கும் திருமாலுக்குத் தங்க ஒரு இடமும் தந்து, வகுளாதேவி என்ற பெண்ணையும், பணிவிடை செய்ய அனுப்பினார். முன்பு யசோதையாக இருந்த பெண்ணே, வகுளா தேவியாக மீண்டும் வந்து, வெங்கடேசப் பெருமானுக்குத் தொண்டு புரியும் பாக்கியத்தைப் பெற்றாள்.

### 4. கொழு முனையில் கிடைத்த குழந்தை

விண்ணீல மேலாப்பு
விரிந்தாற்போல் மேகங்காள்!
தெண்ணீர்பாய் வேங்கடத்தென்
திருமாலும் போந்தானே
கண்ணீர்கள் முலைக்குவட்டில்
துளிசோரச் சோர்வேனை
பெண்ணீர்மை யீடழிக்கும்
இதுதமக்கோர் பெருமையே

— ஆண்டாள்

வேதவதி என்ற பெண், கொடிய பத்துத்தலை இராவணனுக்குப் பயந்து அக்னி தேவனிடம் அடைக்கலம் புகுந்தாள். மாரீசன் மூலம் தண்டகவனத்தில், இராமனையும், இலக்குவனையும், சீதையையும், இராவணன் தனியாகப் பிரித்தான். சீதையை அபகரிக்க எண்ணிச் சென்றான். ஆனால் அக்னி பகவானோ வேதவதியைச் சீதையாக்கி உண்மைச் சீதையை, அப்புறப்படுத்தி விட்டான்.

இராமனுடைய அம்பினால் இராவணன் மாய்ந்த பிறகு, சீதையை இராமன் மீட்டு வந்தான். மக்கள் கூறிய பழியைத் தீர்க்கும் வகையில், வேதவதியாகிய சீதை அக்னிப் பிரவேசம் செய்தாள். ஆனால் அக்னி பகவான் தன்னிடம் வைத்திருந்த உண்மைச் சீதையையும், வேதவதியையும் எந்தக் குறையும் இல்லாமல், வெளியே கொண்டு வந்தான். இரண்டு சீதையைக் கண்ட இராமன் திகைத்து நின்றான்.

அப்படித் திகைத்து நின்ற இராமனிடம், வேதவதியை இராவணன் எடுத்துச் சென்று, அசோக வனத்தில் வைத்துத் துன்புறுத்தியதையும், தான் அக்னி பகவானிடம் இருந்த விவரத்தையும் எடுத்துக் கூறி, வேதவதியைப் பத்னியாக ஏற்றுக் கொள்ளும்படி உண்மைச் சீதை இராமனிடம் கூறினாள்.

இராமாவதாரத்தில், ''ஒரு வில், ஒரு சொல், ஒரு இல் என்ற அறத்திலிருந்து நான் வழுவ இயலாது. கலியுகத்தில் திருமலை வாசனாக வருகின்றபோது இந்த வேதவதி ஆகாசராஜனின் மகள் பத்மாவதியாக வருவாள். அப்போது அவளைத் திருமணம் செய்து கொள்வேன்'' என்று இராமபிரான் உண்மைச் சீதையிடம் கூறினார்.

ஆகாசராஜனுக்கு வெகுநாட்களாக பிள்ளைப்பேறு இல்லை. தனது குலகுரு பிரகஸ்பதியின் ஆலோசனையின்படி புத்திர காமேஷ்டி யாகத்தின் ஒரு அங்கமாக யாகசாலையின் ஒரு பகுதியை, வேத கோஷத்துடன், தங்கக் கலப்பையினால் உழுதான். அப்படி உழுது வரும்போது, ஒரு இடத்தில் கொழு முனை தட்டி நின்றது. உழுவதை நிறுத்திவிட்டு ஆகாசராஜன், கொழுமுனை தட்டிய இடத்தை உற்று நோக்கினான். அந்த இடத்தில் ஆயிரம் இதழ்கள் விரிந்த, ஒரு தாமரைப் பூவில், மகாலட்சுமியை, ஒத்த ஒரு பெண் குழந்தை ஆயிரம் கோடிச் சூரியப் பிரகாசத்துடன், மலர்ந்த முகத்துடன், கையையும், காலையும் ஆட்டிக் கொண்டு கிடந்தது. அந்த அரிய குழந்தையை வாரி எடுத்து உச்சி முகர்ந்து ஆனந்த வெள்ளத்

தில் அரசன் மூழ்கி மகிழ்ந்தான். இறைவனே தனது குறையைத் தீர்த்ததாக அவன் இன்புற்றான். அரண்மனைக்கு எடுத்துச் சென்று அரசியார். தரணி தேவியாரிடம் அந்தத் தெய்வக் குழந்தையைக் கொடுத்தான். அவளும் அந்தக் குழந்தையைப் பாராட்டிச் சீராட்டி வளர்த்து வந்தாள்.

தாமரை மலரில் இந்தத் தங்கக் குழந்தை கிடைத்ததால் **'பத்மாவதி'** என்ற நாமகரணத்தைச் சூட்டி ஆகாசராஜனும், அரசியும், அனைவரும் மகிழ்ந்திருந்தனர். பத்மாவதி வந்த வேளை தரணி தேவி கருத்தரித்து, ஓர் ஆண் குழந்தையை ஈன்றாள். அக்குழந்தைக்கு வசுதானன் என்ற பெயரும் சூட்டினர்.

## 5. குதிரையும் கோமானும் கல்லடி பட்டகதை

வாரணம் ஆயிரம் சூழ வலம்செய்து
நாரண நம்பி நடக்கின்றா னென்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புரமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழி! நான்

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைத்தாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்துஎண்ணைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழிநான்

— ஆண்டாள்

ஒரு நாள், திருமலையில் தங்கியிருந்த வேங்கடவன் குதிரையின் மேல் ஏறி வேட்டையாடச் சென்றார். புலி, சிங்கம் கரடி, போன்ற பல மிருகங்களை வேட்டையாடிய பெருமானை ஒரு மதம் கொண்ட யானை மறித்தது. தன்னைத் தாக்க வேங்கடவன் வருவதை அறிந்த கரி, ஓட ஆரம்பித்தது அதனைப் பின் தொடர்ந்து கொண்டே, பரவாசுதேவரும் பரியின்

மீது வேகமாகச் சென்றார். ஆகாசராஜன் ஆட்சி புரியும் திருச்சானூருக்குள், அந்த யானை சென்றது. பத்மாவதியும் அவளுடைய தோழிகளும் விளையாடிக் கொண்டிருந்த நந்தவனத்திற்குள் சென்று, அந்த யானை மறைந்து விட்டது. யானையைத் தேடிக் கொண்டு சென்ற பரவாசுதேவர் தோழிகளோடு விளையாடிக் கொண்டிருந்த பத்மாவதியைப் பார்த்துப் பரவசமாகி நின்றார். இளவரசியின் நந்தவனத்திற்குள் பரியுடன் வந்த வேங்கடவனை உள்ளே வரவிடாமல் தோழியர்கள் தடுத்தனர். அங்கு அவர் வெகு நேரம் நின்று உள்ளே செல்லுவதற்கு முயன்று கொண்டிருந்தார். இதனைக் கண்ணுற்ற தோழிகள் கற்களை எடுத்துப் பரியின் மீதும் பரவாசு தேவர் மீதும் வீசினார்கள். கல்லடிபட்ட பரி மயங்கி விழ, அடிப்பட்ட ஆண்டவனும் வேறு வழியின்றி நந்த வனத்தை விட்டுப் பரியைவிட்டு வெளியேறினார் குதிரையும் கல்லடியினால் கண்ணை மூடியது.

மகிழ்ச்சியுடன் சென்ற வேங்கடேசப் பெருமான், தளர்ந்த நடையுடன் கல்லடிபட்டுக் கலக்கத்துடன் நடந்து வருவதை வகுளா தேவி பார்த்து, நடந்த விவரங்களை அவரிடம் கேட்டாள். பத்மாவதி தேவியும், அவளுடைய தோழிகளும், குதிரையை அடித்துக் கொன்ற செய்தியைக் கேட்டுத் துடித்த வகுளாதேவி, "இப்போதே சென்று நியாயம் கேட்டு வருகின்றேன், என்று புறப்பட்டாள். அவளைத் தடுத்து நிறுத்திச் "சண்டையிடுவதில், எந்தப் பயனும் இல்லை. விதியினால் அவளைக் காண நேர்ந்தது. அவளை என் மனம் நாடுகின்றது. அவளைத் திருமணம் முடிக்கவும் விரும்புகின்றேன்." என்ற செய்தியை வகுளா தேவியிடம் வேங்கடேசப் பெருமான், விரிவாக எடுத்துக் கூறினார்.

"நாரயணபுரத்தை ஆட்சி செய்யும் ஆகாசராஜனின் மகள்தான் நான் சொல்லும் பெண், அவள் பெயர் பத்மாவதி. அவளே என்னை இந்த அலங்கோலத்திற்கு ஆளாக்கினாள்."
"நாராயணபுரத்திற்கு உடன்சென்று, ஆகாசராஜனைப்

பார்த்துப் பத்மாவதியை, உனக்குத் திருமணம் முடிக்க ஏற்பாடு செய்கின்றேன்'' என்று வகுளாதேவி கூறினாள்.

''கபில தீர்த்தத்தில் நீராடி, அங்குள்ள, கபிலேஸ்வரரை வணங்கிய பிறகு திருச்சானூர் சென்றால், உனது காரியம் வெற்றி பெறும்'' என்று வேங்கடேசப் பெருமாள், வகுளா தேவியிடம் கூறினார். வகுளாதேவியும் கபிலதீர்த்தத்தில் நீராடிக் கபிலேஸ்வரர் ஆலயம் சென்றாள். அங்குப் பத்மாவதியின் தோழிகளும் வந்திருந்தனர். ஆகாசராஜனின் செல்வப் புதல்வி பத்மாவதி என்றும், குதிரையில் வந்தவனைப் பற்றிய விவரங்களையும் கூறி, தாங்கள் கல்லால் அடித்துக் குதிரையைக் கொன்றதையும், குதிரை வீரனை ஓடச் செய்த செய்தியையும் குதிரை வீரன், திரும்பிச் சென்றதில் இருந்து, இளவரசி பித்துப் பிடித்தவள் போலாகிப் பிதற்றுகின்றாள். இவளுக்கு உற்ற துன்பம் தீரவே, இங்குள்ள கபிலேஸ்வரரைப் பிரார்த்தனை செய்ய வந்துள்ளோம்'' என்று தோழியர்கள் வகுளா தேவியிடம் கூறினார்கள்.

''நேற்றுக் குதிரையில் வந்தவன், 'என் மகன்', திருமலையில் உள்ள வேங்கடேசப் பெருமான். விவரம் தெரியாமல் தூயவனைத் துன்புறுத்தி விட்டீர்களே! இளவரசிபால் உள்ள அன்பினால் உங்களையெல்லாம் அவன் மன்னித்து விட்டான்.'' என்று வகுளாதேவி தோழியர்களிடம் கூறினாள். ''நடந்தது, நடந்தவைகளாகவே இருக்கட்டும். அரசியாரைச் சந்திக்க என்னை அழைத்துச் செல்லுங்கள். நான் அவரைப் பார்த்துப் பத்மாவதியை வேங்கடேசப் பெருமானுக்குத் திருமணம் செய்து வைக்கும்படிக் கேட்கிறேன்'' என்று வகுளாதேவி கூறினாள். பூஜை முடிந்ததும், வகுளாதேவியை அரசியிடம் அழைத்துச் செல்வதாகத் தோழிகள் கூறினார்கள். இதைக் கேட்டு வகுளாதேவியும், கபிலேஸ்வரர் பூஜையில் தீவிரமாகத் தோழிகளுடன் சேர்ந்து ஈடுபட்டாள். பிறகு தோழிகளுடன் ஆகாசராஜன் அரண்மனை நோக்கிச் சென்றாள்.

## 6. குறத்தி சொன்ன கதையும் குறியும்

நாளை வதுவை மணமென்று நாளிட்டு
பாளை கமுகு பரிசுகடைப் பந்தற்கீழ்
கோளரி மாதவன் கோவிந்தன் என்பான் ஓர்
காளை புகுதக் கனாக்கண்டேன் தோழிநான்
— நாச்சியார் திருமொழி

முக்காலத்தையும் முறையாகக் கணக்கிட்டுக் கூறுவதில் குறத்திகள் வல்லவர். முகம் பார்த்து, கைரேகை பார்த்து, பரல்கள் குலுக்கிக் குறி சொல்வதில், ஆருடம் சொல்வதில் இவர்கள் வல்லவர்கள். இப்படிக் குறி சொல்வதில் வல்ல ஒரு குறத்தி, அரசியார் தரணி தேவியாரிடம் வந்தாள்.

''வாசலிது வாசலிது மகராசன் வாசலிது
தேசுறு போசல குலத்தைச் செழிக்க வைக்கும்
வாசலிது
திருமகளும் நாமகளும் சிறந்திருக்கும் வாசலிது
வரம்உதவும் பெரியோர்கள் வாழ்த்
திசைக்கும் வாசலிது
இத்தரணி மன்னர் எல்லாம் இறைஞ்சி நிற்கும்
வாசலிது
மெய்த்திருசீர் மும்முரசும் முழங்குமணி
வாசலிது''

என்று பாடி முதல் நாள் நந்தவனத்தில் குதிரையையும், கோமகனையும் கல்லால் அடித்த விவரத்தை எடுத்துக் கூறினாள். பத்மாவதி தேவியும், அவள் தோழிகளும் குதிரையைக் கல்லால் அடித்துக் கொன்று, குதிரை வீரனை ஓட ஓட விரட்டினர் ; என்ற விவரத்தையும் கூறினாள். நந்தவனத்தில் குதிரையைக் கொன்று அதன் வீரனையும் விரட்டிய செயலைத் தரணி தேவியார் கேட்டுத் தனது மகளையும், அவள் தோழிகளையும் மிகவும் மகிழ்ச்சியுடன் பாராட்டினாள்.

# XXXII

''உன் மகளுக்கு வந்திருக்கும் நோய், இவள் அந்த வீர னுக்குச் செய்த கொடுமையின் காரணமாகும். அந்த வீரனை மணந்து,அவன் மன்னித்தாலன்றி, இவள் நோய் தீராது'', என்று குறத்தி கூறினாள். ''எவனோ ஒருவன், நந்தவனத் திற்குள் புகுந்து அடிபட்டுச் சென்றதற்கும், என் மகள் நோய்க்கும் என்ன காரணம்'' என்று தரணி தேவியார் கேட்டார்.

''குதிரையில் வந்தவனைப் பார்த்ததும், உன் மகள் மயங்கி விட்டாள். தோழிகளுக்கு முன் ஒப்புக்காகக் கல்லை வீசி னாள். வெட்கத்தினால் மனதில் உள்ளதை அவளால் வெளி யில் சொல்ல முடியவில்லை. வேங்கடவனைக் காணவே உள்ளம் நொந்து வேதனையுடன் செய்வதறியாது தவிக்கிறாள் உன் மகள். ஆகவே அவனை உன் மகளுக்குத் திருமணம் செய்துவை. துன்பம் தானே தீரும். அவளுக்கு நோய் வேறு ஏதும் இல்லை. திருமண வேளை வந்து விட்டது.

அரசியாரே, அவனை விட்டால், உன் மகளுக்கு வேறு மணாளன் கிடைப்பது அரிது. மூவுலகிலும், இத்தகைய செல் வனைத் தேடிப்பிடிப்பது அரிதாகும். உனது அருமைச் செல் வியை அவனுக்குத் திருமணம் செய்து வைத்தால் உன் மகளின் நோயும் குணமாகும். உனது குலமும் விளங்கும்'' என்று குறத்தி சொன்னாள்.

திருமலை வாசன் வாழ்க
தேவாதி தேவன் வாழ்க
பெரியதோர் ஈசன் வாழ்க
பிரம்மாண்ட சோதி வாழ்க
துரியமேல் அணுவாய் நிற்கும்
தூயமாம் வேங்க டேசன்
திருவடி இணைகள் வாழ்க
திவ்ய நற்கருணை வாழ்க !

என்று, தேவாதி தேவர்களும் போற்றிப் புகழும் பரந்தாமன் வைகுண்ட வாசன் இக்கலியில் வேங்கடேசப் பெருமானாகத் திருமலையில் அவதரித்துள்ளார். அவரே உன் மகளை மணம் செய்து கொள்ள விரும்புகின்றார் வேதவதிக்கு முன்பு கொடுத்த வாக்கை நிறைவேற்றவே அவர் திருமலையில் அவதரித்து உள்ளார். வேதவதியே உன் மகளாக இப் போது அவதரித்துள்ளாள். அது நிறைவேறும் தருணம் வந்துவிட்டது. "வேங்கடவற்கு என்னை விதியென்ற இம் மாற்றம், நாம் கூடவா வண்ணமே நல்கு" என்பதே இம் மாற்றம், என்று குறத்தி கூறினாள். பெருமகிழ்ச்சியுடன் இச் செய்திகளைப் பத்மாவதி கேட்டுக் கொண்டிருந்தாள். வேங்கடவற்கு என்னை விதி, என்ற இம்மாற்றம் நாம் கடவா வண்ணமே நல்கு" என்று தனக்குத் தானே கூறிக் கொண்டு அந்த வேங்கடவனையே எண்ணி, எண்ணி உருகினாள். "உன் மகள் பத்மாவதியைப் பரசுதேவராக விளங்கும் வேங்கடேசனுக்குத் திருமணம் செய்து வை" என்று குறத்தி ஆருடம் கூறினாள். அவை அனைத்தையும் அங்கு வந்த ஆகாசராஜன் கேட்டுக் கொண்டிருந்தான். "பெண்ணைப் பெற்ற நாங்கள் வலியச் சென்று எப்படிக் கேட்பது" என்று ஆகாசராஜன் கூறினான். "வேளை வந்து விட்டது. வீடு தேடி வரன் வரும். வாசல்கதவைத் தட்டும். கவலைப்படாதே" என்று குறத்தி கூறிய அதே நேரத் தில் வகுளா தேவியும், பத்மாவதியின் தோழிகளோடு அரண்மனைக்குள் வந்தாள். ஆகாசராஜனையும், தரணி தேவியையும் வணங்கி, முறையாகப் பத்மாவதியை, வட வேங்கட மலையில் குடிகொண்டிருக்கும் வேங்கடேசப் பெரு மானுக்குத் திருமணம் முடித்துத் தருமாறு அவர்களை அன்பு டன் கேட்டுக் கொண்டாள். இதைச் செவியுற்ற அனைவரும் குறத்தியைப் பாராட்டிப் பரிசுகள் வழங்கினார்கள்,

வழங்கிய பரிசுகள் விவரம் இதோ !

**பல்லவி**

சொன்ன குறிகளும் பெற்ற வரிசையும்
சொல்லுகிறேனடி கண்ணே !

**அ. பல்லவி**

கொங்கு தேசமுதல் எங்கும் ஏகிமுன்
குறிஉரைத்தனன் அங்கே
கோதைமார் மனம் மகிழ்ந்து மாநிதி
குலவு நற்றுகில் ஈந்தார்

**சரணங்கள்**

நண்ணிடங் கொரு தெலுங்க மானினி
'நாசெய் சூடெனச்' சொன்னாள்
நாடி நற்குறி ஓதினேன் இந்த
நாசிகா பரணம் ஈந்தாள்
கண்ணி ஈங்கொரு கன்னடப் பெண் 'நன
கையின நோடோ' என்றாள்
கருதவட்கிசை குறிதனக்கு அவள்
காதினோலை அளித்தாள். (சொன்ன)

— சரபேந்திர குறவஞ்சி

''திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர், குலம் கோத்திரம், அறிந்து பெண்ணைக் கொடுக்க வேண்டும். பிரகஸ்பதியை அழைத்து வந்து, ஆலோசனை கேட்டுத் திருமலை வாசனாகிய உன் மகனுக்குத் திருமண ஓலை அனுப்புகின்றேன்'' என்று ஆகாசராஜன் வகுளா தேவியிடம் கூறினான்.

பிரகஸ்பதியும், நாராயணபுரத்திற்கு வந்து சேர்ந்தார். வேங்கடேசப் பெருமானுக்குப் பத்மாவதி தேவியைத் திரு

மணம் செய்ய இருக்கும் செய்தியைக் கூறி, வேங்கடேசப் பெருமானைப் பற்றிய விவரத்தை அரசன் கேட்டான். "அவரைப் பற்றிய செய்தி எதுவும் எனக்குத் தெரியாது. ஆனால் பூலோகத்தில் வாசம் செய்யும் சுகப்பிரம்மரிஷி, வேங்கடேசப் பெருமானைப் பற்றிய முழு விவரங்களும் கூறுவார்" என்றார் பிரகஸ்பதி.

அரசன் அழைப்பின்படி சுகப்பிரம்ம ரிஷி நாராயணபுரத்திற்கு வந்து சேர்ந்தார். "உனது மகள் பத்மாவதியை வேங்கடேசப் பெருமானுக்குத் திருமணம் செய்து வைத்தால், யாரும் அடைய முடியாத மகோன்னத நிலையை, நீயும் உன் குடும்பத்தினரும் அடைவீர்கள்" என்று கூறினார். உடனே பிரகஸ்பதியிடம் திருமணத்திற்கு நல்ல நாள் குறித்துத் தரச்சொல்லி ஆகாசராஜன் கேட்டான். தேவகுருவான பிரகஸ்பதியும், திருமணத்திற்கு ஒரு நல்ல நாள் குறித்துக் கொடுத்தார். ஆகாசராஜன் திருமண ஓலையை எழுதி, சுகப்பிரம்மரிஷி மூலம் வேங்கடேசப் பொருமானுக்கு அனுப்பி வைத்தான்.

## 7. வேங்கடேசப் பெருமானின் திருக்கல்யாண ஏற்பாடுகள்

பொருந்திய மகளி ரோடு
வதுவையில் பொருந்து வாரும்
பருந்தொடு நிழல்சென்(று) அன்ன
இயல்இசைப் பயன்துய்ப் பாரும்
மருந்தினும் இனிய கேள்வி
செவிஉற மாந்து வாரும்
வருந்தினர் முகம்கண்(டு) அன்ன
விழாவணி விரும்பு வாரும்

— கம்பன்

# XXXVI

வகுளா தேவியும், சுகப்பிரம்ம ரிஷியும், ஆகாச ராஜன் கொடுத்த திருமண ஓலை எடுத்துக் கொண்டு, நாராயண புரத்திலிருந்து திருமலைக்குச் சென்றார்கள். திருமலைக்குச் சென்ற பிறகு, வேங்கடேசப் பெருமானைச் சந்தித்தனர். ஆகாசராஜன், தன் மகள் பத்மாவதியை வேங்கடேசப் பெருமானுக்குத் திருமணம் முடிக்கச் சம்மதித்ததைத் தெரிவித்து, அரசன் அனுப்பிய ஓலையைத் தந்தனர். சுகப்பிரம்ம ரிஷி வேங்கடேசப் பெருமானின் பெருமைகளை ஆகாசராஜனுக்கு நல்முறையில் எடுத்துக் கூறியதை வகுளாதேவி வேங்கடவனிடம் சொல்ல, இருவரும் பெருமைப்பட்டனர். ஆகாச ராஜனின் திருமண ஓலையைப் பார்த்து விட்டு, ஒப்புதல் ஓலையை வேங்கடேசப் பெருமான் எழுதி, சுகனிடமே தந்து, ஆகாசராஜனிடம் கொடுக்கும்படி வேண்டிக் கொண்டார்.

சுகப்பிரம்ம ரிஷி சென்ற பிறகு, கல்யாண வேலைகளை எப்படிச் செய்வது என்று தாயும், மகனும் திட்டமிட்டனர். இதன்படி, பிரம்ம தேவனையும், சிவபெருமானையும் தேவர்களையும், முனிவர்களையும், ஏனையோரையும் அழைக்க இருவரும் முடிவு செய்தனர். அவர்களை நேரில் அழைப்பதற்குக் கருடனும், ஆதிசேஷனும் சென்றனர். செய்தி கிடைத்ததும் பிரம்மனும், சிவனும், இந்திரனும், தேவர்களும் வசிஷ்டர், நாரதர், தும்புரு, வால்மீகி, அத்திரி போன்ற முனிவர்களும், தங்களுடைய இஷ்டமித்திர பந்துக்களுடன் திருமலையை நோக்கித் திருமணத்திற்கு வந்தனர். அனைவரும் தங்குவதற்கு, விசுவகர்மா பல மாட மாளிகைகளை அமைத்துக் கொடுத்தான். நாராயணபுரத்தில், திருமணம் நடத்த ஒரு அழகிய திருமண மண்டபமும் விசுவகர்மா கட்டி முடித்தான். நாராயணபுரத்தையே தேவலோகம் போல விளங்கும்படித் தோரணங்களைக் கட்டி, அழகுற அலங்கரித்தான்.

# XXX VII

வசிஷ்டர் திருமணத்தை நடத்தும் பிரகஸ்பதியாக நியமிக்கப்பட்டார். தேவர்களையும், முனிவர்களையும், வரவேற்கும் பொறுப்பைச் சிவபெருமான் ஏற்றுக் கொண்டார். திருவேங்கட மலையிலிருந்து, நாராயணபுரத்திற்கு அனைவரையும் அழைத்துச் செல்லும் பொறுப்பை மால்மருகன் ஏற்றார். உணவு வழங்கும் பொறுப்பை அக்னிதேவன் ஏற்றார். தாம்பூலம், புத்தாடை, அணிகலன்கள் போன்றவற்றைக் கொடுக்கும் பொறுப்பைக் குபேரன் ஏற்றுக் கொண்டார்.

கல்யாண ஏற்பாடுகள் வெகு விமரிசையாக நடந்து கொண்டிருந்தன. ஏற்பாடுகளைக் கவனித்து வந்த பிரம்மதேவன், வேங்கடேசப் பெருமானின் கவலை தோய்ந்த முகத்தைக் கண்ணுற்று, அவரிடம் சென்று, "கவலைக்கு என்ன காரணம்?" என்று வினவினார். "பிரம்ம தேவரே இதில் தேவரகசியம் ஒன்றுமில்லை. மகாலட்சுமி இல்லையே," என்ற குறைதான், என் கவலைக்குக் காரணம், என்றார். "அப்படியானால் கொல்லாபுரத்திற்கு ஆளை அனுப்பி மகாலட்சுமியை அழைத்து வர, ஏற்பாடு செய்யவா" என்று பிரம்மதேவன் கேட்டார்.

வேங்கடேசப் பெருமான் நோய்வாய்ப் பட்டிருப்பதாகக் கூறி, மகாலட்சுமியைக் கொல்லாபுரத்திலிருந்து அழைத்து வருமாறு சூரிய தேவனிடம் இருவரும் வேண்டிக் கொண்டனர் மகாவிஷ்ணுவுக்குச் சுகம் இல்லை என்ற செய்தி கேள்விப்பட்டவுடன் பழைய கோபத்தை மறந்து, திருமலைக்குச் சூரிய பகவானோடு, மகாலட்சுமி விரைந்து வந்தாள். திருவேங்கட மலையில் கூடியிருக்கும் தேவர்களையும், முனிவர்களையும் கண்டு மகாலட்சுமி ஆச்சரியப்பட்டாள். பிரம்மனும், சிவனும் தாங்கிக் கொண்டுவர, வேங்கடேசப் பெருமான் ஒரு நோயாளியைப் போல மகாலெட்சுமிக்கு முன் வந்து நின்றார். "நீண்ட நாட்

களுக்குப் பிறகு, உங்களை இந்த நிலையிலா சந்திக்க வேண்டும்'' என்று மகாலட்சுமி மிகவும் மனம் வருந்திக் கூறினாள். இதை மகிழ்ச்சியுடன் கேட்ட, வேங்கடேசப் பெருமான், உடன் மகாலட்சுமியிடம் தாவிச் சென்றார். இதனைக் கண்டு கோபமுற்ற மகாலட்சுமி, ''எதற்காக நோயாளி போல் நடித்தீர்கள்'', என்று கோபத்துடன் கேட்டாள்.

''இராமாவதாரத்தில், வேதவதி என்ற பெண், உனக்காக இராவணனிடம் சிறைப்பட்டுப் பல துன்பங்களை அனுபவித்து இறுதியில் அக்னி மூலம் இரண்டு பேரும் ஒன்றாக வந்தீர்கள். அப்போது அவளைத் திருமணம் செய்து கொள்ள என்னை வேண்டினாய். ஏகபத்தினி விரதனாகிய நான், வேதவதியை அன்று ஏற்கவில்லை. வேதவதி என்ற அந்தப் பெண் இப் பிறவியில் ஆகாசராஜனின் மகளாகப் பிறந்து, பத்மாவதி தேவியாக வந்திருக்கின்றாள்.

அவளை நானும் பார்த்தேன்.
அவளும் என்னைப் பார்த்தாள்.

தோள் கண்டார் தோளே கண்டார்
தொடுகழற் கமலம் அன்ன
தாள் கண்டார் தாளே கண்டார்
தடக்கை கண்டாரும் அஃதே
வாள் கொண்ட கண்ணார் யாரே
வடிவினை முடியக் கண்டார்.

''கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கிப் போய்
பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ''

என்ற நிலைக்குச் சென்றோம்.

அவளை மணந்து கொள்ள அனைத்து ஏற்பாடுகளும், வெகு வேகமாக இன்று இங்கு நடக்கின்றன. அன்று அவளை மணந்து கொள்ள ஆலோசனை சொன்ன நீ இன்று என் அருகில் இருந்து இத்திருமணத்தைச் செய்து கொள்ள எனக்கு விருப்பம். எல்லோருடனும் நீயும் சேர்ந்து இருந்து இந்தத் திருமணத்தை நடத்தித் தர வேண்டும். இதற்காகவே கொல்லாபுரத்திலிருந்த உன்னை இங்கு வரவழைத்தேன்'' என்றார் வேங்கடவன்.

இந்த விளக்கத்தைக் கேட்ட மகாலட்சுமியும் சமாதானமாகி, வகுளா தேவியுடன் சேர்ந்து கொண்டு திருமண ஏற்பாடுகளை முன்னின்று கவனித்தாள். வேங்கடேசப்பெருமானுக்குப் புனித நீராட்டி, புத்தாடைகள் அணிவித்து, அணிகலன்கள் பூட்டி, நெற்றிக்குத் திலகமிட்டாள். மாப்பிள்ளை வேங்கடேசப் பெருமானும் திருமணம் நடக்கும் இடத்திற்குப் புறப்படத்தயாரானார்.

---

## 8. குபேரன் கொடுத்த கடன்

.........

அங்கும் இங்கும் வானவர் தானவர் யாவரும்
எங்கும் இனையை யென்றுன்னை யறிகிலாது அலற்றி
அங்கம் சேரும் பூமகள் மண்மகள், ஆய்மகள்
சங்கு சக்கரக் கையவன் என்பர் சரணமே.

பெண் வீட்டிற்குச் செல்ல வேங்கடேசப்பெருமான் ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். ''தேவர்களையும், முனிவர்களையும், நாராயணபுரத்திற்கு விரைவில் அனுப்பிவையுங்கள்'' என்று பிரம்ம தேவனிடம் வேங்கடேசப்பெருமான் கூறினார். ''தேவர்களும், முனிவர்களும் காலைக் கடன்களை

முடித்துவிட்டு, ஏதும் உட்கொள்ளாமல் காலை உணவுக்குக் காத்துக் கொண்டு இருக்கின்றார்கள், விருந்து உபச்சாரம் செய்யாமல், இவர்களை எப்படிப் புறப்படச் சொல்ல முடியும்'' என்று பிரம்மதேவன் கேட்டார்.

''இத்தனை பேருக்கும் உணவு படைக்கச் செல்வத்திற்கு நான் எங்கே போவேன்'' என்று வேங்கடேசப் பெருமான் கேட்டார். ''கையில் செல்வம் இல்லாமலும், முன்னேற்பாடுகள் ஏதுமின்றியும், எப்படிக் கல்யாண வேலையில் இறங்கலாம்? யாரிடமாவது கடன் வாங்கி எடுத்த பணியை நிறைவேற்ற வேண்டும்,'' என்று சிவபெருமான் ஆலோசனை கூறினார். ''தான் ஒரு ஆண்டி, தன்னிடம் செல்வம் ஏதுமில்லை, செல்வம் கொடுக்க வசதியும், வாய்ப்பும் பெற்றவன் குபேரன் ஒருவனே, அவனிடம் கேட்கலாம்,'' என்று சிவபெருமான் மேலும் யோசனை கூறினார்.

குபேரனைப் பிரம்மதேவன் அழைத்து வந்தார். ''திருமணச் செலவுக்குச் செல்வம் தேவைப்படுகின்றது, உடன் கொடுத்து உதவ வேண்டும்,'' என்று வேங்கடேசப் பெருமான் குபேரனைக் கேட்டார். ''கடன் கொடுப்பதில் எந்த ஆட்சேபனையுமில்லை. ஆனால் கடன் பத்திரம் எழுதிக் கொடுத்தாலன்றிச் செல்வத்தைக் கொடுக்க எனக்கு அதிகாரம் இல்லை'' என்று குபேரன் கூறினார். 14 இலட்சம் இராமர் முத்திரையிட்ட பொற் காசுகளைக் குபேரனிடமிருந்து வேங்கடேசப்பெருமான் கல்யாணத்திற்குக் கடனாகப் பெற்றார். இதற்காக, மாதம் ஒன்றுக்கு நூற்றுக்கு ஒரு இராமர் முத்திரையிட்ட பொற்காசு வட்டியாக வழங்க வேண்டும்'' என்று கடன் பத்திரத்தில் குறிக்கப் பெற்றது. இதில் வேங்கடேசப்பெருமான் கையெழுத்திட பிரம்மதேவனும்-சிவபெருமானும் சாட்சியாகக் கையெழுத்திட்டனர். செல்வம்

வந்த பிறகு பண்டங்கள் வந்து குவிந்தன. விருந்தும் வெகு வேகமாகப் படைக்க ஏற்பாடு நடந்தது. தேவர்களும், முனிவர்களும், அரிய, பெரிய அறுசுவை உண்டியை (வேங்கடேசப் பெருமான் அளிக்க) உண்டு மகிழ்ந்தனர்.

---

## 9. பத்மாவதி-ஸ்ரீநிவாசன் கல்யாண வைபோகமே !

தண்டுலம் விரித்தனன் தருப்பை சாத்தினன்
மண்டலம் விதிமுறை வகுத்து மென்மலர்
கொண்டவை சொரிந்தெரி குரூம மூட்டினன்
பண்டுள மறைநெறி பரவிச் செய்தனன்

— கம்பன், கடிமணப் படலம்

அனல் வளர்த்தனர் ஆகுதி சொரிந்தனர் ஆய்ந்து
வினை அறுத்துயர் வேதியர் மந்திர விதியால்
புனை நறுந்துழாய் தளவொடு நாறிய புனிதன்
வனிதை தன்கரம் பிடித்தனன் மங்கலம் ஆர்ப்ப

— மதுரகவி

திருக்கல்யாணத்திற்கு அனைவரையும் அழைத்துச் செல்லுமாறு கருடனைப் பிரமதேவர் கேட்டுக் கொண்டார். வேங்கடேசப்பெருமான் கருடன் மீது அமர, சிவபெருமான் காளையின் மீது ஏறினார். மயில் மீது மால்மருகன் முருகன் ஏறிச் சென்றார். பிரம்ம தேவர் முன்னால் செல்ல, வலது புறத்தில் சிவனும், இடதுபுறத்தில் வாயு தேவனும் வேங்கடவனை அணிவகுத்துச் சென்றனர். முருகக் கடவுள் பின்னால் வந்தார். வகுளா தேவியும், மகாலட்சுமியும் பொன்னாலாகிய

இரு தேர்களில் வந்தனர். இந்திரன் முதலிய தேவர்களும், வசிஷ்டர், அத்திரி, பிருகு, தும்புரு, நாரதர் போன்ற மகரிஷி களும் வரிசை வரிசையாக நாராயாணபுரம் நோக்கிச் சென் றனர். தேவாதி தேவர்களது கூட்டம் சாரி சாரியாக நாராயணபுரத்தை நோக்கிச் சென்றது.

உழுந்திட இடமிலை உலகம் எங்கணும்
அழுந்திய உயிர்க்கெலாம் அருட்கொம் பாயினான்
எழுந்திலன் எழுந்திடைப் படருஞ் சேனையினன்
கொழுந்து போயக் கொடிமதின் மிதிலை கூடிற்றே

என்ற கம்பன் வாக்குப்படி, திருமலைவாசன் திரு மலையை விட்டுப் புறப்படும் முன்னர், மற்றவர்கள் நாராயண புரத்தில் இருந்தனர். அவ்வளவு பெரிய கூட்டம், வேங்கடேசப் பெருமான் திருக்கல்யாணத்தைக் காணச் சென்றது. வழியில் திருச்சானூர் வந்தது. சுகமுனிவர் வீட்டில் வேங்கடேசப் பெருமான் முதலியவர்கள் தங்கி இளைப்பாறிச் சென்றனர். சுகமுனிவர் தங்களுக்கு விருந்தளிக்காது வேங்கடேசப் பெரு மானுக்கு மட்டும் விருந்தளித்துக் கௌரவித்தார், என்று முனி வர்களும் தேவர்களும் பிறரும் கோபத்துடன் அவரை 'விருந்து உபச்சாரம் செய்யத் தெரியாத சுகம்' என்று கூறினர். இதனையறிந்த வேங்கடவன் முனிவர்கள்,தேவர்கள் அனைவரும், அறுசுவை உணவு உண்ணும்படித் தனது கருணையால் அருளினார். முனிவர்களும் பிறரும் கோபம் மறந்து, சுகப்பிரம்மத்தை வாழ்த்தி, வணங்கி விட்டு, நாராயண புரம் நோக்கிச் சென்றனர்.

வேங்கடேசப் பெருமானையும், தேவாதி தேவர்களையும், அவர்களுடன் வந்த ஏனைய முனிவர்களையும், ஆகாச ராஜன் தன் மனைவி தரணி தேவி, மகன் வசுதானன், தம்பி

# XLIII

தொண்டைமான், குலகுரு பிரகஸ்பதி, மந்திரிகள், சேனாதிபதி ஏனையோர் புடைசூழ நாராயணபுரத்தின் எல்லையில் வரவேற்றான். தேவேந்திரன் முன் வந்து வேங்கடேசப் பெருமானை, ஆகாசராஜனுக்கு முறைப்படி, "மருமகன்" என்று அறிமுகப்படுத்தி வைத்தார்.

"இவர் மருமகனாக வருவதற்கு நான் பெரும் பாக்கியம் பெற்றேன், என் மகள் செய்த முன் தவம் தான் வேங்கடேசப் பெருமான் அவளுக்குக் கணவனாகக் கிடைத்து இருக்கின்றார்" என்று ஆனந்தம் மேலிட ஆகாசராஜன் கூறினான். அருகிலிருந்த நாரத முனிவரும் ஆகாசராஜனை வேங்கடேசப் பெருமானுக்கு "மாமனார்" என்று முறைப்படி அறிமுகம் செய்து வைத்தார்.

பத்மாவதி தேவி, ஒரு அழகிய யானையின் மீது ஊர் வலம் செல்ல, வேங்கடேசப் பெருமானும், கருடன் மீது நகர் வலம் வந்தார். மக்களும், தேவர்களும், அவர்களிருவரும் போகும் வழியெல்லாம் பூச்சொரிந்து புதுமணத் தம்பதிகளை வாழ்த்தி வரவேற்றனர். நாராயணபுரம் சென்றதும் வேங்கடேசப்பெருமானையும், ஏனையோரையும் பிள்ளை வீட்டார் தங்குமிடத்தில், ஆகாசராஜன் தங்கும்படிச் செய்தார். சம்பந்திகளை ஒரு குறையுமின்றி உபசரிக்கும் பொறுப்பைத் தன் தம்பி தொண்டைமானிடம் விட்டார். தொண்டைமானும், வேங்கடேசப் பெருமானுக்கும் அவருடன் வந்த அனைவருக்கும் சிற்றுண்டி, அறுசுவை உணவுவகைகள் பணியாரங்கள் போன்றவற்றை அளித்தார். பிறகு சந்தனம், மலர், தாம்பூலம், பன்னீர் போன்றவற்றையும் உணவுக்குப் பிறகு வழங்கினார்.

மறுநாள் காலை, வேங்கடேசப் பெருமானை அலங்கரித்துச் சகல மரியாதைகளுடன், திருமண மண்டபத்திற்கு முறைப்படி அழைத்துச் சென்றனர். திருமண மண்டபத்தை அடைந்ததும் ஆகாசராஜனும், அவனது மனைவி தரணி தேவியும், பத்மாவதியைத் திருமண மேடைக்கு அழைத்து வந்தனர். பேரிகை, துந்துபி, மத்தளம் ஆகிய மங்கள வாத்தியங்கள் முழங்க, தேவர்கள் வாழ்த்த, முனிவர்கள் ஆசி பொழிய, வேத கோஷங்கள் வான் எட்ட, முப்பத்து முக்கோடி தேவாதி தேவர்களும் முனிவர்களும், திருமண மேடையைச் சுற்றி நின்றனர். வகுளா தேவியும், மகாலட்சுமியும் வேங்கடேசப் பெருமான் அருகில் மகிழ்ச்சி பொங்க அமர்ந்திருந்தனர்.

தேவாதி தேவனும் அத்தெய்வத் திருமகளும்
ஓவா(து) உறைந்துஆங்(கு) உயர்கமலப் —
பூவாரும்
மங்கையுடன் மேவி மகிழ்திர் எனச்சனகன்
செங்கைநீர் வார்த்தான் தெளிந்து

— மதுரகவி

குறித்த நல் ஓரையில், குல குரு பிரகஸ்பதியும், வசிஷ்ட முனிவரும் ஆசி கூற ஆகாசராஜன், மனைவி தரணி தேவி, பொற்குடத்திலிருந்து நீர்வார்க்கப் பத்மாவதி தேவியை வேங்கடேசப் பெருமானுக்குக் கன்னிகா தானம் (வேத கோஷ முழக்கத்துடன்) செய்து கொடுத்தான். திருமணத்திற்கு வந்திருந்த முப்பத்து முக்கோடி தேவர்களும், முனிவர்களும், மறையவர்களும், ஏனையோரும் மலர்மாரி சொரிந்து பத்மாவதியையும், வேங்கடேசப் பெருமானையும், ''இன்று போல் என்றும் வாழ்க'', என வாழ்த்தினர். பிறகு புதுமணத் தம்பதிகள் அக்னியை வலம் வந்து பெரியவர்கள் ஆசியை ஏற்றனர்.

## 10. தொண்டைமான் கட்டிய திருமலைக் கோவில்

உலகம் உண்ட பெருவாயா !
உலப்பில் கீர்த்தி யம்மானே !
நிலவும் சுடர்சூ ழொளிமூர்த்தி !
நெடியாய் ! அடியே னாருயிரே !
திலதம் உலகுக் காய்நின்ற
திருவேங்க கடத்தெம் பெருமானே
குலதொல் லடியேன் உன்பாதம்
கூடுமாறு கூறாயே !

— நம்மாழ்வார்

திருமணம் முடிந்த பிறகு திருமலைக்குச் செல்ல வேங்கடேசப்பெருமான் ஆகாசராஜனிடம் அனுமதி வேண்டினார். "இதற்குள் என்ன அவசரம்", என்று ஆகாசராஜன் கூறினான். 'திருக்கல்யாணம் முடிந்து விட்டது. இனி இங்கு மனைவியுடன் தங்கி இருப்பது அழகல்ல, திருமலைக்கு உடனே செல்ல வேண்டும்" என வேங்கடேசப் பெருமான் கூறினார்.

தம்பி தொண்டைமான், மனைவி தரணி தேவி, மகன் வசுதானன், மந்திரிகள் புடைசூழ வேங்கடேசப் பெருமானையும், பத்மாவதியையும் முறைப்படி திருமலைக்குச் சீர் வரிசைகளுடன் ஆகாசராஜன் அனுப்பி வைத்தான். வேங்கடேசப் பெருமானும், பத்மாவதியும், சொர்ணமுகி நதிக்கரையிலுள்ள அகஸ்தியர் ஆஸ்ரமத்தில் தங்கினர். "திருமணமாகி ஆறு மாதங்கள் வரை புதுமணத் தம்பதிகள் மலை ஏறுதல் கூடாது, என்பது மரபு, எனவே தாங்களும் தேவியாரும், என் ஆஸ்ர

மத்தில் தங்கியிருக்க வேண்டும்'' என்று அகஸ்தியர் வேண்டினார். அவ்வாறே வேங்கடேசப்பெருமானும், பத்மாவதியும் தங்கினர். தேவர்களும், முனிவர்களும், புதுமணத் தம்பதியரிடம் விடைபெற்றுத் தங்களது இருப்பிடம் சென்றனர். ''பத்மாவதியுடன் திருமலையில் சௌகரியமாக இருங்கள்,'' என்று கூறி மகா லட்சுமியும் விடை பெற்றுக் கொல்லாபுரம் சென்றாள். எல்லா விருந்தினர்களும் சென்ற பிறகு வேங்கடேசப் பெருமானும், பத்மாவதியும், அகஸ்தியரது ஆஸ்ரமத்தில் ஆனந்தமாகக் காலம் கழித்தனர்.

தூதுவன் ஒருவன் ஓடிவந்து ''ஆகாசராஜனுக்கு உடல் நலம் சரியில்லை'' என்ற செய்தியைக் கூறிச் சென்றான். இச் செய்தியைக் கேட்ட வேங்கடேசப் பெருமானும், பத்மாவதியும் அகஸ்தியரிடம் விடைபெற்றுக் கொண்டு உடனே நாராயண புரம் நோக்கிச் சென்றனர். அரண்மனையில் ஆகாசராஜன் படுத்த படுக்கையாக இருப்பதைப் பார்த்து மனம் வருந்தினர்.

மகளையும் மருமகனையும் பார்த்த ஆகாசராஜன் கண்ணீர் விட்டு அழுதான். மகன் வசுதானன், தம்பி தொண்டைமான் ஆகிய இருவரின் கைகளைப் பிடித்து வேங்கடேசப் பெருமானி டம் கொடுத்து, ''இவர்கள் இருவரையும் காப்பாற்ற வேண்டும்,'' என்று ஆகாசராஜன் வேண்டிக் கொண்டான். அவ்வாறு செய் வதாக வேங்கடேசப் பெருமானும் வாக்கு அளித்தார். சற்று நேரத்தில் ஆகாசராஜனின் ஆவியும் பிரிந்தது.

ஆகாசராஜனின் இறுதிச் சடங்குகள் முடிந்த பிறகு வேங்கடேசப் பெருமானும், பத்மாவதியும், அகஸ்தியர் ஆஸ்ரமம் வந்து சேர்ந்தனர். வசுதானனும், தொண்டை மானும் ஆட்சிக்காகப் போரிட்டனர். இருவரும் வேங்கடேசப் பெருமானிடம் உதவி கோரினர். தனது சங்கு, சக்கரத்தைத்

தொண்டைமானுக்கு வேங்கடேசப்பெருமான் கொடுத்து அனுப்பினார்.

தகப்பன் இல்லாத என் தம்பி வசுதானனுக்கு, உதவி செய்யாமல், தொண்டைமானுக்கு உதவுவது சரியல்ல, என்று பத்மாவதி வேங்கடேசப் பெருமானிடம் முறையிட்டாள். "உன் தம்பிக்குப் போர் முனைக்குச் சென்று உரிய உதவி களைச் செய்வேன்," என்று வேங்கடேசப் பெருமான் கூறி விட்டுச் சென்றார். போர் முனையில், வேங்கடேசப் பெரு மான் மீது தொண்டைமான் மகன் சக்ராயுதத்தை விட்டான். சக்ராயுதம் அடித்து வீழ்த்தியதில், வேங்கடேசப் பெருமான் மயங்கிக் கீழே விழுந்தார். செய்தி கேட்ட பத்மாவதி தேவி அகஸ்தியருடன் போர் முனைக்கு ஓடிவந்தாள். முகத்தில் நீர் தெளித்து வேங்கடேசப் பெருமானைக் கண் விழிக்கச் செய்தாள். போர் முனையில் பத்மாவதி தேவியைப் பார்த்த வேங்கடேசப் பெருமான், "இங்கு வரலாமா? அகஸ்தியரே நீராவது சொல்லியிருக்கலாமே" என்று கடிந்து கொண்டார்.

"போர் தொடங்கியதும் பத்மாவதி கவலைப்பட ஆரம்பித்து விட்டாள். ஒரு பக்கம் தம்பி, மறுபக்கம் சிற்றப்பா. போர்முனையில் கணவன். பத்மாவதி என் வீட்டில் எப்படி இருக்க முடியும்? இருவரும் அடித்துக் கொள்வதை அவள் விரும்பவில்லை. இருவரையும் சந்தித்துச் சமாதானம் செய்யவே போர் முனைக்கு வந்தாள். இடையில் நீங்கள் அடிபட்ட செய்தி கேட்டு இங்கு வந்தாள்" என்று அகஸ்தியர் கூறினார்.

பத்மாவதி வேண்டியபடி, வசுதானனையும், தொண்டை மானையும் அழைத்து நாட்டையும், செல்வத்தையும் சமமாகப் பிரித்து அளித்து, அவர்கள் இருவரையும் வேங்கடேசப்பெரு

மான் ஒன்று படுத்தி வைத்தார். சமாதானம் செய்து வைத்ததற்கு இருவரிடமும் காணிக்கையைப் பெருமாள் தவறாமல் கேட்டார். வசுதானன் 36 கிராமங்களை வேங்கடேசருக்குக் காணிக்கையாகத் தந்தான். நிழலின்றி நிற்கும் ஸ்ரீநிவாசனுக்குத் திருமலையில் தங்குவதற்கு ஒரு கோவில் கட்டித் தருவதாகத் தொண்டைமான் வாக்களித்தான்.

ஆதிவராகப் பெருமாளிடம் அனுமதி பெற்று, திருமலையில் வேங்கடேசப் பெருமான் தங்குவதற்கு ஒரு அதி அற்புதமான கோவிலைத் தொண்டைமான் கட்டினான். பக்தர்கள் நீராட வசதியாகப் பக்கத்திலேயே சுவாமி, புஷ்கரணியை வெட்டினான். பக்த கோடிகள், ஏழு மலைகளும் ஏறி, ஏகாந்த வேங்கடேஸ்வரனை எளிதில் தரிசனம் செய்து வர வசதியாக அழகிய படிக்கட்டுக்களை (ஏழுமலைகளிலும்) வெட்டினான்.

கோவில் வேலை முடிந்ததும், வேங்கடேசப் பெருமான், பத்மாவதியைத் தன் திருமார்பில் வைத்துக் கொண்டு திருவேங்கடமலையில் தங்கி, உலக மக்கள் அனைவருக்கும் அமைதி, சுபிட்சம், நல்வாழ்வு, கீர்த்தி, இகபரசுகங்கள் ஆகியவற்றை வாரி வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றார்.

## 11. வாக்குத் தவறிய தொண்டமான்

முனியே நான்முகனே முக்கண்ணப்பா என் பொல்லாக்
கனிவாய்த் தாமரைக் கண்கரு மாணிக்கமே என் கள்வா
தனியேன் ஆருயிரே ! என்தலை மிசையாய் வந்திட்டு
இனிநான் போகவொட்டேன் ஒன்றும் மாயம் செய் யேல்என்னையே!

# XLIX

திருமலையில் வேங்கடேசப் பெருமானுக்குத் திருக்கோவில் கட்டி வைத்த தொண்டைமான் சக்கரவர்த்தி, அனுதினமும் தவறாமல் வடவேங்கடமலைக்குச் சென்று வேங்கடேசப் பெருமானைத் திவ்விய தரிசனம் செய்த பிறகு மற்ற அரசியல் விவகாரங்களைக் கவனிப்பது வழக்கமாக இருந்தது. ஒரு நாள் அவன் தரிசனம் முடித்து அரசவையில் வீற்றிருக்கும் போது கூர்மன் என்ற பெயருடைய ஒரு ஏழைப் பிராமணன் அரசவைக்கு வந்தான். அவன் வந்த விவரத்தை அமைச்சர் கேட்டார், தனது தந்தையின் எலும்புகளைக் காசிக்கு எடுத்துச் சென்று கங்கையில் கரைக்க விரும்புவதாகவும், கர்ப்பவதியாக இருக்கும் தனது மனைவிக்கும், தன்னுடைய சிறிய மகனுக்கும் பாதுகாப்பு வேண்டியே, அரசனிடம் வந்ததாகவும் அவன் கூறினான். "கூர்மா! காசி யாத்திரை போய்வா! கர்ப்பவதியான உனது மனைவியையும், உனது குழந்தையையும், அரசு காப்பாற்றும். அச்சம் வேண்டாம்," எனக் கூறி அந்த ஏழைப் பிராமணனுக்குக் காசி யாத்திரைக்கு ஆகும் செலவையும் தொண்டைமான் கொடுத்து அனுப்பினான்.

பிறகு பிராமணனுடைய மனைவியும், மகனும் வசிப்பதற்கு, ஒரு வசதியான வீட்டைக் கட்டினான். அவர்களுக்கு ஆறுமாத காலத்திற்குத் தேவையான உணவுப் பொருட்களையும் வழங்கினான். கூர்மனுடைய மனைவியும், மகனும் எவர் கண்ணிலும் படாமலிருக்க, அந்த வீட்டைச் சுற்றி உயரமான சுவர்களைக் கோட்டை போல எழுப்பினான் பிறகு அவர்களை அங்குக் குடி அமர்த்தினான். இவ்வளவு வசதிகளையும் செய்து தந்த, தொண்டைமான் இவர்களை அறவே மறந்து விட்டான். பல மாதங்கள் ஓடிவிட்டன.

காசிக்குச் சென்ற கூர்மன் ஒரு நாள் திரும்பி வந்து நேராக அரண்மனைக்குச் சென்று, தொண்டைமானைப் பார்த்துத் தனது மனைவி, மக்களைப் பற்றிய விவரங்களைக்

கேட்டான். ஏழைப் பிராமணனைப் பார்த்த பிறகுதான் அவனுடைய மனைவி மகன், தான் கட்டிக் கொடுத்த தனி வீடு, போன்ற விஷயங்கள் அரசனுக்கு நினைவிற்கு வந்தன. இதனை வெளிக்காட்டிக் கொள்ளாமல் "கூர்மா! உனக்கு ஒரு அழகிய பெண் குழந்தை பிறந்துள்ளது, உனது மனைவியும், மகனும், மகளும், திருமலையில் நடக்கும் ஒரு விழாவிற்கு அரண்மனைப் பெண்களுடன் சென்றிருக்கின்றார்கள். விரைவில் வந்து விடுவார்கள்" என்று அரசன் கூறினான். கூர்மனை உணவு உட்கொள்ளச் செய்து, ஓய்வு எடுக்கவும் ஒரு விடுதிக்கு அனுப்பி வைத்தான்.

கூர்மனுடைய மனைவியையும் குழந்தைகளையும், தான் கட்டிய வீட்டிற்குச் சென்று பார்த்து வரும்படித் தொண்டைமான் தன் மகனை அனுப்பினான். வேகமாகச் சென்ற மகன், அதே வேகத்தில் கொண்டு வந்த செய்தி தொண்டைமானுக்கு இடி விழுந்தது போல் இருந்தது. பிராமணனுடைய மனைவியும், மகனும், மகளும் இறக்க, அவர்களுடைய எலும்புக்கூடுகள் மட்டும் அந்த வீட்டில் இருக்கின்றன என்ற செய்தியை இளவரசன் அங்குப் பார்த்து வந்து கூறினான்.

இளவரசன் கொண்டு வந்த செய்தியால் இடிந்து போன தொண்டைமான், "ஐயோ! கூர்மனுக்கு என்ன பதில் கூறுவேன் 'என்னை நம்பி அடைக்கலமாக விட்டுச் சென்ற அவனது மனைவியையும், மக்களையும் இறக்கும்படிச் செய்து விட்டேனே! இந்தத் துயரச் செய்தியை எப்படிக் கூர்மனிடம் கூறுவேன்" என்று வருந்தினான். பிறகு, தொண்டைமான், திருமலைக்கு ஓடிச் சென்று வெங்கடாஜலபதியின் பாதங்களைப் பற்றிக் கொண்டு கதறி அழுதான். இவனது துயரத்தைப் பொறுக்காத, வேங்கடவனும், இவன் முன் தோன்றினார். "தொண்டைமானே! என்ன காரியம் செய்து விட்டாய்! அடைக்கலப் பொருளை அழியும்படிச் செய்தது பெரும் பாவம் அல்லவா! அரசனாக இருந்தும் குடிமக்களைக் காப்பாற்றத் தவறி விட்டாய்! அதுவும் இன்றிப் பொய் பேசினாய்! பிராமணனை ஏமாற்றப் பார்க்கிறாய்! நீ

ஆறாத் துயரால் அழுவது, என் நெஞ்சத்தை உருக்குகின்றது. நீ என் பக்தர்களில் ஒருவன். உனக்குத் துன்பம் வருகின்ற போது உன்னைக் காப்பது என் கடனாகும். ஆகவே உன் மகனை அனுப்பி, பிராமணனுடைய மனைவி, மக்கள் ஆகியோரின் எலும்புகளை எடுத்துக் கொண்டு வரச்செய்," என்று பகவான் அருளினார்.

தொண்டைமானும், தனது மகனை உடனே அனுப்பிக் கூர்மனின் மனைவி, மக்கள், எலும்புக் கூடுகளை ஒரு மூட்டையாகக் கட்டிக் கொண்டு வரச் செய்தான்.

## 12. பாண்டு தீர்த்தம் தாண்டிப் பகவான் செய்த லீலை

பாண்டு தீர்த்தத்திற்குப் பிறகும் இருந்த ஒரு புனித தீர்த்தத்தில் அந்த எலும்பு மூட்டையை வைத்துக் கழுத்தளவு நீரில் இறங்கி எலும்பு மூட்டையின் மீது நீரை வாரி வாரிப் பகவான் இறைக்க, எலும்பு மூட்டையிலிருந்து கூர்மனின் மனைவி, மகன், சிறிய பெண் குழந்தை ஆகிய மூவரும் வெளியே வந்தனர். அவர்களைத் தொண்டைமானிடம் ஒப்படைத்து விட்டு, "இனி நான் உன்னுடன் பேச மாட்டேன், இனி நீ சென்றுவா," என்று கூறி வேங்கடேசப் பெருமானும் மறைந்தார்.

இதற்குப் பிறகு தொண்டைமான் சக்கரவர்த்தி, கூர்மனின் மனைவி, மக்களை அழைத்துக் கொண்டு அரண்மனைக்கு வந்தான். அங்கு ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த கூர்மனை வரவழைத்தான். அவனிடம் நடந்த விவரங்களைக் கூறி, மன்னிப்பும் கேட்டுக் கொண்டான். பிறகு கூர்மனின் மனைவி, மக்களை அவனிடம் ஒப்படைத்து, அவர்களுக்குச் செல்வமும் வாரி வழங்கி அனுப்பி வைத்தான்.

## 13. கனகப் பூவும், களிமண் பூவும்

முடிச்சோதியாய் உனது முகச் சோதி மலர்ந்ததுவோ?
அடிச்சோதி நீநின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ?
படிச்சோதி யாடையோடும் பல்கலனாய் நின்பைம்
பொன்
கடிச்சோதி கலந்ததுவோ? திருமாலே! கட்டுரையே.

எட்பூவுக் கிகனாடி யிந்திரையே
முதனின்னோ டியைந்த வுள்ள
நட்பூறு மூவர்தமிற் கோதையுன்பான்
மயல்பெருகி நச்சி னானாற்
கட்பூவிற் புவிபுரக்குங் காவலவ
னருச்சனை செய்கனகப் பூவின்
மட்பூவின் மயலான மால்திருவேங்
கடமலை வாழ்மாயோன் றானே.

வடவேங்கடவன் வரலாற்றில் பல்வேறு கதைகளும், உப கதைகளும் நிறைந்திருந்தாலும், மதுரகவியாருக்குத் தொண்டைமானின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களும், வடவேங்கடவனின் திருவிளையாடல்களும் உள்ளத்தில் இடம்பிடிக்க, அவற்றையே திரும்பத் திரும்பச் சொல்லிச் சொல்லி மகிழ்ச்சி யடைகின்றார். தொண்டைமான் சக்கரவர்த்தி இல்லா விட்டால் வடவேங்கடவனுக்குத் திருமலையில் கோவில் இல்லை. இதை நன்கு அறிந்த மதுரகவியார் தொண்டைமானின் அருமை, பெருமைகளை விவரமாகப் பேசுகின்றார்.

கூர்மனுக்குத் தொண்டைமான் கொடுத்த வாக்கை நிறைவேற்றி வைத்த வேங்கடேசப் பெருமான், தொண்டைமானிடம் பேசுவதை அறவே நிறுத்திவிட்டார். வேங்கடேசப் பெருமானைப் பேச வைப்பதற்குத் தொண்டைமானும் பல முயற்சிகள் செய்தும், தோற்றுப் போனான். பெருமானைப்

பேச வைப்பதற்கு வழி என்ன என்பதைப் பல்வேறு முனிவர்களை அண்டி, வணங்கித் துதித்துக் கேட்டான். "வெங்கடாஜலபதிக்குத் துள்சியின் மேல் அதிகப் பிரியம். ஆகவே, அனுதினமும் துளசித்தளத்தினால் அர்ச்சனை செய்து வந்தால், உமது எண்ணம் நிறைவேறும்" என்று முனிவர்கள் கூறினர்.

சாதாரணத் துளசித் தளத்தினால் தூயவனுக்கு அர்ச்சனை செய்ய, "அரசனாகிய எனக்கு அடுக்குமா" என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டு நாள்தோறும் வேங்கடேசப் பெருமானைத் தங்கத்தினால் செய்த துளசித் தளத்தினால் திருமலைவாசனைத் தினமும் அர்ச்சனை செய்து வந்தான். இவனுடைய கனக தளத்தின் நடுவில் களி மண்ணிலான துளசித் தளமும் இருப்பதைக் கண்டு ஆச்சரியமுற்றான். "ஆண்டவனே, உன்னை நான் தங்கமலரால் அர்ச்சிக்கின்ற போது, யாரோ ஒருவன் தங்களை மண்மலர்களால் அர்ச்சிக்கின்றானே ! இதை எப்படி நீங்கள் ஏற்கலாம். அவன் யார் ? எனக்கு அறிவிக்க வேண்டும்" என்று வடவேங்கடவனைத் தொண்டைமான் கேட்டுக் கொண்டான்.

"மண்பாண்டம் செய்யும் பீமன் என்ற குயவன், வடவேங்கட மலைக்கு வடக்கே, ஒரு கிராமத்தில் இருக்கின்றான். கள்ளம் கபடமற்ற நெஞ்சத்துடன் மண்ணால் செய்த மலர்களால் அனுதினமும் என்னைப் பூசிக்கின்றான். கனக மலரை விட அவன் பூஜை செய்யும் களிமண் மலர்களே எனக்கு விருப்பம் உடையதாக இருக்கின்றன. விரும்பினால் அவனைச் சென்று பார். நீயே சிறந்த பக்தன் என்கின்ற உனது கர்வம் தானே அகலும்" என்று பெருமான் கூறினார்.

இதன்படி தொண்டைமானும் வடவேங்கடத்திற்கு வடக்கே உள்ள கிராமத்திற்குச் சென்று, பீமனைத் தேடினான். மண்பாண்டங்கள் செய்யும் இடத்தில் மனமுருக, நாராயணன் நாமத்தை உளமுருகப் பாடிக் கொண்டே, பீமன் களிமண்ணை மிதித்துக் கொண்டிருந்தான். தன்னை மறந்த நிலையில் நின்ற

பீமனுக்கு முன் பத்மாவதியுடன் வேங்கடேசப் பெருமான் காட்சி தந்தார். பீமனும், அவன் மனைவியும், வேங்கடேசப் பெருமானிடம் ஓடி வந்து கால்களில் விழுந்து கும்பிட்டு வணங்கி நின்றனர். இதனைக் கண்ணுற்ற தொண்டைமான் கர்வம் ஒடுங்கி, வேங்கடேசப் பெருமானின் பாதங்களில் விழுந்து ''எளியவர்க்கெல்லாம் இன்னருள் புரியும் ஏந்தலே! பலகாலம் பூஜித்து வந்தாலும் பீமன் போன்ற கள்ளம், கபட மற்ற நிலையை நான் அடையவில்லை. கருணை புரிவாய், தயாபரமே,'' என்று கதறி அழ, வேங்கடேசப் பெருமானும், தொண்டைமானுக்கும் ஆசி வழங்கி அருளினார்.

மணிமகுட முடியரசு தருகனக மலரின்ஒரு
மண்குயவன் இடுமல ரினால்
மனமுவந்து அனவரதம் அழியாத பேரின்ப
வாழ்வினை அளித்த உனது

— **சந்திரகலா மாலை-7**

என்ற கவிதையின் மூலம் மதுரகவி இந்த நிகழ்ச்சியை விளக்கு கின்றார்.

தூது வந்தவர் அன்றுவிடு தூது
வந்திலர் தொண்டைமான்
துணிவு சேர விறல்ஆழி தந்தவர்கை
தொடரும் ஆழி தருகிலார்

இப்படிப் பலசந்த மாலையில், தொண்டைமானுக்குச் சங்கு, சக்கரம் போன்றவற்றை வட வேங்கடவன் தந்து தவிய தையும் மதுரகவி விளக்குகின்றார்.

## 14. தொல்லுலகம் தொழும் திருமலைத் திருக்கோயில்

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் — செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று.

இன்றே கழல்கண்டேன் ஏழ்பிறப்பும் யானறுத்தேன்
பொன்தோய் வரைமார்பில் பூந்துழாய் - அன்று
திருக்கண்டு கொண்ட திருமாலே உன்னை
மருக்கண்டு கொண்டென் மனம்.

என்று பாடிக் கொண்டு தொல்லுலகங்களின் எல்லாப் பகுதியி லிருந்தும் தொண்டைமான் கட்டிய இந்தக் கோவிலில் உள்ள ஏகாந்த வேங்கடேசுவரரைத் தொழுவதற்குப் பக்தர்கள் ஓடி வருகின்றனர்.

இன்று இந்தக் கோவில் ஒரு உலகக் கோவிலாக மாறி விட்டது. எத்தனை இடத்தில் வேங்கடேசப் பெருமானைப் பிரதிஷ்டை செய்து கோவில் கட்டினாலும், இங்கு வருவதையே வாழ்க்கையில் ஏற்படும் பெரும் புண்ணியமாக மக்கள் கருது கின்றனர். ஓர் பைசாவைக் காணிக்கையாக மஞ்சள் துணியில் முடிந்து வைத்துக் கற்பூர ஆரத்தி காட்டி வணங்கும் அந்த பக்தனின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் அனாதை ரக்ஷகனாக இந்தப் பகவான் காட்சி தருகிறார். காணிக்கை வாங்கு வதில் இவருக்கு நிகர் இவரே. தொண்டைமானிடமும், வசு தானனிடமும் காணிக்கை வாங்கியவர் அல்லவா! பக்த கோடிகள் இவருடைய ஒரு நிமிட திவ்ய தரிசனத்திற்காகப் பல மணி நேரங்கள் வரிசையில் கால் கடுக்கக் காத்து நிற்கின்றனர். இவரைத் தரிசனம் செய்ததும் அந்த வேதனையை மறந்து கோவிந்தா ; கோவிந்தா ! என்று கூவுகின்றனர். தரிசனம் முடிந்து வந்ததும் இவருடைய உண்டியலில் பணத்தைப் போடவில்லை ; கொட்டுகிறார்கள். ஒரு சில மணி நேரங்களில் உண்டியல் நிரம்பி வழிகின்றது. இந்த உண்டியலில் போடப் படாத பொருளே இல்லை.

உண்டியலில் காணிக்கையைச் செலுத்திய பிறகு கோவிந் தன் கோவிலில் வழங்கும் இலட்டுப் பிரசாதம் உலகப் பிரசித்தம். திருமலைவாசன் இலட்டுப் பிரசாதம் வாய்மணக்கும். கை மணக்கும். உள்ளம் இனிக்கும். திருமலை போய் வந்தேன் என்றால், இலட்டுப் பிரசாதம் கேட்காதவர்கள் யாரும் இருக்க

மாட்டார்கள் என்று கூறலாம். ஆண், பெண் என்ற வித்தியாச மின்றி அனைவரும் மொட்டையடித்துக் கொண்டு, கோவிந்தா! கோவிந்தா! என்று கூவிக் கொண்டு செல்லும் பக்தர்கள் கூட்டத்தையும் திருமலையில் காண்கின்றோம். இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும், ஏன் உலகின் மூலை முடுக்கி லிருந்தும், இந்தக் கலியுக வரதனைத் தரிசனம் செய்யக் கும்பல் வந்து கொண்டேயிருக்கிறது. முன்பெல்லாம் இந்த நாளில்தான் கூட்டம் இருக்கும் என்று கூறுவார்கள். இப்போது எல்லா நாட்களும் பக்தர்கள் கூட்டம் கூட்டமாக ஓடி வந்து கொண்டே யிருக்கின்றார்கள். அன்று தொண்டை மான் கட்டிய ஒரு கோவில் தான் இருந்தது. நிற்க நிழலில்லை, என்று வேங்கடவன் கூறியதாக அறிந்தோம். இன்று திரும்பிய இடமெல்லாம் ஜோதி மணி மாடங்கள். இன்று கோவிந்தன் வாழும் ஊர் திருமலை, ஒரு குபேர புரியாக விளங்குகின்றது. குபேரனிடம் கடன் வாங்கிக் கல்யாணம் செய்து கொண்ட இந்தக் கோமகனின் அந்தக் கடன் விரைவில் தீரட்டும், என்று எண்ணி உண்டியலில் பக்தர்கள் பணத்தைக் கொட்டுகிறார் களோ என்னவோ தெரியவில்லை.

வடவேங்கடவனின் கருணை மிகுந்த அருள் நிறைந்த பொருள் பொதிந்த வரலாற்றை ஒருவாறு அவனுடைய திரு அருளினாலே இன்று இங்கு அறிந்து கொண்டோம். அவன் கருணை எல்லோருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

அகலகில்லேன் இறையும் என்று
அலர்மேல் மங்கை உறைமார்பா
நிகரில்புகழாய் உலகம் மூன்று
உடையாய் என்னை ஆள்வானே
நிகரில்அமரர் முனிக்க ணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே
புகல்ஒன்று இல்லா அடியேன்
உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே !

— ஆழ்வார்

சென்னை
5—11—92

ஜி. வேதவல்லி

# மதுரகவி திருமலைத் திருப்புகழ்

காப்பு

செய்ய திருமலைவாழ் தெய்வமேற் செந்தமிழால்
துய்ய திருப்புகழ்யான் சொல்லவே - ஐயறவில்
ஒன்றாம் அறிவில் உதித்தோனை நேமியென
நின்றானை நெஞ்சே நினை 1

மல்லல் வடமலைவாழ் மால்வேங்க டேசுரன்மேல்
நல்ல திருப்புகழை நானுரைப்பேன் - வல்ல
கணநாத னென்னக் கவின்குருகூர் வந்த
குணவாளன் தண்ணருளே கொண்டு 2

அவையடக்கம்

ஆசை அளவில்லை ஆதலினால் யானறையும்
ஓசைத் திருப்புகழை உய்த்துணர்ந்து - காசைக்
கருதார் வடவேங் கடத்தானை எண்ணி
அருணா வலமுடையா ராய்ந்து 3

---

1. செய்ய திருமலை வாழ் தெய்வமேல் – சிறந்த திருப்பதி வாழ் வேங்கடவன்மீது ; துய்ய – பரிசுத்தமான ; திருப்புகழ் யான் சொல்லவே - திருப்புகழ்ச் சந்தப்பாடல்கள் நான்கூற ; ஐயறவில் – சந்தேகமில்லாத ; ஒன்றாம்அறிவில் – உணர்வில் ; உதித்தோனை – தோன்றியவனை ; நேமிஎன நின்றானை - சக்கரத்தாழ்வான் என நின்றவனை ; நெஞ்சே – மனமே ; நினை – கருதுக.

2. மல்லல் வடமலை வாழ் - வளம் மிக்க வேங்கடத்தில் வாழும் ; மால் - திருமால் ; வேங்கடேசுரன்மேல் வேங்கடேசப் பெருமாள்மேல் ; நல்ல – நன்மை தரும் ; திருப்புகழை – சந்தப் பாடல்களை ; வல்ல - வலிய ; கணநாதன் என்ன – அடியார் தலைவன் என ; கவின்குருகூர் வந்த – அழகிய திருக்குருகையில் உதித்த ; குணவாளன் - பண்பாளன் மாறன் ; தண்ணருளே கொண்டு – குளிர்ந்த கிருபையினால் ; நான் உரைப்பேன் - நான் கூறுவேன்.

3. ஆசை அளவில்லை – விருப்பத்துக்கு எல்லை கிடையாது ; ஆதலினால் – அதனால் ; யானறையும் - நான்கூறும் ; ஓசைத்திருப்புகழை - சந்தமுள்ள திருப்புகழை; உய்த்துணர்ந்து- சுவைத்தறிந்து ; வடவேங்கடத்தானை எண்ணி - வடமலை வேங்கடேசப் பெருமானை நினைத்து ; அருள்நாவலமுடையார் – அருட்புலமையாளர் ; ஆய்ந்து - ஆராய்ந்து ; காசைக் கருதார்–அதிலுள்ள குற்றங்களைப் பொருட்படுத்தார்.

## மதுரகவி திருமலைத் திருப்புகழ்

தன தானன தானன தானன
தன தானன தானன தானன
தன தானன தானன தானன தனதான

1. கருவேங்கட மோடமு தோவென
நிலமார்ந்தனை பாலயி லாமிகு
கணையாம்பிணி யாதியி னால்வரு துயரோடு

களியார்ந்தழ காய்நட வாமுகம்
மினவாஞ்சையின் வாஇரு போஎன
மொழிதீங்கனி வாயொடு பேசிடு முறையாலே

அருளோங்கிய சேயிவ னாமுயல்
தவமோங்கிய பேறினி வேறிலை
யடையாங்கனல் வாய்நம னாமென அதிமோக

அலையாங்கடல் வீழ்தரு தாதையர்
குலமேங்கிட வாலிப னாயுல
கலம் வாய்ந்திட வாகுதல் யாவென அறிவாரோ

மருவார்ந்தவிர் கோதையள் சானகி
மணமார்ந்தவ ராவணன் மாமுடி
மலை ஏந்திய வாளியி னால்விழ மலைவோனே

மறையாய்ந்தவ ரோடிள மாமதி
தனைவேய்ந்தவர் தாமரை நாண்மலர்
வரனாந் தகை யோதரி தாகிய வடிவானே

செரு வோங்கடல் வாரண மோடரி
எதிர்பாய்ந்திகல் சூழலின் மாடிழி
திரைசூன்றகழ் ஓடையின் மாமணி இருள்கீறச்

செறியாம்பல்கள் வாய்நெகிழ் தேறலின்
அளியார்ந்திசை பாடுத லாலுயர்
திருவேங்கட மாமலை மேவிய பெருமாளே

## மதுரகவி திருமலைத் திருப்புகழ் உரை

1) கருவேம் - கருவில் உதித்த நாம்; கடமோடு - உடல் கொண்டு (சரீரம் எடுத்து); அமுதோ என நிலம் ஆர்ந்து - சாவா மருந்தாகிய அமுதம் இதுவோ எனப் பூமியிற் பொருந்தி; அனை - தாயின்; பாலயிலா - முலைப் பாலருந்தி; கணை யாம்பிணி ஆதியினால் வரும் - கணை எனப் பெறும் நோய் முதலியவற்றால் ஏற்படும்; துயரோடு - துன்பத்துடன்; களி ஆர்ந்து - மயக்கம் கொண்டு; அழகாய் - எழிலோடு; நடவா - நடந்து; முகம்மின - முகத்தில் ஒளிமிக; வாஞ்சையின் அன்பினால்; வா இரு போ என - வாருங்கள் இருங்கள், போகுமின் என்று; மொழி-வார்த்தைகள்; தீங்கனி வாயொடு- இனிய கொவ்வைக்கனி வாயுடன்; பேசிடும் - கூறும்; முறை யாலே - குணத்தினாலே; அருளோங்கிய - அருளில் உயர்வு பெற்ற; சேய் - பிள்ளை; இவனா - இவன் என; முயல் தவம் - செய்தவத்தால்; ஓங்கிய பேறு - சிறந்துயர்ந்த செல்வம்; இனி வேறு இலை - மேலும் பிற ஒன்றில்லை; அடை ஆங்கு அனல் வாய் நமனாம் என - ஆங்கு தீயில் யமனால் தள்ளப் பெறு வாய் என்று; அதிமோக - மிக்க ஆசையாம்; அலையாம்- கடல்; வீழ்தரு - வீழ்ந்துள்ள; தாதையர் - பெற்றோர்; குலம் ஓங்கிட - இனம் சிறக்க; வாலிபனாய் - இளைஞனாய்; உலகு - இவ்வுலகம்; அலம் வாய்ந்திட ஆகுதல் - சஞ்சலம் பொருந்தி இருத்தல்; யாவென - எதனால் என; அறிவாரோ - அறிவார்களோ; மருவார்ந்து - வாசனை பொருந்தி; அவில் - ஒளிரும்; கோதையள் - கூந்தலினாள், (உயர் குல மகளிர் கூந்தலுக்கு இயற்கை வாசனை உண்டு); சானகி - சனக மன்னன் மகளின்; மனம் ஆர்ந்தவ - அகத்திற் பொருந்தி இருப்பவனே; ராவணன் - இலங்கேசனாம் இராவணன்; மா முடி மலை - பெரிய மலையனைய சிரங்களை; ஏந்திய - தம் கரத்துத் தாங்கிய; வாளியினால் - அம்பினால்; விழ - அறுந்து விழும்படி; மலைவோனே - போரிட்டு வெற்றி கொண்ட வனே; மறை ஆய்ந்தவரோடு - வேதமுணர்ந்தவர்களுடன்; இளமாமதி தனை - பெருமை வாய்ந்த பிறைச் சந்திரனை, வேய்ந்தவர் - சடை முடியிற் புனைந்த சிவன்; தாமரை நாண் மலர் வரனாம் தகை-நாளும் மலரும் பங்கய மலரில் தோன்றிய வன், (பிரமன்) என்னும் தக்கோன்; ஓதரிதாகிய - கூறுதற் கியலாத சிறப்புள்ள; வடிவோனே-உருவினனே; செரு ஓங்கு - போர்த்தன்மை சிறந்த; அடல் - வலிய; வாரணமோடு - யானைகளுடன்; அரி - சிங்கங்கள்; எதிர் பாய்ந்திகல் -

தானன தானன தானன தானன
தானன தானன தனதான

2. ஆங்கில பாடையின் மேம்பட லேபெரி
தாம்பல னாப்என அறியாதே
ஆன்றவ ரோதிய தீந்தமிழ் தேர்கிலர்
ஆய்ந்தறி யாரணு வளவேனும்

மாங்குயில் நேர்மொழி வாய்ந்தவ ரோடிறு
மாந்தொரு வாகன மதினேறி
வாஞ்சையி னேகுதல் தான்தவ மாமென
மான்றவ ரோவுனை நினைவாரே

தேங்கிள நீர்முலை வாங்கிய நூலிடை
தேங்கமழ் தாமரை மயில்மார்பா
சேந்தனு மாதுமை காந்தனு மாலொடு
சேர்ந்தெமை யாள்கென அருள்வோனே

வேங்கையு நாகமு மான்களு மாடுற
வேங்கையு நாகமு மிடைவாகி

மீன்கண மேல்வளர் பூம்பொழில் மாமலை
வேங்கட மேவிய பெருமாளே

தானன தானதன தானன தானதன
தானன தானதன தனதான

அகப்பொருள்

3. பூங்கணை மாமதன னீர்ந்தொடை மாலைபுனை
பூங்குழ லாள்புரையும் அதிரூபி

போந்துறை மீதுறையு வான்புளி னாலயர்வு
பூண்டுடல் சோர்வினொடு புவிமீதே

ஏங்கினள் பாலமுத மாந்திலள் காதலுறும்
ஈங்கிவள் பேரிளமை இகவாமுன்

ஏந்திள மாமுலையிற் றோய்ந்திட மாலைதனை
ஈந்திட வேணுமிது தவியாமே

எதிர்த்துத் தாக்கிப் போரிடும் ; சூழலின் மாடு - சுற்றுப் புறத் தருகே ; இழிதிரை சூன்றகழ் ஓடையில் - அலை வீசி இறங்கி ஆழமாக ஓடும் நதியில் ; மாமணி - சிதறும் மணிகள் ; இருள் கீற - இருளைக் கிழிக்க ; செறி ஆம்பல்கள் - திரண்ட அல்லி மலர்கள் ; வாய் நெகிழ் - மலர' ; தேறலின் - தேனின் ;' அளி யார்ந்து - வண்டுகள் பொருந்தி ; இசை பாடுதலால் - கீத மிசைப்பதால் ; உயர் - சிறப்புடைய ; திருவேங்கடமாமலை - திருவேங்கடம் என்னும் பண்டைச் சிறப்பு வாய்ந்த பெரிய மலையில் ; மேவிய - என்றும் விளங்கும் ; பெருமாளே- திருமாலே ; திருவேங்கட மாமலை மேவிய பெருமாளே, அறிவாரோ என இயைக்க

2) ஆங்கில பாடையின் - இங்கிலாந்து நாட்டினரின் இங்கிலீசு மொழியில் ; மேம்படலே - மேலான புலமை பெறு தலே ; பெரிதாம்பலன் ஆம் என (ஆங்கிலர் ஆட்சியில் அடி மைப்பட்டு) மிகு பலன் தருவதாகும் என : அறியாதே - அறிவின்மையால்; ஆன்றவர் - அறிவிற்சிறந்த பெரியவர்கள்; ஓதிய-கூறிவரும் ; தீந்தமிழ் - இனிய (தாய்மொழி) தமிழ்மொழி யை ; தேர் கிலர் - பயிலாதிருக்கின்றனர் ; ஆய்ந்தறியார் அணுவளவேனும் - மிகச் சிறிதளவு கூட ஆராய்ந்தறிகிலர் ; மாங்குயில் நேர்மொழி - மாஞ்சோலைகளில் கூவும் குயிற னைய சொற்கள் ; வாய்ந்தவரோடு - இயல்பாகப் பெற்ற மாதர்களுடன் ; இறுமாந்து - கருவமுடன் ; ஒருவாகனமதில் ஏறி - ஒரு தேரில் (கார்) ஏறியமர்ந்து : வாஞ்சையின் - அன்புடன்; ஏகுதல்தான் - செல்வது ஒன்றே ; தவம் ஆமென்- தவமாகும் என்று ; மான்றவரோ - மயங்கியவர்களோ ; உனை நினைவாரே - உன்னை மனத்தில் நினைப்பார்கள் ; தேங்கிள நீர்முலை - தெங்கின் இளநீரனைய கொங்கைகளும் ; வாங்கிய நூலிடை - (அதன்பாரத்தால்) வளைந்த நூல்போன்ற இடை யும் உடைய ; தேங்கமழ் - வாசனை பொருந்திய ; தாமரை மயில் - தாமரை மலரிலிருக்கும் மயிலனைய திருமகளை ; மார்பா - மார்பிற்கொண்டவனே ; சேந்தனும் - குமரக்கடவு ளும் ; மாதுமை காந்தனும் - உமா தேவியின் கணவனாம் சிவனும் ; மாலொடு சேர்ந்து - அயர்வுடன் உன் திருமுன்பிற் சேர்ந்து ; எமையாள்கென - எங்களை ஆண்டருள்க எனப் பிரார்த்திக்க ; அருள்வோனே - அவ்வணமே அருள்புரிப வனே ; வேங்கையும் - புலியும் ; நாகமும் - யானையும் ; மான் களும் - மான் இனங்களும் ; மாடுற - பக்கலில் தங்கி இருக்க வேங்கையும் - வேங்கை மரமும் ; நாகமும் நாவல் - மரமும் ;

ஓங்கிய மாமருது சாய்ந்திட மாமுகிலின்
ஊர்ந்தவ தேவகிதன் ஒருபாலா
ஓங்கிய சேவடியி னோரடி யாற்புவியை
ஓர்ந்துடன் தானளந்த விசுவேசா
வேங்கையு மீதுவளர் கோங்கமு மாரமொடு
வீங்கிய பாதிரியும் மிடைசோலை
மீன்கண மாடுசெறி வேங்கட மாமலையின்
மேம்படு தேவர்பணி பெருமாளே

தனத்ததன தனன தனன தனத்ததன தனன தனன
தனத்ததன தனன தனன தனதான

4. உருத்ததிரு முகிலின் முழங்கி வெருக்கொள்படை
செறிய நெருங்கி
உகக்கடையி னனலின் வெதும்பி நமதூதர்
உரப்பியிவன் மிகவு மினைந்து கறுத்தவிழி யிணங்கி
சுருங்கி
உவக்குமச டனென வளைந்து கொடுபோநாள்
வருத்தமடை குதலை யறிந்து கருத்தின்மிகு
மருளில் நயந்து
மலர்க்கைவரி வளையும் பொலிந்து துளவார
மணத்தினடி யனயர் வொதுங்க மதித்துனது கழலி
னிணங்க
வரித்துவர முதவ எழுந்து வருவாயே
திரைத்தவலை கடலி லிலங்கை வளைத்தடுவ லிமுக
கணங்கள்
தெளிப்பவரை சிலைகை பொருந்த நிருதேசர்
சிரத்தைமணி முடிகள் கவிழ்ந்து நிலத்தில்விழ
வமரர் புகழ்ந்து
செழித்தரு மலர்கள் சொரிந்து புகழ் பாட

மிடைவாகி - நெருங்கி ; மீன்கண மேல்வளர் - விண்மீன் கூட்டங்களுக்கு மேலும் வளர்ந்துவரும் ; பூம்பொழில் - பூஞ் சோலைகள் உடைய; மாமலை வேங்கடம்-திருவேங்கடமென் னும் பெரியமலையில் ; மேவிய - பொருந்தி விளங்கிய ; பெரு மாளே - திருமாலே ; பெருமாளே, அறியாதே மான்றவரோ உனை நினைவாரே என இயைக்க.

அகத்துறை – நற்றாயிரங்கல்

3) பூங்கணை - புஷ்பபாணங்களை உடைய; மாமதனன்- அழகுள்ள மன்மதனின் ; ஈர்ந்தொடை மாலை - தொடுக்கப் பெற்ற குளிர்ந்த மணமாலை புனை – அணியும் ; பூங்குழலாள் - மலரணிந்த கூந்தலை உடைய இரதியை ; புரையும் – ஒத்த ; அதிரூபி - மிக்க உருவ எழில் கொண்டவள் ; போந்துறை - செல்லும் வழியில் ; மீதுறையும் - மேலே மரங்களில் தங்கி இருக்கும் ; வான்புளினால் - பெருமைமிக்க கருடனால் (அவன்புடைநீயமர்வதால்) அயர்வுபூண்டு - ஏக்கம் கொண்டு : உடல் சோர்வினொடு – சரீரத் தளர்வுடன் ; புவிமீதே- தரையில் கிடந்து ; ஏங்கினாள் - வருந்தினாள் ; பாலமுதம் மாந்திலள் - பாலும், சோறும் அருந்தவில்லை ; காதலுறும் ஈங்கிவள் - இங்கே (உன்பால்) ஆசை கொண்ட இவளுடைய ; பேரிளமை - மிக்க யௌவனத்தன்மை ; இகவாமுன் - அழியு முன்பே ; ஏந்திள மாமுலையில் - நிமிர்ந்த இளமைகுன்றாத பருத்த தனங்களில் ; தோய்ந்திட - அணைந்திடவும் ; மாலை தனை – மன்றல் மாலையை ; ஈந்திடவேணும் - அளித்தருள வேண்டும் ; இது உதவியாமே – இஃது அவளுக்கு நீ செய்யும் உபகாரமாகும் ; ஓங்கிய - உயர்ந்து வளர்ந்த ; மாமருது – பெரிய மருதமரங்கள் ; சாய்ந்திட - வேரற்று முறிந்துசாய, மாமுகிலின் – பெருங்கார் மேகம்போல ; ஊர்ந்தவ - (யசோதை உரலுடன் பிணிக்க அவ்வுரலுடன் மருதமரங்களிடையே தவழ்ந்து சென்றவனே) ; தேவகிதன் - மதுரை மன்னன் உக்ர சேனன் மகள், (கம்சனின் சோதரி) தேவகியின் ; ஒரு பாலா ஒப்பற்ற குழந்தையே (திருப்பதியில் வேங்கடேசனை பாலாஜி என்பது மரபு) ; ஓங்கிய சேவடியின் - உயர்ந்த சிவந்த திருவடி களில்) ; ஓரடியால் – ஒரு திருவடியால் ; புவியை - உலகை ; ஓர்ந்து தனை – நினைத்து ; அளந்த - அளவிட்ட, (ஓங்கி உளகளந்த உத்தமன் – திருப்பாவை) ; விசுவேசா - எல்லா உலகங்களுக்கும் தலைவனே ; வேங்கையும் - வேங்கை மரமும்; மீதுவளர் – மேலே உயர்ந்து வளரும் ; கோங்கமும் – கோங்க

ஒருப்பில்கணை யைவிடு முகுந்த ஒருத்தியின்ம
கனென வயங்கி
ஒருத்தியின்ம கனென வளர்ந்த உடையானே
ஒருத்தலினி னிமை துவன்றி முடித்தலைய ணிபெற
முயங்கி
உலப்பரும்வ டமலை யுறைந்த பெருமாளே

தனதன தனன தான தனதன தனன தான
தனதன தனன தான தனதான

5. வெகுதன மெடுக்க மாட மனையக மெடுக்க மாசில்
விமரிசை யடுக்க வேழ மிசைஏறி
விருதுகள் படிக்க மாடு மகளிர்க ணடிப்ப காசில்
மிகுமிசை பொடிப்ப ஆசை மிகவாகி
நகையுறு முகத்த ராகி யவரவர் தமக்குண்
மேன்மை
நனிவர அகத்து ணாடி நலிவார்கள்
நளினம லரொத்த சீர்கொள் உனதுப தநச்சி
லார்கள்
நமனுல குகிட்டி நாளும் நலிவாரே
சுகரொடு விதித்த வேத முனிவரர் தமக்கும் நீடு
சுரபதி தனக்கும் வீடு தருவோனே
துளவணி யுரத்த சோதி யகணித வுடுத்த
சேலை
துருபதன் மகட்கு மீற அருள்வாயே
செகதல மதித்த சீதை யலமெனும் அளப்பி
லாத
திரையலை கடத்து வீர செயமேரு
திடமுற வுதித்த சேட கிரிமுடி யிடத்து மூவர்
செயலினி லிருக்கு நால்வர் பெருமாளே

மரமும் ; ஆரமொடு – சந்தனமரத்துடன் ; வீங்கிய – பருத்த ; பாதிரியும்-பாதிரிமரமும் ; மிடைசோலை - நெருங்கிய பொழில்கள் ; மீன் கணமாடு - வானில் நட்சத்திரக் கூட்டங்களுடன் ; செறி – திரண்டு விளங்கும் ; வேங்கட மாமலையில் - பெரிய திருவேங்கட கிரியில் ; மேம்படு - வானுலகில் உள்ள (பெருமைக்குரிய) ; தேவர் பணி - வானவர் பணியும் ; பெருமாளே - திருமாலே ; பெருமாளே, மாலைதனை ஈந்திட வேணும் இது உதவியாமே என இயைக்க.

4) உருத்து-சினந்து; அதிரும் முகிலின் – இடிக்கும் மேகம் போல; முழங்கி - ஒலித்து (கோஷித்து) ; வெருக்கொள் படை - அச்சம் தரும் ஆயுதங்கள் ; செறிய - நிறைய ; நெருங்கி - அணுகி (சமீபித்து); உகக்கடையின் அனலின் - யுக முடிவில் (பிரளய காலத்தில்) தோன்றும் ஊழித்தீயென ; வெதும்பி - வெம்மையால் வாடச் செய்து ; நமதூதர் - கால தூதர்கள் ; உரப்பி - அதட்டி ; இவன் - இந்த மனிதன் ; மிகவும் இளைந்து - வெகுவாக வருந்தி ; கறுத்த விழி - கரிய கண்மணி ; இணங்கி – பொருந்தி ; சுருங்கி - சுருக்கமுற்று ; உவக்கும் அசடனென - மகிழும் அறிவிலி என ; வளைந்து - சுற்றிச் சூழ்ந்து ; கொடுபோம் நாள் - கொண்டு செல்லும் காலத்தில் ; வருத்தம் அடைகுதலையறிந்து - துயரம் கொள்வதை உணர்ந்து ; கருத்தில் மிகும் -மனத்தில் அதிகமாக உள்ள ; அருளில் நயந்து - கிருபை புரிதல் நினைந்து ; மலர்க்கை - மலரனைய கரத்தில் ; வரிவளையும் பொலிந்து - அழகிய வளைகள் ஒலிவிட ; துளவார - துளசி மாலையின் ; மணத்தில் வாசனையில் ; அடியன் - தொண்டனேன் ; அயர்வு ஒதுங்க மதித்து - தளர்வு நீங்கக் கருதி ; உனது கழலின் இணங்க - உன்னுடைய திருவடிகளிற் பொருந்த ; வரித்து - நிச்சயித்து ; வரம் உதவ - மேன்மை உதவ ; எழுந்து வருவாயே - என் முன் எழுந்து வருக ; திரைத்த அலைகடல் – சுருண்டு வரும் அலைகள் கூடிய கடலால் ஆழப் பெற்ற ; இலங்கையை - இலங்கைத் தீவை ; வளைத்து - சூழ்ந்து ; வலிமுககணங்கள் - அம்புக் கூட்டங்கள்; தெளிப்ப-செலுத்த ; வலை சிலைகை பொருந்த - வில்கரம் விளங்க ; நிருதேசர் - அரக்கர் தலைவனிராவணன் ; சிரத்தை - தலைகளை ; மணிமுடிகள் கவிழ்ந்து - இரத்தின மகுடங்கள் குப்புற்று ; நிலத்தில் விழ – பூமியில் அறுந்து விழ ; அமரர் - தேவர்கள் ; புகழ்ந்து - போற்றி ; செழித்த தரு மலர்கள் - செழித்து வளரும் பஞ்ச தருக்களின் புஷ்பங்களை ; சொரிந்து - தூவி ; புகழ்பாட - சிறப்புக்களைப் போற்றிப்

தானதன தானதன தானதன தானதன .
தானதன தானதன தனதான

6. ஆதிகுரு நாதரெங்கள் பேரறிதிர் ஓதுசெங்கல்
ஆடையுட னேதுறந்த சனியாசம்
ஆனபெரி யோர்கள்தங்கள் பேரருமை தேர்திருங்கள்

ஆசைநிறை வேறவந்த மருளாலே

வாதமுறை யாலனந்த கோடியள வானசெம்பொன்
வாரி இனி தீதுமென்று வகையாக

வாரிநில மீதுசென்று சாண்வயிறு தூரநின்று
மாயைபுரி வார்களெங்க ளுயர்வாரே

நீதியுரு வானதொண்டை மானரசன் ஆழிசங்கு

நேரவரு ளோடுவந்து தருவோனே

நீரமுறும் வாரிகங்குல் பூவைஎன வேதெருண்ட
நீலமணி மேனியண்டர் பெருமானே

வேதமுடி மீதமர்ந்த நாயகபு ராரியிந்திரன்
வேரி மலர் மேவுதந்தை யறியானே

மேலுலக மீதுநின்ற சேடகிரி மீதமர்ந்த
மேகமது போன்மிளிர்ந்த பெருமானே

பாட ; ஒருப்பில் கணையை - நிகரற்ற பிரமாத்திரத்தை ; விடு - ஏவும் ; முகுந்த - திருமாலே ; ஒருத்தியின் மகன் என வயங்கி - தேவகி நந்தனன் ஆக விளங்கி ; ஒருத்தியின் மகன் என வளர்ந்து யசோதா பாலன் என வளர்ந்து (ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளர - திருப்பாவை) ; உடையானே - யாவும் தனதாக உடையவனே ; ஒருத்தலின் இனிமை துவன்றி - விலங்குகளின் மேன்மை துளிர்க்க ; முடித்தலை - சிகரத்தில் ; அணிபெற - அழகு பெற ; முயங்கி - இணைந்து ; உலப்பரும் - அழிவற்ற ; வடமலை - வடவேங்கட மலையில்; உறைந்த - தங்கியுள்ள; பெருமாளே - திருமாலே ; பெருமாளே, வரமுதவ எழுந்து வருவாயே என இயைக்க.

5) வெகுதனம் எடுக்க - மிகுந்த செல்வம் சம்பாதிக்க ; மாடமனையகம் எடுக்க - அடுக்கு மாடி வீடுகள் கட்ட; மாசில்- குற்றமற்ற ; விமரிசையடுக்க - சிறப்புக்கள் வரிசையாக வர ; வேழ மிசையேறி - யானைமீது ஏறி அமர்ந்து ; விருதுகள் படிக்க - கீர்த்திகள் பாட ; மாடு - அருகே ; மகளிர்கள் நடிப்ப - இளம் பெண்கள் நாட்டியம் புரிய ; காசில் - குற்றமற்ற ; மிகும் இசைபொடிப்ப - மிக்க சங்கீதம் முழங்க ; ஆசை மிகவாகி - பேராசை கொண்டு ; நகையுறு முகத்தராகி - முகத்தில் புன் சிரிப்பு மலர ; அவரவர் தமக்குள் - தங்கள் தங்களுக்குள்ளே ஒருவருக்கொருவர் ; மேன்மை நனிவர - சிறப்பு மிக்குவர ; அகத்துள் நாடி - மனத்தில் விரும்பி ; நலிவார்கள் - வருந்துவார்கள் ; நளினமலர் ஒத்த சீர்கொள் - தாமரை மலரனைய சிறப்புறும், உனது பதம் - உன் திருவடிகளை; நச்சிலார்கள் - விருப்புக் கொள்ளாதார் ; நமனுலகு - யம லோகம் ; கிட்டி - பெற்று ; நாளும் - எப்போதும் ; நலிவாரே - வருந்தி மெலிவார்கள்; சுகரொடு - வியாச முனிவர் மகனாம் சுகப்பிரம்மமொடு; விதித்த; வேதமுனிவரர் தமக்கும்வேதங்கள் விதித்தவாறு தவம் செய் முனிவர்களுக்கும் ; நீடு சுரபதி தனக்கும் - நீண்ட புகழ் இந்திரனுக்கும் ; வீடு தருவோனே - பரமபதமருள்பவனே ; ஆளவணி - துளசி மாலை அணிந்த ; உரத்த - மார்பினனே ; சோதி - பிரகாசிக்கும் ; அகணித - கணக்கிட இயலாத ; உடுத்த சேலை - அணிந்த ஆடை (புடவை) ; துருபதன் மகட்கு - பாஞ்சால மன்னன் துருபதன் மகளாம் திரௌபதிக்கு ; மீற - மேலும் மேலும் வளர ; அருள்வாயே - அருளுபவனே ; செகதலம் - உலகம் ; மதித்த சீதை - கற்புக் கனலியாக மதித்த

தான தனத்த தனத்த தன்னன
தான தனத்த தனத்த தன்னன
தான தனத்த தனத்த தன்னன தனதான

7. காலை மருட்டிக் கருத்த கண்களும்
வேளை மருட்டிக் கொழுத்த கொங்கையும்
நூலை மருட்டிச் சிறுத்த சிங்கமு முடையார்கள்
காதல் வடத்திற் பிணிப்ப அங்கசன்
ஏவு மலர்க்குக் கருத்த ழிந்திகல்
காரி ருளுக்குக் குயிற்கு வெண்பிறை யதனோடு
வேலை ஒலிக்குச் சலித்து நொந்தவர்
மீது மனத்தைச் செலுத்தி வெந்துயர்
மேவி யிளைத்துச் சுரத்தின் நொந்தக
மெலிவேனை

வேழ மழைப்பப் புரக்க முந்திய
கோல மெடுத்துக் கணித்து வன்சிறை
மேவு வணைத்திற் றனித்து வந்தருள் புரிவாயே
சேலை ஒருத்திக் களித்த ருந்ததி
யாயர்கள் கற்பைப் பொறுத்த நங்கையர்
சேலை திரட்டிச் சுருட்டி நின்றுயர் திறலோனே
தேவர் சபைக்குட் சிறக்கு மிங்கித
வாள்விசை யற்குச் சமர்க்க ணன்பொடு
தேர்விடு மெத்தக் கருத்த செங்கணை
உடையோனே

ஆல விடத்திற் செறித்த வெம்பவ
மேனி எரித்துப் பொரித்து வெங்கட
மாகி வளைத்துத் தழைத்த செம்பக வனமூடே
ஆர்வ மிகுத்துச் சிறக்கு மண்டப
சேடகி ரிக்குட் குரக்கு வண்கொடி
ஆட நகைத்துச் சிரித்து நின்றருள்
பெருமாளே

சீதாப்பிராட்டியின் ; அலம் எனும் - துன்பம் என்னும் ; அளப்பி லாத - அளக்க இயலாத ; திரையலை - அலைசார் கடலி லிருந்து ; கடந்து - அப்பால் தாண்டிச் செல்லுமாறு செய்த ; வீர - வீரனே ; செயமேரு - வெற்றிதரும் மேருமலையின் ; திட முற - வலிமையுடன் ; உதித்த - தோன்றிய ; சேடகிரிமுடி இடத்தும் - சேஷாத்திரி மலைச்சிகரத்தும் ; மூவர் செயலிணி லிருக்கும் - மும்மூர்த்திகளின் (பிரமா - விஷ்ணு - ருத்திரன்; செய்கைகளில் வீற்றிருக்கும் ; நால்வர் - தயரதன் புதல்வர் நால்வரின் முதல்வனாம் ; பெருமாளே - திருமாலே ; பெரு பெருமாளே - உனது பதம் நச்சிலார்கள் நலிவாரே என்க.

6) ஆதிகுருநாதர் எங்கள் பேர் - எம் பெயர் ஆதிகுரு நாதர் என்பதாகும் ; அறிதிர் - அறியுங்கள் ; ஓது செங்கல் ஆடையுடன் - காவி (துவர்) என மொழியப் பெறும் உடை யோடு ; துறந்த - அனைத்துப் பற்றும் நீக்கிய ; சணியாசம் ஆன - துறவியான ; பெரியோர் தங்கள் பெரியவர்களின் ; பேரருமை - பெரிய அரிய நிலையை ; தேர்திர் - உணருங்கள் ; உங்கள் ஆசை - உங்களுடைய மனோபீஷ்டம் ; நிறை வேற - நிறைவு செய்ய ; வந்தம் அருளாலே - அருளோடு (கிருபை கூர்ந்து) வந்துள்ளோம் ; வாத முறையால் - விவாதம் செய்து வெற்றி பெறும் தன்மையால் ; அனந்த கோடியள் வான - பலகோடியளவுள்ள ; செம்பொன் - நல்ல தங்கங் களை ; வாரி அள்ளி ; இனிது ஈதும் — மகிழ்ச்சியோடு தாருங்கள் ; என்று - என ; வகையாக - பலவழிகளில் ; வாரிநில மீது சென்று - கடல் சூழ் உலகில் எங்கும் சென்று ; சாண் வயிறு தூர - ஒரு சாண் அளவுள்ள வயிறு நிரப்ப பசி தீர நின்று - எதிர்நின்று ; மாயை புரிவார்கள் - வஞ்சம் செய்; வர்கள் ; எங்ஙன் - எவ்விதம் ; உயர்வாரே - மேம்பாடடை வார்கள் ; நீதி உருவான - நீதியே வடிவெடுத்தவனான ; தொண்டைமானரசன் - தொண்டை நாட்டு மன்னன் ; ஆழி சங்கு நேர - சக்கரமும் சங்கும் வேண்ட ; அருளோடு - கிருபை யுடன் ; வந்து தருவோனே - எதிர்வந்து அளிப்பவனே ; நீர முறும் வாரி - நீர் கொண்ட கடல் ; கங்குல் - இரவு ; பூவை - காயாம்பூ; எனவே - என்பது போல; தெருண்ட - தெளிவான - நீலமணி மேனி - நீல ரத்தினம் போன்ற வடிவ ; அண்டர் - தேவர் ; பெருமாளே - தலைவனே ; வேதமுடி மீதமர்ந்த நாயக - வேதத்தின் சிரத்தமர்ந்த தலைவா ; புராரி - திரிபுரங் களை அழித்த சிவன் ; இந்திரன் - வானவர்கோன் ; வேரிமலர் மேவு - தாமரை மலர்மீது உறையும் ; தந்தை - படைப்புக்

தானதன தான தானதனதான தானதன தான
தனதான

8. ஆசை வெகு மோச மாகுமெனநீதி யாகமொழி
நேயர் உறவாடி
ஆலயம தேகி நாளும்வல மாடி ஆசுகவி பாடி
உருகாமல்

வேசையர்கள் வீடு தேடியவர் பாத மீதுவிழு
வார்கள் வினைஓரார்
வேகமிகு கால தூதரொடு மேகி மீளவரி தாகி
மெலிவாரே

ஈசபவ நாச பாசுபதர் பாவ மேகவருளேக
முதலோனே
ஏனவடி வாய்முன் ஆசுரண தாவி ஈறுபடமோதி
அடுவோனே

தேசுதரும் யோக மாதவர்கள் தேவர் தேடவரி
தான முடிமீதே
தேன்ஞிமிறு மூசு சோலையழகான சேடகிரி மேவு
பெருமாளே

டவுளாம் பிரமன் ; அறியானே - இவர்களால் அறியப் பெறாதவனே ; மேலுலகம் மீது - வானுலகத்தின் மேல் ; நின்ற - உயர்ந்திருந்த ; சேடகிரிமீது - சேஷ மலை உச்சியில்; அமர்ந்த - வீற்றுள்ள ; மேகமதுபோல் - கார் மேகம் போல ; மிளிர்ந்த - பிரகாசிக்கும் ; பெருமாளே - திருமாலே. பெருமாளே - சாண்வயிறு தூர நின்று மாயை புரிவார்கள் எங்ஙன் உயர்வாரே என இயைக்க.

7) காலை மருட்டி - இருளையும் மயங்கச் செய்யும் ; கருத்த - கருமையான ; கண்களும் - விழிகளும் ; வேளை மருட்டி - மன்மதனையும் மயக்கும்படி ; கொழுத்த - செழித்துப் பருத்து நிமிர்ந்த ; கொங்கையும் - முலைகளும் ; நூலை மருட்டி - நூலிழையும் பெரிதென மயங்கும் ; சிறுத்த - மெல்லிய தாகிய : சிங்கமும் - சிங்கம் போன்ற இடையும் (இடையைச் சிங்க இடை எனல் மரபு) ; உடையார்கள் - உடைய மகளிர்கள் ; காதல் வடத்திற்பிணிப்ப - காமமாகிய கயிற்றால் கட்ட ; அங்கசன் - மன்மதன் ஏவு - வீசும் ; மலர்க்கு - புஷ்ப பாணங்களுக்கு ; கருத்தழிந்து - மனம் அழிவுற்று ; இகல் - வலிய ; கார் இருளுக்கு - கரிய இருட்டுக்கு ; குயிற்கு - குயிலின் கூவலுக்கு ; வெண்பிறையதனோடு - வெண்மையான பிறைச் சந்திரனோடு ; வேலை ஒலிக்கு - கடல் ஓசைக்கு ; சலித்து - கலங்கி ; நொந்து - வருந்தி ; அவர் மீது மனத்தைச் செலுத்தி- அம்மகளிர் மேல் கருத்தைச் செலுத்தி ; வெந்துயர் மேவி - கொடிய துன்பமடைந்து ; இளைத்து - மெலிந்து ; சுரத்தின் நொந்து - வெப்பு நோயால் துன்பமுற்று ; அகம் மெலிவேனை- உள்ளம் வலி இழந்திளைத்த என்னை ; வேழம் அழைப்ப - கஜேந்திரன் என்ற யானை ஆதிமூலமே என்று அழைக்க ; புரக்க - அதைக் காக்குமாறு வந்த ; முந்திய - பண்டைய ; கோலம் எடுத்து - வடிவு கொண்டு ; கணித்து - நினைத்து ; வன்சிறை மேவு - வலிய இறக்கைகள் கொண்ட ; உவணத்தில் - கருடனில் ; தனித்து - தனியாக ; வந்தருள் புரிவாயே - வந்து அருள் செய்க ; சேலை ஒருத்திக்கு அளித்து - கௌரவர் அவையில் மானம் காக்க சேலைகளை திரௌபதிக்கு வழங்கி ; அருந்ததி - அரிய தயிர் சேர்க்கும் ; ஆயர்கள் - இடைமகளிர் ; கற்பைப் பொறுத்த - கற்பினை பொறுமையோடு சோதிக்க ; அநங்கையர் - அவ்விடைப் பெண்கள் ; சேலை திரட்டி - புடவைகளை ஒன்று சேர்த்து ; சுருட்டி - மடித்தெடுத்து ; நின்று - இருந்து ; உயர் திறலோனே - மேலான திறமை கொண்டவனே ; (அருந்ததி - வசிட்டன் மனைவி

தனத்த தானன தனதன தனதன
தனத்த தானன தனதன தனதன
தனத்த தானன தனதன தனதன தனதான

9. மருட்டும் வாள்விழி மயிலிய லனநடை
வெடித்த நாண்முகை கமழ்தர வணிமுகில்
வடித்த யாழ்புரை தருமமு தனமொழி
இளையார்கள்
மயக்க மாயவர் குழையிள வனமுலை
அணைத்து வாயிதழ் பருகிய இளமையும்
வனப்பும் ஏகிட நரையொடு திரைவர
இனைவாகி
ஒருத்த ராகிலு மிவன்முன நமர்களை
அருத்தி கூர்தர வுதவிய நரனென
உவக்கி லாதிழி தகவுரை பறைதர உளைவாகி
உரப்பி ஓதினு மிருசெவி துளைவழி
அடைதது வாய்மொழி குழறிட எதிர்நம
னுருப்ப வீடுவ நுனையொரு பொழுதினும்
உணராரே
தரித்த வாள்கதை வளைசிலை திகிரியெ
விடத்து மாய்வர அடியவர் படுதுயர்
தடுத்துமேதினி தனைநுகர் கரியவ தகையோனே
தனக்கு மேலிலை எனவரு மிரணியன்
அடித்த தூணிடை நரகரி யுருவொடு
தழைத்து மார்பினை வகிர்பட வுகிரினிர்
அடுவோனே
வருக்கை மாவொடும் இலவொடு குழவகில்
வெறித்த போதுறு மரவமும் விரிபொழில்
வனத்தில் வானவர் தமரொடும் அருமறை
வழியாலே
வழுத்தி மாசறு தவநிலை புரிதர
நினைத்த வாறவர் குறைவற வருள்மலை
மருத்து ழாய்வள வட மலை யுறைதரு
பெருமாளே

கற்புச்செல்வி அருந்ததி போன்ற என்றும் கொள்க.) ; தேவர் சபைக்குள் - தேவேந்திரன் அவையில் ; சிறக்கும் - சிறப்பு மிக்க ; இங்கித - இனிய ; வாள் விசையற்கு - ஒளிமிக்க அருச்சுனனுக்கு ; சமர்க்கண் - பாரதப் போரில் : அன்பொடு - நேயத்துடன் ; தேர்விடும் - தேர்செலுத்தும் ; மெத்தக்கருத்த - மிக்க நல் எண்ணமுடையவனே ; செங்கணை - சிவந்த கண்களை உடையவனே (பத்மாக்ஷன்) ; ஆலவிடத்தில் - ஆலகால விஷம் போல ; செறித்த - திரண்ட ; வெம்பவம் - கொடிய பாவமாம் ; மேனி - சரீரம் ; எரித்துப் பொரித்து - தீயிட்டு வறுத்து ; வெங்கடமாகி வளைத்து - வெம்மையான வானமாக வளைத்து ; தழைத்த - செழித்த ; செம்பக வனமூடே - செண்பகக் காட்டிடை ; ஆர்வ மிகுத்து - உற்சாகம் மிக ; சிறக்கும் - சிறப்புடைய ; மண்டப - மாடமுடை ; சேடகிரிக்குள் - சேஷாத்திரியில் ; குரக்கு வண்கொடியாட - அனுமக்கொடி பறந்து வீச, (குரங்குகள் வலிய கொடிகளில் தாவிக் கூத்தாட) ; நகைத்து - அதைக் கண்டு புன் சிரி கொண்டு நின்று - நின்ற கோலத்திலிருந்து ; அருள் - அருள் புரியும் : பெருமாளே - திருமாலே : பெருமாளே, அகமெலிவேனை உவணத்திற்றனித்து வந்து அருள் புரிவாயே.

8) ஆசை - பற்று ; வெகுமோசமாகும் - மிக்க அபத்தமாகும் ; என - என்று ; நீதியாக மொழி - நியாயமுடன் கூறும் ; நேயர் - அன்பர்களுடன், உறவாடி - சேர்ந்து ; ஆலயமதேகி - கோயில்கள் சென்று ; நாளும் - தினந்தோறும் ; வலமாடி - வலம் செய்து (சுற்றிவந்து) ; ஆசுகவிபாடி - ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்ற நால்வகைக் கவிகளில் நினைத்த மாத்திரம் கவிபாடும் ஆசுகவி என்ற வகைக் கவிதைபாடி ; உருகாமல் - மனம் நெகிழ்ந்து உருகாது ; வேசையர்கள் வீடு தேடி - பரத்தையர்களை அவர்கள் வீடுதேடிச் சென்று ; அவர்பாதமீது - அவர்கள் காலடியில் ; விழுவார்கள் - விழுபவர்கள் ; விலைஓரார் - தங்கள் செய்கையின் பலனை நினையார்கள் ; வேகமிகு - விரைவுமிக்குள்ள ; காலதூதரொடு - யமதூதர்களுடன் ; ஏகி - சென்று ; மீளவரிதாகி - திரும்பிவர இயலாதவராய் ; மெலிவாரே - இளைப்பார்கள் ; ஈச - இறைவனே ; பவநாச - பிறவியை அழிப்பவனே ; பாசுபதர் - பசுபதாத்திரமுடைய சிவன் ; பாவம்ஏக - பிரமன் தலையையறுத்த பாவம்போக ; அருள் - கிருபை செய்யும் ; ஏகமுதலோனே - தனிமுதல்வனே ; ஏனவடிவாய் - பன்றி வடிவமாகி ; மூன் -

தானதன தானனன தானதன தானனன
தானதன தானனன தனதான

10. கானமதி லேகியுடல் வாடஇலை யோடுபல
காய்கனிக ளேயுணவு கறியாக
காய்கனலி னூடுதவ மாடியுறை வாரதிக
காலம் வரை யீதலது சிலபேர்கள்
மானனைய கோலவிழி மாதரொடு கூடிவளை
வாரிநில மோடிவலம் வருவார்கள்
மாசகலு மாறுனது தாளைமதி யார்கள் பவம்
மாறுவகை ஏதெனவு மறியாரே
வானவர்கள் தேடுமலை மூலிகைகள் சேருமலை
மாதவர்கள் வாழும்மலை வரையாதே
மாமறைக ளோதுமலை ஏழுமலை யானமலை
மாகமுகில் கூடுமலை மலரோடு
தேனருவி பாயுமலை மானிடவர் நாடுமலை
தீமையணு காதமலை பறழோடு
சீயம்விளை யாடுமலை வாளரவ மானமலை
சீர்பெருக மேவியுறை பெருமாளே

தானான தானனன தானன தானனன
தானான தானனன தனதான

11. கோனேரி வாழ்குருகு மீனாக வேனுநிறை
கூனாக வேனுநிழல் குறையாக
கோடாக வேனும் வரை யாடாக வேனுமொரு
கோலாக வேனுமுடி குடியான
மானாக வேனுமடர் தூறாக வேனும் மலை
மாடாக வேனுமுற அதிரேக
மாயாவி நோதபல கோடானு கோடிபவம்
வாரமல் நீயருள வருவாயே

பண்டு ; ஆசுரனதாவி - இரணியாக்கன் உயிர் ; ஈறுபட - முடிவுஎய்த ; மோதி - தாக்கி ; அருவோனே – போரிடுபவனே; தேசுதரும் – ஒளிவீசும் ; யோக மாதவர்கள் - யோகநெறி கைவந்த பெருமுனிவர்கள் ; தேவர் - வானவர்கள் ; தேட அரிதான - தேடுதற்கியலாததான ; முடிமீதே - சிகரத்தின் மீது ; தேன்ஞிமிறுமுசு - வண்டுகள் ரீங்காரம் செய்து மொய்க்கும் ; சோலையழகான – எழில் தவழ் பொழில் தவழும்; சேடகிரி மேவும் - சேஷாத்ரியில் விளங்கும் ; பெருமாளே – திருமாலே ; பெருமாளே, ஆசுகவிபாடி உருகாமல், வேசை யவர் பாதமீது விழுவார்கள் வினைஓரார், மீளவரிதாகி மெலிவார் என்க.

9) மருட்டும் வாள்விழி – மயக்கு ஒளிவீசும் கண்கள் ; மயில்இயல் - மயிலின் சாயல் ; அனநடை - அன்னப்பறவை போலும்நடை ; வெடித்த நாள்முகை - விரித்த நாள்மலர் அனையமுகம் ; கமழ்தர - தோன்று ; அணிமுகில் - அழகிய மேகமனைய கூந்தல் ; வடித்த யாழ்புரைதரும் - யாழில் இசைத்தது ஒத்த ; அமுதனமொழி - தேவாமுத மனைய மொழியுடைய ; இளையார்கள் - இளம் மகளிர் பால் ; மயக்க மாய் - காதல் மயக்கமாகி ; அவர் - அவர்களுடைய ; குழை இள வனமுலை - தளிர்த்த இளமைகொண்ட எழில் முலை களை ; அணைத்து - தழுவி ; வாயிதழ் பருகிய - வாயில் அதரபானம் செய்த ; இளமையும் - யௌவனமும் ; வனப்பும் – அழகும் ; ஏகிட - போய் மறைய ; நரையொடு நரைமயிருடன்; திரைவர - மூப்பு எய்த ; இனைவாகி - வருத்தமாகி ; ஒருத்த ராகிலும் – ஒருவராவது ; இவன் - இந்த ஆள் ; முனம் - முன்பு; நமர்களை - நம்மவர்களை ; அருத்திகூர்தர - ஆசைமிக ; உதவிய - ஆதரம்தந்த ; நரன்என - மனிதன் என்று ; உவக்கி லாது - மகிழ்ச்சி கொள்ளாது ; இழிதகவுரை பறைதர – இகழ்ச்சி தரும் மொழிகூற ; உளைவாகி – வருத்தம் அடைந்து; உரப்பி ஓதினும் வலிமையாக உரைத்தாலும் ; வாய்மொழி – வாய் வார்த்தைகள் ; குழறிட தடுமாறிட ; எதிர் நமன் - முன்னே வரும்யமன் ; உருப்ப - கோபிக்க ; வீடுவர் - நரகில் வீழ்வார்கள் ; உனைஒரு பொழுதினும் உணரரே - உன்னை ஒருமுறைகூட அறியமாட்டார்கள் ; தரித்த - தாங்கிய ; வாள்கதை வளைசிலை திகிரி – வாள், கதை ; சங்கு, வில் சக்கரம் ஆகிய பஞ்சாயுதங்களும் ; எவிடமாய்வர – எவ்விடத் தும் எடுத்துவர ; அடியவர் படுதுயர் - தொண்டர்கள் பாற்

ஆனேறு மீச னொடும் வேதாசு ராதிபதி
யானோர்கள் தேடரிய அகிலேசா

ஆழ்வார்கள் பாடலெனு மாமாலை சூடுமொழில்
ஆபாத சூடமுகி லனையோனே

மீனேறு கோலவிழி மானார்கள் காமவெறி
மேவார்கள் பாலிலகும் விபுதேசா

வீராதி வீரவுயர் சோடாச லா வனச
மேலாயி னாள்மருவு பெருமாளே

தனதனன தன தன தனதனன தனதன
தனதனன தனதன தனதான

12. அலகில் வினை பல செஞ்சு நலியுமவ ரிடையண்டி
அதிப அளி எனநைந்து கவிபாடி

அருமைநல முறைவிண்டு வெறுமைபிணி
யுறவெம்பி
யழிவர் சிறு மதிகொண்டுன் அடிமிதே

மலர்துளவ மதிலன்பு பெருகநினை வொடுநன்கு
வகையினுணர் கிலர் வஞ்ச நமன்மாடே

மனமதுக ருகிநொந்து விதலைமரு வியினைந்து
வதிவரதி கயுகங்கள் மடிவாரே

இலகுதிரு மலைநம்பி யனவரத மிகநம்பி
இனிதுபர விடவிஞ்சை தருவோனே

இசையுறுகு ருவைநம்பி யவனிமலர் கொடுதுங்கம்
இயைய வழி படுமெங்க ளிறையோனே

உலக நிறை பெற வந்து பலருமடி தொழஇன்பம்
உதவுமுகி லெனநின்ற ஒருவோனே

ஒளிசெய்மதி என எங்கும் வயிரமணி யணிதுன்ற
உயருதிரு மலை நின்ற பெருமாளே

படும் துயரை ; தடுத்து - தடை செய்து நீக்கி ; மேதினி உலகை ; நுகர் - (ஊழியில்) அருந்தும் ; கரியவ - மாயோனே ; தகையோனே - சிரேஷ்டனே ; தனக்கு மேலிலை எனவரும் - தன்னிலும் உயர்வானோர் இல்லை என்றகங்கரித்துவரும் ; இரணியன் - இரணியகசிபு ; அடித்த - அறைந்த தூணிடை - பிறந்த கம்பத்திடையே ; நரகரி உருவொரு - நரசிம்ம வடிவுடன் ; தழைத்து - தோன்றி ; மார்பினை - இரணியன் நெஞ்சகத்தை ; வகிர்பட - இருகூறாகப் பிளவுபட ; உகிரினில் - நகங்களால் ; அடுவோனே - போர் செய்தவனே ; வருக்கை - பலாமரங்களுடனும் ; மாவொடும் - மாமரங்களுடனும் ; இலவொடு - இலவமரங்களுடன் ; குழ அகில் - இளம் அகில் மரங்களும் ; வெறித்த - வாசனைதரும் ; மரவமும் - பிறமரங்களும் ; விரிபொழில் - படர்ந்து நிறைந்த சோலைகளாம் ; வனத்தில் - கானகத்தில் ; வானவர் - தேவர்கள் ; தமரொடும் - தம் சுற்றத்தினருடன் ; அருமறை வழியாவே - அரிய நான் மறை நெறிமுறையில் ; வழுத்தி - துதித்து ; மாசறு - குற்ற மற்ற ; தவநிலைபுரிதர - நிலையான தவம்புரிய ; நினைத்தவாறவர் - அவர்கள் எண்ணியாங்கு எண்ணிய ; குறைவற - மிகுதியாக ; அருள்மலை - அருள்புரியும் மலையாம் ; மருத்துழாய் வள - வாசனை தரும் துளசியின் செழிப்புமிக்க ; வடமலை - வடமலை என்னும் வடவேங்கடத்தின் கண் ; உறைதரும் - வீற்றிருக்கும் ; பெருமாளே - திருமாலே ; கரியவ, தகையோனே, வுகிரினில் அடுவோனே, வடமலை உறைதரு பெருமாளே, எதிர்நமன் உருப்ப வீடுவர் உனை ஒரு பொழுதினும் உணராரே என இயைக்க.

10) கானமதில் ஏகி-காட்டிற்குச் சென்று ; உடல் வாட - சரீரம் தளர்ந்திளைக்க ; இலையோடு பலகாய் கனிகளே - இலைகளுடன் பலவகைக் காய்களும் பழங்களுமே ; உணவு கறியாக - ஆகாரமாக உண்டு ; காய்கனலின் ஊடு - எரியும் தீயிடையே ; தவமாடி தவம் செய்து ; உறைவார் - இருப்பவர்கள் ; அதிககாலம் வரை - நீண்ட நாள் அளவு ; ஈதலது - இஃதன்றி ; சில பேர்கள் - சில மனிதர்கள் ; மான் அனைய - மானை ஒத்த ; கோல விழி - அழகிய கண்களை உடைய ; மாதரொடு - மங்கையர்களுடன் ; கூடி - சேர்ந்து ; வளைவாரி - கடல் சூழ்ந்த ; நிலம் ஓடி - உலகில் திரிந்து ; வலம் வருவார்கள் ; மாசகலுமாறு - தங்கள் குறை நீங்கும் வண்ணம் ; உனது தாளை - உன் திருவடிகளை ; மதியார்கள் - கருத

தன்ன தாத்தன தானன தானன
தன்ன தாத்தன தானன தானன
தனன தாத்தன தானன தானன தனதான

13. வஞ்ச னாய்ப்பல நாளினு மாழ்கிவன்
நெஞ்ச னாய்ககடு நேர்விழி மாதர்கள்
வம்ப றாத்துணை மாமுலை யாயெழு
மலையாலே

வண்டு வாளத்தி வேலொடு மானிகல்
கெண்டை வீரத்திண் கோல்வடு போலவ
மைந்த நேத்திர பார்வையி னால் மிகு
மயர்வாகிப்

பஞ்சை யாய்த்தவ மாதிய நான்மறை
விஞ்சை யாற்றில னாயினும் வீவறு
பந்த நீக்கிடு மாறுனை யேதினம் மறவாதே

பண் செய் பாககளி னாலிரு தாமரை
மென்செய் பூக்கிணை யாகிய நீள்கழல்
பண்பி னேத்திடு வேரனனை யாளுதல்
கடனாமே

அஞ்சு மாய்த்திரி யாறறு நான்குடன்
ஒன்ப தாய்த்தச மாகிய ஊரக
அம்பறாச்சிலை யாளுடை நாயக அமரேசா

அஙகை வாய்ச்சசி நேர்வளை யாழிகொள்
எங்கள் பாக்கிய மேசது ரானனன்
அங்க மேற்பொடி பூசிய சேவகன் அறியாதாய்

தஞ்ச மாய்ப்பவ மேகிடு மாறெதிர்
கந்தனேத்திட வேநல மேதரு
சமபு வாய்த்திகழ் நாரண பூரண சருவேசா

சம்ப காத்திரி தாரணி யோர்புகழ்
அஞ்ச னாத்திரி யாமென ஏர்திகழ்
சந்த னாத்திரி மேவிய தேவர்கள் பெருமாளே

மாட்டார்கள் ; பவம் - பிறவி (பாவம்) ; மாறுவகை - நீங்கும் தன்மை ; ஏதெனவும் - எது என்பதையும் ; அறியாரே - அறியமாட்டார்கள் ; வானவர்கள் தேடும் மலை - (விண்ணி லும் உயர்ந்திருப்பதால் சிகரத்தையும் அதன் கண் இறைவனை யும்) தேவர்கள் தேடும் உயர்ந்த மலை ; மூலிகைகள் - மருந் துச் செடி கொடிகள் ; சேரும் - நிறைந்திருக்கும் ; மலையா கும் ; மாதவர்கள் வாழும் மலை - பெருமுனிவர்கள் வாழும் மலை ; வரையாதே - எல்லையின்றி ; மாமறைகள் பெரிய வேதங்கள்; ஓதுமலை - சிறந்து புகழும் மலை; ஏழு மலையான மலை - வேங்கடம், கருடமலை, சேடமலை, அஞ்சனமலை இடபமலை, சம்பகமலை, சந்தன மலை என்னும் ஏழுமலைகள் கூடிய மலை ; மாகமுகில் - வானிலுள்ள மேகங்கள் ; கூடும் மலை - சார்ந்திருக்கும் மலை ; மலரோடு - புஷ்பங்களுடன் ; தேனருவி - தேன் பெருகு சுவையுள்ள அருவி பாயும் மலை ; மானுடவர் - மனிதர்கள் ; நாடுமலை - (தங்கள் குறை தீரவும், காணிக்கை செலுத்தவும்) விரும்பியடையும் மலை ; தீமை அணுகாத மலை - எவ்விதத் தீமை தருபவையும் நெருங்காத மலை; பறழோடு-ஆடு, மான் முதலிய விலங்குகளுடன் ; சீயம் - சிங்கம் ; விளையாடுமலை - ஆடிக்களிக்கு மலை ; வாளரவ மான மலை - ஒளி தரும் சேட மாமலை ; சீர்பெருக - மேலும் சிறப்புற ; மேவி - அடைந்து ; உறை - தங்கியருளும் ; பெரு மாளே - திருமாலே ; பெருமாளே - உனது தாளை மதியார்கள் பவம் மாறுவகை ஏதெனவும் அறியாரே என இயைக்க.

*11)* கோனேரி - வேங்கட மலையில் உள்ள தீர்த்தம் (அதில்) ; வாழ் - வாழும் குருகு - கொக்கு ; மீன் - மச்சம்; ஆக வேனும் - ஆயினும் ; நிறை - நீர் நிறைக்கும் ; கூனாகவேனும் - மட்பாண்டமாகவாயினும் ; நிழல் குறையாத - மிகுந்த நிழல் தரு ; கோடாக வேனும் - கொம்பாகவாயினும் ; வரை ஆடாக வேனும் - மலை ஆடாகவாயினும் ; ஒரு கோலாக வேனும் - ஒரு குச்சி (தடி) யாகவாயினும் ; முடி குடியான - மலைச் சிகரத்து வாழும் ; மானாக வேனும் - மான் ஆகவாயினும் ; அடர்தூர் ஆகவேனும் - அடர்ந்து முளைத்த புல்லாக வாயினும் ; மலை மாடாக வேனும் - மலை வாழ் மாடாக வாயினும் ; உற - அடைய (குலசேகராழ்வார், திருவேங்

தனதான தாத்த தனதான தாத்த தனதான தாத்த
தனதான

14. விழியாழி காட்டி முலையானை தாக்க
விடுமாத ரேக்க மடையாதே

வினையாவு மீட்டி யனியாய நாட்டி
விழைவான கோட்டி புகுதாதே

பழிகாரர் மாட்டு மருவாது வேட்கை
படராது தீட்ட அரிதான

பவமான காட்டில் நுழையாது மூப்பு
பயிலாமு னாட்சி புரிவாயே

மழுமானை நீக்கி வளையாழி ஏற்று
மதியோர்கள் போற்ற வதிவோனே

மலர்மாட்சி காட்டிப் பெறுகோதை சூட்டு
மலர்மாலை ஏற்ற முடையோனே

எழிலாரும் வீட்டில் உறைவாரு மேத்து
எதிராசர் தீட்சை இயைவானே

எழுநாக மீச்செல் ஒருநாக மேற்கொள்
இறைவா எதார்த்தர் பெருமானே

தனதத்தன தனதத்தன தனதத்தன
தனதான

15. எரிகக்கிய சுழல்கட்படை எமனுக்கெதிர் புகுதாதே
இடையற்றிற எழும்வெற்பினை யிளையர்க்குள
மிளையாதே

பரிவிற்பிறர் பொருணச்சுறு பதகத்தொழில்
பயிலாதே

பவனக்கிரி புரைபுட்பிடர் பளகற்றிட வருவாயே
மருவிட்டலர் துளவச்செடி வருமுத்தம

வடிவாள்தன்

கடத்துக்கு அருளிய ஊனேறு செல்வம் எனத்துவங்கும் பதிகம் ஒப்பு நோக்குக) ; அதிரேக - அதிசயமிக்க ; மாயா விநோத - மாயா லீலைகள் புரிபவனே ; பல கோடானு கோடிபவம் - பலகோடியளவிலான பிறப்புக்கள் ; வாராமல் - என்னிடம் சேராமல் ; நீயருள வருவாயே – அருள் புரிய நீ முன் வருவாயாக ; ஆனேறும் ஈசனொடும் - இடப வாகனனாம் சிவபெருமானோடு ; வேதா – பிரமன் ; சுராதிபதி - தேவர்கள் தலைவன் இந்திரன் ; ஆனோர்கள் - ஆகியவர்கள் ; தேடரிய - தேடி அறிதற்கு அரிய; அகிலேசா - உலகங்களின் தலைவனே ; ஆழ்வார்கள் - தமிழில் திருமால் துதிபுகன்று மங்களா சாசனம் செய்த திருத்தொண்டர்கள் ; செய்த - அருளிச் செய்த ; பாடல் எனும்–திவ்வியப் பிரபந்தப் பாசுரம் எனும் ; மாமாலை– பெரிய பாமாலையை ; எழில் - அழகிய; ஆபாத சூடம் - உச்சி முதல் உள்ளங்கால்வரை ; சூடும் - அணியும் ; முகில் அனையானே - மேகமனையவனே ; மீன் ஏறு கோல விழி - மீன் போல விளங்கும் ; அழகிய கண்களை உடைய ; மானார்கள் - மான் போன்ற பெண்களின் ; காமவெறி மேவார்கள் பால் - காம இச்சையாம் மயக்கம் அடையாதவர்களிடம் ; இலகும் - விளங்கும் ; விபுதேசா – கடவுளர் தலைவனே ; வீராதி வீர - மகாவீரனே ; உயர் - வானுற ஓங்கிய ; சேடாசலா – சேஷாத்திரிவாசா ; வசை மேலாயினாள் - பதுமாவதித்தாய்; அலர் மேல் மங்கை ; மருவு - தழுவு ; பெருமாளே - திருமாலே.

12) அலகில் – அளவற்ற ; வினைபல செஞ்சு - பல பாவங்கள் செய்து ; நலியுமவரிடையண்டி – அழிபவர்களிடைச் சார்ந்து ; அதிபஅளி என – தலைவனே தா என்று; நைந்து – வாட்டமுற்று ; கவிபாடி - கவிதைகள் பாடி ; அருமை நலமுறை விண்டு – அரிய அணிநயமுறக் கூறி ; வெறுமை - தரித்திரம் , பிணி - நோய் ; உற – அடைய ; வெம்பியழிவர் - வாடி அழிவர்கள் ; சிறுமதி கொண்டு – தங்கள் சிறிய புத்திகொண்டு ; உன் அடிமீதே - உனது திருவடிமேல் ; மலர் - விரிந்துள்ள ; துளவமதில் – துளசியில் ; அன்புபெருக - பக்தி அதிகரிக்கும் ; நினைவொடு - எண்ணத்துடன் ; நன்கு வகையினில் - நல்ல முறையில் ; உணர்கிலர் – அறிகிலார் ; வஞ்ச நமன்மாடே - வஞ்சம்புரியும் யமன்பக்கல் ; மனமது கருகி நொந்து - உளம் வெந்து வருந்தி; விதலைவருவி - நடுக்கமடைந்து ; இனைந்து - துயரடைந்து ; வதிவர் – வாழுபவர்கள் ; அதிக யுகங்கள் - பலப்பல யுகங்கள் ; மடிவாரே – உடல் உயிர் மடிந்து பிறவாயாக்கை பெறுவார்களா ? இலகு –

வனை பொற்குழல் புனைமட்டணி மதுரத்தொடை
மணிமார்பா
அரிமொய்த்திசை முரல்முக்கனி யலர்மைப்பொழி
னலழகா
அரவக்கிரி யுறைவித்தக வதியுத்தமர்
பெருமாளே

தான தானனா தான தானனா
தான தானனா தனதான

16. மீனுலாவுநீர் வாரி சோமன் வான்
மேவு மாலை கார் விடமாக
மேனி வாடினாள் வாடை கூசுவாள்
வேளொட கூடவே மெலிவானாள்
கானு லாவுதோள் மாலைமீதிலே
காத லாயினாள் கனிவோடு
காமர் வாணுதால் சேர்தும் நீயமேல்
காணவேஎன வருவாயே
மானுபாவனே லோக நாதனே
வான நாடர்தாழ் மதுரேசா
மாயசீயமா யானதாரகா
வாணி நாதன்வாழ் மலர்நாபா
தேனு லாவுநீள் சோலை ஓடைசூழ்
சேடநாகமேல் உறைவோனே
தேவர் நேசனே ஸ்ரீநி வாசனே
தேடி நாடுவோர் பெருமாளே

தனதனன தந்த தனதனன தத்த தனதனன தந்த
தனதான

17. இரவுபகல் நொந்து கணிகையர்த மின்ப
மெனுமமு தருந்தி இயல்பான
இலமதுது றந்து பலர்வசைவி ளம்ப எழுதரிய
துன்ப வலைமூழ்கி

விளங்கும்; திருமலை நம்பி - ஸ்ரீ இராமாநுஜரின் அம்மான் ஆகிய திருமலை நம்பி என்ற வைணவப் பெரியார்; அன வரதம் எப்போதும் மிகுதியாக உன்னை நம்பி; இனிது பரவிட - மகிழ்வோடு துதிக்க; விஞ்சை தருவோனே - கல்வியறிவு அருளுபவனே, மந்திரோபதேசம் செய்பவனே; இசையுறு - புகழ்மிக்க; குருவை நம்பி - ஆசார்யனை நம்பி; அவனி - பூமியில்; மலர்கொடு துங்கம் இயைய - பரிசுத்தம் பொருந்த; வழிபடும் - பூசிக்கப் பெறும்; எங்களிறையோனே - எம் கடவுளே (திருவேங்கடத்தில் நந்தவனமமைத்து வழிபட்டு தன்பாலுற்ற தொழுநோய் வேங்கடவனருளால் நீங்கப் பெற்ற அனந்தாழ்வான் சிறப்பு கூறப்பெற்றது); உலகம் நிறைபெற வந்து - பூவுலக மக்கள் முழுமையாக வேங்கடம் வந்து; பலரும் அடிதொழ - பலரும் திருவடிகளில் வணங்க (உலகம் நிறைவு பெறத்தான் வேங்கடம் வந்து எனவும் கொள்க); இன்பமுதவும் - மகிழ்வுதரும்; முகில் என - கார்மேகம் என; நின்ற - நின்ற கோலத்துள்ள; ஒருவோனே - ஒப்பற்றவனே; ஒளி செய் மதி என் - தண் ஒளிவீசும் திங்கள்போல; எங்கும் - திருமேனிமுழுதும்; வயிரமணி யணி - வைர ஆபரணங்கள்; துன்ற - விளங்க; உயருதிரு மலைநின்ற - மிக உயர்ந்த திரு மலையில் உறைந்த - பெருமாளே - திருமாலே. பெருமாளே! மலர் துளவமதிலன்பு பெருக உணர்கிலர் வஞ்ச நமன்மாடே மடிவாரே என்க.

18) வஞ்சனாய் - கபடனாய்; பலநாளினும் - நீண்ட காலம்; மாழ்கி - மயங்கி; வன் நெஞ்சனாய் - கொடிய மனத் தனாய்; கடுநேர் - விஷத்தை ஒத்த; விழி - கண்களை உடைய; மாதர்கள் - மகளிரின்; வம்பறா - கச்சைக் கிழித்து மேல் வரும்; துணை - இரு; மாமுலையா - பெருமுலைகள் என; எழுமலையாலே - நிமிர்ந்து நிற்கும் மலையினால்; வண்டு - கரிய வண்டுகள்; வாள் - வாட்கள்; அத்தி - கடல்; வேல் - வேலாயுதம்; ஒடு - இவற்றோடு; மான் இகல் - மானை ஒத்த; கெண்டை - மீன்; வீரத்திண் கோல் - அம்பு; வடு - மாவடு; போல அமைந்த - போன்று பொருந்திய; நேத்திர பார்வையினால் - கண் நோக்கினால்; மிகு மயர்வாகி மிக்க மயக்கமடைந்து; பஞ்சையாய் - தரித்திரனாய்; தவ மாதிய - தவம் முதலிய; நான் மறை விஞ்சை - நாலு வேதக் கல்வி; ஆற்றிலன் - பயின்றிலேன்; ஆயினும் - ஆனாலும்; வீவறு - வீழ்தலில்லாத; பந்தம் நீக்கிடுமாறு - பற்று நீக்கும்படி;

கரவுபுரி கின்ற சிலரொடுக லந்து கருமவினை
ஒன்று மறியாதே
கலிபொரஇ னைந்த கயவருனை எங்கு
கருதுவர்கணஞ்சு கழிவாரே
மரவுரிபு னைந்து புடையினொரு தம்பி வரமிதிலை
நங்கை யொடுகானில்
வழிநடையு வந்து சினவியக வந்தன் மரணமுற
அம்பு விடுவோனே
உரகமலை கொண்க புரமெரிசெய்முன்ப
ருதவுமொருகந்த ருயர்வாக
உறுதிதரு முன்ப அரிகரிமு குந்த உரகமலை
வந்த பெருமானே

தனதான தத்த தனதான தத்த
தனதான தத்த தனதான

18. அதிகார வெற்றி யதனோடு சுற்றி
அயல் நாடு முற்றி யரசாலே
அனியாய முற்ற பழிபாத கத்தின்
அசையாத பெற்றி யவர்மாடே
கதியேதெ னக்கை விழலார யர்ச்சி
களைவா ரெனப்பல் கவியாலே
கரிராச பட்ட மகராச கற்ற
கவிராச கொற்ற மூடையானே
பதியேயெ னப்பொய் பலபாடி விற்ற
படியாலு யர்ச்சிப் படுவாரே
பரசோ டடுத்து வருராம பத்ர
பததாம பத்தர் பணிவோனே
இதிகாச வச்ர திடதேக வுக்ர
இகன் மேவு சத்ர பதியோனே
இறையான சர்ப்ப உருவாகு வெற்பின்
இடமேவு முத்தர் பெருமானே

உனையே தினம் - உன்னை நாடொறும்; மறவாதே - மறக்காமல்; பண் செய்பாக்களினால் - இசைப் பாடல்களால்; இரு தாமரை - இரண்டு தாமரை; மென் செய் பூக்கிணை - மென்மையான மலரை ஒத்த; நீள்கழல் நெடிய திருவடி; பண்பின் - குணமோடு; ஏத்திடுவேன் - போற்றுவேன்; எனை ஆளுதல்-என்னை ஆண்டருளல்; கடனாமே - நின் கடமையாகும்; அஞ்சுமாய்-ஐந்துடன்; திரி - மூன்று; ஆறு சேர்ந்து செல்லும்; அறு நான்கு - 6 + 4 = 10; ஒன்பதாய்த் தசம் - தசம் ஒன்பது, 10 × 9 = 90; ஊரகம் - ஊர்கள், திவ்விய தேசங்கள் (5 + 3 + 6 + 4 + 90 = 108) அம்பறாச்சிலை - குறைவற்ற கணைகள் நீங்காத வில்லை உடைய; நாயக - தலைவ; அமரேசா - தேவ தேவா; அங்கைவாய் - அழகிய கரத்தில்; சசி நேர்வளை - சந்திரனை ஒத்த சங்கு; ஆழிகொள் - சக்கரம் கொண்ட; எங்கள் பாக்கியமே- எங்கள் பேறே; சதுரானனன்-நான்முகன்; அங்க மேற்பொடி பூசிய சேவகன் - மேனியிற் பால் வெண்ணீறு பூசிய சிவன்; அறியாதாய் - இவர்களால் முற்றும் அறியப்படாதவ; தஞ்சமாய் - புகலாக; பவமேகிடுமாறு - பிறவியழியுமாறு; எதிர் - முன்னின்று; கந்தன் ஏத்திடவே - குமரக் கடவுள் வழிபட; நலமே தரு - நன்மையே தரும்; சம்புவாய் திகழ் - மகா விஷ்ணுவாய்ப் பொலிவும்; நாரண - நாராயண; பூரண - முழுமையானவனே; சருவேச, அனைத்தினுக்கும் இறைவனே; சம்பகாத்திரி - சண்பகமலை, தாரணியோர் புகழ் - உலகினர் புகழும்; அஞ்சனாத்திரி - அஞ்சனமலை; ஆம் என - ஆகும் என்று; ஏர்திகழ் - எழில் விளங்கும்; சந்தனாத்திரி - சந்தமலை; மேவிய - சார்ந்த தேவர்கள் - வானோர்; பெருமாளே - தலைவ. திருமாலே பெருமாளே கடனாமே என இயைக்க.

14) விழி ஆழிகாட்டி - கண்களாம் கடலைக்காட்டி; முலையானை தாக்க - முலைகளாம் யானை எதிர்த்தடிக்க; விடும் - ஏவும்; மாதர் ஏக்கம் - பெண்கள் மயக்கம்; அடையாதே - கொள்ளாமல்; வினையாவும் ஈட்டி - பாவங்கள் அனைத்தையும் தேடிப்பெற்று; அநியாயம் நாட்டி - நேர்மையற்றவை நிலைநாட்டி; விழைவான் - அச்செயல்களில் விருப்பமான; கோட்டி - கூட்டத்தில்; புகுதாதே - சேராமல்; பழிகாரர் மாட்டு மருவாது - வஞ்சகர் பக்கம் சேராமல்; வேட்கை படராது - ஆசை அதிகரிக்காமல்; தீட்ட அரிதான - வரைய இயலாத; பவமான காட்டில் - பிறவியாம் வனத்தில்; நுழையாது - புகாமல்; மூப்பு பயிலாமுன் - முதுமை நிலை அனு

தனதானன தன்னன தான
தனதானன தன்னன தான
தனதானன தன்னன தான தனதான

19. களவேபுரி கிறைவர் மாடும்
முறவாடுத னன்றல சூது
கருதாதிரு வெனறெமர் கூறும உபதேசம்

கனவே வரு பொன்பொருள் போல
நொடியாமுனம் நெஞ்சிடை வேறு
களியானமயல் கொண்டது மாறும் வகையாலே

இளவாணனக இந்திர சாப
நுதல்வாரணி கொங்கைகள் வாளி
இதுவேவென நினறிடு நீல விழியாலே

இலதோவல துண்டெனு வாடும்
இடையால்மன நொந்தில ரோதும்
எழின்மாமொழி கண்டென ஓதி யழியாதே

தளவேபுனை வெண்டயி ராயர்
மடவாரெதிர் கன்றொடு மாலை
தனிலே வரு சுந்தர சேவை தருவாயே

சரணாகதி என்றவர் வாழ்வு
பெறவேயருள் தந்தவ கீதை
தனைஓதிய நந்தகு மார சுகுமார

அளவேயறு தண்டமி ழாதி
மொழியாயுல கெண்டிசை யோடும்
அணுவாயுயர் அண்டமு மான பெரியோனே

அரவாசல் நின்றொரு வீடு
தருவாமென வந்தவர் தீமை
அணிகாது புரந்தவ மூவர் பெருமானே

பவிக்குமுன் ; ஆட்சி புரிவாயே - ஆண்டுகொள்வாய் ; மழு மானை நீக்கி - மழுவையும் மானையும் பற்றி இருப்பதைக் கைவிட்டு ; வளையாழி ஏற்று - சங்கு சக்கரம் தரித்து ; மதியோர்கள் - பேரறிஞர்கள்; போற்ற - துதிக்க; வதிவோனே - உறைபவனே ; மலர் மாட்சி காட்டி - மலரின் சிறப்புக்களைக் காட்டி ; பெறு கோதை சூட்டு - பெற்ற ஸ்ரீ கோதைநாச்சியார் தானணிந்த ; மலர்மாலை ஏற்றம் உடையோனே - பூமாலை சூடி ஏற்றம் பெற்றவனே ; எழிலாரும் அழகுபொருந்திய ; வீட்டில் உறைவாரும் - தேவர்களும் ; ஏத்து - போற்றும் ; எதிராசர் தீட்சை - ஸ்ரீ இராமநுஜர் உபதேசம் ; இயைவானே - பொருந்தியவனே ; எழுநாக மீச்செல்வான் - தெழுந்துயர்த்த, ஒருநாக ஒப்பற்ற சேடமலை ; மேற்கொள் - மேலுறையும் ; இறைவா - கடவுளே ; எதார்த்தர் - உண்மை பேணும் அன்பர் ; பெருமாளே - திருமாலே பெருமாளே. மூப்பு பயிலா முன் ஆட்சி புரிவாயே என இயைக்க.

15) எரிகக்கிய - தீ உமிழும் ; சுழல் கண் - சுழலும் விழி களுடைய ; படை - ஆயுதமேந்திய ; எமனுக்கு எதிர்புகுதாதே யமன் முன் செல்லாமல் இடையற்று இற - இடுப்பு இல்லை எனுமாறு பாரம் தாங்காது ஒடியும்படி ; எழும் - நிமிரும் ; வெற்பினை - மலையனைய முலைகளுடைய ; இளையார்க்கு - இளம் பெண்களுக்காக ; உளமிளையாதே - மனம் வருந் தாமல் ; பரிவில் பிறர்பொருள் - பரிவற்ற பிறர் பொருளை விரும்பும் பதகத் தொழில் - வஞ்சகத் தொழில் ; பயிலாதே - புரியாது ; பவனக்கிரிபுரை - தேவலோகமலை ஒத்த ; புட்பிடர் மிசை - கருடன் பிடரி மீது ; பளகற்றிட - குறைவகல ; வருவாயே - வருவாயாக ; மருவிட்டு - வாசனை வீசி ; அலர் - மலரும் ; துளவச்செடி வரும் - துளசிச் செடியடியில் தோன்றும் ; உத்தம வடிவாள் தன்-சிரேஷ்டமான அழகுடைய வளின் (கோதை நாச்சியார்) வளை பொற்குழல் புனை - அலங்கரிக்கப்பெற்ற பொற்கூந்தலில் அணித்த ; மட்டணி - தேன்சிந்தும் ; மதுரத்தொடை - இனிய மாலை மணிமார்பா - (பூண்ட) அழகிய மார்பினனே ; அரிமொய்த்து - வண்டுகள் நிறைந்து ; இசைமுரல் - பண்பாடும் ; முக்கனி அலர் - வாழை மா - பலா என்ற மூவகைப் பழங்கள் பரவிய; மைப்பொழில் - இருண்ட சோலை உடைய அழகான - எழில்தவழ் ; அரவக் கிரி உறை - சேஷகிரி வாழும் ; வித்தக - பேரறிஞனே ; அதி உத்தமர் - மிகுந்த சத்தியசீலர் ; பெருமாளே - திருமாலே ; பெருமாளே வருவாயே என இசைக்க.

இதுவுமது

20. கருவாகிய வன்றுறு மோகம்
அதனால்வரு துன்பமு மாதர்
களினால் வரு துன்பமு மூடும் இருள்போலே

கரணாதிகள் மங்கிட நேரு
மருண்மாமதி கொண்டழல் வீசு
கடுவாமென வன்பிணி கோடி உடல்சேர

வெருவேதர அந்தர மீது
நமதூதரும் வந்தடு பாசம்
விரைவேகொடு வந்திடும் வேளை மறவாதே

வினைவேரற வென்றவர் தேடும்
இருதாமரை சிந்தையின் மேவு
விதமாயருள் தந்தெனை யாள வருவாயே

எருதேறிய சங்கரன் வேதன்
இமையோர்பதி ஐங்கரன் ஆதி
எழுதாமறை கண்டறி யாத அகிலேசா

இமமாமலை தங்கெழி லாதி
நரநாரண சங்கொடு நேமி
இளவசேர்தரும் அங்கையி னோடு பொலிவானே

செருவார் வலி வெந்திறல் மாய
நிருதேசரை யன்றொரு வாளி
தெரியாவடு மைந்துறு சாப ரெகுவீரா

தெளியோகியர் வந்தனை சேரும்
உரகாசலம் நின்றவ தேசு
திகழ்வாரிதி கண்துயில்மூவர் பெருமாளே

இதுவுமது

21. மதியோமுக மண்டல மாதர்
விழியோவரி வண்டினம் வாரி
மழையோகுழல் கண்டணி பூவை மொழியாகும்

வடமாமுலை கண்டிடில் வாச
மலையாமென விண்டவர் பாத
மலரேகெதி யுண்டென நாடி மகிழ்வாலே

16) மீன் உலாவு – மீன்கள் சஞ்சரிக்கும்; நீர்வாரி – கடல்; சோமன் - சந்திரன் ; வான் மேவுமாலை - வானிலுதிக்கும் மாலைப் போது ; கார்விடமாக – கரிய நஞ்சாக ; மேனி வாடினாள் - உடல் தளர்ந்தாள் ; வாடை கூசுவாள் - வாடைக் காற்றில் நடுங்குவாள் ; வேடை கூடவே – காமவெறிமிக ; மெலிவானாள் - இளைத்தாள் ; கானுலாவு - மணம் வீசும் ; தேன்மாலை மீதிலே - உன்புயத்தணிந்துள்ள மாலை மேல் ; காதலாயினாள் - அன்பு கொண்டனள் ; கனிவோடு – மகிழ்வோடு ; காமர் வாணுதால் - அழகிய ஒளிவீசும் நெற்றியுடைய பெண்ணே ; சேர்தும் - உன்னைச் சேர்வோம் ; நீ அழேல் – நீ வருந்தி அழாதே ; காணவேஎன - நீ கண்களாற் காணுமாறு என ; வருவாயே - வருவாயாக ; மாறுபாவனே - யாவற்றையும் அனுபவித்துத் துய்ப்பவனே ; லோகநாதனே - உலகத்தலைவனே ; வானநாடர்தாழ் – தேவர்கள் பணியும் ; மதுரேசா – மதுராபதித்தலைவனே ; மாய சீயமாயான - நரசிம்மமான ; தாரகா - கண்ணனே ; வாணிநாதன் - சரஸ்வதி காந்தன் பிரமன் ; வாழ் - வாழும் ; மலர் நாபா – தாமரை மலர் தோன்றிய கொப்பூழ் உடையவனே ; தேன் உலாவு நீள் சோலை – வண்டுகள் செறிந்த நீண்ட சோலைகளில் ; ஓடை சூழ் - யானைகள் சுற்றிவரும் ; சேட நாகமேல் – சேடமலை மீது ; உறைவோனே – இருப்பவனே, (சேஷனாம் பாம்பின் மீது என்பது தொனிப் பொருள்) ; தேவர் நேசனே - தேவர்கள் அன்பனே ; ஸ்ரீநிவாசனே - திருமகள் கேள்வனே ; தேடி நாடுவோர்-தேடிச் சென்றடைபவர் ; பெருமாளே - திருமாலே; பெருமாளே ; கானுலாவு தோள் மாலை மீதிலே காதலாயினாள், காமர்வாணுதால் சேர்தும் நீயழேல் காணவேஎன, கனிவோடு வருவாயே எனக் கூட்டி இயைக்க.

17) இரவு பகல் நொந்து-இரவும் பகலும் நோயுற்று; கணிகையர்தம் - பரத்தையர்களின் ; இன்பமெனும் – சிற்றின்பமென்னும் ; அமுதருந்தி – அமுதம் உண்டு ; இயல்பான – இயற்கையாக உரிமையுள்ள ; இலமது துறந்து – மனையின் நீங்கி ; பலர் வசை விளம்ப - பலரும் பழித்து வசை கூற ; எழுதரிய – எழுதற்கியலாதஅளவு ;துன்ப அலை மூழ்கி - துயரக் கடலில் ஆழ்ந்து ; கரவு புரிகின்ற சிலரொடு – களவு செய்வார் சிலரொடு ; கலந்து - சேர்ந்து ; கரும வினை ஒன்றும் அறியாதே - முன்வினை ஏதும் அறியாமல்; கலிபொர - வறுமை போரிட ; இணைந்த - துன்பமுற்ற ; கயவர் - வஞ்சகர்கள் ; உனை எங்கு கருதுவர் - உன்னை எங்கே நினைப்பார்கள் ; நஞ்சு கழிவாரே – நைந்து போவார்கள் ; மரவுரி புனைந்து - சீரைதரித்து ; புடையின் - மருங்கில் ; ஒரு தம்பிவர – ஒப்பற்ற இளவல் இலக்குவன்வர ; மிதிலை நங்கையொடு - மிதிலைப்

விதியாலுயர் மந்திர பூர்வ
 வினைவேரற மைந்தர்கள் மீது
 மிகுமாதர முந்துற வாடி மிடியாலே

வெகுகாலமு நொந்துயி ரேகு
 பொழுதாயினு மந்தகர் தூதர்
 புகுதாவணம் வந்துன சேவை தருவாயே

கதியேதுள தென்றுளம் நாடு
 கதிரோன் மகன் முன்பொரு வாலி
 கணையாலிற வன்சிலை கோலி யடுவானே

கரவாலசை வுண்டொரு வேழம்
 முதலேயென வந்தருள் நாத
 கருணாகர மஞ்சன மேனி பொலிவானே

வெதிர் வாயிசை கொண்டிடை மாதர்
 இதழ்வாயமு துண்டவ கோதில்
 வினதாசுத ரஞ்சித சீதை மணவாளா

விதியோடர னுந்தினம் ஓதும்
 உரகாசல புங்கவ தேசு
 விளையாரண மந்திர மூவர் பெருமானே

இதுவுமது

22. புளிவாயுறை தண்டமிழ் மாறர்
 திருவாய்மொழி கண்டெனு மாறு
 புதுவாபுரி வந்தருள் கோதை புனைமாலை

புதுநாண்முகை விண்டலர் சோலை
 மதுவார்வயல் விஞ்சுறும் ஆலி
 புரமேவிய மங்கைய ரேறு புகல்கோவை

தெளிவாருளம் நின்றிடு வீர
 குலசேகர னன்பொடும் ஓது
 திருமாமொழி தொண்டர்கள் பாத துகள்பாணன்

பெண்ணாம் (மைதிலி) சீதையுடன்; கானில் - ஆரணியத்து; வழிநடை உவந்து - நடந்து செல்வதை மகிழ்ந்தேற்று; சினவியா கவந்தன் - வழியில் கோபித்த கவந்தன்; மரணமுற - இறக்க; அம்பு விடுவோனே - அம்பினை எய்பவனே; உரக மலை கொண்க - மார்பிலுறையும் மலர்மகளாம் திருமகள் கேள்வ; புரம்எரிசெய் முன்பர் - திரிபுரங்களை எரிசெய்த முன்னவர்சிவன்; உதவும் - அளிக்கும்; ஒரு கந்தர் - ஒரு முருகன்; உயர்வாக - மேன்மையுற; உறுதிதரு முன்ப - வலிமைதரு முன்னவனே; அரிகரி முகுந்த - ஹரிஹரி முகுந்த எனப்பெறும்; உரகமலை வந்த; சேடமலை மீது வந்த - பெருமாளே - திருமாலே; பெருமாளே! கயவருனை எங்கு கருதுவர்கள் நஞ்சு கழிவாரே என இயைக்க.

18) அதிகார வெற்றி யதனோடு - உத்தியோக ஜயத் தோடு; சுற்றி - திரிந்து; அயல்நாடும் உற்று - அன்னிய நாடும் சென்று; இ அரசாலே - இந்த அரசாங்கத்தால்; அனியாயமுற்ற - அநீதியுற்ற; பழிபாதகத்தின் - பழி பாவங் களில்; அசையாத பெற்றியவர்மாடே - நீங்காத உறுதியான குணத்தவர் பக்கம்; கதி ஏதென - பிழைக்க வேறு வழி இல்லை எனவும்; கைவிடில் - தாங்காமல் கைகழுவி விட்டால்; ஆர் அயர்ச்சிகளைவாரென - வேறுயார் துயர் நீக்குவார் என்று; பல கவியாலே - பலவகைப் போற்றிக் கவிகளால்; கரிராசபட்ட - கசேந்திரபட்டனே; மகராச - பேரரச; கற்ற - மிகுதியும் ஓதி உணர்ந்த; கவிராச - கவியரசனே; கொற்றம் உடையானே - அரசாட்சி உள்ளவனே; பதியே என - தலைவனே என; பொய்பலபாடி - பொய்யாகப் பலவும் பாடி; விற்றபடியால் - அவற்றை விலை செய்தமையால்; உயர்ச்சிப் படுவாரே-மேன்மை அடைவார்களா; பரசோடடுத்து வருராம- பரசுராமன் என அவதாரம் செய்தோய்; பத்ரபததாம - பூவிதழ் பொருந்திய திருவடிகளும் மாலையும் உடையவனே; பத்தர் - தொண்டர்கள்; பணிவோனே - பணியப் பெறு வோனே; இதிகாச - இராமாயண, பாரத இதிகாசங்களில் விளங்குபவனே; வச்ரதிடதேக - வயிரம் போன்ற வலிவான திருமேனியனே; உக்ர இகல் மேவு - கடிய வலிமையுடைய; சத்ரபதியோனே - வெண்கொற்றக் குடைக்குரியானே; இறை யான - கடவுளான (தலைமைமேவும்); சர்ப்ப உருவாகு - ஆதி சேடன் வடிவுடை; வெற்பாகும் இடம் - சேடாத்திரியில்; மேவும் - விளங்கும்; முத்தர் பெருமாளே - முத்திபெற்றோரின் திருமாலே; பெருமாளே, உயர்ச்சிப்படுவாரே என்க.

திடமாமதி கொண்டவர் மூவர்
எனும் ஆரியர் பஞ்சமன் வாய்மை
தெளியாதரு ரும்பொழு தாளும் அறிவாளன்

அளியார்தரு தண்கடல் வாரி
எழுமாரமு துண்டவர் தேட
அழகாயமை யுங்கவி யார மதுவேபோல்

அணியோடிசை யுஞ்செறி யாத
அடியேனிசை புன்சொலு மாசி
லணியாக வணிந்தெனை ஆள வருவாயே

வெளியே பர மண்டல வாச
சுகுணாசிர மஞ்சுள வால
விடையேறிய சங்கரன் வேத னிவர்நாளும்

விமலா என நின்றடி தாழும்
உரகாசலம் வந்தருள் சோதி
வினைவேரற வென்றவர் நாடு பெருமாளே

தனதனன தானதன்ன தனதனன தானதன்ன
தனதனன தானதன்ன தனதான

23. கலகவினை தேடி நந்து
நிதிகள்பல தேடி நின்று
கருவமிக வாகி யொன்று மறியாமல்

கடுகினள வேனு நன்று
புரியமனம் வாடி வந்த
கவிஞர்தம சாப மொன்ற வசைகூறி

அலகில்பொருள் காவல் தங்கு
மலகையென வேகி டந்த
அறிவிலியின் மாடு சென்று தளராமல்

அருள்பெருகு மாரி கங்கு
லனையதிரு மேனி நெஞ்சம்
அனவரதம் நாடும் அன்பு தருவாயே

19) களவே புரிகின்றவர் மாடும் - திருட்டையே புரிபவர் பக்கலிலும் ; உறவாடுதல்- நட்புடன் கூடி இருப்பது ; நன்றல- நல்லதன்று ; சூது கருதாதிரு - வஞ்சகம் நினையாதிரு ; என்று எமர் கூறும் - என எம்மைச் சேர்ந்தவர் மொழியும் ; உபதேசம்- அறிவுரைகள் ; கனவே - சொப்பனமாகும் ; வருபொன் பொருள் போல - உங்கள்பாற் சேரும் பொன்னும் பிற செல்வங் களும் ஒப்ப ; நொடியாமுனம் - ஒரு கை நொடிப்போதிலும் முன்னதாக ; நெஞ்சிடை - மனத்தில் ; வேறுகளியால் - பிற மகிழ்ச்சியால் ; மயல் கொண்டு - மயங்கி ; அதுமாறும் வகை யாலே - அவை மாற்றம் கொள்ளும் விதத்தினால் ; இள-யௌ வனமுள்ள ; வாள்நகை - ஒளிசேர் முல்லைப் பற்களும் ; இந்திர சாபநுதல் - இந்திர வில்லனைய நெற்றியாலும் ; வாரணி கொங்கைகள் - இரவிக்கை (கச்சு) புனைந்த முலை களாலும் ; வாளி இதுவே என - இதுவே அம்பு என விளங்கும் ; நீலவிழியாலே - நீலமணிக்கண்களாலும் ; இலதோ அலது உண்டென வாடும் - இல்லையோ அன்றி உள்ளதோ என மயக்கம்தரும் ; இடையால் - இடுப்புப் பகுதியாலும் ; மனம் நொந்து - உளம் வருந்தி ; இவர் ஓதும் - இம்மகளிர் கூறும் ; எழில் மாமொழி - அழகிய பெருத்த வசனங்கள் ; கண்டென - கற்கண்டென இனிப்பவை என ; ஓதி - மொழிந்து ; அழி யாதே - கெட்டழியாமல் ; தளவே புனை - முல்லை மலர் சூடி ; வெண் தயிர் ஆயர்மடவார் எதிர் - வெண்தயிர் கடையும் இடைப் பெண்கள் முன்னர் ; கன்றொடு - மேய்க்கப் பகலில் ஓட்டிச் சென்ற பசுக் கன்றுகளுடன் ; மாலை தனிலே வரு - மாலை நேரத்தில் திரும்பவரும் ; சுந்தர - சேவை - அழகிய கோலம் தரிசிக்க ; தருவாயே - அருள்புரிக ; சரணா கதி என்றவர் - அடைக்கலம் எனப் புகன்றவர் ; வாழ்வு பெறவே - நல்வாழ்வு பெற என்றே ; கீதைதனை ஓதிய - அருச்சுனனுக்கு உரைப்பான்போல பகவத் கீதை உபதேசித்த ; நந்தகுமார - நந்தகோபன் மகனாம் ; சுகுமாரா - நல்ல குமாரனே ; அளவேயறு - கணக்கற்ற, இவ்வளவினதெனக் கூற இயலாத ; தண்டமிழ் - குளிர்ந்ததமிழ் ; ஆதிமொழியாய் - முதலிய மொழியாய் ; உலகு எண்டிசையோடும் - உலகில் எல்லாப் பகுதிகளிலும் ; அணுவாய் - மிகச்சிறு நுண்பொருளாக வும் ; உயர் அண்டமும் ஆன - பேரண்டமும் ஆகிய ; பெரியோனே - மகத்தானவனே ; அரவாசல நின்று - சேடாத்திரியிலிருந்து ; வீடுதருவாம் என - பரமபதம் அருளு வோம் என ; வந்தவர் - சேடகிரி வந்தவர்பால் ; தீமை

உலகநெறி மாறு மன்று
தவமுனிவர் கூடி எங்கள்
உரிமைநல மீய்தி என்று குறை கூற

ஒரு மனித னாகி வெங்கண்
நிருதர்பதி நியாகி லங்கை
உரனழிய வேவளைந்த சிலையாளா

திலகமுக மேவு திங்கள்
அனையமுக மாது நங்கை
தினமுமக லாத துங்க வரைமாரபா

சிமையவள னாலவ ளைந்த
உரகமலை மேலு றைந்த
திகிரிவல மேசிறந்த பெருமாளே

இதுவுமது

24. இருண்மருவு ஞாலம் வந்த
பொழுதுவினை யான துன்பம்
எழுதரிய காம இன்பம் அதனாலே

இடர்கள் பல தேடி என்றும்
அகலரிய பாவ மண்டி
எமனுலகு கூடி யங்கு தளராமல்

மருண்மருவும் யானை பன்றி
எருதெருமை சேவல் தும்பி
மயில்கழுதை பூனை யன்றில் இவையாக

மறுசனை மேவி யிங்ஙன்
அழுதழுது கூவி அஞ்சி
மயர்வினொடும் வாடி நெஞ்சம் அயராமல்

அருள்மருவி நாளும் என்கண்
அளிமருவு சேவை தந்துன்
அடிமலரை நாடும் அன்பு தருவாயே

யணுகாது – தீங்குகள் எவையும் நெருங்காமல்; புரந்தவ - காத்தருளியவ; மூவர் பெருமாளே – மும்மூர்த்திகள் தலைவ னாம் திருமாலே; பெருமாளே, சுந்தர சேவை தருவாயே என இயைக்க.

20) கருவாகிய அன்று–கருவில் சனித்த அன்றே; உறும்–அடையும்; மோகம்–பற்று, ஆசை; அதனால் வரு துன்பமும்–அவ்வாசையால் ஏற்படும் இடர்களும்; மாதர்களினால் - பெண்களால்; வரு துன்பமும் - சேரும் கஷ்டங்களும்; மூடும் இருள் போலே - கவியும் இருட்டைப் போல; கரணாதிகள்-ஐம்பொறி முதலிய; மங்கிட - மழுங்கிட; நேரும் – எதிர்ப் படும்; அருள் மாமதி கொண்டு - அருள் தரும் பேரறிவு மூலம்; அழல் வீசும் – தீஎறியும்; கடுவாம் என-விஷம் போல; வன்பிணி கோடி - கோடிக்கணக்கான கொடிய நோய்கள்; உடல் சேர - சரீரத்தில் அடைய; வெருவேதர - அச்சந்தர; அந்தரமீதில் - வானில்; நமதூதரும் – யமதூதர்கள்; வந்து - உற்று; அடுபாசம் – பிணிக்கும் பாசக் கயிறு; விரைவே கொடு வந்திடும் வேளை – விரைவாகக் கொண்டு வரும்போது; மறவாதே - மறக்காமல்; வினை வேரற - பாவங்கள் வேரோடு அழிய; என்றவர் – என்பவர்கள்; தேடும் – நாடும்; இரு தாமரை - இரு தாமரை மலரனைய திருவடிகள்; சிந்தனையின் மேவு விதமாய் – கருத்தில் விளங்கும் படியாக; அருள் தந்து - கிருபை தந்து; எனையாள – என்னையாட் கொள்ள; வரு வாயே - வருவாயாக; எருதேறிய சங்கரன் - விடை ஏறும் சிவன்; ஐங்கரன் - யானை முக விநாயகன்; ஆதி எழுதா மறை – பண்டைய வரிவடிவத் தெழுதாத வேதங்கள்; கண் டறியாத - பார்த்துணர இயலாத; அகிலேசா – சகலபுவனங் களின் தலைவனே; இமமாமலை - இமயமலையில்; வதரி - க்ஷேத்திரத்தில்; தங்கு - வசிக்கும்; ஆதி நரநாரண - பண்டைய நரநாராயணனே; சங்கொடுநேமி - சங்கொடு சக்கரம்; இவை சேர்தரு – இவை கொண்ட; அங்கையினோடு - அழகிய கரங்களுடன்; பொலிவானே – சிறந்து விளங்குபவனே; செருவார் – பகைவர்; வலி - வலிமையான; வெந்திறல் மாய-கொடிய வலம் அழிய; நிருதேசரை - அரக்கர் தலைவன் இரா வணனை; அன்று - முன்பு; ஒருவாளி – ஓரம்பு; தெரியா - தெரிந்து; அடும் - கொல்லும்; மைந்துறு - அழகுடைய; சாப- கோதண்டம் என்ற வில்லை உடைய; ரெகுவீரா - ரெகுகுல வீரனே; தெளி - தெளிந்த; யோகியர்–முனிவர்கள்; வந்தனை சேரும் - வழிபாடு சேரும்; உரகாசலம் நின்றவ - சேடாத்திரி

அலைகடலின் நீர்எ ழுந்த
வனிதைமகிழ் சேர லங்கல்
அணிமருவி வீறணிந்த திணிதோளா

பொருள்மருவு மாறர் என்பும்
உருக இசை யோடு முன்பு
புகல் கவியின் வாய்மைகொண்ட புகழாளா

புனலருவி தாழும் உம்பர்
உரகமலை மேலு றைந்த
புனிதசகம் ஏழளந்த பெருமாளே

25. புலனறி தேயமண்டு பிணியினுடல் வாட விஞ்சு
புகையிருமல் கூட மண்டும் விழிசோர

புளகமுலை மாதர் கண்டு வசைமொழிகள் கூற விண்டு
புலவுமுடை நாற நஞ்சு நலிவாகி

அலகில் வினை சூழ மைந்தர் கதறமுது காடு துன்றி
அழலின்இரை யாகும்என்ப தறியாமல்

அதிகவய தோடி ருந்து நிதிகள் பல தேடி என்றும்
அழியமனம் நாடு மென்கண் வருவாயே

திலகமுகம் வாடஅன்று தொறுவர்மக ரோடு கன்று
தெளியுமறை தேட நின்று குழலூதி

சிகரவரை மேனி மிர்ந்த கவிகைஎன மேவ மங்கும்
செறியு மழை மாரியங்கு தகைவோனே

உலகமுத லான வண்ட புவனகுலம் யாவும் உந்தி
ஒருமாலரின் மீது தந்த உரவோனே

உரகமலை வாசமெங்குமுறு கமல மேவும் எங்கள்
உரகமலை வாயுறைந்த பெருமாளே

மலையில் நின்ற கோலமுடையவ; தேசுதிகழ்-ஒளி விளங்கும்; வாரிதி - திருப்பாற்கடலில்; கண் துயில் - யோக நித்திரை புரியும்; மூவர் - மும்மூர்த்திகள்; பெருமாளே - தலைவ திருமாலே; பெருமாளே, எனையாள வருவாயே என்க.

21) மதியோ முகமண்டலம் - முக வட்டம் பூரண நிலவோ; மாதர் - மங்கையரின்; விழியோ - கண்களோ; வரிவண்டினம்- நீளமான வண்டுகள்; வாரி மழையோ குழல் - கூந்தல் நீருண்ட மழை மேகமோ; கண்டு - கற்கண்டு; அணிபூவை மொழி யாகும் - அழகிய பெண்ணின் உரையாகும்; வடமாமுலை - ஆரங்கள் பூண்ட பெரிய முலைகள்: கண்டிடில் - உவமை காணின்; வாசமலையாம் என - மணங்கமழ் மலையாகும் என விண்டு - கூறி; அவர் பாத மலரே - அவர்கள் மலரனைய அடிகளே; கெதியுண்டெனநாடி - புகலாக உள்ளதென அடைந்து; மகிழ்வாலே - சந்தோஷத்தாலே; விதியால் - ஊழ் வினையால்; உயர்மந்திர பூர்வ வினைவேரற - மந்திரம் முதலாய தொழில்கள் அடியற; மைந்தர்கள் மீது - இளை ஞர் மேல்; மிகும் ஆதரம் முந்துற வாடி - மிக்க அன் போடு உறவாடி; மிடியாலே - வறுமையால்; வெகு காலமும் - நீண்ட நாட்களும்; நொந்து - வருந்தி; உயிரேகு பொழுதாயினும் - ஆவி பிரியும் பொழுதாவது; அந்தகர்தூதர் - யமதூதர்; புகுதாவணம் - போந்துறாதபடி; உனசேவை - உன்தரிசனம்; தருவாயே - அருள் தருவாயாக; (அஜாமிளன் கதையை ஒப்பு நோக்குக); கதியேதுளது - வேறு புகல் ஏதுள்ளது; என்று உளம் நாடு - என மனத்தில் விரும்பி யடையும்; கதிரோன் மகன் - சூரியன் மகன் சுக்ரீவன்; முன்பு- முன்னால்; ஒரு வாலி - ஒப்பற்ற வாலி; கணையாலிற - அம்பால் இறக்க; வன் சிலை கோலி - வலியவில்லை வளைத்து; அடுவோனே - சம்மாரம் செய்பவனே; கரவால் - முதலையால்; அசைவுண்டு - சலிக்கப் பெற்று; ஒரு வேழம்; ஒரு யானை (கஜேந்திரன்); முதலே என - ஆதிமூலமே என; வந்தருள் நாத - உடன் வந்து அருள் செய்த தலைவ; கருணாகர - கருணைக்கிருப்பிடமானவனே; மஞ்சு அன மேனி - மேகமனைய வடிவு; பொலிவானே - சிறப்பவனே; வெதிர் வாய்-மூங்கிலால், புள்ளாங்குழலால்; இசை கொண்டு- கானம் இசைத்து; இடை மாதர் - கோபியர்; இதழ்வாயமுது உண்டவ - இதழ்களில் (உதடு) அமுதம் பருகியவ; கோதில்- குற்றமற்ற; விநதாசுத - விநதை மகன் கருடனின்; ரஞ்சித- பிரியனே; சீதை மணவாளா - சீதா மணாளா; விதியோடு -

26. வருண நெறி மாறிமுந்தை வருணமுறை மாறி
வஞ்ச
மனிதர் தமை மேவிஎன்றும் அழியாத
மகிமைபெற வேணுமென்று துரியநிலை கூடிநின்ற
மவுனகுரு நாதரண்டை மருவாமல்
அருணவெயி லால்விரிந்த பதுமமலர் போலு
முன்றன்
அடிமலரின் மீதிலன்பு தளராமல்
அமலவடி வானதொண்டர் சமுகமற வாதநெஞ்சம்
அமைதியுடன் வாழ என்முன் வருவாயே
தருணவிடை ஏழடர்ந்து சிறியஇடை வாடவிஞ்சு
தனமயிலை யார்வமுந்த அணைவோனே
தருமன்முத லானவைந்து புரவலர்கள் தூதுசென்று
சமர்முடியு மாறுவென்ற தகையோனே
இருணவடி வாயெழுந்த இகலசுர னாவியெஞ்ச
இமையிலடும் வீரதண்டம் உடையோனே
இடபமலை மேலுநங்கள் உரகமலை மேலுமன்பர்
இதையமலர் மேலுநின்ற பெருமாளே

தனதன தத்த தனனா தானன
தனதன தத்த தனனா தானன
தனதன தத்த தனனா தானன தனதான

27. தருமனி ழைத்த மகம்போலே ஒரு
விதுரனி யற்று தவம்போ லேவுயர்
தருணம டுத்த தனம்போ லேமதி நிழல்போல
சமதம முற்ற குணம்போ லேதனி
அமுதுவ டித்த கலம்போ லேயலர்
சலசன ளித்த வரம்போ லேநின தருள்போலே

பிரமனுடன் ; அரனும் - சிவனும் ; தினம் ஓதும் – நாளும் துதிக்கும் ; உரகாசல - சேஷாத்ரி நாதனே ; புங்கவ – இறைவ; தேசுவிளை ஆரண மந்திர - ஒளி பெருக்கும் வேத மந்திரரூப ; மூவர் - மும் மூர்த்திகளின் ; பெருமாளே - தலைவ திருமாலே.

பெருமாளே, அந்தகர் தூதர் புகுதாவணம் வந்து உன் சேவை தருவாயே என இயைக்க.

22) புளிவாயுறை - திருக்குருகூரில் உறங்காப்புளி மரத்தடியில் தங்கி இருந்த ; தண் தமிழ் மாறர் – குளிர்ந்த தமிழில் அருளிய நம்மாழ்வார் ; திருவாய் மொழி கண்டெனுமாறு - திருவாய் மொழிப் பாசுரங்கள், கற்கண்டெனும்படி ; புது வாபுரி - புதுவை என்னும் ஸ்ரீ வில்லிபுத்தூரில்; வந்து - உதித்து; அருள் - உலகை அருளும் ; கோதை புனைமாலை - ஆண்டாளருளிய நாச்சியார் திருமொழி என்னும் தமிழ் மாலை ; புது நாண் - நாள்தோறும் ; முகைவிண்டு - மொட்டு விரிந்து ; அலர் - மலரும் ; சோலை – பொழிலின் ; மதுவார் - தேன் சிந்தும் ; வயல் - பழனங்கள் ; விஞ்சுறும் - மிகுதியும் உள்ள ; ஆலிபுரம் மேவிய – திரு ஆலி என்ற இடத்துறைந்த ; மங்கையர் ஏறு - திருமங்கை மன்னன் ; புகல்கோவை - புனைந்த அகப்பாடல்களும் ; தெளிவார் உளம் - அறிந்துணர்ந்தோர் மனத்தில் ; நின்றிடு – நிலைத்திருக்கும் ; வீரகுலசேகரன் – சேரமன்னன் வீரனாம்குலசேகர ஆழ்வார்; அன்பொடும் ஓது– பக்தியோடு பகரும் ; திருமாமொழி – பெருமாள் திருமொழிப் பாசுரங்கள் ; தொண்டர்கள் பாதுகள் - தொண்டரடிப் பொடியாழ்வார் ; பாணன் – திருப்பாணாழ்வார் ; திடமாமதி கொண்ட - திருமால் பத்தியில் திடமான அறிவு கொண்ட; மூவர் எனும் ஆரியர் – முதலாழ்வார் மூவர் என்னும் சிறப்புடைய பொய்கை, பூதம், பேயாழ்வார் என்ற ஆசாரியர்கள் - பஞ்சமன் வாய்மை தெளியாதஞரும் பொழுது – பஞ்சமனாம் திருப்பாணாழ்வார் உண்மை நிலை தெரியாது துன்புறும் பொழுது விஷ்ணுசித்தனை ஆண்டருளும் ; அறிவாளன் - பேரறிவு கொண்டவன் ; அளியார் ; அலை செறி ; தண்கடல் வாரி எழும் – குளிர்ந்த கடலினின்றும் தோன்றியதரு ; ஆர் அமுதுண்டவர் தேட - அமுதபானம் செய்த தேவர்கள் தேட ; அழகாயமையும் கவி ஆரம் அதுவேபோல் – எழிலாகவமைந்த கவிமாலைபோல ; அணியோடு இசையும்- பலவகை அணி (அலங்காரம்) யுடன் பண்சேர்ந்து ; செறியாத - செறிவு (மிகுதி பெறாத) அடியேன் இசை - தாசன் இசைக்கும் ; புன்சொலும் – அற்பச் சொற்களும் ;

அருமைம தித்த சுகம்போ லேயொளி
தவழவி டுத்த நிலம்போ லேமுதிர்
அமலமி குத்த மனம்போ லேவளி யதுபோலே

அனுமனி யற்று நலம்போ லேஎதிர்
சனகிய கத்து வலம்போ லேநின
தபையம ளித்த கரம்போ லேயொரு வரமீவாய்

கருணைய ழித்த பவம்போ லேயெரி
கதுவவ ளைத்த விடம்போ லேயதிர்
ககனம்வ ளைத்த கனம்போ லேமலை நிருதேசர்

கதறந டிக்கும் நடம்போ லேகளி
யலகைந டிக்க விடும்போ ரேநொடி
கணனின்மு டிக்கும் பெரும்பே றேசொல அமரேசர்

உருமினு டற்றும் இளங்கோ வேரசம்
ஒழுகமு றித்த பசுந்தே னேயளை
உறியினெ டுத்து நுகர்ந்தோ னேதயை
உடையானே

உலகம திக்க வுயர்ந்தோ னேமுனி
வரர்கள்து திக்க மகிழ்ந்தோ னேபுகழ்
உரகம லைக்கண் உறைந்தோ னேசுரர் பெரு
மாளே

தனதன தத்த தனத்த தத்தன
தனதன தத்த தனத்த தத்தன
தனதன தத்த தனத்த தத்தன தனதான

28. கருவிலு தித்துப் பிடிப்பு விட்டொரு
தரையிலு தித்துப் பதைத்து நட்டுறு
கனியர்த மக்குட் கிடத்தி விட்டிட அனுர்மாறி

மாசிலணியாக - குற்றமற்ற அணிகலனாக; அணிந்து - பூண்டு; எனையாள-என்னை ஆட்கொள்ள; வருவாயே - வந்தருள்க; வெளியே - ஆகாசத்தில்; பரமண்டலவாச - பரமபதத்தில் வசிப்பவனே; சுகுணாசிர - நற்குணங்களின் உறைவிடமானவனே; மஞ்சுள - அழகான; வாலவிடை ஏறிய - வெள்ளை இடபத்தில் ஏறிவரும்; சங்கரன் - சிவன்; வேதன் - பிரமன்; இவர் - இவர்கள்; நாளும் - எப்பொழுதும்; விமலா என - இறைவா என்று; நின்று - எதிர் இருந்து; அடிதாழும் - வணங்கும்; உரகாசலம் - சேடாத்திரியில்; வந்தருள் - வந்து அருள்புரியும்; சோதி - ஒளிமிக்கவ; வினை வேரற - பாவங்கள் வேரோடழிய; வென்றவர் - புலன்களை வென்ற பெரியோர்கள்; நாடும் - விரும்பும்; பெருமாளே - திருமாலே; பெருமாளே, அடியேனிசை புன்சொலு மாசிலணியாக வணிந்தெனையாள வருவாயே என இயைக்க.

23) கலகவினை தேடி-குழப்பம் தரும் தொழல்கள் தேடி; நந்தும் - விரும்பும்; நிதிகள் பலதேடி - பலவகைச் செல்வம் தேடி-நின்று; இருந்து; கருவமிகவாகி-மிக்க அகங்காரத்துடன்; ஒன்றுமறியாமல்-அறிய வேண்டியது ஒன்றுகூடத் தெரியாது; கடுகினளவேனும் - சிறுகடுகினளவாவது; நன்றுபுரிய-நல்லது செய்ய; மனம்வாடி - உளம் வருத்தமுற்று; வந்த கவிஞர் - பரிசில் நாடி வந்த புலவர்கள்; தம - தமது; சாபம் ஒன்ற - சாபவார்த்தை சார; வசைகூறி - பழிச்சொல் புகன்று; அலகில் பொருள் - அளவற்ற செல்வம்; காவல்தங்கு - பாது காக்கும்; அலகை எனவே - பேயென; கிடந்த - இருந்த; அறிவிலியின் மாடு சென்று - மூடர்பாற் போய்; தளராமல் - அயர்வடையாமல்; அருள்பெருகு - கிருபை (கருணை) பெருக் கெடுக்கும்; மாரி - மேகம்; கங்குல் - இருள்; அனைய - ஒத்த; திருமேனி - திருவடிவை; நெஞ்சம் - மனத்தில்; அனவரதம் நாடும் - எப்போதும் விரும்பும்; அன்பு தருவாயே - தயவு செய்வாய்; உலகநெறி - உலகமக்கள் வாழும்முறை; மாறு மன்று - வேறுபடும் போது; தவமுனிவர் கூடி - தவத்திற் சிறந்த இருடிகள் சேர்ந்து; எங்கள் உரிமை நலம் ஈய்தி என்று - எங்களுக்குரிய சுதந்திரத்தின் நன்மை ஈந்தருள் என; குறைகூற - தங்கட்கு நேர்ந்த குறைகள் புகல; ஒரு மனிதனாகி - ஒப்பற்ற புருஷோத்தமனாகி; வெம்கண் - கொடுமை நிறைந்த விழிகளுடைய; நிருதர்பதியாகி - அசுரர் தலைவனாகிய; லங்கை - இலங்கேசுவரன்; உரனழியவே - வலிமை யழியும் பொருட்டு; வளைந்த - குனித்த; 'சிலையாளா -

கவிமுலை தொட்டுக் கசக்கி யிட்டமு
தொழுகம டுப்பப் புகட்டி மட்டொரு
கலவைய ரைத்துத் திமிர்த்து மட்கலன்
உறுநீரால்

உருவிவ ழித்துக் குளத்தி லிட்டிடு
கனகமு ரைத்துக் கொடுத்து விட்புலன்
உறைகுன ருக்குத் திருத்தி யுற்றிட நனிஓதி

உருகுக ணத்திற் புரத்து நெட்டுயிர்
அகலவ டித்துப் புடைத்து நட்பினர்
உறவைம தித்துத் திகைத்த பெற்றிமை
உறலாமோ

செருவிலெ திர்த்துக் குறித்து முற்படும்
அசுரர்தமக்கு களைத்து நிற்கிலர்
திருகிஇ ளைத்துப் புரத்தி இப்பொழு தெனநாடி

திகிரிவ லத்துத் தரித்து வெற்பொடு
சிவனுவ ணத்திற் சிறப்ப வுற்றெழு
தினகர னொப்பச் சவட்டும் உக்கிரம்
உடையோனே

புருவம்நெ ரித்துச் சிரித்து முப்புர
மதனையெ ரித்துப் புகைத்த முக்கணர்
புகல்புக நெக்குப் புரக்கும் உத்தம குணசீலா

பொழிலினி சைத்துத் தனத்த தத்தன
தனனவெ னப்பு ளிசைக்கு மற்புத
புயகமலைக்குட் சிறப்பி னுற்றமர் பெருமானே

வில்லாளியே ; திலகம் முகம் மேவு - நெற்றியில் பொட்டு விளங்கும் ; திங்களனையமுக மாது நங்கை - சந்திரனை ஒத்த முகமண்டலமுடைய திருமகள் ; தினமும் - எப்போதும் ; அகலாத - நீங்காத ; துங்க - உயர்ந்த ; வரை மார்பா - மலையனைய மார்பினனே ; சிமையவளனால் - சிகரத்தின் சிறப்பால் ; வளைந்த - சூழப்பெற்ற ; உரகமலை மேல் உறைந்த - சேடகிரி மீது தங்கிய ; திகிரிவலமேசிறந்த - சக்கராயுதம் வலக் கரத்துச் சிறக்கும் ; பெருமாளே - திருமாலே ; பெருமாளே, அறிவிலியின் மாடு சென்று தளராமல், மாரி கங்குலனைய திருமேனி நெஞ்சம் அனவரதம் நாடும் அன்பு தருவாயே, என இயைக்க.

24) இருள் மருவு - அஞ்ஞானமாகிய இருள் சூழ்ந்த ; ஞாலம் வந்த பொழுது - பூமியிற்றோன்றிய காலத்து ; வினையான துன்பம் - பாவங்களாகிய இடர்கள் ; எழுதரிய - எழுத்தில் வடிக்க இயலாத ; காம இன்பம் - மகளிர் சுகம் ; அதனாலே - அவையால் ; இடர்கள் பல தேடி - பல கஷ்டங்கள் தேடி ; என்றும் - எப்போதும் ; அகலரிய - அகற்ற இயலாத ; பாவம் மண்டி - பாவங்கள் குவிந்து ; எமனுலகு கூடி - எமலோகம் சார்ந்து ; தளராமல் - அயர்ச்சியடையாமல் ; மருண் மருவும் - மயக்கம் சார்ந்த ; யானை - யானைகள் ; பன்றி - ஏனம் ; எருது - காளைமாடு ; எருமை - எருமை மாடு; சேவல் - ஆண்பறவைகள்; தும்பி-வண்டுகள்; மயில்-மயில்கள் ; கழுதை - கழுதைகள் ; பூனை - பூனைகள் ; அன்றில்-அன்றில் பட்சிகள் ; இவையாக - இவற்றுளாகி ; மறுசனை மேவி - மறு பிறவி பெற்று ; இங்ஙன் - இவ்வாறு ; அழுதழுதுகூவி - கூவி மிக அழுது ; அஞ்சி-பயந்து ; மயர்வினொடும் - மயக்கமுடன்; வாடி - இளைத்து ; நெஞ்சம் அயராமல் - மனம் தளராமல் அருள் மருவி - தயை கூடி ; நாளும் - எப்போதும் ; என்கண் - என் விழிகளில் ; அளிமருவு சேவைதந்து - கிருபை விளங்கும் காட்சி தந்து ; உன் அடிமலரை - உனது மலர்ச்சரணங்களை; நாடும் - சேரும் ; அன்பு - கருணை ; தருவாயே-அருளுவாய் ; அலைகடலின் நீர் எழுந்த - அலைகளோடு கூடிய திருப்பாற் கடல் நீரில் தோன்றிய ; வனிதை - திருமகள் ; மகிழ்சேர் - மகிழ்வுடனணிவித்த ; அலங்கலணி மருவி - மாலையின் எழில் சேர்ந்து ; வீறணிந்த திணிதோளா - வலிமை பொருந்திய திண்புயத்தனே ; பொருள் மருவும் - அகப் பொருள் சார ; மாறர் - நம்மாழ்வார் ; என்பும் உருக - எலும்பும் கனிந்துருக ;

தந்தந் தந்தந் தந்தந் தந்தந்
தனதன தனதன தனதன தனதன
தந்தந் தந்தந் தந்தந் தந்தந்
தனதன தனதன தனதன தனதன
தந்தந் தந்தந் தந்தந் தந்தந்
தனதன தனதன தனதன தனதன **தனதான**

29. என்றும் செண்டும் பந்தும் பிந்தும்
பரிமள மிகுமுலை வடிகணை விழியர
விந்தம் கெஞ்சும் பஞ்சும் தஞ்சும்
படுமல ரடியொடு சரிகம பதநியில்
இன்பும் பண்பும் தங்கும் பொங்கும்
தனிமொழி மது வினுமதிரச மருவிய
மடவார்கள்
இன்பந் துன்பம் பங்கந் துங்கம்
தொலைதர வருமது கனவினு நினைதரல்
கண்டங் கண்டந் தண்டம் பிண்டம்
குறைதர வருமதை யறிபவர் சிலரவர்
கொஞ்சம் பந்தங் குந்தந் தொந்தம் தொடர்தர
உயிர்கெடு மௌனவுனை யனுதின மறவேனே
குன்றும் துன்றும் கொம்பும் பம்புந்
தருவொடும் அடர்வனம் வருபொழு தருகினில்
மண்டுங் கன்றும் சங்கம் பொன்றும்
படிசிலை வளைதர வமர் செயும் ஒருவவை
குந்தன் சிங்கன் புன்கண் தண்டும்
தகையுற வருள்புரி மிகுநய குணமொடு
பொலிவானே
கும்பன் கந்தன் சண்டன் துண்டம்
திகழ்பிறை யணிபவன் அயனறி வருநிலை
முந்துஞ் சொந்தன் சிந்தன் கந்தம்
பனிபடு துளவணி புயலென **மறைபகர்**

இசையோடு – பண்ணோடு ; முன்பு – பண்டு ; புகல்கவியின் – கூறிய திருவாய் மொழியின் ; வாய்மை கொண்ட – உண்மை என்ற; புகழாளா • சீருடையவனே; புனலருவி தாழும் - அருவி நீர் சொரியும் ; உம்பர் - வானளாவும்; உரகமலை மேல் – சேடகிரிமீது ; உறைந்த - வதிந்த ; புனித - பரிசுத்தனே ; சகம் ஏழளந்த - ஏழுலகங்களையும், மாவலிபால் ஏற்று அளந்த ; பெருமாளே -திருமாலே ;

பெருமாளே, நெஞ்சம் அயராமல், என்கண் அளிமருவு சேவை தந்துன் அடிமலரை நாடும் அன்பு தருவாயே, என இயைக்க.

25) புலன் அறிவுதேய- ஐம்புலன்களும் உணர்வு மழுங்க; மண்டு - பெருகும் ; பிணியின் - நோயினால் ; உடல் வாட - சரீரம்தளர; விஞ்சு - மிகுதியான; புகை இருமல் கூட–வறண்ட இருமல் அதிகரிக்க ; மண்டும் – நெருங்கும் ; விழிசோர - கண்கள் பார்வை குன்றிய ; புளக முலைமாதர் கண்டு – பருத்து நிமிர்ந்த கொங்கைகளுடைய மகளிர் பார்த்து ; வசை மொழிகள் கூற - இழித்துப் பேச ; புலவு முடை நாற - ஊண் புலால் நாற்றம் எடுக்க ; நஞ்சு - நைந்து ; நலிவாகி – வருந்தி ; அலகில் – கணக்கற்ற ; வினைசூழ - பாவங்கள் சூழ ; மைந்தர் - பிள்ளைகள் ; கதற - வருந்தியழ ; முதுகாடுதுன்றி – மயானம் சேர்ந்து ; அழலின் இரையாகும் என்பதறியாமல் - தீக்கு இரையாகும் (உடல்) என்பதுணராமல் ; அதிக வயதோடிருந்து - மிகுந்த விருத்தாப்பியனாகி ; நிதிகள் பல தேடி - பல வகைச் செல்வம் சம்பாதித்து ; என்றும் - எச்சமயத்தும் ; அழிய - இறக்க ; மனம் நாடும் – உளம் விரும்பும் ; என் கண் - என்னிடம் ; வருவாயே - வந்தருள்வாய் ; (என்கண்வருவாய் - என் விழி எதிர் வருவாய் எனவும் கொள்க) ; திலகமுகம் வாட - திலகமணிந்த முகம் வாடும்படி ; அன்று - பண்டு ; தொறுவர் மகரோடு - ஆயர் சிறுவர்களுடன்; கன்று-பசுங்கன்றுகளுடன் ; தெளிபுமறை –தெளிவான வேதங்கள்; தேட-உன்னைத்தேட நின்று – இருந்து ; குழல் ஊதி – புல்லாங்குழலிசைத்து , சிகர வரை – சிகரமுடைய கோவர்த்தனகிரி ; மேனிமிர்ந்த – மேலே விரிந்த ; கவிகை என -குடை என ; மேவ - விளங்க : மங்குல் செறியும் மழை மாரி - இருளெனத் திரண்ட காளமேக மழை ; அங்கு - கோகுலத்தில் ; தகைவோனே – தடுப்பவனே ; உலகம் முதலான - பூமி முதலிய ; அண்டபுவன குலம் - பல அண்டங்கள் ; யாவும் - அவற்றடங்கிய ஜீவராசிகள் அனைத்தும் ; உந்தி ஒரு மலரின் - நாபி கமலத்தின் ; மீது - மேலே ; தந்த – நான்முகனைப் படைத்து அளித்த ; உரவோனே - அழிவில்லாதவனே ; உரகமலை வாச - மார்பில் லக்ஷ்மி வசிக்க

குஞ்சன் சுங்கன் கம்பன் தம்பன்
கரையறு குணமுடை யவனென நிறைதரு
முதலானே

கன்றின் பின்சென் றன்றங் கொன்றும்
கடிகமழ் துளவணி குழலொடு வருபவ
கஞ்சன் பிஞ்சன் கிஞ்சன் துஞ்சும்
பரிபவ முறமலை தருமட லுறுபுற
கந்தன புங்கவ தெங்கும் கொங்கும்
தருபொழில வளமிகும் எதுகிரி மருவிய
ஜயதேவா

கண்டின் பங்கொண் டண்டுந் தொண்டன்
பவனகு பரனைய டிமைகொளு மொருபர
மிண்டுந் தண்டுங் கொண்டும் கிண்டும்
திடவலி யசுரரை நொடியினில் வளையொடு
கம்புந் தண்டுங் கொண்டுங் கண்டம்
குறைபட நிரை திரை யலைகடல் குவிதர
அடுவோனே

நன்றும் தின்றும் கொன்றும் சென்றும்
திரிதரு நிருதனை மலமற அருள்முதல்
செம்பொன் சுங்கன் றெம்புஞ் சிங்குங்
கதியொடு பணிதர ஒரு செயல் புரிதரு
நம்பன் பண்டஞ் சந்தஞ் சிந்துங்
கரையடு விரிபுனல் நதியிடை துயில்புரி
திரிநாதா

நந்தன் கொஞ்சுந் தங்கம் தந்தங்
கிளர்கரி முறையிட விரைவினி லுதவிய
தந்தந் தந்தந் தந்தந் தந்தந்
தனதன னதவென வளிமுரல் குழலியர்
நம்புஞ் செங்கண் கஞ்சங் குன்றுந்
தரமொடு மிலகிய திருமலை மருவிய
பெருமாளே

இடமளித்தவனே ; எங்கும் - எவ்விடத்தும்; உறுகமலம் மேவும் - எங்கும் பொருந்தித் தாமரை விளங்கும் ; எங்கள் - எமது; உரக மலைவாய் - சேடகிரியிடத்து ; உறைந்த - தங்கி இருந்த ; பெருமாளே - திருமாலே ; பெருமாளே, என்றும் அழிய மன நாடும் என்கண் வருவாயே என இயைக்க.

26) வருணநெறி மாறி - பிரமசரியம், கிருகத்தம், வானப் பிரத்தம், சன்யாசம் என்ற வருண மார்க்கம் தவறி ; வருண முறை மாறி - நால்வகை வருணங்கட்குரிய முறை மாறி (குல முறை மாறி) ; வஞ்சமனிதர்தமை மேவி - பாவ (தீய) மனிதர் களைச் சார்ந்து ; அழியாத - நிரந்தரமான ; மகிமை - பெருமை ; பெற வேணும் என்று - அடைய வேண்டும் என ; துரியநிலை கூடி நின்ற - சுத்தநிலை பெற்றுள்ள ; மவுன குருநாதரண்டை - மோனநிலை உபதேசிக்கும் ஆசாரியரிடம் ; மருவாமல் - சேராமல் ; அருணவெயிலால் - சூரிய ஒளியால் ; விரிந்த - மலர்ந்த ; பதுமமலர் - தாமரைமலர் ; போலும் - போன்ற ; உன்றன் - உனது ; அடிமலரின் மீதில் - சரண கமலங்களின் மேல்; அன்பு - பக்தி ; தளராமல் - தளர்ச்சியடை யாமல் ; அமலவடிவான - பரிசுத்த உருவான தொண்டர் ; சமூகம் - அடியார் கோஷ்டியை ; மறவாத - மறக்காமல் நினைவு கொள்ளும் ; நெஞ்சம் - மனம் ; அமைதியுடன் வாழ - சாந்தியுடன் வாழ்வதற்காக ; என் முன் - என் எதிரே ; வருவாயே - தரிசனம் அளித்தருள்வாய் ; தருணவிடை - இளங்காளை மாடுகள் ; ஏழடர்ந்து - ஏழை அடக்கி ; சிறிய இடை - மெல்லிய இடை; வாட - வருந்த ; விஞ்சு - பருத்த ; தன மயிலை - முலைகளுடைய மயிலியற் சாயலாள் நப்பின் னையை ; ஆர்வம்முந்த - விரும்பி ; அணைவோனே - அணைந்து தழுவியவனே ; தருமன் முதலான ஐந்து புரவலர்கள் - தரும புத்திரன் முதலாய பஞ்சபாண்டவ மன்னர்களுக்காக ; தூது சென்று - துரியோதனாதியர்பால் தூதனாகச் சென்று ; சமர் முடியுமாறு - பாரதப்போர் முடிவுறும் வண்ணம் ; வென்ற - வெற்றிகண்ட ; தகையோனே - மேன்மையானவனே ; இருண வடிவாய் எழுந்த - இருள் போன்ற வடிவுடன் வந்த (இராவண னாக வந்த) ; இகல் அசுரன் - வலிய அரக்கன் ; ஆவி எஞ்ச - உயிர் நீங்க (குறைய) ; இமையிலடும் - கண்ணிமைக்கும் நேரத் தில் அழிக்கும்; வீரதண்டம் - கோதண்டம் என்ற தனுசு; உடை யோனே - கொண்டவனே ; இடபமலை மேலும் - இடபாத்திரி யிலும் ; நங்கள் - எங்கள் ; உரகமலை மேலும் - சேடாத்திரி

தனன தன்னன தானன தானன
தனன தன்னன தானன தானன
தனன தன்னன தானன தானன தனதான

30. வருண னெண்டிசை மாறாத நீர்கனல்
பருதி சந்திரன் நாளோடு கோள்புவி
மனசு புந்திமெய் வாரிதி சூன்முகில் வடிவாகி

மதனன் அம்புய மேல் வரும் ஆரியன்
அவிர்கொள் செந்துவர்வேணிய னாறெனும்
வதன னைங்கர னோடம ராபுரி மகராஜன்

கரிய கங்குலை நேரெமன் ஆதியர்
உருவு கொண்டனை மூவுரு வாகிய
கடவு ளென்றுணை யேபல மாமறை யறிவார்கள்

கரைவ ரிங்கெனி லோவடி யேன்மட
மதிய னெங்கண மோதிடு வேனிது
கருதி என்றனை யாளுதல் தானுன கடனாமே

அரிய திண்டிறல் வாலிதன் மார்பகம்
உருவ ஒண்கணை யேவிய சேவக
அருண வெங்கதிர் ஆரிய சாமள வடிவோனே

அமல சந்திர கோமள நாரத
முனிவர் தும்புரு வாதியர் நாடிய
அளிய பங்கய லோசன சீதர அமரேசா

பரிய திண்டிறல் வாளொடு கேடக
திரைகொ ளங்குசம் வேலுட னேபொரு
பவர்க ளஞ்சிட வேபொரு பாரத அமரானே

பரம இங்கித பாவன தாரக
வடிவ குஞ்சித பாதம னோகர
புளக றும்பணி மாமலை மேலுறை பெருமாளே

யிலும் ; அன்பர் – அடியார்கள் ; இதையமலர் மீதும் - இருதய கமலத்திலும் ; நின்ற - பாதம்பரவ நின்ற கோலத்திருந்த ; பெருமாளே - திருமாலே ; பெருமாளே, உன்றன் அடிமலரின் மீதில் அன்புதளராமல், அமலவடிவான தொண்டர் சமூகம் மறவாத நெஞ்சம் அமைதியுடன் வாழ என்முன் வருவாயே என இயைக்க.

27) தருமன் இழைத்த மகம்போலே - தருமபுத்திரன் ஆற்றிய இராசசூய வேள்வி போலவும் ; ஒரு - ஒப்பற்ற ; விதுரன் இயற்று தவம் போலே - விதுரமகாத்மா (திரிதிராஷ்டிர பாண்டு சோதரர்) புரிந்த புண்ணியம் போல (பல பெரியோர் விருந்துதரக் காத்திருக்கவும் ஸ்ரீ கிருஷ்ணன் விதுரன்மனையில் உண்டது விதுரன் செய்த புண்ணியம்); உயர் தருணம் அடுத்த தனம்போல-மேன்மை சேரும் காலத்து வரும் செல்வம் போல; மதிநிழல் போலே – சந்திரனின் குளுமை போல; சமதமம் உற்ற குணம் போலே – விருப்பு வெறுப்பற்ற பண்பு போல ; அலர் சலசன் அளித்த வரம் போல - தாமரை மலரோன் பிரமனளித்த வரங்கள் போலே ; நினது அருள்போல - உனது அருளிச் செயல்போல; அருமை மதித்த சுகம் போலே – அருமையாக மதிக்கப்பெற்ற இன்பம்போல; ஒளிதவழ ஒளிக்கற்றை செல்லும் படி ; விடுத்த நிலம்போலே – தங்கிய பூமி போலே ; முதிர் பழுத்த ; அமலமிகுத்த - பரிசுத்தம் நிறைந்த ; மனம் போல - உள்ளம் போல ; வளியது போலே – காற்றுப் போலே ; அனு மனியற்று நலம் போலே - அசோகவனத்துச் சீதையைக் கண்டு அவள் உயிர் மீட்டது, பிரமாத்திரத்திற்பட்ட இலக்குவன் மற்றும் சேனை வீரர்களை மருத்து மலை கொணர்ந்து உயிர் மீட்டதாகிய அநுமன் புரிந்த நன்மைகள் போல ; எதிர் – முன்னர் ; சனகியகத்து - சீதை மனத்தின் ; வலம் போலே – உறுதி போல ; நினது - உன்றன் ; அபைய மளித்த கரம் போலே - அடைக்கலமருளிய திருக்கரம் போல ; ஒரு வரம் ஈவாய் - ஒரு வரமருளுக ; கருணை அழித்த - இரக்கத்தை ஒழித்த ; பவம் போலே - பாவம் போல ; எரிகதுவ வளைத்த – தீ மிக்குச் சூழ்ந்த ; விடம் போலே - நஞ்சு போல ; அதிர் - அதிர்ச்சியுறும்படி ; ககனம் வளைத்த - வானிற் சூழ்ந்த ; கனம் போலே – மேகம் போல ; மலை - போரிடும் ; நிருதேசர்–அரக்கர் தலைவன்; கதற-வலி குன்றியலற, நடிக்கும் நடம் போலே - ஆடும் திருத்தம் போல ; களியலகை - மகிழும்

தனதனன தனதனன தன்னனன
தனதனன தனதனன தன்னனன
தனதனன தனதனன தன்னனன தனாதான

31. திடகரட மதசயில தந்தியொடு
திகழ்நடன மிடுகவன குந்தமொடு
செறியுருளை மருவிரத பந்தியொடு மகராஜர்

திலகமென அரியணையி னின்பமொடு
ததியதென மிடைமனித ரங்கமொடு
திணி கடக கரமகளி ரன்பினொடு திருமேவி

தடமகுட முடிபவன மஞ்சமொடு
மிகுநளின மதுரசுக கந்தமொரடு
தகுதியுறு தனவசியர் நண்பினொடு விழிமூடி

சமயமிலை யெனமுனியும் வன்கணவர்
தமதுமனை இரவுபுரி பண்புனது
தயையிலடி யறவருள நின்கணிறு கடனாமே

விடுகரள வரவசல மங்குல்படி
இடபமலை யழகவளை சங்கமொடும்
விரிகிரண சுதரிசனம் அங்கையிடை அமைவானே

விதுசடில நதிதவழ மங்கையிடம்
அமரவரு மொருகடவுள் துங்கமலர்
விதியையடு பவமகல அன்றருளும் ஒருதேவா

வடவரையை நிகர்சிலையை மண்டிஎதிர்
இருதுணிகள் படமுறிய வஞ்சன்முனம்
மறுகமழ விடை நிகர அன்றுதனி வருவோனே

வரதசுப கரவதுல நந்தனுயர்
வளமருவி வளர்மதலை என்றுசொல
வடமலைய தனில்மருவு மெங்களுயர்
பெருமாளே

பேய் ; நடிக்க - போர்க் களத்து ஆட ; விடும் - தொடுக்கும் ; போரே - அமரே ; நொடிக்கணனில் - நொடிப் பொழுதில் ; முடிக்கும் - முற்றுவிக்கும் ; பெரும்பேறே சொல -பேரதிர்ஷ் டத்தைக் கூற ; அமரேசர் - இந்திராதியர் ; உருமின் - இடி போல ; உடற்றும் - போர் செய்யும் ; இளங்கோவே - இளந் தலைவனே ; ரசம் ஒழுக முறித்த பசுந்தேனே - சத்து ஒழுகும் படி , கிளையினின்றும் பிரித்தெடுத்த பசிய தேனே ; அளை - வெண்ணெய்யை ; உறியின் எடுத்து - உறியிலிருந்து கவர்ந் தெடுத்து ; நுகர்ந்தோனே - உண்டவனே ; தயை உடை யானே - கிருபை உடையவனே ; உலகம் மதிக்க உயர்ந் தோனே - உலக மக்கள் மதிக்கும் படியாக மேன்மை கொண்ட வனே ; முனிவரர்கள் துதிக்க மகிழ்ந்தோனே - இருடிகள் போற்ற உவப்படைந்தவனே ; புகழ் - சிறப்பு வாய்ந்த ; உரக மலைக் கண் - சேடகிரியிடத்து ; உறைந்தோனே - தங்கி இருப்பவனே ; சுரர் - தேவர்கள் ; பெருமாளே - திருமாலே ; பெருமாளே ! வரமீவாய் என இயைக்க.

28) கருவில் உதித்து - கருப்பத்தில் தோன்றி ; பிடிப்பு விட்டு - கருப்பத்தின் பற்று விடுபட்டு; ஒரு தரையில் உதித்து - ஒரு இடத்தில் பூமியில் பிறந்து ; பதைத்து - நடுங்கி ; நட்டுறு - நேயமுறும் ; கனியர் தமக்கு - இளம் மகளிர்பால் ; உள்கிடத்தி விட்டிட - மனம் பொருந்திக் கிடக்க ; அுணர்மாறி - துன்பம் நீங்கி ; கவி முலை தொட்டு - குவிந்த கொங்கைகளைப் பற்றி; கசக்கியிட்டு - வருந்தக் கசக்கி விட்டு ; அமுதொழுக - பால் வடிய ; மடுப்ப - அருந்த ; புகட்டி - அளித்து ; மட்டொடு - தேனோடு ; கலவையரைத்து - வாசனைப் பொருள்களை அரைத்துக் கூட்டி ; திமிர்த்து - மயக்கி ; மட்கலன் உறு நீரால் - மண்பாண்டத்துள்ள குளிர்ந்தநீரால் ; உருவி வழித்து - உடலில் நன்கு உருவி வழியச் செய்து ; குளத்திலிட்டிடு - வெல்லத்திற் சேர்த்து ; கனகம் உரைத்து - தங்கத்தை உரைத்து ; கொடுத்து - உட்கொடுத்து ; விட்புலன் உறை குனருக்கு - பிதிரர்களுக்கு ; திருத்தியுற்றிட - மனம் நிறைவுபட; நனி ஓதி - மிகுதியான மகிழ்வுரை கூறி ; உருகு க்ணத்தில் - மனம் உருகும் நேரம் ; புரத்து - அந்த இடத்தில் ; நெட்டுயிர் - நீண்டகால உயிர் ; அகல - நீங்க ; அடித்துப் புடைத்து - வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு ; நட்பினர் - நண் பர்கள் ; உறவை மதித்து - பழைய உறவுகளைக் கருதி ; திகைத்த பெற்றிமை - மயங்குந்தன்மை ; உறலாமோ - அடை

## வாழ்த்து

தனன தான தானான தனன தான தானான
தனன தான தானான தனதான

32. அனுமன் வாழி மால்சேட வரையும் வாழி ஸ்ரீதேவி
அமுத மான பூதேவி அருகாக
அமர ஆர கேயூர மகுட தார ணாபூத
அழகன் வாழி கோபாலன் அருள்வாழி
கனக ரூப காவேரி கதியு லாவு சூல்வாளை
கமுகம் வாவு மேழாரை நகர்வாழி
கலைகள் வாழி யீசான திசையன் வாழி நாமாது
கணவன் வாழி மூவாறு கணம்வாழி
அனக கோம ளாகார மதனன் வாழி நீராழி
அவனி வாழி யாகாதி அறம்வாழி
அறிஞர் வாழி ஆழ்வார்கள் தமிழ்கள் வாழி பூதேவ
ரழிவி லாத ஆசாரம் அவைவாழி
சனன பாவம் வாராது தகையும் ஞான வாதேய
சரிதர் வாழி மாமாயை தடவாத
தனியனான நாவீறர் கவிகள் வாழி வேதாதி
சமையம் வாழி யூழூழி தவறாதே

தலாகுமோ ; செருவில் - போரில்; எதிர்த்து—எதிர்த்துத்தாக்கி; குறித்து - குறிக்கொண்டு ; முற்படும் - எதிர் வரும் ; அசுரர் தமக்குக்களைத்து — அரக்கர்கள் பால் அயர்வுற்று ; நிற்கிலர் - நிற்காதவராய் ;திருகி இளைத்து - பின்வாங்கி (முதுகுகாட்டி) மெலிந்து ; புரத்தி இப்பொழுது — இத்தருணம் காத்தருள் ; என - என்று வேண்ட ; நாடி - விரும்பி ; திகிரி வலத்துத் தரித்து - சக்கரத்தை வலக்கையில் ஏந்தி ; வெற்பொடு சிவணு - மலையை ஒத்த ; உவணத்தில் — கருடனில் ; சிறப்ப - மேன்மையுற ; உற்று — அடைந்து ; எழுதினகரன் ஒப்ப - மேலே எழும் சூரியன் போல ; சவட்டும் உக்கிரம் - அதி கரிக்கும் கடுமை ; உடையோனே - கொண்டவனே ; புருவம் நெரித்து - புருவங்கள் சுருங்க ;சிரித்து — நகைத்து ; முப்புர மதனை - திரிபுரங்களை ; எரித்துப் புகைத்த - எரியிட்டுச் சாம்பராக்கிய ; முக்கணர் - திரியம்பகர் சிவன் ; புகல்புக - அடைக்கலம்புக ; நெக்கு — உளம் நெகிழ்ந்து ; புரக்கும் — காக்கும் ; உத்தம குணசீலா — சிரேஷ்ட குணசாலியே ; பொழிலின் இசைத்து - சோலைகளைச் சார்ந்து ; தனத்த தத்தன தனன என - தனத்த தத்தன தனன என்று சத்தமுடன், புளினம் இசைக்கும் - பறவைகள் ஒலிசெய்யும் ; அற்புத - அதி சயம் வாய்ந்த ; புயக மலைக்குள் - சேஷ கிரியினுள் ; சிறப்பின் உற்றமர் — சிறப்போடைந்திருக்கும் ; பெருமாளே - திருமாலே; பெருமாளே, அடித்துப் புடைத்து நட்பினால் உறவை மதித்துத் திகைத்த பெற்றிமை உறலாமோ, எனக் கூட்டுக.

29) என்றும் - எப்போதும்; செண்டும் - மலர்ச்செண்டும் ; பந்தும்- பந்துகளும் ; பிந்தும் — பின்னடையும் ; பரிமள மிகு முலை — இன்பமிக்குள்ள தனங்களும் ; வடிகணை விழி - கூர்மையாக வடிக்கப் பெற்ற அம்புகளனைய கண்கள் ; அரவிந்தம் — தாமரை மலர்கள் ; கெஞ்சும் - உவமையாகாமல் ஏங்கிக் கெஞ்சும் , பஞ்சும் - மென்மையான வெண் பஞ்சும் ; தஞ்சம்படும் - தோற்றுப் புகலடையும் ; மலர் அடியொடு — மலரனைய பாதங்களுடன்; சரிகமபதநியில் - சரிகமபதநி என்ற சப்த சுரங்கள் போல; இன்பும்-மகிழ்வும்; பண்பும் தங்கு-குணங் களும் உள்ள ; பொங்கும் தனிமொழி - பெருகும் ஒப்பற்ற வாக்குகள் ; மதுவினும் — தேனினும் ; அதிரசம் மருவிய - மிக்க இன்சுவை கொண்ட ; மடவார்கள் - மகளிர் ; இன்பம் — சிற்

றின்பம் ; துன்பம் - அதனால் வருதுன்பம் ; பங்கம் - குறை ; துங்கம் - சுத்தமாக (முற்றும்); தொலைதர - தொல்லைதர ; வருமது - வருபவை ; கனவினும் - சொப்பனத்தினும் ; நினை தரல் - நினைப்பதை ; கண்டங் கண்டம் - துண்டு துண்டாக ; தண்டம் பிண்டம் - தண்டித்து உடல்; குறைதர - குறுகும்படி ; வருமதை - வருவதை ; அறிபவர் - உணர்பவர்கள் ; சிலர் - ஒரு சிலரே ; அவர் கொஞ்சம் - அவர்களுடைய சிறிதளவு : பந்தம் - பற்று எனும் ; குந்தம் தொந்தம் - பிணியின் தொடர்பு ; தொடர்தர - தொடர்ந்துவர ; உயிர்கெடும் என - ஆவி பிரியும் என்று; அனுதினம் - நாள்தோறும் ; உனை மறவேனே - உன்னை மறக்காமல் நினைவேன் ; குன்றும் துன்றும் - மலைகள் நெருங்கிய ; கொம்பும் பம்பும் - மரக் கிளைகள் பரவும் ; தருவொடு - மரங்களுடன் ; அடர் வனம் - அடர்த்தியான காட்டில் ; வருபொழுது - வரும்போது ; அருகினில் மண்டும் - சூழ்ந்து நெருங்கிய ; கன்றும் - கோபிக்கும் ; சங்கம் - பங்கக்கூட்டம் ; பொன்றும்படி - அழியு மாறு ; சிலைவளைதர - வில் வளைத்து ; அமர் செயும் ஒருவ - போரிடும் ஒருவனே ; வைகுந்தன் - திருமாலே ; சிங்கன் - சிங்க முகன் ; புன்கண் - வறுமையுடன் ; தண்டும் தகையுற - கேட்கத் தகுதிபெற ; அருள்புரி - அருள் செய்யும் ; மிகு நய குணமொடு - மேன்மைமிகு பண்புடன் ; பொலி வோனே - சிறந்து விளங்குபவனே (வரலாறு தெரியவில்லை); கும்பன் - அகத்திய முனிவன் ; கந்தன் - முருகன் ; சண்டன் - கால தேவன் ; துண்டம் திகழ்பிறை அணிபவன் - பிறைச் சந்திரனை முடியிற் சூடிய சிவன் ; அயன் - பிரமன் ; அறிவரு நிலை - உணர்தற்கரிதர வரும் தன்மைக்கு ; சொந்தன் - உரியவனானவன் ; சிந்தன் - வாமன வடிவேற்றவன் ; கந்தம் பனிபடு - வாசனையும், குளிர்ச்சியும் கொண்ட ; துளவணி - திருத்துழாயணிந்த : புயல் என - மேகவண்ணன் என ; மறைபகர் - வேதங்கள் கூறும் ; குஞ்சன் - குறளன் ; சுங்கன் - சுக்கிரனை ; கம்பன் - நடுங்கச் செய்தவன் ; தம்பன் - தாணு , நிலைபெற இருந்தவன் ; கரையறு - கரை யற்ற ; குணமுடையவன் என - குணக்கடல் என ; நிறைதரு- நிறைந்த; முதலோனே-முதற்பொருளே; கன்றின் பின்சென்று- பசுங்கன்றுகளின் பின் சிற்றாயனாகச் சென்று ; அன்று - அந் நாளில்; அங்கு - கோகுலத்தில் ; ஒன்றும் - சேரும் ; கடிகமழ் - வாசனை பொலியும் ; துளவணி - துளசி சூடிய ; குழலொடு வருபவ - கூந்தலோடு (புல்லாங் குழலுடன்) வருபவனே ;

கஞ்சன் – கம்சன் ; பிஞ்சன் - பிஞ்ஞகன் சிவன் ; கிஞ்சன் - சிறுமை ; துஞ்சும் - நிலை பெறும் ; பரிபவமுற - தோல்வியுற ; மலைதரு – போரிடும் ; அடலுறு - வலிமை பெற்ற ; புய ; தோள்கள் உடையவ ; கந்தன் புங்கன் - மணம் தரும் புங்க மரங்களும் ; தெங்கும் - தென்னை மரங்களும் ; கொங்கும் - கோங்க மரமும் ; தருபொழில் - உள்ள சோலைகளின் ; வளம்மிகு - செழிப்பு மிக்க ; எதுகிரி – யாதவகிரி என்னும் திருநாராயண புரம்.(மேல் கோட்டை) ; மருவிய - விளங்கிய ; ஜயதேவா - வெற்றிக் கடவுளே ; கண்டு இன்பம் கொண்டு - தரிசித்து மகிழ்வு கொண்டு; அண்டும் - நெருங்கும் ; தொண்டன் – தாசனாகிய ; பவனகுமரனை – வாயு புத்திரன் அனுமனை ; அடிமைகொளும் - அடியவனாகக் கொண்ட ; ஒருபர - ஒப்பற்ற பரம்பொருளே ; மிண்டும் - மதத்தாலடர்த்தும் ; தண்டும் கொண்டும் - படைகள் (ஆயுதங்கள்) கொண்டும் ; கிண்டும் - பகைத்து வரும் ; திடவலியசுரரை – வலிமை மிக்க அரக்கர்களை ; நொடியினில் - கை நொடிக்கும் கால அளவுக்குள் ; வளையொடு - சக்கரத்துடன் ; கம்பும் தண்டும் – சிறுதடியும் தண்டாயுதமும் ; கொண்டு - உடன் எடுத்து ; கண்டம் குறைபட - கழுத்து அறுபட ; நிரைதிரையலை கடல் குவிதர - வரிசையாகச் சுருண்டு வரும் அலைகளை உடைய கடலில் குவியுமாறு ; அடுவோனே - கொல்பவனே ; நன்றும் - நல்லவற்றை ; தின்றும் கொன்றும் – கொன்றுதின்று ; சென்று - போய் ; திரிதரும் – எங்கும் திரியும் ; நிருதனை - அரக்கனை ; (மாவலி) ; மலமற - ஆணவ மலம் நீங்குமாறு ; அருள்முதல் - அருள்புரியும் முதற்பொருள் ; செம்பொன் சுங்கன் - பிரகஸ்பதியும், சுக்கிரனும் ; தெம்பும் - வலிமையும் ; சிங்கும் – தேயும் ; கதியொடு – ஆதரவுடன் ; பணிதர - வணங்க ; ஒரு செயல் புரிதரு - ஒப்பற்ற செயல் புரியும் ; நம்பன்-தலைவன் ; பண்டு – முன்; அம் - அழகிய; சந்தம் சிந்தும்-சந்தனமரம் புரண்டுவரும்; கரையடு - கரையை உடைக்கும் ; விரிபுனல் – நீர்நிறைந்த; நதியிடை - காவிரி நதியிடைத் தீவாம் ஸ்ரீரங்கத்து ; துயில்புரி - பள்ளி கொண்ட ; திருநாதா - இலக்குமி காந்தனே; நந்தன் கொஞ்சும் தங்கம் – நந்த கோபன் கொஞ்சிக் குலவும் தங்கம் போன்றவனே ; தந்தம் கிளர்கரி – தந்தமுடைய களிறாம் கஜேந்திரன் ; முறையிட – ஆதிமூலமே என அபயக் குரல் எழுப்ப ; விரைவினில் உதவிய - உடன் சென்று உதவி; புரிந்த ; தந்தந் தந்தந் தந்தந் தந்தந் தனதன தனஎன – தந்தம் தந்தந் தந்தந் தந்தந் தனதன தன என்ற சந்தத்தில் ; அளி

முரல் - வண்டுகள் இசைக்கும் ; குழலியர் பூவணிந்த கூந்தல் மாதர்கள்) கோபிமார் ; நம்பும் - நேசிக்கும் ; செங்கண் - செவ் விழிகள் ; கஞ்சம் குன்றும் தரமொடு – தாமரையும் குறைவுபடும் அழகொடு ; இலகிய - விளங்கும் ; திருமலை மருவிய - திரு வேங்கட மலையில் உறையும் பெருமாளே – திருமாலே ; பெருமாளே, உனையனுதினம் மறவேனே, என இயைக்க.

30) வருணன், எண்டிசை மாறாத நீர் - துவாதசாதித் தரில் ஒருவனாம் வருணன் அட்டதிக்குப் பாலகர், குறைவற்ற ஜலம் ; கனல் பருதி சந்திரன் நாளோடு - அக்கினி, சூரியன், சந்திரன் நட்சத்திரங்களுடன் ; கோள் - கிரகங்கள் ; . புவி - பூமி ; மனசு - உள்ளம் ; புந்தி - அறிவு ; மெய் – சத்தியம் ; வாரிதி – சமுத்திரம் ; சூல்முகில் - நீருண்ட மேகம் இவை களின் ; வடிவாகி - உருவாகி ; மதனன் - மன்மதன் ; அம்புய மேல் வரும் ஆரியன் - தாமரை மலர் மேல் இருக்கும் பிரமன் ; அவிர் கொள் செந்துவர் வேணியன் - விரிந்த செஞ்சடைச் சிவன் ; ஆறு எனும் வதனன் - ஆறுமுகப் பெருமான் ; ஐங்கர னோடு - துதிக்கையுடன் ஐந்து கரங்களுடைய விநாயகன் ; அமராபுரி மகராஜன் - தேவேந்திரன் ; கரிய கங்குலைநேர் - கார் இருளுக்கு ஒப்பான ; எமன் - இயமன் ; ஆதியர் - முதலிய வர்களின் ; உருவுகொண்டனை - வடிவம் தாங்கினாய் ; மூவுருவாகிய ; பிரம, விஷ்ணு, ருத்திரன் என்ற மூன்று வடிவங்கள் எடுத்த ; கடவுள், இறைவன் என்றுனையே ; என உன்னையே ; பல மாமறை - பல சிறந்த வேதங்களின் ; அறிவார்கள் - விற்பன்னர்கள் ; கரைவர் - கூறுவர் ; இங் கெனிலோ – இங்கே என்றால் ; அடியேன் - தாசன் ; மடமதி யன் - மூட புத்தியன் ; எங்கனம் ஓதிடுவேன் – எவ்வாறு புகல் வேன் ; இது கருதி–இந்த என் புன்மை நினைந்து ; என்றனை யாளுதல் தான் உன் கடனாமே - என்னை ஆண்டு கொள்ளல் உனது கடமையாகும் ; அரிய - வெல்வதற்கருமையான ; திண் திறல் வாலிதன் – மிகுந்த வலிமையுடைய வாலியின்; மார்பகம் உருவ – மார்பை ஊடுருவ ; ஒண்கணை ஏவிய சேவக - கூர்மையான ஒளிசேர் அம்பெய்த வீரனே; அருண வெங்கதிர் ஆழிய - சூரிய கிரணம் போல் ஒளிரும் சக்கரமுடையவனே ; சாமள வடிவோனே - கரும்பச்சை வண்ண மேனியனே ; அமலசந்திர கோமள - களங்கமற்ற சந்திரன் போன்ற அழ கனே ; நாரத முனிவர் – நாரத மகரிஷி ; தும்புரு ஆதியர் - தும்புரு முனிவர் முதலியவர்கள் ; நாடிய - விரும்பியுடைந்த

அளிய - கருணையுடையவனே ; பங்கய லோசன - செந் தாமரையனைய விழிகளுடையவனே ; சீதர - திருவை மார்பில் தரித்தவனே ; அமரேசா - தேவாதிதேவனே ; பரிய - பருத்த; திண்திறல் வாளொடு - வலிமை செறிந்த வாளுடன் ; கேடகம் - கேடயம் ; நிரைகொள்-வரிசையாக உள்ள தோட்டிகள் ; வேலுடன் - வேலாயுதத்துடன் ; பொருபவர்கள் - சண்டை செய்யும் வீரர்கள் ; அஞ்சிட - பயப்படும்படி ; பொரு - போராம் ; பாரத அமரானே - மாபாரதயுத்தம் நிகழ்த்தியவனே ; பரம - பரம்பொருளே ; இங்கிதபாவன - இனிய தூய்மையுடையவனே ; தாரகவடிவ - பார்த்த சாரதி உருவினனே ; குஞ்சிதபாத - ஒரு காலுடன் மறுகால் சேர்த்திருப்பவனே ; மனோகர - மனங்கவர் எழில ; பளகறும் - குற்றமற்ற ; பணிமாமலை - சேடகிரி ; மேலுறை - மீதிருக்கும் ; பெருமாளே - திருமாலே ; பெருமாளே, என்றனை யாளுதல் தானுன் கடனாமே என இயைக்க.

31) திடகரடமதசயில தந்தியொடு - வலிமிக்க மதங் கொண்ட மலையனைய யானைகளுடன் ; திகழ்நடனமிடு - இசைக்கேற்ப நடக்கும் ; கவனகுந்தமொடு - வேகமிக்க குதிரைகளுடன் ; செறி உருளை மருவு - சக்கரங்கள் பொருந்தி விளங்கும் ; இரதபந்தியுடன் - தேர்வரிசைகளுடன் ; மகராஜர் திலகமென - அரசர்களுள் திலகம் போன்றவர் என்று ; அரியணையில் - சிங்காதனத்து ; இன்பமொடு - மகிழ்வுடன் ; உததியது என - கடல் தானே எனப் பரந்த ; மிடை மனிதர் அங்கமொடு - நெருங்கிய மானுடர் கூட்டத்துடன் ; திணி - திண்மையான ; கடக கர மகளிர் - கைவளையுடைய பெண்கள் ; அன்பினொடு - அன்பும் சேர ; திருமேவி - செல்வம் பெற்று ; தடமகுடமுடி - பெரிய கிரீடங்கள் முடியிலணிந்து ; பவன மஞ்சமொடு - அரண் மனையில் கிடக்கையுடன் ; மிகு நளின மதுர - மிக்க அழகிய இனிய ; சுக கந்தமொடு - நன்மை தரும் மணத்துடன் ; தகுதியுறு - தகுதிபெற்ற ; தனவசியர் - செல்வம்மிக்க தன வைசியர் ; நண்பினொடு - நட்புடன் ; விழி மூடி - கண்கள் மறைக்கப்பெற்று ; சமயம் இலை - நேரம்

இல்லை ; என முனியும் — என அடுத்தவரைக் கோபிக்கும்; வன்கணவர் தமது - கொடியுள்ளவர்கள் தங்கள் ; மனை - வீட்டில் ; இரவு புரி பண்பு - யாசிக்கும் குணம் ; உனது தயையில் - உன் கருணையால் ; அடியற அருள - வேரற்றுப்போக ; நின்கண்நிறு - உன்பால் நிலை நிறுத்துவது ; கடனாமே — உன் கடமையாகும் ; விடுகரள - விடம் கக்கும் ; அரவசல - சேடகிரியானே ; மங்குல்படி - மேகம் படிந்த ; இடபமலை யழக - ரிஷபமலை என்னும் திருமாலிருஞ்சோலை மலை அழகனே ; (திருமாலிருஞ் சோலை மலையிறைவன் திருநாமம் அழகன் — சௌந்தர ராஜப் பெருமாள்) ; வளை சங்கமொடும் - வலப்புரம் வளைந்த சங்குடன் ; விரிகிரண சுதரிசனம் — ஒளிவிரியும் சுதரிசனமென்ற சக்கரம் ; அங்கையிடை - அழகிய கரங்களில் ; அமைவானே - பொருந்தியவனே ; விது சடில நதி தவழ — பிறைச் சந்திரனைச் சூடிய சடையில் கங்கை தவழவும் ; மங்கை உமை இடம் அமர - வாமபாகத்திருக்க ; வரும் - எதிரே வரும் ; ஒரு கடவுள் - ஒரு சிவனை ; துங்கமலர் விதியை — தூயமலரோன் பிரமனை ; அடு - வருத்தும் ; பவமகல - தோஷம் நீங்க ; அன்றருளும் - அக்காலத்து அருள் புரியும் ; ஒரு தேவா — ஒப்பற்ற தேவனே ; வடவரையை - மேருமலையை ; நிகர்சிலையை - ஒத்த (கம்சன் தனுர் வேள்விக்குரிய வில்லை ; இருதுணிகள் படமுறிய - இரண்டு துண்டாகுமாறு முறித்து ; வஞ்சன் - வஞ்சகக் கம்சன் ; முனம் - எதிரே ; மறுக - மனங்கலங்க ; மழவிடை - இளங்காளை ; நிகர - ஒப்ப ; அன்று - பண்டு ; தனிவருவோனே - ஒப்பற்று வருபவனே ; வரத - வரமளிப்பவனே ; சுபகர - வள்ளலே ; அதுல - இறைவனே ; நந்தன் - நந்தகோபன் ; உயர் வளமருவி - ஓங்கிய செல்வம் அனுபவித்து ; வளர் - வளர்ந்த ; மதலைஎன்று சொல - பிள்ளை என்றுரைக்குமாறு - வடமலையதனில் ; வடமலை எனும் திருமலையில் - மருவும் விளங்கும் ; எங்கள் உயர் — எங்கள் மேன்மையான ; பெருமாளே — திருமாலே ; விழிமூடி சமயமிலை என முனியும் வன்கணவர் தமது மனை இரவுபுரி பண்பு உனது தயையிலடியற அருள நின்கணிறு கடனாமே என இயைக்க,

## வாழ்த்து

32) அனுமன் வாழி-சிறிய திருவடியாம் ஆஞ்சநேயன் வாழ்க; மால்சேட மலையும் வாழி - பெருமை மிக்க சேடாத்திரி வாழ்க; ஸ்ரீதேவி - திருமகள் ; அமுதமான – அமுதமனைய ; பூதேவி – பூமிதேவி ; அருகாக அமர - பக்கத்தமர்ந்திருக்க ; ஆர கேயூர மகுட தாரணாபூத மாலைகள் - கேயூரம், மணி, மகுடம் அணிந்த கோலத்தனாம்; அழகன் - சுந்தரன்; வாழி – வாழ்க ; கோபாலன் அருள் வாழி - பசுக்களைப் புரப்பவன் அருள் வாழ்க ; கனகரூப காவேரி - பொன் வடிவான காவேரி நதியின் ; கதியுலாவு - வழியிற் செல்லும் ; சூல் வாளை - கருவுற்ற வாளை மீன்கள் ; கமுகம் வாவும் - பாக்கு மரத்தில் தாவும் ; ஏழாரை நகர்- ஏழு மதில்களுள்ள திருவரங்கம்; வாழி - வாழ்க; கலைகள்வாழி–ஆயகலைகள் எல்லாம் வாழ்க; ஈசான திசையன் வாழி - சிவன் வாழ்க; நாமாது கணவன் - கலைமகள் கணவன் பிரமன் ; வாழி – வாழ்க ; மூவாறு கணம் வாழி - பதினெட்டுக் கணங்கள் வாழ்க ; (அமரர் - சித்தர் ; தைத்தியர் - கருடர் ; கின்னரர் - நிருதர் ; கிம்புருடர் - காந்தருவர் ; இயக்கர் - விஞ்சையர் ; பூதர் – பைசாசர் ; அந்தரர் – முனிவர் ; உரகர் - ஆகாயவாசிகள் ; போகபூமியர்) ; அனக - இறைவ ; கோமளாகார - அழகின் இருப்பிடமாம் ; மதனன் வாழி ; மன்மதன் வாழ்க ; நீராழி அவனி வாழி - கடல் சூழ் உலகம் வாழ்க ; யாகாதி அறம் வாழி - வேள்வி முதலிய தர்மங்கள் வாழ்க; அறிஞர் வாழி - கல்வி கேள்விகளில் சிறந்தவர்கள் வாழ்க; ஆழ்வார்கள் தமிழ்கள் - வைணவ ஆசார்யர்களாம் ஆழ்வாராதியர்கள் அருளிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத் தமிழ் வாழ்க ; பூதேவர்-பூசுரராம் மறையோர்கள் ; அழிவிலாத ஆசாரம்-அவர்களுடைய அழிவற்ற ஒழுக்கம் ; அவைகள் வாழி - அவை வாழ்க ; சனனபாவம் வாராது - பிறவி எனும் பாவம் வராமல் ; தகையும்- தடுக்கும் ; ஞானவாதேயர் - ஞானிகள்; சரிதர் - வரலாறு கூறுவோர்;வாழி - வாழ்க ; மாமாயை தடவாத - பெரும் மாயைச் சிறைக்குட்படாத ; தனியனான நாவீறர் – நாவிற்றுச் செல்வர்

(நாவலர்)கள் ; கவிஞர் – கவிதையாக்கும் வல்லுனர் ; வாழி – வாழ்க ; வேதாதி சமயம் வாழி - வேதம் முதலிய மதங்கள் வாழ்க ; ஊழூழி - யுகம்யுகம் தோறும் ; தவறாதே -அழியாமல் ;

மதுரகவி திருமலைத் திருப்புகழ் முற்றும்.

# மதுரகவி திருமலைச் சிந்து

# பாராட்டுரை

## நா. கிருஷ்ணசுவாமி நாயுடு

''திருமலைச்சிந்து'' என்னும் பெரிய இந்நூல் இற்றைக்குச் சற்றேறக்குறைய முப்பதிற்றியாண்டுகட்கு முன்னர் மதுரை மாவட்டம், பெரியகுளம், அனுமந்தம்பட்டி, **சீனிவாச** ஐயங்காரவர்களால் பாடப்பெற்றதாகும். இது திருவேங்கட மலையின்கண் எழுந்தருளியடியார்க் கருள்சுரந்தளிக்கும் சாட்சாத் ஸ்ரீமந்சீனிவாசக் கடவுள்மீது, அவர் தம் பக்தியிலீடுபட்டு, அவர்தம் அருட்பிரதாபங்களை எடுத்தோதிச் செல்லாநின்ற சிந்து என்னும் ஓர்வகைப் பாவினமாகு மென்ப. இது பல்லவி, அனுபல்லவி, சரணமென்ற மூவினத்தின்பாற்படாது, தனித்தனி வரிப்பாட்டுக்களானாக்கப் பெற்றுத் தாளமின்றி எவ்வாற்றானும் பாடுதற் கியங்காதாகவே இசைத்தமிழ்ப் பாகுபாட்டின்கண் அடங்கியுள ஒருவகைக் கண்ணிகள் எனப்படும். இது தாம் வழிபடு கடவுள் மீது அன்புநகிப் பாடப்பெறுகிற துதி வகை யாதலேயன்றி, அக்கடவுள் கோயில்கொண் டெழுந்தருளியிருக்கிற நாட்டுச்சிறப்பு, நகரச்சிறப்பு, தலவிசேடம் முதலியவற்றைக் கூறலோடு, அக்கடவுள் ஒரு காதலனாகவும், தான் ஒரு காதலியாகவும் நிண்ணயித்துக் கொண்டு, ஆங்கவர்க்குண்டாகும் கலத்தல், இருத்தல், பிணக்கல், பிரிதல், இரங்கல், கைக்கிளை, பெருந்திணையாய அகத்துறையியல் இலக்கணத்தின்பாற்படும் முறைமை பற்றித் ''தலைவன் தலைவியாற் குறையிரந்து நிற்றலும், தலைவி தலைவன்பாற் குறையிரந்து நிற்றலும், தலைவி தலைவன் பாற் றோழியைத் தூது விதித்து நிற்றலும், தலைவனது பிரிவாற்றாது தலைவி வருந்துந் தன்மையைத் தோழி தலைவன்பாற் கூறி நிற்றலும், பின்னர் அவள் அவயவத் தருமை கூறி நிற்றலும், தலைவனோடுற்றமையைத் தலைவி தன் தோழிக் குரைத்து

நிற்றலும், தலைவன் வரவு நோக்கித் தலைவி வருந்தி நிற்றலும்; கல்வி வேட்ட தலைவனுக்குத் தலைவி செவ்வியருமை கூறி நிற்றலும், சுரம் போக்கு நற்றா யிரங்கி நிற்றலும், தலைவியினது வேற்றுமை கண்டு நற்றாய் கடிந்துரைத்து நிற்றலும், ஈற்றில் காதலன் காதலி இருவரும் அன்போடன்பு கலந்து நிற்றலும்'' ஆகிய இன்னோரன்ன பிறவுமாம்.

பக்தியின் வாய்ப்பட்ட வழிகள் பலவகையாயினும் சமஸ்த லோகங்களுக்கும் ஆதாரமான சர்வேஸ்வரன் அந்தர்யாமியா யிருக்கின்றானாகவே, அவனைத் திவ்ய மங்கள விக்ரஹத்தின் வாயிலாய்ச் சமர்ப்பித்துக் கொண்டு, பாராயணம் பண்ணுவதும், அவனொரு பர்த்தாவாகவும், தானொரு பார்யையாகவும் சங்கர்ப்பித் துக் கொண்டு, பாராயணம் பண்ணுவதும், அவனது திரு வடித் தாமரைகளை உபாயமாகப் பற்றுகிற முறை யாகவே இம்முறை ''பக்திமார்க்கங்களி லெல்லாம் சிரேஷ்டமான முறை'' என்று கொள்ளப்படும்.

இஃதிங்ஙனமாக இதுபோன்ற இசை நிறுவிய பக்தி நூல்கள் இக்காலத்து எண்ணிறந்தனவாக் கிடந்துலவி னும், அவையாவும் தோன்றி மறைவனவே அன்றி, ஸ்ரீசிவசுப்ரமணியக் கடவுள் மீது **சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார்** அவர்கள், இயற்றியுள்ள காவடிச் சிந்தைப் போன்று நிலையுறுவன ஒன்றேனு மின்றென் பதே எமது துணிபாயது பற்றி, மெய்மறந்து யாமும் ஒரு காலத்து,

> ''கண்ணா யிரன்மருகன் கந்தன் களியுவந்த
> அண்ணா மலைக்கவிரு னார்கவிபோல் உண்ணாவுர்
> தித்திக்கப் பாடுதற்கோர் செஞ்சொற் புலவரெவத்
> இத்திக்கி லுண்டோ வினி''

எனப்பாடி, இரங்கியிருக்கின்றேம் என்றாலும், இப் போழ்து இந்நூலை யாம் கண்ணுற்ற பின்னர், ''முன்னர் யாமெண்ணிய அவ்வெண்ணம் சிறிது முரண்பாடுற்றது'' என்றுதான் கொள்ளுதல் வேண்டும். இந்நூலாசிரியரான ஐயங்காரவர்களது இயற்கை நலங்கனிந்த வாக்கின் திறமையைப் பற்றிக் கற்றோரறிந்து களிப்புறவேண் டுமே யன்றி யக்களிப்பின் தன்மையை யாமெடுத்தியம்பு தல் மிகையாமென்பதோடு, ''எமதொருநாவிலமையா'' தென்பதும் எமக்குள் மிளிர்ந்தெழுந்தோர் துணிபு. இச் சிறு நூலிலமைந்த ஒவ்வொரு சந்தப்பாவும் சொல் லையும், பொருளையும் தேடி வீருந்தியமைக்கப் பெற்றன வாகாமல் மோனை, எதுகை முதலியன முதிர்ந்து நின்று, பொருளாழமும், செம்பாகமும் துறுமி விளங்கு கின்றன. ''நடுப்பகலில் நல்ல பசியோடு வீடுநோக்கி அன்னமுண்பான் பொருட்டுப் பரபர வென்று செல்லு கின்ற ஒருவன்முன் அவன் சிநேகனொருவன் நல்ல நெய்யிற் செய்த, பக்குவமுள்ள பலகாரத்தைக் கையகத் தேந்தி யுண்டு கொண்டே, அவனை வழிமறித்து நிற்க வைத்துப் பேசிக் கொண்டிருந்தால், அதைக்கண்ட அவ னது நாவு எவ்வாறு துவள்வுற்று நீரூறப் பெறுமோ, அவ்வாறே இவ்வாக்கின் போக்கால் எமது நாவிலும் நீரூறுகின்றது. ஆகவே நமது ஐயங்காரவர்களது பாக் களில் இரண்டொன்றேனும் ஈண்டெடுத்துக் காட்டாது செல்ல முடியவில்லை.

பகவானுக்குப் பரத்துவம் ஸ்தாபிக்கின்ற இடத்து, ''பஞ்சபூத மெங்குமா யமர்ந்து மேயினோன்-விட நாகபஞ் சணை மீதிருந்துல கேழுமஞ்சலி யாய்வணங்கெழில் ஞானமங்குலாகி யென்கண் ஆயினான்-இசை நாடியண்ட ரோடு கொண்ட வேயினான்'' என்றும், தலைவியின் ஊடற்றுறையில் ''ஈரமற்ற பாவியுன்னைச் சேரவிட்ட பாவமென்னை இப்படியுங் கெஞ்சவைத்த தல்லவோ- ஊரார் எப்பொழுதுங் கோளெடுத்துச் சொல்லவோ''

என்றும், ''கன்னிகன்னி என்று சொல்லப் 'பின்னு மொன்றுமில்லை' என்று கற்பழித்துப்போன தென்ன கள்ளமே அந்த அற்புதத்தைநாடு மென்றனுள்ளமே'' என்றும்' ''நானிலத்தில் இல்லைநினையொப் பேதுமே கன்னி நாரியரென்றாலுனக்குப் போதுமே'' என்றும், தலைவியின் வேற்றுமைகண்டு நற்றாயிரங்கற்றுறையில் ''தாழிப்பானையினையுடைத்தும்கதவடைத்தும் முகந் துடைத்தும்-என்றன் சாமிநீயுண்ணென்று படைத்தும் செக சாலதந்திர. மோகனாஞ்சன பாலசுந்தர கோலரஞ் சித தையலைப்போலவும் ஆவாள் அவன் மையலிற் கேட்டதை யீவாள்'' என்றும் கூறியிருப்பவைகள் எமதுள்ள மென்ற வள்ளத்தின்கண் மிக்கு சுவைசுரந்து ததும்பு கின்றது.

இவரது வாக்கின் போக்கால் இவர் இயற்றமிழே போன்று இசை, நாடகத் தமிழையும் போற்றிப் பயின்ற வரென்றும், ''இயற்றமிழ்க் கயிற்றைவிட இசைத்தமிழ்க் கயிறே பகவானைப் பிடித்துத் திமிறவொட்டாது இறுக்க வல்ல ஒரு சிரேட்டமான கருவி'' என்றும் நன்குணர்ந்த வரெனத் தெரிகிறது.

அன்றியும், அவதார குரவர்களாகிய ஆழ்வாராதிகள் திருவாய் மலர்ந்தருளிய பக்திச்சுவை சொட்டச் சொட்ட வமைந்த திருப்பாசுரங்களின் போக்கையும் இது பின்பற்றிச் செல்லுகின்றதாகவே ; இந்நூல் நந்தமிழ் மக்கள் மாட்டு, ஒரு தகைமையுடைத் தென்பதூஉம் எமது பெருநோக்கத்துள் ஒன்றேயாம்.

மேலும் இந்நூலாசிரியர் ஸ்ரீமகாவிஷ்ணுவின் மீது திருப்புகழ் என்னும் ஒரு பிரபந்தம் இயற்றியுளாரென்று கேள்விப்பட்டு, மிகவும் மனக்களிப்படைகின்றேம். ஏனெனில் ஸ்ரீசுப்ரமண்யக் கடவுள் மீது அருணகிரிநாத சுவாமிக ளியற்றிய திருப்புகழைப் போன்றும், ரெட்டி

யாரவர்கள் எழுதிய காவடிச்சிந்தைப் போன்றும் சாட்சாத் திருமாலின் மீதும் இரண்டு இசைத்தமிழ்ப் பிரபந்தங்கள் ஏற்பட வேண்டியது ஆவசிகத்தினு மாவசிக மல்லவா ?

ஆகவே கூடியவிரைவில் இவ்வாசிரியர் இயற்றிய இத்திருப்புகழ்ப் பிரபந்தமும் கற்றோரனைவரும் களி பெறுமாறு அச்சுவாகனமேற வேண்டுமென்றே திருவருளைச் சிந்திக்கின்றேம்.

தேனோகற் கண்டோ திருமலைச்சிந் தம்மதிரு
மானோங்கு மார்பனணி மாலையோ—யானோதல்
என்னாம் இசைசந்தம் ஏற்ற பொருட்சுவையோர்
பொன்னாம் புலவரகம் புக்கு.

இங்ஙனம்,

மதுரை
1925

நா. கிருஷ்ணசாமி நாயுடு,
தமிழ்வித்வான்

# பாராட்டுரை

ப. ரெ. திருமலை அய்யங்கார்
செயலாளர் : திருவல்லிக்கேணி தமிழ்ச் சங்கம்,
சென்னை

இருவினையும் இடைவிடா வெவ்வினையும்
 இயற்றாதே இமையோர் ஏத்தும்
திருவினையும் இருபதம்சேர் சிறுமையையும்
 முறையொப்பத் தெளிந்து நோக்கிக்
கருவினைய தீப்பிறவிக் கென்றுணர்ந்தங்
 கதுகளையுங் கடையின் ஞானத்
தருவினையின் பெரும்பகைஓர் ஆண்டுளாண்டு
 திருந்தும்டி வணங்கற் பாலார் —கம்பர்

வேதவெற்பே வேங்கட வெற்பென விளங்கும். அம் மாமலையில் உள்ளவனே அலர்மேல் மங்கையுறை மார்பன். அவனே கலியிற் கண்கண்ட தெய்வம். வேத காலந் தொடங்கி அவனைப் பாடாத கவியே இல்லை. உலகுக்குத் திலகமாய் நிற்பவன் திருவேங்கடத்து எம் பெருமான்.

அனுமந்தபுரம் உ. வே. மதுரகவி ஸ்ரீநிவாசய்யங் கார் சுவாமி. ஒரு சிறந்த வரகவி, அவரது வாக்கு அருள்வாக்கு. ஸ்ரீ வேங்கடேசன் விஷயமாகப் பல துதிப் பாடல்களைப் பாடியுள்ளார், அம்மகாகவி. அவை ஒவ் வொன்றாக ஆண்டவன் அருட்கருணையால், நம் அரங் கத்தில் அரங்கேறி வருகின்றன. இவர் இயற்றிய **திருமலைச் சிந்து** என்ற இந்நூல், இன்றைக்கு 62 ஆண்டு களுக்கு முன் இயற்றப் பெற்றதாக அறிகிறோம். இது திருவேங்கட மாமலையில் எழுந்தருளி அடியார்க்கு அருள் சுரந்தளிக்கும் மோட்ச இலட்சுமி, பிராணகாந்த

னாக விளங்கும் ஸ்ரீநிவாசப்பெருமாள் மீது 'சிந்து', என்ற ஒரு பாவினமாகும். இது தன்னேரிலாதது, என்பது பேரறிஞர் முடிவு. இந்நூலாசிரியரின் வாக்கின் திறமையும், வன்மையும் அளவிடற்கரியது. ஆழ்வார்களின் திருப்பாசுரங்களையும், கல்வியிற் பெரிய கப்பநாட்டாழ்வான் கவிதைகளையும் பின்பற்றிச் செல்லுகின்றது, இந்த அரிய நூல்.

''தேனோகற் கண்டோ திருமலைச்சிந்து அம்மதிரு
மானேங்கு மார்பன்அணி மாலையோ—யானோதல்
என்னாம் இசைசந்தம் ஏற்ற பொருட்சுவையோர்
பொன்னாம் புலவரகம் புக்கு.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

சென்னை
2-6-1957

ப. ரெ. திருமலை அய்யங்கார்
காரியதரிசி.

# மதுரகவி திருமலைச் சிந்து

காப்பு

கட்டளைக் கலித்துறை

அலைச்சிந்து மேனி யறவாழி யந்தண னன்றெதிர்த்த
கொலைச்சிந்து ரத்திருங் கோடொசித் தானிடங் கொண்டதிரு
மலைச்சிந்து பாடத் துணையாக நாவின் மருவும்விரி
தலைச்சிந்து மேவித் தமிழ்மறை யாயிரந் தந்தவனே. (1)

---

**காப்பு - 1** அலைச்சிந்து மேனி - அலைகடல் வண்ண வடிவத்து ; அறவாழி அந்தணன் - தர்மச் சக்கரமேந்திய திருமால் ; (அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லால் பிறவாழி நீந்தலரிது - குறள்) ; கொலைச் சிந்துரத்து - கொலைக் குணமுடைய யானையின் (குவலயாபீடம்) - இருங்கோடு - பெருந்தந் தங்களை ; ஒசித்தான் - முறித்தவன் ; இடங் கொண்ட - இருப்பிடமாகக் கொண்ட ; திருமலைச் சிந்து பாட - திருமலைச் சிந்தெனும் இந்த நூலை இசைக்க ; துணை யாக - காப்பாக ; நாவின் மருவும் - நாவிலிருக்கும் ; விரிதலைச் சிந்து மேவி - பரவிச் சிந்துதல் விளங்கிய ; தமிழ் மறை ஆயிரம் - தமிழ் வேதமாம் திருவாய்மொழித் திருவாயிரம் ; தந்தவனே - அருளிய சடகோபனே ;

**வெண்பா**

அலைச்சிந்து மேனி யருளாள னாக
மலைச்சிந்து பாடுதற்கு வந்து—நிலைச்சிந்து
வார்சடையு மானு மறைச்சிந்த வையகஞ்சேர்
மாருதிதா னீயும் வரம். (2)

---

காப்பு - 2 அலைச்சிந்து மேனி - கடல் வண்ண வடிவ ; அருளாளன் - அருள்தரும் வேங்கடவன் ; நாகமலைச் சிந்து பாடுதற்கு - திருமலைச் சிந்து என்ற நூல் பாட ; நிலைத்து - திரமாக ; இந்துவார் சடையும் - பிறைத் திங்கள் சூடிய ஜடா முடியும் ; மானும் - திருக்கரத்தில் மானும் ; மறைத்து - ஒளித்து ; இந்த வையகம் சேர் - இப்பூமியில் சேர்ந்த ; மாருதிதான் - ஸ்ரீ ஆஞ்சநேயன் ; வந்து - முன் வந்து ; ஈயும் வரம் - வரம் அருளும்.

## சிந்து

### திருவுற்றிலகுகங்க வரையில் என்ற சந்தம்

### அனுமன்துதி

அமிர்தக்கடல் கடைந்த மதனக்கிரி சுமந்த
அமரர்க்கருள் புரிந்த நாதனைத் தவ
சமுகத்தவர் வணங்கு பாதனை எழில்

ஆறுபாய்புனல் சூழ்துவாரகை யாதிபாவென நாலுவேதமும்
அறையப்புகழ் சிறந்த போதனை உயர்
அரவக்கிரி யமர்ந்த நீதனை

அமைபொற் கிரணசண்ட பவனத் தவனில்வந்த
அனுமற்கருள் பொழிந்த ஈசனை புகழ்
சனகக்கொடி யுவந்த நேசனை மயில்

ஆறுமாமுக வேலனொடொரு பாதிமாமதி சூடினான்முடி
அடியிற்பணியு மந்த காசனை ஒளிர்
கனகத்தினிற் பொலிந்த வாசனை

கமலத்திடை வதிந்த அமலத் திருமடந்தை
கலசத்தன மணைந்த காமனை ரகு
குலமுற்பவ மடைந்த ராமனை மிகு

காதலாய்வரு கோபிமாரொடு சீதநாண்மலர் மாலைசூடிய
கருணைப்பெயர் புனைந்த நாமனைத் துள
வணியைப்புனைவு கொண்ட வாமனை

கமகக்கவிஞர் தங்கண் மமதைத் திறமொழிந்து
கழியப்பரிவு கொண்ட காவலா நிரை
தழையப்புறவு கந்த கோவலா செக

காரணாபரி பூரணாதிரு நாரணாவென வாரணாதிகள்
கருதற்கரிய விந்த்ர தாருவை இணை
மருதத்திடை நுழைந்த மேருவை

தவளக்கிரி யுறைந்த பவளக்கிரி புரைந்த
சடையற்கருள் புரிந்த தேவனைச் சதுர்
மறையைப்பகரு மந்தண் நாவனைப் பல

தாலுநாகணை மீதிலேயொரு நீலமாமலை போலவே துயில்
தருமப்பெயர் புனைந்த தாயனை அகல்
துவரைப்பதியி னின்ற தூயனை

கவளக்கிரி யெதிர்ந்து பவனத்தினில் விரைந்து
கடுகத்தனி யெதிர்ந்த காலனை மலை
குடையிற்றிகழுநந்த பாலனை மலர்க்

காவுமேவிய பாகசாதன சூனுதேர்விடு பாகனாகிய
கருணைக்கிசைவு கொண்ட பண்பனை எதிர்
கருடற்கழுகு தந்த நண்பனை

திகிரிப்படை யிலந்த அருணக்கதிர் மறைந்து
திரியச்சமரி லன்று செய்தவா ஒரு
கலையைத்தொடர்ந்து முனம் எய்தவா எனத்

தேருநான்முக னாருமா முனி வோரும்யாவரு மேவியேதுதி
செயநற்கருணை கொண்ட தீரனை மன
மயலைக்கடியு மெங்கள் வீரனை

மகரக்கடல் வெதும்பி யழலச்சரம் பொழிந்து
வருணற்கருள் வழங்கு மாதவா பவ
விருளைக்கடியு மெங்கள் ஆதவா வளர்

வாததேவகு மாரனாமனு மானையாள் தரும் ராகவாவென
வசனித்தவர் வணங்கு மஞ்சனை அர
வசலத்தினை யுவந்த நெஞ்சனை

கரடக்கரி யுளைந்து கதறத்தனி யெதிர்ந்து
கரவைத்தலை யரிந்து காத்தவா எழு
புவனத்தினையு முந்தி பூத்தவா உயர்

காதிமாமகன் வேள்விவாய் வருதாடகதியர் வீடவேயொரு
கணையிற்பட முனிந்த கத்தனே கடல்
அணையைப்புரியு மெங்கள் அத்தனே

சரடப்பவ நெரிந்து சிதறக்கதி யுவந்து
தருமெய்ப்பரம மந்த்ர தாரகா அன்பர்
வறுமைப்பிணி யரிந்த வூரகா எங்கள்

சாமிநீயென வோதுமாதவர் பாவவாரிதி யேறுமாறருள்
தழையத்திகழு மந்த காசனை முலை
குழையத்திரு வணைந்த நேசனை

அமிழ்திற் சுவை மலிந்த தமிழைப் பகரு மெங்கள்
அமலைக்கெதி ரணைந்த வாண்டவா பட
அரவிற்பதம் புரிந்த தாண்டவா என

ஆதிமாமறை நாலுமோதிய ஏழுமாமுனி வோரும் யாவரும்
அறிதற்கரிய வண்டர் ஆவியை நிறை
அருளிற்பொலியு மந்தண் வாவியை

இமையக்கிரி பயந்த உமையைப் பரிவு கொண்ட
இறைவற்கிட ரரிந்த தாளனை சிலை
யொடியத்தனி நிமிர்ந்த தோளனை மகிழ்

ஏறவேகவி பாடவேயுயர் மாகமாருதி பாததாமரை
இதையத்திடை யிலங்கு நாளுமே பல
நடலைப்பவ மழிந்து மாளுமே. (1)

---

## பதவுரை

1) அமிர்தக் கடல் - அமிழ்தமுள்ள திருப்பாற் கடல்; கடைந்த மதனக்கிரி-அமிழ்தெடுக்கக் கடலைக்கடையப் பயன் படுத்திய மந்தர மலையை ; சுமந்த - நீரில் அமிழாமல் கூர்மமாகத் தாங்கிய ; அமரர்க்கு அருள்புரிந்த - தேவர்களுக்கு அருள் செய்த ; நாதனை - தலைவனை ; தவசமுகத்தவர் - தவமுனிவர்கள் ; வணங்கு - பணியும் ; பாதனை - திருவடி களுடையவனை ; எழில் - அழகிய ; ஆறு பாய்புனல் சூழ் துவாரகை - நதிகள் கலக்கும் கடல் சூழ்ந்த துவாரகைப் பதி; ஆதிபா என - தலைவனே என ; நாலுவேதமும் - ரிக், யசுர், சாம, அதர்வணம் என்ற நான்கு மறைகளும் ; அறையப் புகழ் சிறந்த போதனை - புகழ்ந்து கூறும் சிறப்பான மெய்ஞ் ஞானியை ; உயர் - மிக உயர்ந்த ; அரவக்கிரி யமர்ந்த நீதனை - சேடமலையில் உறையும் நீதிவடிவினை ; அமை பொற்கிரண - பொன்கதிரமைந்த ; சண்டபவனத்தவனில் -

புயல் போல் வீசும் வாயுதேவன்பால் ; வந்த - உதித்த ; அனுமற்கு - ஆஞ்சநேயருக்கு ; அருள்பொழிந்த – திருவருள் சொரிந்த ; ஈசனை - கடவுளை ; புகழ் சனகக் கொடி - புகழ் மிக்க சனகபுத்திரியாம் கொடியனைய சீதை ; உவந்த – மனம் மகிழ்ந்த ; நேசனை - துணைவனை ; மயில் ஆறுமாமுக வேலனோடு – மயில்வாகன சக்திதரனாம் சண்முகனுடன் ; ஒரு பாதி மாமதி - பிறைச்சந்திரனை ; சூடினான் - முடியி லணிந்த சிவன் ; முடி - சிரம் ; அடியிற்பணியும் – தன் திருவடி களில் வணங்கும் ; மந்தகாசனை – முறுவலனை (புன்சிரிப்பு) ; ஒளிர் - பிரகாசிக்கும் ; கனகத்தினில் - பொன்போல ; பொலிந்த - சிறந்து விளங்கிய ; வாசனை - இருப்பிடமுடைய வனை ; கமலத்திடைவதிந்த - தாமரை மலரிடை உறைந்த ; அமலத் திருமடந்தை - குற்றமற்ற இலக்குமியின் ; கலசத்தனம் அணைந்த காமனை - குடம் போன்ற கொங்கைகளைத் தழுவிய அழகனை ; ரகு குலம் உற்பவமடைந்த ராமனை - ரகு குலத்துதித்த ஸ்ரீ ராமனை ; மிகுகாதலாய் - மிக்க விருப் போடு; வரு - தன்பால் வருகின்ற ; கோபிமாரொடு - கோபியர் களுடன் ; சீத நாண்மலர் மாலை சூடிய – குளிர்ந்த அன் றலர்ந்த மலர் மாலை அணிந்த ; கருணைப் பெயர் புனைந்த நாமனை - கருணாகரன் என்ற பெயர் சூடியவனை ; துள வணியை - துளசி மாலையை ; புனைவு கொண்ட - அணிந்த ; வாமனை - வாமனனை ; கமகக் கவிஞர் தங்கள் - சிறந்த நல் லிசைப் புலவர்களின் ; மமதைத் திறமொழிந்து கழிய - அகங் கார வலிமை ஒழிந்து நீங்க ; பரிவு கொண்ட - அன்பு கொண்ட ; காவலா - காக்கும் கடவுளே ; நிரை - பசுவினங் கள் ; தழைய - வளர ; புறவுகந்த - புரத்தலை விரும்பிய ; கோவலா – கோபாலனே ; செக காரணா – உலகம் தோன்றக் காரணமானவனே ; பரிபூரணா - எங்கும் நிறைந்தவனே ; திருநாரணா என - லஷ்மி நாராயணா என்று ; ஆரணாதிகள் - வேதசாத்திரங்கள் ; கருதற்கரிய - நினைக்க இயலாத ; இந்த்ர தாருவை - கற்பக விருட்சமனையானை; இணை மருதத்திடை நுழைந்த - ஜோடியாக நெருங்கி இருந்த மருதமரங்களிடைப் புகுந்த ; மேருவை - மேருமலையனையவனை ; தவளக்கிரி

யுறைந்த - வெண்பனி மலையில் தங்கிய ; பவளக்கிரி புரைந்த - பவளமலை ஒத்த ; சடையற்கு - சடாமுடியுடைய சிவனுக்கு ; அருள் புரிந்த - அருள் செய்த ; தேவனை - கடவுளை ; சதுர்மறையை - நாலு வேதங்களை ; பகரும் - உரைக்கும் ; அம்தண் நாவனை - அழகிய குளிர்ந்த நாக்கினானை ; பலநாலு - ஈராயிரம் நாவுடை ; நாகணை மீதிலே - சேடசயனத்தில் ; நீலமாமலை போலவே - பெரிய நீலநிற மலைபோல ; துயில் - அறிதுயில் புரியும் ; தருமப் பெயர் புனைந்த - அறத்தின் பெயர் பூண்ட ; தாயனை - தாயனையானை ; அகல் - விசாலமான ; துவரைப் பதியில் - துவாரகை நகரில் ; நின்ற - விளங்கிய ; தூயனை - பரிசுத்தனை ; கவளக்கிரி எதிர்ந்து - குவலயாபீட யானை எதிர்க்க ; பவனத்தினில் - காற்றினும் விரைந்து ; கடுக - சென்று ; தனி எதிர்ந்த - தனியாகப் போரிட்ட ; காலனை - (யமனை) திருவடியினானை ; மலை - கோவர்த்தன மலை ; குடையிற் றிகழும் - குடையாக விளங்கும் ; நந்தபாலனை - நந்தகுமாரனை ; மலர்க்காவு மேவிய - கற்பகப் பூஞ்சோலையில் விளங்கிய ; பாகசாதனன் - இந்திரன் ; சூனு - மகன் பார்த்தன் ; தேர்விடுபாகனாகிய - தேர் செலுத்தும் சாரதியாகிய ; கருணைக்கு - அருளுக்கு ; இசைவு கொண்ட - பொருத்தம் கொண்ட ; பண்பனை - குணத்தானை ; எதிர் - தன் எதிரே எப்போதும் தயாராக இருக்கும் ; கருடற்கு - கருடனுக்கு ; அழகு தந்த - எழில் தந்த ; நண்பனை - நேயனை ; திகிரிப் படையில் - சக்கராயுதத்தால் ; அந்த - (உலகறி சுட்டு) ; அருணக் கதிர் மறைந்து திரிய - சூரிய ஒளி மறைந்து போக ; சமரில் அன்று செய்தவா - அன்று பாரதப் போரில் செய்தவனே ; ஒரு கலையை - மாய மானை ; தொடர்ந்து - பின் சென்று ; முனம் - இராமாவதாரத்து ; எய்தவா - கணை ஏவியவனே ; என - என்று ; தேரு - உணரும் ; நான்முகன் நாரும் - பிரமதேவனும் ; மாமுனிவோரும் - பெரு முனிவர்களும் ; யாவரும் - அனைவரும் ; மேவியே - சந்நிதியடைந்தே ; துதி செய - போற்றித் துதிக்க ; நற்கருணை கொண்ட - அவர்கள்பால் நல்லிரக்கம்

பூண்ட ; தீரனை - திண்ணியனை ; மன மயலை - மனத்தின் கண் மயக்கத்தை ; கடியும் - அழிக்கும் ; எங்கள் வீரனை - எமது தீரனை ; மகரக் கடல் - சுறா மீனுள்ள கடல் ; வெதும்பி யழல் - வாடி வெம்மையுற ; சரம் பொழிந்து - அம் பெய்து ; வருணற்கு - கடல் தெய்வம் வருணனுக்கு ; அருள் வழங்கு - அருள் தரும்; மாதவா - மாதவன் என்று பெயரினாய்; பவ - பிறவியாம் ; இருளைக் கடியும் - இருட்டை நீக்கும் ; எங்கள் - அடியேங்கள் ; ஆதவா - சூரியனே ; வளர் வாத தேவ குமாரனாம் - உயரும் வாயு தேவன் மகனாம் ; அனுமானை - ஆஞ்சநேயனை ; ஆள்தரும் - அடியானாக ஆண்டருளும் ; ராகவா என - இராமா என்று ; வசனித்த வர் - கூறுபவர்கள் ; வணங்கு - பணியும் ; மஞ்சனை - பாலனை ; அரவசலத்தினை - சேடகிரியை ; உவந்த - மகிழ்ந்த; நெஞ்சனை-மனமுடையவனை; கரடக்கரி உளைந்து கதற - கசேந்திரன் வருந்தியழ ; தனி எதிர்ந்து - தனியாக வெளி வந்து ; கரவை - முதலையை ; தலையரிந்து - தலையை அறுத்து ; காத்தவா - இரட்சித்தவனே ; எழுபுவனத் தினையும் - ஏழு லோகங்களையும் ; உந்தி - நாபியில் ; பூத் தவா - படைத்தவனே ; உயர் - சிறந்த ; காதிமா மகன் வேள்வி வாய் - விசுவாமித்திரன் புரிந்த மகத்தில் ; வரு - இடை யூறாக வந்த; தாடகாதியர் - தாடகை முதலியோர் ; வீடவே - அழிய ; ஒரு - ஒப்பற்ற ; கணையிற்பட - சரத்தால்அழிய ; முனிந்த - சினந்த ; கத்தனே - திருமாலே ; கடல்அணையை - கடலில் சேது அணையை ; புரியும் - கட்டும் ; எங்கள் அத் தனே - எங்கள் தலைவனே ; சரடப்பவம் நெரிந்து - பாச மிக்க பிறவி அழிந்து ; சிதற - நெறித்துப் போக ; கதி - மோட்சம்; உவந்து-மகிழ்ந்து; தரு-அருளும்; மெய்ப்பரம மந்த்ர தாரகா - மூலதாரக மந்திரனே ; அன்பர் - தாசர் ; வறுமைப் பிணியரிந்த - தரித்திரம் நீக்கிய ; ஊரகா - ஊரகப் பதியானே ; எங்கள் சாமி நீ என - எம் இறைவ நீ என ; ஓதுமாதவர் - கூறு முனிவர் ; பாவம் - தீ வினை ; வாரிதி ஏறுமாறு - கடல் கடக்குமாறு ; அருள் தழைய - அருள் பெருக ; திகழும் - விளங்கும் ; மந்தகாசனை - புன்னகை உடையவனை ; முலை குழைய - தனங்கள் குழையுமாறு ; திருவணைந்த -

இலக்குமியை அணைந்த ; நேசனை - அன்பனை ; அமிழ்திற் சுவை மலிந்த - அமிழ்தினும் இனிய ; தமிழ் மறை - தமிழில் உள்ள திவ்வியப் பிரபந்தம் ; பகரும் எங்கள் - கூறும் எமது ; அமலைக்கு - ஓசைக்கு ; எதிர் அணைந்த - முன் வெளிவந்த ; ஆண்டவா - இறைவா ; பட அரவில் - காளிங்கன் படத்தில் ; பதம் புரிந்த தாண்டவா - நிருத்தம் செய்த அடியவா ; என - என்று ; ஆதிமாமறை நாலும் ஓதிய - பழமறை நான்கும் உணர்ந்த ; ஏழு மாமுனி வோரும் - சப்த ரிஷிகளும் ; யாவரும் - அனைவரும் ; அறி தற்கரிய - உணர இயலாத ; அண்டர் ஆவியை - தேவர் கள் உயிர்நிலையை ; நிறை - மிகுந்த ; அருளிற் பொலியும் - அருளால் நிரம்பி வழியும் ; அம்தண் வாவிமை - குளிர்ந்த எழில் சேர் குளமனையானை ; இமையக் கிரிபயந்த உமையை - மலையரசன் இமவான் பெற்ற பார்வதிபால் ; பரிவு கொண்ட - அன்பு பூண்ட ; இறைவற்கு - சிவனுக்கு ; இடர் அரிந்த - துன்பம் நீக்கிய ; தாளனை - திருவடி யினானை ; சிலை ஒடிய - சிவதனுசு முறிய ; தனிநிமிர்ந்த தோளனை - ஒப்பற்றுயர்ந்த புயத்தினானை ; மகிழ் ஏறவே - மகிழ்ச்சிமிக ; கவி பாடவே - கவிதை இசைக்க ; உயர்மாக மாருதி - வான் உயர் ஆஞ்சநேயர் ; பாததாமரை - பங்கயத் திருவடி ; இதையத்திடை - நெஞ்சிடை ; இலங்கு நாளுமே - எப்போதும் விளங்கும் ; பல - மிகுதியான ; நடலைப் பவம் அழிந்து மாளுமே - துன்பந்தரும் பாவங்கள் அழிந்து ஒழியும்.

பொன்னுலவு சென்னிகுளம் என்ற சந்தம்

தென்னுலவு வன்னமுலை யன்னநடை மின்னிடையார்
சேர்ந்தருகு நித்தமுற மன்னுவான் அருள்
கூர்ந்தடியர் பக்கமுறத் துன்னுவான் உயர்

சீதரன்பிர பாகரன்கண நாதனம்பக மானசுந்தரர்
சிந்தையி னினைந்தவரை முன்னுவான் வரை
வந்தவர் தமக்கு முத்தி பன்னுவான்

கன்னலொடு செந்நெல்வளை தென்னையொடு நன்னர்மலி
கண்ணபுரி நின்றிலகு காட்சியான் மணி
வண்ணனென வந்துறையு மாட்சியான் வெகு

காலமாயுழல் பாரமாமத வேழநோவொடு மூலமேயெனக்
கருணைக்கடலில் வந்த பூட்சியான் எதிர்
பொருதுற்சனர்க் கடந்த சூட்சியான்

நேமிசங்கு பாரதண்டம் ஆதிகொண்ட சாமியும்பர்
தேடிவந்து பாடவன்று காத்தவன் முக
நாலுகொண்ட தேவையுந்தி பூத்தவன் கரு

நீலமுங்குளிர் காவியும்பிறழ் பூவையும்பொரு வானவன் குகன்
நீபணிந்தை போயடங்கத் தீர்த்தவன் சினை
நீள்கடப்பு வேரடங்கச் சாய்த்தவன்

வீறமைந்த பாண்டவர்கள் போர்கடந்து தாண்டநர
வேடமுந்தி யாண்டருளு மெய்யினான் அருள்
வேண்டினரை யாள்திகிரிக் கையினான் இசை

வீணைதும்புரு நாரதன்றவ வேடரம்பர வாணரன்புடன்
மேவிநின்றுபோற்ற நின்ற வீரியன் கொடும்
பாவம்வெந்துநீற வந்த சூரியன்

ஞால்முண்ட வாயில்ண்ட கூடபந்தி போய்நடுங்க
நாதமுந்த ஊதுசங்க வாயினன் பஞ்ச
பூதமெங்கு மாயமர்ந்து மேயினான் விட

நாகபஞ்சணை மீதிருந்துல கேழுமஞ்சலி யாய் வணங்கெழில்
ஞானமங்குலாகியென் கண் ஆயினான் இசை
நாடியண்டரோடு கொண்ட வேயினான்

ஆலமுண்ட நீல்கண்ட ரோடுபண்டு நீறமுந்தி
யாண்டருஞ்நேமி யெங்கும் ஆனவன் பஞ்ச
பாண்டவர்கள் தூதுகொண்டு போனவன் மறை

பாதியந்தணர் பாதவந்தனை யோதவந்தெதிர் மானு
றைந்திடும்
அரவக்கிரி வளத்தை யெண்ணியே சொல்வன்
குரவைக்கடனிகர்த்த கண்ணியே

சேடுகொண்ட வீரகும்ப பாரதந்த மேவுதும்பி
தேனிறா லினைப் பிழிந்து குடிக்குமே மதி
சேர்தல்கண்டுக வளத்திற் பிடிக்குமே மத

சேகரந்தொடர் பாகமங்குலின் மோகரங்கொடு போகி

தேப்பலவின் வன்சிலையை யொடிக்குமே யரு
கார்ந்தமடப் பிடிபிரிந்து துடிக்குமே

ஆடமந்தி பாடவண்டு நாடியங்கு கூடவண்டர்
ஆரவமிகுத் திலங்குங் கானமே அர
மாதர்கள்படுத் துறங்குந் தானமே பல

ஆறொடுங்கதிராதபஞ்சிர மேசதிவிண்டெழு கூடபந்திகள்
அளவைக்கடந்து முட்டும் வானமே மிகு
கபடிற்றிரிந்து கிட்டுங் ஏனமே

பாசபந்த மோகதொந்த பாதகங்கள் நீறவிண்டு
பாவனஞ்செய்கங்கை வந்து பாயுமே அதிற்
றோயுனர்கள்பங்கம் வெந்து தீயுமே வளர்

பாடலஞ்சிறு சாதிசண்பக நீள்கடம்பில வாதிவண்சினை
பாடழுந்தத் திங்கணின்று தேயுமே மலை
மாடுதங்கிக் காசினங்கள் காயுமே

வேடர்மங்கை மார்தருங்கு மாரர்சிங்க போ தகங்கள்
மீதுநின்று தாவிவிளை யாடுவார் பல
கோடுகண்டு மேவிவந்து கூடுவார் நதி

வேணிதுன்றபி ராமபுங்கவ ரோடுபங்கய சாதனும்புகழ்
வேங்கடவ வென்றுதினம் பாடுவார் சில
பாங்கரிடைச் சுற்றியெங்கும் ஓடுவார்

தென்றன்மந்த மந்தவந்து சிந்துசந்த வம்புகண்டு
தேவமங்கை மார்கணங்கள் மேவுவார் தம
நாவுகொண்டு கோகிலத்திற் கூவுவார் வழி

தேன்மணங்கமழ் மாலைசூந்தள மோடவிழ்ந்திட வே
யணைந்தெதிர்
செங்கரத்திற் பந்துவிளை யாடுவார் இரு
கொங்கைபொரச் சற்றிளைத்து வாடுவார்

மன்றல் தங்கு கொன்றைசந்தம் விண்டுகுங்கு மங்கு
ருந்தம்
வண்கடம்ப நின்றுமந்தி வாவுமே எழில்
கொண்டவஞ்சு கஞ்செறிந்து கூவுமே வன

மாடுதங்குகி ராதர்தங்கண நீடுமம்புலி யோடவண்சிலை
வளைத்துநின்று வன்கணைகள் ஏவுமே கன்று
குடித்துமிஞ்சிப் பால்சுரக்குங் கோவுமே (2)

---

2) தென் உலவு - அழகு தடமீது ; வன்ன முலை - மென் முலையும் ; அன்ன நடை - அன்னம் போன்ற நடையும் ; மின் இடையார் - மின்னற் கொடி போலும் இடுப்பும் உடைய மகளிர் ; சேர்ந்தருகு - பக்கலிற் கூடி ; நித்தமுற - நிருத்தம் (எப்போதும் எனினும் கொள்க) பயில ; மன்னு வான் - விளங்குவான் ; அருள் கூர்ந்து - கிருபைமிக ; அடியர் பக்கம் உற - தாசர்கள் பால் அன்புற ; துன்னுவான் - விளங்குவான் ; உயர் - சிறந்த ; சீதரன் - இலக்குமியை மார்பில் தரித்தவன் ; பிரபாகரன் - ஜோதி வடிவன் ; கண நாதன் - கணங்களின் தலைவன் சிவன் ; நம்பகமான

சுந்தரர் - நம்பிக்கைக்குரிய அழகர்; சிந்தையில் நினைந்த வரை - மனத்தில் நினைப்பவரை; முன்னுவான் - தானும் கருதுவான்; வரை வந்தவர் தமக்கு - ஏழு மலை வந்தார்களுக்கு; முத்தி - வைகுந்த பதம்; பன்னுவான் - நெருங்கச் செய்வான்; கன்னலொடு - கரும்புடன்; செந்நெல் - செம்பா நெல்லும்; வளை தென்னையொடு - வளைந்துயர்ந்த தெங்கு மரங்களுடன்; நன்னர் மலி - நன்கு பொலியும்; கண்ணபுரி - திருக்கண்ண புரத்தில்; நின்றிலகு காட்சியான் - நின்ற திருக்கோலத்தினான்; மணிவண்ணன் என - கரிய மாணிக்கம் என்னும்படி; வந்துறையும் - வந்து விளங்கும்; மாட்சியான் - பெருமைக்குரியான்; வெகு காலமாய் - நீண்ட நாட்கள்; உழல் - வருந்தும்; பாரமாமத வேழம் - பெரிய மத யானை கஜேந்திரன்; நோவொடு - துயரோடு; மூலமே என - ஆதி மூலமே எனக் கதற; கருணைக் கடலில் - கிருபா சாகரம் போல; வந்த - தோன்றிய; பூட்சியான் - வடிவின்ன்; எதிர்பொரு - எதிர்த்துப் போரிடும்; துற்சனர்க் கடந்த - துஷ்டர்களைக் கடந்து நின்ற; சூட்சியான் - உபாயத்தான்; நேமிசங்கு, பாரதண்டம் ஆதி - சக்கரம், சங்கு, கதை முதலியவை; கொண்ட சாமி - தன்பாற் கொண்ட இறைவன்; உம்பர் - வானோர்; தேடி வந்து - தேடியடைந்து; பாட - துதிபாட; அன்று காத்தவன் - முன்பு காத்தருளியவன்; முகம் நாலு கொண்ட தேவை - நான்முகக் கடவுளை; உந்தி பூத்தவன் - நாபிகமலத்திற் படைத்தவன்; கருநீலமும் - கரிய நீல நிறமும்; குளிர் காவியும் - தண்ணிய நீலோத்பலமலரும்; பிறழ் - ஒளிரும்; பூவையும் - காயாம் பூவையும்; பொரு - ஒத்த; வானவன் - தேவன்; குகனை நீபன் - கடம்பணி முருகன்; நிந்தை போயடங்கத் தீர்த்தவன் - பிரமகத்தி தோஷம் நீங்கச் செய்தவன்; சினை நீள் கடம்பு வேரடங்கச் சாய்த்தவன் - கிளைகள் மிக்க கடம்பமரம் அடியோடு முறியும்படி தள்ளியவன்; வீறமைத்த - வலிமை பொருந்திய; பாண்டவர்கள் - பஞ்ச பாண்டவர்; போர் கடந்து தாண்ட - பாரதப் போரில் வெற்றி காண; நரவேடம் - மனித வடிவம்; முந்தி - பண்டு; ஆண்டருளும் - அனுக்கிரகம் செய்த; மெய்யினான் -

சத்திய சொரூபன் ; அருள் வேண்டினரை ஆள் - கிருபை வேண்டும் அன்பர்களை ஆட்கொள்ளும் ; திகிரிக்கையினான் ; சக்கர பாணி ; இசை வீணை - இசைக்கும் ; தும்புரு நாரதன் - தும்புரு நாரத முனிவர் ; தவவேடர் - முனிவர்கள் ; அம்பரவாணர் - வானோர்கள் ; அன்புடன் - பக்தியுடன் மேவி நின்று - சென்று எதிர் நின்று ; போற்ற - துதிக்க- நின்ற மகத்துவன் ; கொடும் பாவம் வெந்து நீற - கொடிய பாவங்கள் வெந்து சம்பராக ; வந்த - அவதரித்த ; சூரியன் - சூரியன் போன்றவன் ; ஞாலமுண்ட வாயில் - உலகை அருந்திய வாயினில் ; அண்டகூட பந்தி - அண்ட கோள வரிசைகள் ; போய் நடுங்க - அச்சம் கொண்டு நடுங்க ; நாத முந்த - ஒலி முந்திச் செல்ல ; ஊது - ஊதுகின்ற ; சங்க வாயினான் - சங்கம் பொருந்திய வாயை உடையவன் ; பஞ்ச பூத மெங்குமாய் அமர்ந்து - எங்கும் ஐம்பெரும் பூதமாய் இருந்து ; மேயினான் - அமைந்தான் ; விடநாக பஞ்சணை மீதிருந்து - விஷமுடைய அரவணை மேலிருந்து ; உலகேழும் - ஏழு உலகங்களும் ; அஞ்சலியாய் வணங்கு - கை கூப்பி வணங்கும் ; எழில் ஞான மங்குலாகி - அழகிய ஞானவானாகி ; என்கண் ஆயினான் - என் கண் போன்று ஆனான் ; இசை நாடி - சங்கீதம் விரும்பி ; அண்டரோடு - தேவர்களுடன் ; கொண்ட - கைக்கொண்ட ; வேயினான் - புள்ளாங் குழலினான் ; ஆலமுண்ட - ஆலகால விஷமருந்திய ; நீலகண்டரோடு - அதனால் நீலநிறம் பெற்ற கழுத்தினர் சிவனோடு ; பண்டு - முன்பு ; நீற - தோல்வியுற (பாணாசுர யுத்தத்தில்) ; முந்தி - முன்வந்து ; ஆண்டருளும் - ஆட்கொண்டருளும் ; நேமி எங்கும் ஆனவன் - உலகம் நிறைந்தவன் ; பஞ்ச பாண்டவர்கள் - தருமன் முதலிய ஐவர்களுக்காக ; தூது கொண்டு போனவன் - கௌரவர்பால் தூது சென்றவன் ; மறை ஆதியந்தணர் - ஆதிமறை கூறும் பிரமன் ; பாதவந்தனை ஓத - திருவடியைப் பிரார்த்திக்க ; வந்து எதிர் - முன் வரும் ; மானுறைந்திடும் - மான்கள் வாழும் ; அரவக்கிரி வளத்தை எண்ணியே - சேட மலைச் சிறப்பை நினைந்து ; சொல்வன் குரவை - ஆய்ச்சியர் குரவையைக் கூறுவேன் ; கடல் நிகர்த்த - சமுத்திரத்துக்கு ஒப்பான ; கண்ணியே - விழி

களை உடைய பெண்ணே ; (மகடூஉ முன்னிலை) ; சேடு கொண்ட – இளமையுடைய ; வீர - வலிமை கொண்ட ; கும்ப - நெற்றியும் ; பாரதந்தம் மேவு - வலிமையான கொம்பு களையும் உடைய ; தும்பி - யானையானது ; தேன் இறாலி னைப் பிழிந்து – தேன் தட்டுகளை நசுக்கி ; குடிக்குமே - அதிலிருந்து ஒழுகும் தேனை உண்ணும் ; மதி சேர்தல் கண்டு – தேன்குடித்த மயக்கத்தில் நிலா வருதலைப்பார்த்து ; கவளத்திற் பிடிக்குமே - சோற்றுருண்டை என அதைப் பற்றும் ; மத சேகரந் தொடர்பாகம் - மேலும் மதம் சேர்ந்து கொள்வதால் ; அங்குலின் - அதன் தும்பிக்கை நுனி ; மோகரங் கொடு போகி - மயக்க நிலையினால் ; எங்கணும் - எல்லா இடத்திலும் ; தேம் பலவின் – இனிய சுவை தரும் கனிகளுள்ள பலா மரங்களின் ; வன் சிலையை – வலிமை யான கிளைகளை ; ஒடிக்குமே - முறிக்கும் ; அருகார்ந்த - பக்கத்தில் நிற்கும் ; மடப்பிடி - பெண்யானையானது ; பிரிந்து துடிக்குமே - ஆண்யானை அந்நிலையில் தன்னைத் தழுவாது மரங்களைத் தழுவுகிறதே எனப் பிரிவுத்துயரால் வருந்தி நிற் கும்; ஆடமந்தி–குரங்குகள் கூத்தாட; பாட வண்டு நாடியங்கு- அங்குப் பாடவிரும்பி வண்டுகள் ; கூட - நெருங்க ; வண்டர் ஆரவம் - நட்ன மாதர்களின் ஒலியைவிட ; மிகுத்து – மிகுதி யாக ; இலங்கும் - விளங்கும் ; கானமே - சோலைகளே ; அர மாதர்கள் – தேவமகளிர் ; படுத்துறங்கும் தானமே - கிடந்து துயிலும் இடமாகும் ; பல ஆறொடும் - பல நதிகளுடன் ; கதிர் ஆதபன் சிரம் மோதி - கிரணங்களுடைய சூரியன் சென்னியில் உரசி ; விண்டெழு – பிளந்து மேலே எழும் ; கூடபந்திகள் ; கோபுர வரிசைகள் ; அளவைக் கடந்து - எல்லை தாண்டி ; முட்டும் வானமே – வானை இடிக்கும் ; மிகு - மிக்க ; கபடில் - தந்திரத்தோடு ; திரிந்து-அலைந்து ; கிட்டும் - நெருங்கும் ; ஏன மே - பன்றிகளே ; பாச பந்தம் பற்றாகிய கட்டு ; மோக தொந் தம் – ஆசையின் சேர்க்கையாகிய ; பாதகங்கள் நீற–துரோகங் கள் வெந்து சாம்பலாக; விண்டு–பிளந்து ; பாவனம் செய்-தூய் மைப்படுத்தும் ; கங்கை வந்து - ஆகாச கங்கை அங்கு வந்து ; பாயுமே - பிரவாகிக்கும் ; அதில் - அக்கங்கையில் ; தோயுனர்

கள் – படிந்து நீராடுவோர் ; பங்கம் – குறைகள் ; வெந்து தீயுமே - எரிந்து தீய்ந்து போகும் ; வளர் – உயர்ந்து வளரும் ; பாடலம் - பாதிரிப்பூ ; சிறு சாதி – சிறிய முல்லை ; சண்பகம் - சண்பக மலர் ; நீள் கடம்பு - நீண்ட கடம்ப மரம் ; இலவு - இலவ மரம் ; ஆதி - முதலியவற்றின் : வண்சினை – வலிய கிளைகள் ; பாடு அழுந்த - வலிமையாகக் குத்த ; திங்கள் சந்திரன் ; நின்று தேயும் - மெல்லத் தேயும் ; மலைமாடு தங்கி- மலைச் சாரலில் தங்கி ; காசினங்கள் - நவமணிகள் ; காயுமே - ஒளி வீசும் ; வேடர் மங்கைமார் – வேடப் பெண்கள் ; தரும் குமாரர் – பெற்ற பிள்ளைகள் ; சிங்க போதகங்கள் - சிங்கங்கள் யானைகள் ; மீது நின்று - மேலே சவாரி செய்து ; தாவி - ஒன்றிலிருந்து மற்றொன்றில் தாவி ; விளையாடுவார் - பொழுது போக்குவர் ; பல கோடுகண்டு - பல சிகரங்களைக் கண்டு ; மேவி வந்து - அடைந்து அங்கு வந்து ; கூடுவார் – சேருவார்கள் ; வேணிதுன்ற - சடை விளங்கும் ; அபிராம - அழகானம் ; புங்கவரோடு - கடவுளாம் சிவனோடு ; பங்கய சாதனும் - மலரில் முளைத்த பிரமனும் ; புகழ் – போற்றும் ; வேங்கடவ – வேங்கடநாத : என்று – என ; தினம் பாடுவார் - நாடோறும் பாடித் துதிப்பர் ; சில பாங்கரிடைச் சுற்றி எங்கும் ஓடுவார் - சில பகுதிகளில் சுற்று முற்றும் ஓடுவார்கள் ; தென்றல் – தென்றல் காற்று ; மந்த மந்த வந்து - மெல்ல மெல்ல வந்து ; சிந்து – வீசும் ; சந்த வம்பு – சந்தன வாசனை ; கண்டு - நுகர்ந்து ; தேவ மங்கைமார் கணங்கள் மேவுவார் – தேவமகளிர் கூட்டமாக வந்தடைவார்கள் ; தமநாவு கொண்டு – தங்கள் நாவால் ; கோகிலத்தில் - குயில் போல ; கூவுவர் – பாடுவார்கள் ; வழி - பெருகி வழியும் ; தேன் - தேனும் ; மணங்கமழ் – வாசனை வீசும் ; மாலை - ஹாரங்கள் ; குந்தளமோடு - கூந்தலுடன் ; அவிழ்ந்திடவே - அவிழ்ந்து சரியவே ; அணைந்து – கூடி ; எதிர் – முன்னால் நீட்டும் ; செங்கரத்தில் - சிவந்த கைகளால் ; பந்து விளையாடுவார் - பந்தாடுவர் ; இருகொங்கைபொர – இரு தனங்களும் மோதிக் கொள்ள ; சற்றிளைத்து - சிறிதயர்ச்சி கொண்டு ; வாடுவார் : களைப்புறுவார்கள் ;

மன்றல் தங்கு - மணம் பொருந்திய ; கொன்றை சந்தம் – கொன்றை சந்தன மரங்களை ; விண்டு - பிளந்து ; குங்குமம் குங்கும மரம் ; குருந்தம் - மருத மரம் ; வண் கடம்பு - வலிய கடம்ப மரம் ; நின்று - இவற்றிருந்து ; மந்தி வாவுமே - குரங்குகள் தாவும் ; எழில் கொண்ட – அழகிய ; அஞ்சுகம் - கிளிகள் ; செறிந்து - நெருங்கி ; கூவுமே - ஒலி செய்யும் ; வனமாடு - காட்டுப் பகுதியில் ; தங்கு - வசிக்கும் ; கிராதர்தம்கணம் – வேடர்கள் கூட்டம் ; நீடும் – நீண்ட ; அம்புலி - அழகிய புலிகள் ; ஓட – பயந்தோட ; வண்சிலை - வலிய வில்லை ; வளைத்து – குனித்து ; நின்று – இருந்து ; வன்கணைகள் - வலிய அம்புகளை ; ஏவுமே - செலுத்துவார்கள் ; கன்று - கன்றுக் குட்டிகள் ; குடித்து – வயிறார அருந்தி ; மிஞ்சிப் பால் சுரக்கும் – மிக அதிகமாகப் பாலைப் பொழியும் ; கோவுமே - பசுக்களும்.

---

வெள்ளி மலை யொத்தபல மேடை என்ற மெட்டு

பஞ்சவர்களந்தரங்க தூதன் வழி
பட்டவர் தமக்குரிய நாதன் நளிர்
பங்கயமலர்ந்ததென விங்கிதமமைந்ததிருப்
பாதன் நவ நீதன்

கஞ்சமல ரொத்தவிழி யீசன் மிகு
கட்டழகு பெற்றதிரு நேசன் மிளிர்
கனகப்படி சமைத்த மடுவிற்றிகழ் வளத்தைக்
கண்ணே சொல்வன் பெண்ணே

மன்னுமணி முத்தநெடு வாரி தனை
மானுமெழிலுற்றதுகோ னேரி அதை
மாக நாடர்தம் மாத ரோடும்வலம்
வருவார் இடர் மருவார்

விண்டலமு மண்டலமு நண்ணி வட
வேங்கடவ வென்று துதி பண்ணி வினை
வீழும் பாச வினை தாழும் வாருமென
விளிப்பார் வந்து குளிப்பார்

வண்டுகளினம் புரிந்து பாடும் பல
மாமரஞ் செறிந்திலகு காடும் அந்த
வாவி நீர்மையொடு யாவும் பேச வெவர்
வல்லார் கவி சொல்லார்

மங்கையர் தங் கொங்கைதனை மானுஞ் சக்ர
வாகமொடு வண்குமிழி தானும் அவர்
வதனத்தினை யெதிர்த்துக் கமலத்திரளனைத்து
மலையு நிலை குலையும்

அங்கனையர் தங்கள் கழுத் தாகும் மணி
யாரமொடு மூரும் வளை நாகும் அவர்
அதரத்தினை நிகர்த்து விரிபொற்கதிர் விடுக்கும்
அமிதந் தரு குமுதம்

பாசிலை மடற் கமல வண்டு வழி
பட்டொழுகுமட்டுமது வுண்டு மிகு
பண்மருவ வண்டமிழின் உண்மை நிலை கண்டறிந்து
பாடும் ஒன்று கூடும்

காசினி லிழைத்தபடிக் கட்டு நிறை
காந்தியொளி வீசிவெளிப் பட்டு கடி
காவு மீதி லகு பூவு மீர முறு
கல்லு மொளி புல்லும்

அன்னமொடு கின்னரங்கள் நாரை சிறை
யார்ந்தமடப் பன்னிறங்கொள் ஆரை கரை
யாளும் பரிசதனில் நாளும் பெடைமருவ
அடுக்கும் இரை கொடுக்கும்

கன்னல் ரசமன்னசுவை காட்டும் அயங்
கண்டவர் பயங்களையு மோட்டும் சுர
கங்கையும் வணங்குதிரு மங்களம் புனைந்த பெயர்
கரைவார் அறம் புரைவார் (3)

3) பஞ்சவர்கள் - பாண்டவர்களின் ; அந்தரங்கதூதன் - மனமறிந்ததூதன் ; வழிபட்டவர் தமக்கு - வணங்கியவர்களுக்கு ; உரியநாதன் - உரிமை பூண்ட தலைவன் ; நளிர் - குளிர்ந்த ; பங்கயம் மலர்ந்ததென - தாமரை மலர்ந்தாற் போன்ற ; இங்கிதம் அமைந்த - மனம் நிறைந்தமைந்த ; திருப்பாதன் - திருவடிகளுடையான் ; நவநீதன் - வெண்ணெய் உண்டோன் ; கஞ்சமலர் ஒத்தவிழி ஈசன் - தாமரை ஒத்தவிழிகள் உடைய கடவுள் ; மிகு கட்டழகு பெற்ற - மிக்க பேரெழில் கொண்ட ; திரு - இலக்குமி ; நேசன் - காந்தன் ; மிளிர் - ஒளிவீசும் ; கனகப்படிசமைத்த - தங்கத்தாலாய படிகள் கொண்ட ; மடுவில் - குளத்தின் ; திகழ்வளத்தை - விளங்கும் சிறப்பை ; கண்ணே - கண்போன்றவளே ; சொல்வன் பெண்ணே - மகளே கூறுவேன் ; மன்னும் மணி முத்த நெடு வாரிதனை - மணியும் முத்தும் பொருந்திய நீள் கடலை ; மானும் - ஒத்த ; எழிலுற்றது - அழகுபெற்றது ; கோனேரி - வேங்கடத்துள்ள கோனேரி தீர்த்தம் ; அதை - அந்தத் தீர்த்தத்தை ; மாகநாடர் - வானுலகோர் ; தம்மாதரோடும் - தம் மனைவியருடன் ; வலம் வருவார் - சுற்றிவருவார்கள் ; இடர் - துன்பம் ; மருவார் - சேரமாட்டார்கள் ; விண்தலமும் மண்தலமும் - வானுள்ளவரும் பூமி மக்களும் ; நண்ணி - அடைந்து ; வடவேங்கடவ என்று - வடமலையானே என ; துதிபண்ணி - தோத்தரித்து ; வினை வீழும் - தீவினை யழியும் ; பாசவினை தாழும் - பற்றுக்களாம் பாவம் அழியும் ; வாரும் என - வேங்கடம் வாரீர் என்று விளிப்பார் - அழைப்பார்கள் ; வந்து குளிப்பார் - கோனேரியில் வந்து நீராடுவர் ; வண்டுகளினம் - வண்டுகளின் கூட்டம் ; புரிந்து பாடும் - பாட்டிசைக்கும் ; பலமாமரம் செறிந்து இலகு காடும் - மிகுந்த மாமரங்கள் நிறைந்த வனமும் ; அந்த வாவிநீர்மையொடு - அத்தடாகப் பெருமையுடன் ; யாவும் - முழுப் பெருமையும் ; பேச எவர் வல்லார் - கூற யாரேவல்லவர் ; கவிசொல்வார் - கவிஞரும் கூற இயலார் ; மங்கையர்தம் கொங்கைதனைமானும் - மகளிரின் முலைகளுக்கு ஒப்பாம் ; சக்ரவாகமொடு - சக்ரவாகப் பட்சியுடன் ; வண் சிறந்த ; குமிழிதானும் - நீர்க்குமிழி (நாசி)யும் ;

அவர் வதனத்தினை - அவர்முககத்தை; எதிர்த்து - போட்டி யிட்டு ; கமலத்திரளனைத்தும் - தாமரை மலர்க் கூட்ட மனைத்தும்; மலையும் - போரிட்டு ; நிலைகுலையும் - நிலை தடுமாறும் ; அங்கனையர் - பெண்கள் ; தங்கள் - தமது ; கழுத்தாகும் - கண்டப் பகுதியிலுள்ள ; மணி ஆரமொடும் மணி மாலையோடு ; ஊரும் வளை - ஊர்ந்து செல்லும் சங்குகளும் ; நாகும் - நந்தைகளும் ; அவர் - அம்மகளிர் ; அதரத்தினை - உதடுகளை ; நிகர்த்து - ஒத்து ; விரிபொற் கதிர் விரிந்த பொற்கிரணம் ; விடுக்கும் - பரப்பும் ; அமிதந்தரு குமுதம் - அளவற்ற செங்குவளைமலர்கள் ; பாசிலை மடற்கமல வண்டு - பச்சைப்புற இதழுடைத் தாமரை மலர் வண்டுகள் ; வழிபட்டு ஒழுகு மட்டு மது உண்டு - வழிந்து ஒழுகும் தேனை உண்டு ; மிகுபண் மருவ - மிகுந்த இசை சேர ; வண்தமிழின் - ஒளிசார் தமிழ்மொழியின் ; உண்மை நிலை கண்டறிந்து - மெய்ந்நிலை கண்டுணர்ந்து ; பாடும் ஒன்றுகூடும் - சேர்ந்திசைபாடும் ; காசினில் இழைத்த படிக் கட்டு - மணிகளிழைத்த படித்துறைகள் ; நிறை - நிறைந்த; காந்தி ஒளிவீசி - ஒளிச்சோதி வீசி ; வெளிப்பட்டு - வெளியே பரவி ; கடிகாவு மீதிலகு - வாசனைமிக்க சோலையில் பொலி யும் ; பூவும் - புஷ்பங்களும் ஈரமுறு கல்லும் - நனைந்த கற் களும் ; ஒளிபுல்லும் - ஒளியைத் தழுவும் ; அன்னமொடு - அன்னப்பறவைகளுடன் ; கின்னரங்கள் நாரை - கின்னரப் பறவை, கொக்கு ; சிறையார்ந்த - இறகுகள் பொருந்திய ; பன்னிறங்கொள் ஆரை - நீராரை ; கரையாளும் பரிசதனில் - கரையில் விளங்கும் தெப்பத்தில் ; நாளும் - எப்போதும் ; பெடைமருவ - பெண்பறவை பக்கல் இருக்க ; அடுக்கும் - சேரும் ; இரைகொடுக்கும் - உணவு தரும் ; கன்னல் - கரும்பு ; ரசமன்ன சுவை காட்டும் - சாறுமிகு சுவை தரும் ; அயம் - ஆடுகள் ; கண்டவர் - பார்ப்பவர்களின் ; பயங்களையும் - அச்சங்களையும் ; ஓட்டும் - போக்கும் ; சுரகங்கையும் வணங்கு - வான்கங்கையும் பணியும் ; திருமங்களம் புனைந்த - சீரார் வாழ்த்து பெற்ற ; பெயர் கரைவார் அறம்புரைவார் - தர்மம் நிகர்த்தவர்கள் திருநாமம் கூறுவர்.

### மாகத விகசித வொளிதவ என்ற சந்தம்

அரதன மணிநிறை சினகர மதினொளி
யவிர்தரு மரகத சிலையென வுறைதரு-மாதி செகசோதி

அரனயனிமையவர் முனிவரர்திரளொடும்
அனுதினமுறையிட அருள்புரிதிருவுறை-யாகன்பட
நாகன்

வளையொடு மனலுமிழ் திகிரிகை யிடவல
மருவிட வருளன வரதமு நிலவிய - மாயன் அச காயன்

தளையவிழ் துளவொடு பரிமள மலரணி
தருமது கர நிரை தழுவியமலர் புரை-தாளன்கதிர்
வாளன்

ததியெது வெதுவென அகலிட முறைபவர்
சமரச நிலையொடு வழிபட வருள்பிர-தாபன் பத்ம
நாபன்

மதிமுக வனிதையர் மயிலென வனமென
மடநடைபயில்தர மருவினர்பணிமணி - வண்ணன் என
தெண்ணன்

கதியென முறையிடு கரிமுகம் விரை வொடு
கரவடுமொருமுத லெனவருமறைபகர்-கத்தன்பரிசுத்தன்

கணபணமணியுர கரும்வெருவிடவரு
கருடன் திருபுய மலைமிசை யுறையதி-காரன்
அவதாரன்

மணமரு வியதருவுறைபவர் புகழொடு
மறையென வருதமிழ்மறைகளையுதவிய-மாயன்றிரு
நேயன்

குணமணி நவமணி சுரமணி யழகிய
குலமணி செபமணி மரகதமணியருள்-கண்டோன் புவி
யுண்டோன்

திருமக ணிலமகள் அலர்மக ளெனுமிவர்
திரண்முலை நெருடிய அழகிய புயமுறு-தேசன் பவ
நாசன்

உருவென அருவென ஒருவகை யிலதென
உயர்வற வுயர்நல முடையவ னெனமறை-யோதும்
எந்தப் போதும். (4)

---

4) அரதன மணி நிறை - இரத்தின மணிகள் நிறைந்த ; சினகரமதின் ஒளி - ஆலயத்தின் ஒளி ; அவிர்தரு - பிரகாசிக்கும் ; மரகத சிலை என - பச்சை மலை என ; உறை தரும் - விளங்கும் ; ஆதி - மூல முதல் ; செக சோதி - மிக்க ஒளியானவன் ; அரன் - சிவன் ; அயன் - பிரமன் ; இமையவர் - தேவர்கள் ; முனிவர்கள் - இருடிகள் ; திரளொடும் - கூட்டமாக ; அனுதினம் - நாள் தோறும் ; முறையிட - குறைக்க ; அருள் புரி - அனுக்கிரகம் செய்யும் ; திருவுறை ஆகன் - இலக்குமி வாழ் மார்பினை ; பட நாகன் - ஆதி சேடனை அணையாக உடையவன் ; வளையொடும் - சங்குடன் ; அனல் உமிழ் - தீயைக் கக்கும் ; திகிரிகை - சக்கராயுதம் ; இடம் வலம் மருவிட - முறையே இடக்கை , வலக்கையில் விளங்க ; அருள் - கிருபை ; அனவரதமும் நிலவிய - எப்போதும் விளங்கிய ; மாயன் - கரியோன் ; அசகாயன் - கூட்டொருவருமில்லாத வீரன் ; தளைய விழ் - இதழ் விரிந்த ; துளவொடு - துளசியுடன் ; பரிமள மலரணி தரு - வாசனை புஷ்பங்கள் சூடும் ; மதுகர நிரை - வண்டுகள் வரிசையாக ; தழுவிய - அணைந்த ; மலர் புரை - தாமரை மலர் ஒத்த ; தாளன் - திருவடியினான் ; கதிர் வாளன் - ஒளி வீசும் வாளை உடையவன் (நாந்தகன்); ததி எது எது என - தத்துவம் எது எது என்று ; அகலிடம் உறைபவர் - பூமிவாழ் மக்கள் ; சமரச நிலையொடு - வேறுபாடின்றி ; வழிபட - தொழ ; அருள் - அருள் - புரியும் ; பிரதாபன் - கீர்த்தியான் ; பத்மநாபன் - தாமரை முளைத்த கொப்பூழான் ; மதிமுக வனிதையர் - திங்கள் முக மங்கையர் ; மயில் என அனம் என - மயில் அன்னம் என்னுமாறு ; மடநடை பயில்தர -

மென் நடை பயில ; மருவினர் பணி - சார்ந்தோர் பணியும் ; மணிவண்ணன் - நீல மணி நிறத்தான் ; எனது எண்ணன் - என் உளத்திருப்பவன் ; கதி என - அடைக்கலமென்று ; முறையிடு - வேண்டும் ; கரிமுகம் - கசேந்திரன் எதிரில் ; விரைவொடு - வேகமாகச் சென்று ; கரவடும் ஒரு முதல் - முதலையை அழித்த ஆதிமூலம் ; என - என்று ; அருமறை பகர் - அரிய வேதங்கள் புகழும் ; கத்தன் - திருமால் ; பரி சுத்தன் - நிமலன் ; கண பண மணி - நிறைந்த படங்களினுச்சியில் மாணிக்க முடைய ; உரகரும் - நாகங்களும் ; வெருவிட - அஞ்ச ; வரு - பறந்து வரும் ; கருடன் திருபுய மலைமிசை - கருடாழ்வானின் மலையனைய இருதோள்களின் மேலே ; உறை - விளங்கும் ; அதிகாரன் - உரிமையான் ; அவதாரன் - அடியார்க்கு அருள இறங்கி வருபவன் ; மணம் மருவிய தரு உறைபவர் - வாசனை பொருந்திய கற்பக நீழல் வாழும் தேவர்களின் ; புகழொடு - போற்றித் துதிகளுடன் ; மறை என வரு - வேதமே என்னுமாறு நிலவும் ; தமிழ் மறைகளை உதவிய - தமிழ் வேத மருளிய ; மாயன் - கரியோன் ; திரு நேயன் - இலக்குமி காந்தன் ; குண மணி - குணங்களை பூஷணங்களாக அணிந்த ; நவமணி - புதிய மணியனையான் ; சுரமணி - தேவர்களில் மணியனையான் ; அழகிய குலமணி - எழிலார் (ஆய) குல மணி ; செப மணி - செபம் செய்யும் மணி மாலை ; மரகத மணி - பச்சை மணி வண்ணன் ; அருள் கண்டோன் - அனுக்கிரகம் புரிதலே கண்டவன் ; புவி உண்டோன் - ஊழிக் காலத்து உலகை உண்டவன் ; ('பயின்ற எல்லாம் அயின்றகத்தடக்கிய வேத முதல்வன்') ; திருமகள் - இலக்குமி ; நிலமகள் - பூதேவி ; அலர்மகள் - பத்மாஸனி ; எனுமிவர் - என்ற இவர்கள் ; திரண் முலை - திரண்டு பருத்த கொங்கைகளை ; நெருடிய - தடவிய ; அழகிய - எழிலார் ; புயமுறு - தோட்களை உடைய ; நேசன் - ஒளியினான் ; பவநாசன் - அடியார் பிறப்புக்களை அழிப்பவன் ; உருவு என - வடிவுள்ளதென ; அருவென் - வடிவற்றதென ; ஒரு வகை இலதென - ஒரு தன்மையற்றதென ; உயர்வற உயர்நல முடையவனென - இதற்கு மேலும் உயரம் இல்லை

என்னுமாறு உயர்ந்த தன்மை உடையோன் என ; மறை-தமிழ் மறை திருவாய் மொழி ; ஓதும் எப்போதும் — எந்நேரமும் பகரும் ; 'உயர்வற வுயர்நலமுடையவ னெவனவன்' — திருவாய் மொழி! ;

---

**செந்திமாநகரந்தனின்மேவிய என்ற சந்தம்**

மந்திபாய்பொழி லம்பரமேவிய
மாசுணமாமலை யீசன் அடி
யார்தம்பாதக நாசன் மழை

மங்குலுங்குளிர் கங்குலுந்தருமங்களும் புரையங்க
மோடுயர்

வண்கராசல மால்கரியாள்தரு
மா தவனாகிய வீசன் முதி
யோர்கணமேவுச மாசன்

உந்திமாமல ரந்தணனாகிய
ஓதிமமீதுயர் வேதன் மயில்
வரகனமேல்வரு நாதன் ஒளி

யுங்கிளர்ந்தெழு திங்களுங்கன லங்கியுந்தக மூங்கணீ
சுரன்

உம்பராரொடு மேதினியோர் புகழ்
ஓமதுவானசு போதன் மலர்
மீதுறை மாதர்ச மேதன்

அந்தநாளொரு பைந்தொடி கூவிட
ஆடைகளீய்தரு மாயன் இடை
மாதர்கள் சேர்தரும் ஆயன் எனை-

யண்டிவந்து நெருங்கியின்பமுகந்து கொண்டு கசங்கவே
யுடல்

அன்பினால்வரு மாதரமேவிட
ஆடல்செய்தானடி நேயன் அடி
யார்துயர்விடுச காயன்

சந்தனாசல நின்றுறுகாலொடு
தாரகைசூழ்தரு பாவி மிகு
வாதுடனீர்தரு மாவி மிகு
சந்தமும்பழு குந்திமிர்ந்தெழு வம்புகொண்டுநெ ருங்கு
மாமுகை
சம்பராரியு மேவிடு வான்முகிழ்
தாதலர்தேனலர் காவி யவன்
சேருவனோவினு மேவி
இந்திராதியர் வந்தனை செய்திட
இம்பரின்மேவிய ஏகன் மலர்
வம்பணி மாமுலை யாகன் புவி
எங்கணும்புகழ் தங்கிடும்படி வந்தடுஞ்சுர கங்கை தங்கிய
எங்கள் தாரக மாமலையானெனும்
ஈசுரபூசித யோகன் பல
தாசர்கள் பாலுறு மோகன்
அந்தணாளர்கள் வந்தனை செய்திட
ஆனிரைமேய்த்திடும் ஆயன் உயர்
வானவர் போற்றிடு தூயன் திசை
யம்பரம்புவி மண்டலங்கலை யிந்துகந்தர மெங்கணுந்
திகழ்
அஞ்சனாசல மால்வரை மேலுரை
ஆதவன்மாதவர் நேயன் நவ
நீதமுன்னானுகர் வாயன்
மாங்குல்வாழ்வட வேங்கடமாமலை
மாதவியூடுற வந்தான் எனை
யாதரவாயெதிர் தந்தான் எழில்
வம்புகொண்டுநெ ருங்குகொங்கைய
ணைந்துவந்துபு ணர்ந்த வின்பமு
மங்கையேசொலு மாறுளதோ வவன்
மாரனையீன்றவன் றானே திரு
மாதருக்கேற்றவன் றானே

திங்கள் சேர்குடை யங்கசனூரன் முறை
செய்தசம் போகமுந் தேனே மூன்று
செய்தவமென்னசொல் வேனே பதச்
செஞ்சிலம்பு புலம்பநொந்திடை யுந்துவண்டுவ
ணங்கலிங்கித

தேவவானந்த தாடனஞ் செய்தனன்
செப்பதற்கேதுமொவ் வாது மனம்
எப்பொழுதும்மறக் காது

தென்றன்மாமலர் மன்றலினோடெதிர்
தென்றமிழோசையிற் செல்ல தனி
நின்றவனாசையிற் புல்ல இசை
தெந்ததந்தன மென்றுவண்டு முழங்கவுஞ்சுர
தந்தமூம்பிட

திண்கைமாமத மால்கரியாமெனச்
சேர்ந்தனன்கொங்கையைத் தீண்டி வினை
தீர்ந்தனன்மங்கைநீ காண்டி

மன்றலாகவு மின்றென வோதியு
மாமலர்ப்பள்ளியிற் கூடி மிகு
தாமதமாய்விளை யாடி யிரு
மந்தரம்புரை கொங்கைவண்கைபி
சைந்துகொண்டித முஞ்சுவைத் தொரு

மாரனாகம நூன்முறையேயெனை
மையல்செய்தானடி மானே அவன்
மெய்யழகென்னசொல் வேனே (5)

---

5) மந்திபாய் பொழில் - குரங்குகள் தாவிக்குதிக்கும்; அம்பரமேவிய - வானளாவிய; மாசுணமாமலை ஈசன் - சேடாத்திரிமலை இறைவன்; அடியார்தம பாதக நாசன் - தொண்டர்களின் பாவங்களை, (துன்பங்களை அழிப்பவன்; மழை மங்குலும் - மழை மேகங்களும், குளிர் கங்குலும் - குளிர்ந்த இரவும்; தருமங்களும் புரை - அறங்களை ஒத்த;

அங்கமோடு – உறுப்புக்களுடன்; உயர்வண்கராசல - வலிய துதிக்கையுடைய; மால்கரியாள் தரு - பெருமையின் சாட்சியாக விளங்கும் யசோதையளித்த; மாதவனாகிய ஈசன் - திருமால்; முதியோர் கணம் மேவு - பெரியவர்கள் கூட்டம் சேரும்; சமாசன் - சங்கத்தான்; உந்திமாமலர் - நாபிக்கமலத்து; அந்தணனாகிய - பிரமனாகிய; ஓதிமமீதுயர்; அன்னவாகனத்தினில் உயரப் பறக்கும்; வேதன் – வேதியன்; மயில்வாகன மேல்வருநாதன் – மயில் வாகன முருகன்; ஒளியும் - பிரகாசமும்; கிளர்ந்தெழு - மிக்கு வானில் எழும்; திங்களும் - மதியும்; கனலங்கியும் - தீயுமிழ் அக்கினியும்; திகழும் கண் ஈசுரன் – விளங்கும் விழியுடைச் சிவபெருமான்; உம்பராரொடு - விண்ணவர்களுடன்; மேதினியோர் - உலக மாந்தர்; புகழ் - போற்றும்; ஓமநுவான - பிரணவமந்திர வடிவான; சுபோதன் - நல்லறிவாளன்; மலர் மீதுறை மாதர் – இலக்குமி, பூதேவி, பதுமாவதி; சமேதன் - ஒன்றி விளங்குபவன்; அந்தநாள் - பண்டு; ஒரு பைந்தொடி - திரௌபதி; கூவிட - ஓலமிட; ஆடைகள் ஈய்தரு மாயன்-வஸ்திரங்களருளிய ஸ்ரீ கிருஷ்ணன்; இடை மாதர்கள் - ஆய்ச்சியர்கள்; சேர்தரும் - கூடி இருக்கும்; ஆயன் -இடைச் சிறுவன்; எனை - என்னை: அண்டி வந்து - சேர்ந்து வந்து; நெருங்கி - சமீபமுற்று; இன்பம் முகந்து - இன்பம் பருகி; கொண்டு - அனுபவித்து; கசங்கவே உடல் - மேனி குழையச் செய்து; அன்பினால் வரும் - நேயத்தாலுண்டாகும்; ஆதரம் - விருப்பம்; மேவிட - பொருந்த; ஆடல் செய்தானடி – மதன விளையாடல் செய்தான். பாங்கி; நேயன் - அவன் அன்பன்; அடியார் துயர் - தொண்டர்கள் துன்பங்களை; வீடு - அழிக்கும்; சகாயன் - நண்பன்; சந்தனாசலம் - சந்தன மலையாம் மலைய மலை; நின்றுறு – இருந்து வரு; காலொடு – மலை மாருதத்தொடு (தென்றல்); தாரகை சூழ்தரு பாவி - நட்சத்திரங்கள் சூழ வரும் சந்திரனாம் தீயோன்; மிகு வாதுடன் - மிக்க சண்டையோடு; ஈர் தரும் ஆவி - உயிரைப் பற்றி இழுப்பான்; மிகு - அதிகமான; சந்தமும் புழுகும் - சந்தனம் புனுகாகிய குளிர்ந்த பரிமள

வாசனைப் பொருட்கள் ; திமிர்ந்தெழு - பசி அதனால் எழும் ; வம்பு கொண்டு - வாசனை கொண்டு ; நெருங்கு - நெருக்க மான ; மாமுகை - பேரரும்பாம் முலைகள் ; சம்பராரியும் மேவிடுவான் - மன்மதனும் அடைவான் ; முகிழ் - அரும்பும்; தாதலர், தேனலர் - மகரந்தம் விரியும் தேன்மலராம் ; காவி - கருங்குவளை ; அவன் - அந்த மன்மதன் ; சேருவனோ இனும் மேவி - இனியும் வந்து சேர்வானோ ; இந்திராதியர் - இந்திரன் முதலிய தேவர்கள் ; வந்தனை செய்திட - பணிந் திட ; இம்பரின் மேவிய ஏகன் - இவ்வுலகிலுற்ற தனி திருவன் ; மலர் வம்பணி - மலரும் வாசனைப் பொருட்களும் சேர்ந்த ; மா - இலக்குமியின் ; முலை ஆகன் - கொங்கைகளில் மா பழுந்தியவன் ; புவி எங்கணும் - உலகம் எங்கும் ; புகழ் தங் கிடும் படி - சீர்தங்கி விளங்குமாறு ; வந்தடும் - வந்து பாயும் ; சுரகங்கை தங்கிய - ஆகாச கங்கை இலகும் ; எங்கள் - எமது ; தாரக மாமலையான் எனும் - பிரணவ மலையான் எனப் பெறும் ; ஈசுர பூசித யோகன் - ஈசுவரனால் பூசிக்கப் பெற்ற சிறப்புடையவன் ; பல தாசர்கள் பாலுறு மோகன் - பல அடி யவர் பால் நேயம் கொண்டவன் ; அந்தணாளர்கள் - பிராம ணர்கள் ; வந்தனை செய்திட - போற்றிட ; ஆநிரை - பசுக் கணங்கள் ; மேய்த்திடும் - மேய்க்கும் ; ஆயன் - இடையன் ; உயர் வானவர் போற்றிடு - மேலான பெரியோர்கள் (தேவர் கள்) துதிக்கும் ; தூயன் - அமலன் ; திசை - திக்குகள் ; அம் பரம் - ஆகாயம் ; புவி மண்டலம் - பூலோகம் ; கலை இந்து - கலைகள் சேர்ந்த மதி ; கந்தரம் - மேக மண்டலம் ; எங்கணும் திகழ் - எங்கும் பரவிய ; அஞ்சனாசல மால் வரை மேலுறை - அஞ்சனாத்திரி என்ற பெரிய மலைமேல் இருக்கும் ; ஆதவன் - கருஞாயிறு ; மாதவர் நேயன் - பெரு முனிவரர்க் கன்பன் ; நவநீதம் முன்நாள் - பண்டு வெண்ணெய், நுகர் வாயன் - உண்ட வாயினான் ; மங்குல் வாழ் - மேகங்கள் தவழும் ; வடவேங்கட மாமலை - வடவேங்கடமாகிய திருப் பதி மலையில் ; மாதவியூடுற வந்தான் - மாதவிக் கொடிகள் நிரம்பிய காவின் இடையே வந்தான் ; எனை ஆதரவாய் எதிர்தந்தான் - என்பால் அன்போடு எதிரில் காட்சியளித்

தான் ; எழில் - அழகும் ; வம்பு கொண்டு - பரிமளகந்தங்களும் கொண்டு ; நெருங்கு கொங்கை - ஒன்றோடொன்று இடமின்றி நெருங்கிய முலைகளை ; அணைந்து - தழுவி ; வந்து - என் பால் வந்து ; புணர்ந்த - கூடிய ; இன்பமும் - சுகமும் ; மங்கையே - பாங்கியே ; சொல்லுமாறுளதோ - சொல்லக் கூடுமோ ; அவன் - அத்தலைவன் ; மாரனை ஈன்றவன் தானே - மன்மதனையே மகனாகப் பெற்றவன் தான் ; திரு மாதருக்கு ஏற்றவன்தானே - அழகிய பெண்களின் போகத் துக்குத் தக்கவன் தான் ; திங்கள்சேர் குடை - சந்திரனை வெண்கொற்ற குடையாகக் கொண்ட ; அங்கசன் நூன் முறை - மதன சாத்திர முறையில் ; செய்த - புரிந்த ; சம்போக முந் தேனே - கூடலின்பமும் தேனாக இனிக்கும் ; முனம் - முன்பு ; செய்தவம் என்ன - ஆற்றிய தவம் ஏதோ ; சொல்வேனே - கூறு வேன் ; பதச் செஞ்சிலம்பு புலம்ப - காற்சிலம்புகள் ஒலிக்க ; நெர்ந்திடையும் - இடையும் வருந்தி ; துவண்டு வணங்கல் - வாடி வளைதல் ; இங்கித தேவ ஆனந்த - இனிய தேவசுகத் தின், தாடனம் செய்தனன் - தட்டினைப் புரிந்தான் ; செப்பு தற்கு ஏதும் ஒவ்வாது - உவமை கூற எதுவும் ஒப்பாகாது ; மனம் - சிந்தை ; எப்பொழுதும் மறக்காது - (இச்சுகத்தை) எக் காலமும் மறக்காது ; தென்றல் - தென்றகாற்று ; மாமலர் மன்றலினோடெதிர் - தாமரை மலர்களின் வாசனையுடன் ; எதிர் - ஒப்பாம் ; தென்தமிழ் ஓசையில் - இனிய தமிழ் ஓசை போல ; செல்ல - அகன்றுபோக ; தனிநின்றவன் - தனித்து நின்ற தலைவன் ; ஆசையிற் புல்ல - மகிழ்வோடணைக்க ; இசை - பண்களை ; தெந்த தந்தனமென்று - தெம்ததம் தனஎன ; வண்டு முழங்கவும் - வண்டுகள் ஒலிக்க ; சுரதம் ததும்பிட - காமநீர் ததும்ப (மூ-ள பேதம்) ; திண்கை - வலிய கரமுடைய ; மாமத மால் கரியாம் என - பெரிய மதயானை போல ; சேர்ந்தனன் கொங்கையைத் தீண்டி - முலைகளைத் தழுவிக் கூடினன் ; வினை தீர்ந்தனன் - தன் செயல் முற்றினன் ; மங்கை நீ காண்டி - தோழியே நீ காண்பாயாக ; மன்றலாகவும் இன்று - திருமணமும் ஆகவில்லை ; என ஓதியும் - என்று கூறி யும் ; மாமலர்ப் பள்ளியில் - பெரிய மலரணையில் ; கூடி -

புணர்ந்து ; மிருதாமதமாய் விளையாடி - வெகு நேரம் சுகித்து ; இரு மந்தரம் புரை - இரு மலைகளை ஒத்த ; கொங்கை - முலைகளை ; வண்கை பிசைந்து கொண்டு - வலிய கரததாற் பிசைந்து ; இதழும் சுவைத்து - அதரபானம் பருகிச் சுவைத்து ; ஒரு - ஒப்பற்ற ; மாரன் ஆகம நூன் முறையே - மதனாக சாத்திர முறையில் ; எனை - என்னை ; மையல் செய்தான் - மயங்கச் செய்தான் ; அடிமானே - மானனையாளே அடீ ; அவன் மெய்யழகு - அவன் மேனி எழில் ; என்ன சொல்வேனே - என்ன என்று உரைப்பேன் ;

**செந்தூர் வளர் முருகநாதா என்ற சந்தம்**

முந்தூருரககிரி வாசா அனவரத
மோகங்கொள் வார்களிடை நேசா பல
மோகனசொரூபங்கொண்டு
சாகசம் பலவும் விண்டு
முந்துவதென்ன வென்மேற் கேசா மனமுவந்தோர்
மொழியுரைக்க வுங்கூடக் காசா

வநதாஸிவளிடத்தில் வம்பு அனுதினமும்
வார்த்தையாடுவதென்ன தெம்பு மட
மங்கையர் தங்களிடை
எங்கு மணம் வீச வந்த
மாயந்தெரியுமடா தப்பு இனிநீநின்றால்
மானமழிந்துவிடு நப்பு

ஆண்மைத்தனமிதுவோ அல்ல வயதுவந்த
ஆண்பிள்ளையுனக்கென்ன சொல்ல இவண்
ஆருமறிய வொண்ணாத
பேருமுளறிக்கொண்டாயே
ஆகாதகாரியங்கள் நல்ல வழியோபுகல்
அசையாமனின்றாயெனை வெல்ல

கேண்மையுமுண்டெனவே கெஞ்சி யெவருங்கண்டால்
கேவலமாகுமென்று கொஞ்சி அந்தக்
கேசவன் நாரணன்சீநி

வாசனென்றுபேசுகின்றாய்
கிட்டவந்தாசைமிக மிஞ்சி யுலகறிந்தால்
கேலிநடுங்குதுள மஞ்சி

மாயவித்தைபேசலென்ன சூது புத்தியறியா
மங்கையிடத்திலென்ன வாது வெகு
மந்திரந் தெரிந்தவன்போல்
அந்தணர்தம் வேடமொடு
வந்தவள் பக்கம் நிற்ப தேது முன்னொருநாள்
மறைந்தேகவிட்டதென்ன தூது

தூயதவமுடையார் மாயம் அளக்கரிய
சூதுபுரியாரனி யாயம் உயர்
தொண்டைவளநாடனென்று
பெண்டிரிடை நாடிநின்று
சொல்லுவதுமென்னவா தாயம் மலைபோலப்
பொய்
சொன்னாலும் வெளுக்காதோ சாயம்

சாதிசனமறிந்தா லேச்சு காசுபறிக்குந்
தாசிதம்வீடுபோலவே யாச்சு உன்றன்
சாலனிப்போது மென்ன
லாபங்கிடைத்தாலுமுன்றன்
தன்மைதெரிந்ததுவீண் பேச்சு சமயம்பார்த்துச்
சாற்றவேண்டாமேன்பெரு மூச்சு

தையலர்கள் வாசலிற் கூடி கைகள்கொட்டித்
தான்பார்த்துநிற்கிறார்கள் கோடி யேதுஞ்
சங்கையறி யாதவிந்த
மங்கை தனியாகுமந்தத்
தருணம் பார்க்கிறாயென்ன மோடி ஆனாலுமேநீ
சரியானபிள்ளையல்ல பேடி (6)

6) முந்து ஊர் - முன்னில் ஊர்ந்து செல்லும்; உரககிரி - சேடாத்திரி; வாசா - வசிப்பவனே; அனவரதம் - எப்போதும்; மோகம் கொள்வார்களிடை - ஆசை கொள்பவர்களின்; நேசா - அன்பனே; பல - அனேக; மோகன சொரூபம் கொண்டு - எழில் வடிவு கொண்டு; சாகசம் பலவும் விண்டு - வீரம் பல பேசி; முந்துவது என்ன என்மேல் - என் மீது முற்படல் ஏன்; கேசா - கேசவா; மனம் உவந்தோர் - உளம் மகிழ்ந்தவர்; மொழி உரைக்கவும் கூடக் காசா - சொற்களைக் கூறுதலும் குற்றமா?; வந்தாலிவளிடத்தில் வம்பு - இவள் பால் வந்தால் வீண் வம்பு; அனுதினமும் - நாளும்; வார்த்தையாடுவது - உரையாடுவதில்; என்ன தெம்பு - யாது வலிமை உளது; மடமங்கையர் தங்களிடை - பேதைப் பெண்களிடம்; எங்கும் மணம் வீசவந்த - எங்கும் வாசனை வீச வந்தெய்திய; மாயம் - வஞ்சகம்; தெரியுமடா - அறிவேனடா; தம்பு - இளைஞனே; இனிநீ நின்றால் - இனியும் நீ இங்கிருந்தால்; மானம் அழிந்து விடும் - மரியாதை குறையும்; நம்பு - மெய்க்கொள்; ஆண்மைத் தனமிதுவோ அல்ல - இஃது ஆண்மைக் குணமாகாது; வயது வந்த - பருவ மடைந்த; ஆண்பிள்ளை உனக்கு - புருஷனாம் உனக்கு; என்ன சொல்ல - நான் கூறுவது யாதாகும்; இவண் ஆரும் அறிய ஒண்ணாத - இங்கு வேறு பிறர் அறிய முடியாத; பேரும் பெயரையும்; உளறிக் கொண்டாயே - பிதற்றினாயே; ஆகாத காரியங்கள் - தகாத செயல்கள்; நல்ல வழியோ - நல்ல நெறியாமோ; புகல் - கூறுக; அசையாமல் - நகராமல்; நின்றாய் எனைவெல்ல - என்னை வெற்றி கொள்ள நின்றாய்; கேண்மையும் உண்டு எனவே - உறவு உண்டு என்றே; கெஞ்சி - இரங்கிப் பேசி; எவரும் கண்டால் - பிறர்யாரும் பார்த்தால்; கேவலமாகு மென்று கொஞ்சி - கேலிக்கிடமாம் எனச் செல்லமாய்ப் பேசி; அந்த - (உலகறி சுட்டு); கேசவன் - நாரணன், சீநிவாசன் என்று - கேசவ, நாராயண, ஸ்ரீநிவாச என; பேசுகின்றாய் - வார்த்தை சொல்கின்றாய்; கிட்ட வந்து - நெருங்கி வந்து; ஆசைமிக மிஞ்சி - மிகுந்த நேயம் மீதூர; உலகறிந்தால் - ஜனங்களுக்கு அறிய வந்தால்; கேலி - வெட்கம் (அவ

மானிம்) ; நடுங்குது உளம் அஞ்சி - மனம் பயந்து தடுமாறு கின்றது ; மாய வித்தை - தந்திரச் செயல் ; பேசல்என்ன சூது - பேசுவதென்ன வஞ்சகம் ; புத்தியறியா மங்கை - பேதைப் பருவப் பெண் (நல்லது கெட்டது உணராள்) ; இடத்தில் - அருகில் ; என்னவாது - என்ன வழக்கு ; வெகு மந்திரம் தெரிந்தவன் போல் - பல வித்தையறிந்தவன் போல ; அந்தணர் தம் வேடமொடு - பிராமண வடிவில் ; வந்து - அடைந்து ; அவள் பக்கம் நிற்பதேது - அவளருகில் நிற்ப தேதன் பொருட்டு ; முன் ஒரு நாள் - முன்பு ஒரு நாளில் ; மறைந்து - நீ மறைந்திருந்து ; ஏக விட்டதென்ன தூது - தூது அனுப்பியதென்ன ; தூய தவமுடையார் - குற்ற மற்ற தவ முடையார் ; மாயம் - ஏமாற்று ; அளக்கரிய சூது - அளவிட முடியாத வஞ்சம் ; புரியாரனியாயம் - நியாயமற்றவை செய் யார்கள் ; உயர் - மேலான ; தொண்டைவளநாடன் என்று - தொண்டை நாட்டுக்காரன் என ; பெண்டிரிடை - பெண்கள் மத்தியில் ; நாடி நின்று - விரும்பி இருந்து ; சொல்லுவதும் - கூறுவதால் ; என்ன ஆதாயம் - என்ன லாபம் ; மலைபோலப் பொய் சொன்னாலும் - மலையனைய பொய் கூறினாலும் ; வெளுக்காதோ சாயம் - வண்ணம் வெளுத்துப் போகாதா (உண்மை தெரியாமற் போகுமா) ; சாதி சனமறிந்தால் ஏச்சு - குல மக்களறியின் இகழ்வு ; காசு பறிக்கும் - செல் வத்தைப் பிடுங்கும் ; தாசிதம் - பரத்தையர் தமது ; வீடு போலவே யாச்சு - மனை என ஆயிற்று ; உன்றன் சாலன் - உனது மாயம் ; இப்போதும் - இச்சமயமும் ; என்ன லாபம் கிடைத்தாலும் - எவ்வளவு ஆதாயம் கிடைக்குமாயினும் ; உன்றன் தன்மை தெரிந்தது - உன் இயல்பு அறிய வந்தது ; வீண் பேச்சு - வீணான உரைகள் ; சமயம் பார்த்து - நேரம் அறிந்து ; சாற்ற வேண்டாம் - சொல்ல வேண்டாம் ; ஏன் பெருமூச்சு - ஏன் நெட்டுயிர்ப்பு ; தையலர்கள் - மகளிர் ; வாசலிற் கூடி - தெருவில் கூடி ; கைகள் கொட்டி - கர ஒலி செய்து ; தான் பார்த்து நிற்கிறார்கள் கோடி - தாங்கள் பலர் பார்த்து நிற்கின்றனர் ; ஏதும் - யாதொன்றும் ; சங்கையறி யாத இந்த மங்கை - ஐயமுணராத இப்பெண் ; தனியாகும் -

ஒற்றைப்படும் ; அந்தத்தருணம் - அச்சமயம் ; பார்க்கிறாய் - எதிர்பார்க்கிறாய் ; என்னமோடி - என்ன வேடிக்கை ; ஆனாலுமே - என்னவாயினும் ; நீ சரியான பிள்ளையல்ல நீ உற்ற - ஆண் மகனன்று ; பேடி - அலியாவாய் ;

---

**பாளைவாய் கமுகம் வந்து என்ற சந்தம்**

ஆறுபாய் வயலில்நந்த நாரையோ டுறுங்குட்ந்தை-
யாதரம்பெருக வந்த வையனே திரு
மாதரன்புடனணைந்த மெய்யனே

தாறுபாய்கரடதந்தி மாறிலாது கூவவன்று
சாதகந்தழையவந்து காத்தவா சப்த
பூதலமெவையு முந்தி பூத்தவா

நாளைநாளை யென்றுசொல்லி வேளைவேளை வந்தவர்க்கு
நாள்கடத்திவிட்டதென்ன சொல்லையா இது
தாளுதைத்துத்தள்ளி விட்ட தில்லையா

வேளைவேளை வந்துவந்து !மீளுவேன் வருந்தலென்று
விண்டதுவு நீ மறந்து விட்டையா வேறு
பெண்டிரை யணைந்தவ சட்டையா

ஈரமற்ற பாவியுன்னைச் சேரவிட்ட பாவமென்னை
இப்படியுங்கெஞ்ச வைத்த தல்லவோ உனை
யெப்பொழுதுங் கோளெடுத்துச் சொல்லவோ

மாரன்விட்ட பாணமட்டு மீறிவிட்ட தால்வருந்தி
வந்ததுவுன் நீ மறந்தன் மானமோ வேறு
பைந்தொடியர் பாலுறுதி யானமோ

பந்தையொத்த தானகொங்கை வந்தெதிர்த்த போது செங்கை
பற்றியதையெண்ணி யெண்ணிப் பாருமே யது
சற்றுநினைத்தாலும் மனம் ஆருமே

அந்தரங்க மாகவந்து தந்திரங்கள் சொல்லிமையல்
ஆக்கியதில் நானொருத்தி யையமோ உனது
பாக்கியங்க ளின்னுமென்ன செய்யுமோ

கோடிகோடி யாயர்மாதர் வீடுதோறுஞ்சென்று சென்று
குடியைக்கெடுத்ததும் பொய் ஆகுமா இந்தக்
கொடுமைகளுன்னை விட்டுப் போகுமா

ஆடியாடிவெண்ணையுண்டு வாடிவாடி யென்றுசொல்லி
ஆடையைக் கவர்ந்ததறி யாமையோ பசு
மாடுமேய்ப்பவர்க்கிதென்ன தீமையோ

தென்றன்முந்த முந்தமுந்தி யென்றனிருகொங்கை
கண்டு
செங்கையினிற் பற்றியது மேனையா எந்த
மங்கையிதற் கொத்திடுவள் தானையா

அன்றணைந்து நாணமின்றிச் சென்றபின்பு
நாளுமுன்றன்
அந்தரங்க நானறிவன் அய்யனே பல
தந்திரமுங் கண்டுகொண்டேன் மெய்யனே

ஆணவாவழகு கண்டு நாணமின்றிப் பின்றொடர்ந்த
ஆச்சியர்க ளாடைதன்னை வாங்கினாய் விடப்
பேச்சிமுலைப் பாலருந்தி வீங்கினாய்

பாணமைந்து கொண்டமாரன் ஆணவங்கள் தீரவந்த
பாவியென்னைக் கைவிடுதல் பான்மையோ இது
பாவையர்பாற் செய்திடுதன் மேன்மையோ

கன்னிகன்னியென்று சொல்லப் பின்னமொன்று
மில்லையென்று
கற்பழித்துப்போன தென்ன கள்ளமே அந்த
அற்புதத்தை நாடுமென்ற னுள்ளமே

கன்னலொன்றி லுன்னைவந்து மன்னியின்னல்
தீர்ப்பனென்று
கையடித்துச்சொன்ன தென்ன சாலுமே ஒரு
பொய்யுரைத்தாற் குற்றமில்லை போலுமே

காட்டிலொரு பெண்ணைவிட்டு வீட்டிலினி தாயுறைந்த
காதகனென் றோதுமிந்த வையமே இந்தப்
பாதகமு முன்னையென்ன செய்யுமே

நாட்டிலொருதூ துசென்றுமூட்டிவைத்தாய் பாரதப்
போர்
நானிலத் திலை நினையொப் பேதுமே கன்னி
நாரியரென்றா லுனக்குப் போதுமே

வெண்ணையுண்டு பாலையுண்டு கன்னையுண்ட
கள்வனுன்னை
விட்டிடவென்றாலு மனம் வல்லையே சுகம்
பட்டுருக்குமென்றன் மனக் கல்லையே

மண்ணையுண்ட வாய்திறந்து பண்ணையுண்ட
வாய்மொழிக்கு
வையகங்களேழு முன்பு காட்டினாய் கண்ட
தையலர்க்கு மையலுள மூட்டினாய் (7)

---

7) ஆறுபாய் வயலில் - காவிரி ஆற்று நீர் பாயும் வயல்களில்; நந்தம் - நத்தைகள்; நாரையோடு - கொக்குகளுடன்; உறும் - விளங்கும்; குடந்தை - திருக்கும்பகோண நகரில் ஆதரம் பெருக - அன்பு மீதூர; வந்த - கோயில் கொண்ட; ஐயனே - தலைவனே; திருமாதர் - அழகிய ஸ்ரீதேவி பூதேவி; அன்புடன் - அணைந்த - நேயமுடன் நெருங்கிய; மெய்யனே - கோல வடிவினனே; தாறுபாய் - அங்குசம் பாயும்; கரடதந்தி - மதயானை (கசேந்திரன்); மாறிலாது - வேறு வழியின்றி; கூவ - ஆதிமூலமே என ஓலமிட; அன்று - பண்டு; சாதகம் தழைய வந்து - காரிய சித்தியுறத் தோன்றி; காத்தவா - இரட்சித்தவனே; சப்த பூதலம் எவையும் - ஏழுலகங்கள் அனைத்தையும்; உந்தி பூத்தவா - நாபிக்கமலத்து பிரமனைப் படைத்து ஆக்கியவனே; நாளை நாளை என்று சொல்லி - நாளைக்கு, நாளைக்கு என்று கூறி; வேளை வேளை வந்தவர்க்கு - குறித்த காலத்து வந்தவர்களுக்கு; நாள் கடத்திவிட்டதென்ன - நாளை மாற்றி அனுப்பியதேன்;

சொல்லையா - தலைவா கூறுக ; இது - இச்செயல் ; தாளுதைத்து - காலால் உதைத்து ; தள்ளி விட்டதில்லையா - ஏற்றிவிடலாகுமல்லவா ? ; வேளை வேளை - காலந்தோறும் ; வந்து வந்து - அடைந்து வந்து ; மீளுவேன் - திரும்பவரு வேன் ; வருந்தல் என்று - வருந்தாதே என ; விண்டதுவும் - கூறியவும் ; நீ மறந்து விட்டையா - நீ மறந்துபோயினையோ ; வேறு பெண்டிரை - பிறமகளிரை ; அணைந்த - தழுவிய ; அசட்டையா - பாரமுகமா ; ஈரமற்ற - இரக்கமில்லாத ; பாவி உன்னை - தீய உன்னை ; சேரவிட்ட - அணைய அனு மதித்த ; பாவம் - தீவினை ; என்னை - அடியாளை ; இப்படி யும் - இவ்வாறும் ; கெஞ்ச வைத்த தல்லவோ - கெஞ்சுமாறு செய்ததன்றோ ; உனை - உன்னை ; எப்பொழுதும் - நாளும் ; கோள் எடுத்துச் சொல்லவோ - குற்றங்கண்டு கூறுவதோ ; மாரன் விட்ட பாணம் - மன்மதன் ஏவிய மலரம்பு ; மட்டு மீறி விட்டதால் - வரம்பு மீறியதால் ; வந்ததுவும் - உன்பால் வந்ததும் ; நீ மறத்தல் - நீ மறந்தது ; மானமோ - பெரு மையோ ; வேறு - பிற ; பைந்தொடியர் பால்உறு - பெண்கள் பாற்கொண்ட ; தியானமோ - நினைப்போ ; பந்தை ஒத்ததான கொங்கை - பந்து நிகர் வட்ட முலைகள் ; வந்து எதிர்த்த போது - எதிர் வந்தபோது ; செங்கை - சிவந்த கரம் ; பற்றியதை - அவற்றைப் பற்றியதை ; எண்ணி ; எண்ணிப் பாருமே - மீட்டும் மீட்டும் நினைந்து பாருங்கள் ; அது - அச் செயலை ; சற்று நினைத்தாலும் - சிறிது எண்ணி னாலும் ; மனம் ஆருமே - மனம் பொருத்தி விடும் ; அந்தரங்க மாக வந்து - இரகசியமாக வந்து ; தந்திரங்கள் சொல்லி - உபாயங்கள் கூறி ; மையல் ஆக்கியதில் - மயங்கச் செய் ததில் ; நான் ஒருத்தி - நான் ஒருத்தி ; ஐயமோ - சந்தே கமோ ; உனது பாக்கியங்கள் - உனது செல்வங்கள் ; இன்னும் என்ன செய்யுமோ - இனியும் என்ன செய்யுமோ ; கோடி கோடி - பல்லாயிரம் ; ஆயர் மாதர் - இடைப் பெண்கள் ; வீடுதோறும் சென்று சென்று - அகங்கள் எல்லாம் போய் ; குடி யைக் கெடுத்ததும் - அவர்கள் குலத்தை அழித்ததும் ; பொய் ஆகுமா - அசத்தியம் ஆமோ ; இந்தக் கொடுமை

கள் - இப்படிப்பட்ட கொடிய செயல்கள் ; உன்னை விட்டுப் போகுமா - உன்னிடமிருந்து நீங்குமா ; ஆடியாடி - நிருத்தம் ஆடி ; வெண்ணெய் உண்டு - வெண்ணெய் அருந்தி ; வாடி வாடி என்று சொல்லி - வருக வருக எனக் கூறி ; ஆடையை - வஸ்திரங்களை ; கவர்ந்தது - பறித்தது ; அறியாமையோ - பேதமைச் செயலோ ; பசு மாடு மேய்ப்பவர்க்கு - பசுக்களை மேய்ப்பவர்களுக்கு ; இதென்ன தீமையோ - இஃதென்ன பாவம் ; தென்றல் முந்த - தென்றற் காற்றுவீச ; முந்த முந்தி - மேல் சீலை விலக ; என்றனிரு - என் இரண்டு கொங்கை கண்டு ; செங்கையினிற் பற்றியதும் - சிவந்த கரத்தால் பிடித்ததும் ; ஏனையா - எதற்காகவையா ; எந்த மங்கை - வேறு எந்தப் பெண் ; இதற்கு ஒத்திடுவள் தானையா - தானிதற்குச் சம்மதிப்பாள் ; அன்றணைந்து - அன்று தழுவி ; நாணம் இன்றி - வெட்கமில்லாமல் ; சென்ற பின்பு - போய பின் ; நாளும் உன்றன் - எப்போதும் உனது ; அந்தரங்கம் - மனம் ; நானறிவேன் அய்யனே - ஐயா நான் தெரிந்துள்ளேன் ; பல தந்திரமும் - பல வகை உபாயங்களும் ; கண்டு கொண்டேன் - பார்த்தறிந்தேன் ; மெய்யனே - எழில் வடிவோனே ; ஆணவா அழகு கண்டு - ஆண்பிள்ளையே உன் எழில் கண்டு ; நாணமின்றி - வெட்கமற்று ; பின் தொடர்ந்த - (உன்) பின்னால் வந்த ; ஆச்சியர்கள் - கோபியர்கள் ; ஆடைதன்னை - வஸ்திரங்களை ; வாங்கினாய் - களவு செய்தாய் ; விடப் பேச்சி முலைப்பாலருந்தி வீங்கினாய் - பூதனை விஷமுள்ள முலைப்பால் குடித்து உடல் வீக்கம் கொண்டனை ; பாணமைந்து கொண்டமாரன் - பஞ்ச பாணங்கள் உடைய மன்மதன் ; ஆணவங்கள் - அகங்காரம் (வலிமை) ; தீர வந்து - நீங்கும்படி வந்து நின்ற ; பாவி எனைக் கைவிடுதல் - பாவியாம் என்னைக் கை விடுதல் ; பான்மையோ - குணமாகுமோ ; இது - இச் செயல் ; பாவையர்பால் - பெண்களிடம் ; செய்திடுதல் - புரிதல் ; மேன்மையோ - சிறப்போ ; கன்னி கன்னி என்று சொல்ல - நான் கன்னிப் பெண் என்று கூறவும் ; பின்னம் ஒன்றும் இல்லை என்று - தடை ஒன்றும் இல்லை என ; கற்பழித்துப்

போனதென்ன கள்ளமே - என் நிறை யழித்தது என்ன திருட்டு ; அந்த - அப்படிப்பட்ட ; அற்புதத்தை - அதி சயத்தை ; நாடும் - விரும்பும் ; என்றன் உள்ளமே - என் மனமே ; கன்னல் ஒன்றில் - ஒரு நாழிகையில் ; உன்னை வந்து - உன் பால் வந்து ; மன்னி - சேர்ந்து ; இன்னல் தீர்ப் பன் என்று - துயர் நீக்குவேன் என ; கையடித்துச் சொன்னது - கையிலடித்துக் கூறியது ; என்ன சாலும் - என்ன வார்த்தை ; ஒரு பொய் உரைத்தால் - ஒரு பொய் கூறினால் ; குற்றமில்லை போலுமே - தவறில்லை போலும் ; காட்டில் - வனத்தில் ; ஒரு பெண்ணை விட்டு - ஒரு பெண் ணைத் தவிக்கவிட்டு ; வீட்டில் இனிதாயுறைந்த - வீட்டில் இன்பமுடன் இருந்த ; காதகன் என்று - பாதகன் என ; ஓதும் இந்த வையமே - இவ்வுலகம் கூறும் ; இந்தப் பாதக மும் - இப்பழியும் ; உன்னை என்ன செய்யுமே - உன்னை யாது செய்யும் ; நாட்டில் ஒரு தூது சென்று - தேசத்தில் பாண்டவர்க்காக தூது போய் ; மூட்டி வைத்தாய் பாரதப் போர் - பாரத யுத்தத்தை உண்டாக்கினை ; நானிலத்து - உலகில் ; இலைநினை ஒப்பேதுமே - உனக்கு நிகர் ஏதும் இல்லை ; கன்னிநாரியர் என்றால் உனக்குப் போதும் - கன்னிப் பெண்கள் என்றால் உனக்குப் போதும் ; வெண் ணையுண்டு - வெண்ணையை அருந்தி ; பாலை உண்டு - பாலை யும் அருந்தி ; கண்ணையுண்ட - கண் கவர்ந்த ; கள்வன் உன்னை - திருடனாம் நின்னை ; விட்டிட என்றாலும் - மறந்து விடலாம் எனினும் ; மனம் வல்லையே - உளம் வர வில்லை ; சுகம் பட்டு - நின்பாலடைந்த இன்பம் பட்டு ; உருக்கும் என்றன் மனக் கல்லையே - என் மனமாம் கல்லை உருக்கும் ; மண்ணை உண்ட வாய்திறந்து - மண் தின்ற வாய்திறந்து ; பண்ணை உண்ட வாய் மொழிக்கு - இசை நிரம்பிய வாய்ச் சொல் யசோதைக்கு ; வையகங்கள் ஏழு முன்பு காட்டினாய் - திறந்த வாயில் ஏழுலகங்களும் காணச் செய்தாய் ; கண்டதையலர்க்கு - பார்த்த இளம் பெண்களுக்கு ; மையல் - மயக்கம் ; உளம் ஊட்டினாய் - மனத்திலளித்தாய் ;

**என்னடி நான்பெற்ற மங்கை என்ற சந்தம்**

சின்னஞ்சி றுக்கிதா னென்ன
பணிமின்னச் சடைபின்னத் தனி
சென்றாளே சந்தேக மன்ன உயர்

சேவற்கொடி யானைத்தொடர் பாவப்பிணி யோடத்
துணை
செய்வதன் பாலுண்டோ பாசம் இது
கைதவமே மிகு மோசம்

கன்னத்திற் பற்குறி காட்டும்
உடலாட்டும் பழி நாட்டும் கலி
காலக்கொடுமையை நீட்டும் விடு

கணையிற்பொலி விழிகட்கடையருணத்தொளி
படுதற்குறு
கள்ளத்தையென்ன சொல் வேனே பலர்
உள்ளத்துக் கொத்தது தானே

வடக்குமுகத்தினில் நாட்டம்
என்மேல்-காட்டம் துளவு தேட்டம் சிறு
மகளிர்களெப்போதினுங் கூட்டம் பல

மனமாயினள் கனவாயின பொழுதோதுதி யரவீசல
மலையினின்றவ வென்பாள் அந்தத்
துளவினையே வாரித் தின்பாள்

கடத்தையிடுப்பினில் எடுத்து
மாலை தொடுத்து கலையுடுத்து தெளி
காமருநீர்நதி யடுத்து வரு

கதிர்மேல்திசை யுறுபோதினில் வருவாளன நுகராளிது
காலமென்பாள் கடு கடுத்து மேனி
சாலத் தரையினிற் படுத்து

வண்ணத்தனமது வல்லை
சிறுதொல்லை முகை முல்லை தனை
மானப்பொடிக்கவு மில்லை இவள்

வடிவாள்விழி தருபார்வைகள் மலரார்கணை மதனாகம
மந்திரஞ்சாற்றுவ தொக்கும் வெகு
தந்திரங்காட்டுமெ வர்க்கும்

மண்ணிற்பிறந்தநாள் தொட்டு
நகைநட்டு பல பட்டு தினம்
வாங்கினேனேயிவ ளிட்டு எனது

மனமுந்திரி யாதேசில சனமுங்குறி யாதேமதி
மங்கைக்கழகிது வன்றே வரும்
பங்கத்துக்கேயிட மின்றே

நாழிகைக்கொவ்வொரு சேலை
வனைதல்வேலை அந்தி மாலை மெல்ல
நடப்பாளேயிச்சிறு பாலை சில

நாளிப்படியாய் விட்டிடிற் கேலித்துறை யாமிப்படி
நாணமெல்லா மெங்கே போச்சோ கண்ணால்
நானுமிதைப் பார்க்க லாச்சோ

தாழிப்பானையினை யுடைத்தும்
கதவடைத்தும் முகந்துடைத்தும் என்றன்
சாமிநீயுன்னென்று படைத்தும் செக
சாலதந்திர மோகனாஞ்சன பாலசுந்தர கோல
ரஞ்சித
தையலைப்போலவும் ஆவாள் அவன்
மையலிற் கேட்டதை ஈவாள்

பாயலிற்படுக்க நேராள்
மனந்தேராள் பசி தீராள் மரப்
பாவையோடாடல்கள் பாராள் செய்த
பாவமோபலர் கோபமோவெவர் சாபமோவிது
தேறிலேனுடல்
பதறுகின்றதடி பாவி நெஞ்சு
சிதறுகின்றதடி மேவி

ஆயமுமே றிட்டு நோக்காள்
அமுத வாக்காள் தமிழ் மூக்காள் மனம்
ஆயிற்கிளியொன்று நீக்காள் வடி
அலரைங்கணை மதனன்சிலை வளையும்படி யென
நின்றிடும்
அத்தகையாப்புரு வத்தாள் மல
ரொந்தகைசீருரு வத்தாள்

ரீயமுநேரறுமிடையாள் அனநடையாள்
வாழைத் துடையாள் வரு
சிங்காரமாகிய உடையாள் பிறழ்
சேலுங்கதிர் வாளும்பொரு மீனுங்கடு வேலும்புரை
செவ்வரியோடிய கண்ணாள் அவள்
எவ்வெவர்தீமையும் எண்ணாள்

தூயவில்லிபுத்தூ ராண்டாள்
பெயர் பூண்டாள் குறை வேண்டாள் நறுந்
தூய்மையலாதன தீண்டாள் வளர்
சுந்தரங்கிள ரந்தரம்பொலி யிந்திரன்தனு வந்துரைந்திடு
தோற்றத்திற்காட்டிய நுதலாள் கொடு
மாற்றமும் பேசிட நுதலாள்

கொங்குமார் மல்லிகைச்செண்டு
குழல்வண்டு மொழிகண்டு எழில்
கூருமுழந்தாளும் ஞெண்டு மலர்
குமுதத்திரள் மலரத்திகழ் நிலவிற்பொலி விது
வைப்புரை
கொண்டவிர்சீதள முகமே அருள்
மண்டிய கோமள வகமே

பங்கயபாதத்துக் கொப்பு
சொல்லல் தப்பு நனி செப்பு தனிப்
பாடற்கமுதங்க சப்பு மிகு

பரிமளாகர வமுதசோபித மதனனேமுறு
வடிவினாலுயர்
பாக்கியத்தாளிவள் அம்மா இச்சி
லாக்கியம் வருமா சும்மா

கங்கைச் சுழியுந்தித் தடமே
அல்குற் படமே வயிறிடமே மதன்
கன்னியர் காமுறு வடமே பசுங்
கமுகத்தினில் அழகுற்றணி புனைபத்திர
ளுருவத்தொடு
காமருசீர்கழுத் தன்னாள் பல
பாமர தேவரை எண்ணாள்

மங்கைப்பருவமிப் போது
வயதேது இலைசூது கொடு
வாதுமில்லாதவள் சாது அந்த
மாசுணாசல மாலையார்திரு மாதுமார்பனை
யோதலாலிவள்
மானிட மங்கையு மல்ல எங்கள்
சானகியே நிகர் சொல்ல (8)

---

8) சின்னஞ்சிறுக்கிதான் என்ன – சின்னஞ்சிறு பெண் என ; பணி மின்ன - அணிகள் ஒளிர ; சடை பின்ன - குழலினைப் பின்னி விடவும் ; தனி சென்றாளே சந்தேகம் மன்ன – ஐயம் பொருந்தத் தனியாகச் சென்றாள் ; உயர் – மேன்மையான ; சேவற் கொடியானை – சேவலைக் கொடியாகக் கொண்ட முருகனை ; தொடர் பாவப்பிணி - தொடரும் பாவநோய் ; ஓட - நீங்க ; துணை செய்தவன் ; பால் - துணை புரிந்தவனிடம் ; உண்டோபாசம் - பற்றுளதோ ; இது - இச் செயல் ; கைதவமே – வஞ்சகமே ; மிகு மோசம் - மிக்க பிழையாம் ; கன்னத்தில் – கன்னங்களில் ; பற்குறிகாட்டும் – பற்களினடையாளம் வெளியே காணப்பெறும் ; உடல் ஆட்டும் - மேனி நடுக்கம் ; பழி நாட்டும் - நிந்தை சேர்க்கும் ; கலிகாலக் கொடுமையை நீட்டும் - கலியுகக் கொடுமைகளை எதிரே நீட்டும் ; விடு – விடுபட்ட ; கணை

யிற்பொலி - அம்பென விளங்கும் ; விழிகட்கடை - கடை விழிகள் ; அருணத் தொளிபடுதற்கு - சூரிய ஒளி படுவதற்கு ; உறு - அடையும் ; கள்ளத்தை - திருட்டுத்தனத்தை ; என்ன சொல்வேன் - யாதெனக் கூறுவேன் ; பலர் - அதிகமானவர் களின் ; உள்ளத்துக்கு - மனத்துக்கு ; ஒத்ததுதானே - ஏற்றது தான் ; வடக்கு முகத்திசையில் - வேங்கடமுள்ள வடதிசையில் ; நாட்டம் - நோக்கம் (விருப்பம்) ; என்மேல் - என் மீது ; காட்டம் - கோபம் ; துளவினில் தேட்டம் - துளசிபால் விருப் பம் ; சிறு மகளிர் - சிறு பெண்கள் ; எப்போதினும் - எச் சமயத்தும் ; கூட்டம் - கூடியிருத்தல் ; பல மனமாயினள் - பலவித நினைப்புள்ளவளானாள் ; கனவாயின பொழுதோ - கனவு கண்டபோது ; அரவாசல - சேஷாசல (வேங்கட) ; மலையில் நின்றவ என்பாள் - வரையில் நின்ற திருக்கோலத் தானே என உரைப்பாள் ; அந்தத் துளவினையே - அத் துளசி இதழ்களையே ; வாரித்தின்பாள் - அள்ளி உண்பாள் ; கடத்தை - குடத்தை ; இடுப்பினில் எடுத்து - இடையில் எடுத்து ; மாலை தொடுத்து - மாலைகள் கட்டி ; கலை உடுத்து - நல்லாடை புனைந்து ; தெளி - தெளிந்த ; காமரு - விருப்பந் தரும் (சோலை சூழ்) ; நீர்நதி - நீருள்ள ஆற்றை ; அடுத்து - சமீபித்து ; வருகதிர் - வானில் வரு சூரியன் ; மேல் திசை - குடதிசை ; உறுபோதினில் - வரும் நேரத்தில் ; வருவாள் - வந்து சேரு வாள் ; அனம் நுகராள் - சோறுண்ணாள் ; இது காலம் என் பாள் - இது போதாத காலம் என்பாள் ; கடுகடுத்து - வெறுப்புற்று ; மேனி - உடல் ; சால - பொருந்த ; தரையினில் - நிலத்தில் ; படுத்து - கிடந்து ; வண்ணத் தனமது வல்லை - அழகிய முலைகள் சூதாடுகாய் ஒத்தவை ; சிறு தொல்லை - சிறிது தொல்லை தருவது (கனத்தால்) ; முகை முல்லைதனை - முல்லை அரும்பை ; மான - ஒப்ப ; பொடிக்கவுமில்லை - வாடவில்லை ; இவள் - இவளுடைய ; வடிவாள் விழி - வடித்த வாளனைய கண் களின் ; தருபார்வைகள் - நோக்குகள் ; மலரார் கணை மதன் - புஷ்ப பாணன் மன்மதனின் ; ஆகம - நூலின் ; மந்திரம் - மந்

திரங்களை ; சாற்றுவதுஒக்கும்-கூறல் நிகர்க்கும் ; வெகுதந்திரம் காட்டும் எவர்க்கும் - யாருக்கும் பல உபாய வழி காட்டும் ; மண்ணில் பிறந்த நாள் தொட்டு - பூமியில் பிறந்த நாள் முதல் ; நகை நட்டு - பல ஆபரணங்கள் ; பல பட்டு - பற்பல பட்டாடைகள் ; தினம் - நாளும் ; வாங்கினேனே இவளிட்டு - இவளுக்காக வாங்கினேன் ; எனது மனமும் தரியாதே - என் மனசும் உணராமல் ; சில சனமும் குறியாதே - சில மக்களை யும் நினையாமல் ; மதி மங்கைக்கு - புத்திசாலிப் பெண் ணுக்கு ; அழகிதுவன்றே - இஃது அழகல்லவே ; வரும் பங்கத் துக்கே இடம் - எதிர் வரும் அவமானத்துக்குரிய சூழ்நிலை ; இன்றே - இப்போதேயாம் ; நாழிகைக் கொவ்வொரு சேலை - வேளைக்கொரு புடவை ; வனைதல் - அணிதல் ; வேலை - இவள் தொழில் ; அந்தி மாலை - சாயங்காலத்தில் ; மெல்ல - மெதுவாக ; நடப்பாளே இச்சிறுபாலை - வெளியே செல்லு வாள் இச்சிறு பெண் ; சில நாள் - சில காலம் ; இப்படியாய் விட்டிடில் - இப்படியே விட்டால் ; கேலித் துறையாம் - கேலிக்கு இடமாகும் ; இப்படி - இவ்வாறு ; நாணமெல்லாம் - வெட்கம் எல்லாம் ; எங்கே போச்சோ - எவ்விடம் சென் றதோ ; கண்ணால் - விழிகளால் ; நானும் - தாயாம் நானும் ; இதைப் பார்க்கலாச்சோ - காணலாயிற்றோ ; தாழிப் பானை யினை உடைத்தும் - குடம் போன்ற பானைகளை நொறுக்கி யும் ; கதவு அடைத்தும் - கதவுகளைச் சாத்தி மூடியும் ; முகந் துடைத்தும் - முகத்தைத் துடைத்தும் ; என்றன் சாமி - என் கடவுளே ; நீ உண்ணென்று - நீ அருந்து என்று ; படைத்தும் - அளித்தும் ; செகசால தந்திர - உலகை மயக்கும் உபாயங்களுடைய ; மோகன - எழில் சேர் ; அஞ்சன - கரிய ; பால சுந்தர - இளமையழகுமுடைய ; கோலவடிவ ரஞ்சித - அழகிய இன்பமான ; தையலைப் போலவும்-பெண் போலவும் ; ஆவாள் - விளங்குவாள் ; அவன் மையலில் - அவன் பால் ஏற் பட்ட மயக்கத்தில் ; கேட்டதை - விரும்பியதை ; ஈவாள் - அளிப்பாள் ; பாயலில் - படுக்கையில் ; படுக்க நேராள் - கிடக்க விரும்பாள் ; மனம் தேராள் - உளம் தேர்ச்சியடை யள்ா; பசி தீராள் - உண்ணமாட்டாள் ; மரப்பாவையோடு -

மரப் பொம்மைகளுடன் ; ஆடல்கள் பாராள் - விளையாட மாட்டாள் ; செய்த பாபமோ - முன் செய்த தீ வினையோ ; பலர் கோபமே - பலர் காட்டிய சினமோ ; எவர் சாபமோ - யாரிட்ட சாபமோ ; இது தேறிலேன் - இதை உணரவில்லை ; உடல் பதறுகின்றது அடி - அடியே மெய் நடுங்குகின்றது ; பாவி - பாவியே ; நெஞ்சு - மனம் ; சிதறுகின்றது மேவி - உன் செயலால் சுக்கலாக உடைகின்றது ; ஆயமும் ஏறிட்டு நோக்காள் - பாங்கியரை நிமிர்ந்து பாராள் ; அமுத வாக்காள் - இனிய சொல்லாள் ; குமிழ் மூக்காள் - குமிழனைய நாசியாள் ; மனம் ஆயில் - உள்ளம் இருந்தால் ; கிளி ஒன்று நீக்காள் - ஒரு கிளியை விட்டுப் பிரியாள் ; வடி - தேனுள்ள ; அலரைங்கணை - பஞ்ச புஷ்ப பாண ; மதனன் - மன்மதன் ; வளையும் படி என - வளைத்தது போல ; நின்றிடும் - இருக்கும் ; அத்தகையாம் - அப்படிப் பட்ட ; புருவத்தாள் - புருவ முடையாள் ; மலர் ஒத்த - மலரனைய மெல்லிய ; கை - கரம் ; சீர் உருவத்தாள் - எழில் வடிவினாள் ; சீயமும் நேராறும் - சிங்கமும் ஒப்பாகாத ; இடையாள் - மெல்லிய இடையினாள் ; அன நடையாள் - அன்னம் போன்ற நடையாள் ; வாழைத் துடையாள் - வாழை மரமனைய துடைகளினாள் ; வரு சிங்காரமாகிய உடையாள் - எழில் வரும் ஆடையினாள் ; பிறழ் - துள்ளும் ; சேலும் கதிர் வாளும் பொரு - ஒளி வீசும் வாளையும் ஒத்த ; மீனும் - மீன்களும் ; கூடுவேலும் - கூரிய வேலும் ; புரை - ஒத்த ; செவ்வரி ஓடிய - சிவந்த கோடுகள் படர்ந்த ; கண்ணாள் - விழியாள் ; அவள் - அம்மகள் ; எவ்வெவர் - யாருடைய ; தீமையும் - தீங்குகளையும் ; எண்ணாள் - நினையாள் ; தூய வில்லி புத்தூர் ஆண்டாள் - தூய்மையான ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆண்டாள் நாச்சியாரின் ; பெயர் பூண்டாள் - நாமம் புனைந்தாள் ; குறை வேண்டாள் - குறைவானவை விரும்பாள் ; நறும் தூய்மையலாதன - மிக்க பரிசுத்தமல்லாதனவற்றை ; தீண்டாள் - தொடமாட்டாள் ; வளர் சுந்தரம் கிளர் - அழகு மேலும் பெருகி மலியும் ; அந்தரம் பொலி - வானில் விளங்கும் ; இந்திரன் தனு - இந்திரன் வில் (வான வில்) ; வந்து உறைந்

திடு தோற்றத்தில் - வந்து தங்கிக் காட்சி தருவது போல ; காட்டிய - காண வரும் ; நுதலாள் - நெற்றியாள் ; கொங்குமார் மல்லிகைச் செண்டு - வாசனை தரு மார்பகம், மல்லிகைப் பூப் பந்தாகும் ; குழல் - கூந்தல் ; வண்டு - வண்டாகும் ; மொழி - சொற்கள் ; கண்டு - கற்கண்டாகும் ; எழில் கூரும் - மிக அழகிய ; முழந்தாளும் - முழங்கால்களும் ; ஞெண்டு - நண்டாகும் ; மலர் - இதழ்விரியும் ; குமுதத்தின் மலர - குவளை மலர்க் கூட்டம் விரிய ; திகழ் - விளங்கும் ; நிலவிற் பொலி - குளிர் கிரணமுடைய ; விதுவைப் புரை கொண்டு - சந்திரனை ஒத்திருந்து ; அவிர் - பொழியும் ; சீதளமுகமே - குளிர்ச்சியான முகம் ; அருள் மண்டிய - அருள் நிறைந்த ; கோமள - மென்மையான ; அகமே - உள்ளம் ; பங்கய பாதத்துக்கு ஒப்பு சொல்லல் தப்பு - திருவடிகளுக்கு உவமையாகத் தாமரை மலரைக் கூறுவது பிழை ; நனி செப்பு - மிகவும் கூறும் ; தனிப் பாடற்கு - தனியான பாடலினிமைக்கு ; அமுதம் கசப்பு - ஒப்பு நோக்கில் அமுதமும் கசப்பாகும் ; மிகு பரிமளாகர - மிக்க சந்தோஷத்திநிருப்பிடமாகிய ; அமுத சோபித - இனிய அழகிய ; மதனன் - மன்மதன் ; ஏமுறு வடிவினால் - களிப்படையும் உருவால் ; உயர் - மேலான ; பாக்கியத்தாளிவள் - அதிருஷ்டசாலி ; அம்மா - ஆச்சரியம் ; இச்சிலாக்கியம் - இப்புகழ் ; சும்மா வருமா - வறிதே வருமா ; கங்கைச் சுழி - கங்கை நதி நீர்ச் சுழல் ஒத்து ; உந்தித்தடமே - கொப்பூழ்ப் பகுதி ; அல்குல் படமே - நிதம்பம் பாம்பின் படம் ஒத்தது ; வயிறிடமே - வயிறாம் பகுதி ; மதன் கன்னியர் காமுறு - இளம் பெண்கள் விரும்பும் ; வடமே - ஆலிலையாம் ; பசுங்கமுகத்தினில் - பசிய பாக்குப் பழம் போல ; அழகுற்று - எழில் கொண்டு ; அணி புனைய - ஆபரணம் பூண்டு ; திரள் உருவத்தொடு - திரண்ட வடிவுடன் ; காமருசீர் - விரும்பும் சிறப்புடைய ; கழுத்தன்னாள் - கழுத்தினாள் ; பல - பலவான ; பாமரதேவரை - சிறு தெய்வங்களை ; எண்ணாள் - நினையாள் ; மங்கைப் பருவமிப்போது - இப்போது மங்கைப் பருவத்தாள் ; வயதேது - தக்க வயது எது ; இலைசூது - வஞ்சனை இல்லா

தாள் ; கொடுவாது மில்லாதவள் - கொடிய வழக்கிடாதவள் ; சாது - சாந்த குணத்தாள் ; அந்த - அதோ உள்ள ; மாசுணா சல - சேட மலை ; மாலையார் - மாலை பொருந்திய ; திரு மாது மார்பனை - இலக்குமியை மார்பிற் கொண்டவனை ; ஓதலால் - கூறுவதால் ; இவள் மானிட மங்கையும் அல்ல - இவள் மனிதப் பெண்ணன்று ; எங்கள் சானகியே நிகர் சொல்ல - ஒப்புமை கூறில் இவள் எங்கள் சானகிப் பிராட்டிக்கு நிகராவாள் ;

---

பாதிராத்திரி வேளையில் என்ற சந்தம்

வாளராப்பட நீழல் வாயெலி
வைகிவாழ்வுறு பாலை யெனும்
வனத்திலே சிறு வாலை மிகு
வருத்தமாயிந்த வேலை தனில்
வடக்கு நோக்கிமுன் நடக்குமாறெவன்
வழியினி லுண்டோ சோலை

காளவாய்ப்புலி யானையோடெதிர்
கரடிவாழ்தரு கானம் அது
கழுகுவாழும யானம் நேரே
காண்பதுங்கண்ணுக் கீனம் மழைக்
காருஞ் செல்கில தென்னிலேகுனர்
கையிற்கிட்டுமோ பானம்

பாவியானொரு பெண்பிறந்தது
பார்க்கும் வேளையிற் பாபம் இந்தப்
பாதகிக் கென்ன கோபம் எவர்
பகர்ந்ததோவிந்தச் சாபம் உடல்
பதைக்குதே நெஞ்சந் திகைக்குதே யிந்தப்
பாவையாலென்ன லாபம்

பாலுஞ்சீனியுந் தேனும்பாகொடு
பழமுமேநுகர் பாவை கண்டு
பயக்குமோமந்த மாவை மலர்ப்

பாதந்தானெந்த நோவைப் பட்டு
பதைத்ததோ வினி யிருக்கவேண் டிலன்
பறிப்பனானென்றன் நாவை

மந்தமாருதம் வீசுசாளர
மாடகூடங்கள் நீங்கித் திரு
மாலையே மனந் தாங்கி கெடு
மதியினாலொரு பாங்கி நன்கு
வருத்தவாய்மையு மறந்துபோயின
வண்ணமோர்கிலன் ஏங்கி

பந்தமாதிய தொந்தம் நீங்கிய
பரம ஞானிகள் என்ன மனப்
பற்று நீத்தவர் பன்ன முன்னைப்
பழைய வாசனை மன்ன என்றன்
பாவையேகினள் கோவையாரமும்
பரிதிபோலொளி மின்ன

மாலை வாய்ப்படு வேலைபின்முற்று
மாலையாயிந்த மாது பாலை
வனத்திற்போவதென் சூது பாத
மலரும் வேகுமிப் போது பரி
மளத்தண்பாயலில் நடக்கக்கூசுமென்
மகட்குத் தான்சுக மேது

ஆலவாய்ப்பட நாகமாமலை
யையன்மேலுளங் காதல் விஞ்சி
யல்லவோவிவள் போதல் இதற்
கையம் வேறென்ன வோதல் இனி
யாரைத்தானிந்த வூரைத்தான்மற்றை
யவரைத்தானெண்ணி நோதல்

காலைவாய்ப்பகல் வேளைவாய்மெத்தக்
கனலெரித்திடுங் காட்டில் உடல்
கருகவேயவள் பாட்டில் செல்லக்
கண்ட தாரிந்த நாட்டில் வெகு

காலம் வல்லவர் பாடுமோர்கவி
காணுவாரெழு தேட்டில்

ஆலகாலமும் நேரிலாதன
வாகுமேயந்தக் காடு எந்த
அறிஞராய்குவர் ஈடு அதை
அண்டினோருடற் கூடு மண்ணில்
அழிந்திடும் மெத்தக் குழிந்திடுங்கண்கள்
ஆகாவீதென்ன பாடு

வேதனைக்கிட மாகவைத்தெனை
விட்டு நீங்கிய மின்னே நிகர்
வேறிலாதொளிர் பொன்னே தலை
விதியை நோவது மென்னே உடல்
வெந்துநீறவும் நொந்துமாவதென்
விளிதல் செய்குவன் இன்னே

காதமாயிர மாயினுஞ்சுடு
காடுமேவிய வன்னி கண்டு
கலங்குமேபல பன்னி மலர்
கருகுமே குழற் சென்னி செழுங்
கஞ்சநேர்பத மஞ்சவேமதைக்
கடக்குமோவென்றன் கன்னி

போனராத்திரி வேளையில்மெத்தைப்
பூவுலர்ந்தது கண்டு மிகப்
புழுங்கினேனுளங் கொண்டு மலை
போலுமாமுகை ரண்டு புணர்
போகசாதன காமமீறிய
பொலிவு காட்டுவ துண்டு

ஆனதாலிந்த வாலை சாமளம்
ஆனருபனை நாடி முதிர்
அமுதம் போற்கவி பாடி அந்த
அண்ணலார் தமைத் தேடி சுரம்
அணுகினாளிந்தக் குமரியானவள்
அறைகுவேனொரு கோடி

செய்யபாதமும் நோவத்தானிவள்
சென்றதே பெருந் தோடம் செய்யுஞ்
செங்கையேவெறும் வேடம் இந்தச்
சிறுசிலேயிது பாடம் எவர்
செப்பினாலுந்தன் கற்பனாமதி
தீர்கிலாளென்வி சேடம்

ஐயையோ வொரு பெண்பிறந்ததை
யாரிடத்துரை செய்வேன் இனி
யாரை யாரையான் வைவேன் இதை
யறியவேயுளம் நைவேன் மதி
யறிவிலாதவர் தெரிகிலாதுயர்
அருளினாலினி உய்வேன் (9)

---

9) வாள் அராப் பட நீழல் வாய் - ஒளி சேர் பாம்பின் பட நிழலில்; எலி - எலிகள்; வைகி - தங்கி; வாழ்வுறுபாலை - வாழும் பாலை நிலம்; எனும்-என்ற; வனத்திலே - காட்டிலே; சிறுவாலை - சிறுபெண்; மிகுவருத்தமாம் - மிக்க துன்பத்தோடு; இந்த வேலைதனில் - இந்தப் பொழுதில்; வடக்கு நோக்கி - வடதிசை நோக்கி; முன்நடக்கு மாறெவன் - முன் செல்வதேன்; வழியினில் உண்டோ சோலை - இடை வழியில் இளைப்பாறச் சோலைகளும் உண்டோ; காளவாய்ப்புலி - தீயுமிழ் வாயுடைய புலி; யானையோடு - யானைகளுடன்; எதிர் - முன்வரு; கரடி வாழ்தரு - கரடிகள் வாழும்; கானம்- காடு; அநு கழுகு வாழும் மயானம் அப்பாலைபிணம் தின்னும் கழுகுகள் வாழும் சுடுகாடு; நேரே காண்பதும் - நேராகக் கண்ணால் காண்பது; கண்ணுக்கு-விழிகட்கு; ஈனம்-கேடு; மழைக் காரும் - கார் மேகமும்; செல்கிலதென்னில் - அங்கு வராதெனில்; ஏகுனர் - அவ்வழிச் செல்வோர்; கையிற்கிட்டுமோ பானம் - கைகளில் குடிநீர் கிட்டுமோ; பாவியானொரு பெண் பிறந்தது - யான்ஒரு பெண்ணாகப் பிறந்த அபலை; பார்க்கும் வேளையிற்பாபம் - பிறந்தவேளைப் பலன் பார்த்ததில் அது பாபம் என்கிறது; இந்தப் பாதகிக்கு என்ன கோபம் - இத் துரோகிக்கு என்ன கோபம்; எவர் பகர்ந்ததோ இந்தச் சாபம்-

யார் கூறிய சாபமோ; உடல் பதைக்குதே - உடல் பதறு கின்றது; நெஞ்சம் திகைக்குதே - மனம் மயங்குகின்றது; இந்துப் பாவையாலென்ன லாபம் - இந்தப் பெண்ணால் என்ன ஆதாயம்; பாலும் சீனியும் தேனும் பாகொடு - பால், சர்க்கரை, தேன், வெல்லப்பாகுடன்; பழமுமேதுகர் பாவை - பழங்களே உணவாகக் கொள்ளும் பெண் இவள்; கண்டு பயக்குமோ மந்தமாவை - யானையைக் கண்டு அஞ்சுமோ (மந்தமா - யானை); மலர்ப்பாதம்தான் - மலரடிகள்; எந்த நோவைப் பட்டு பதைத்ததோ - என்ன வலிகொண்டு பதறியதோ, இனி இருக்க வேண்டிலன் - இனியும் உயிர்தரிக்க விரும்பவில்லை; பறிப்பன் நான் என்றன் நாவை நான் என் நாக்கைப் பிடுங்கிக் கொள்வேன்; மந்தமாருதம் - இளந்தென்றல்; வீசும் - பரவுகின்ற; சாளர - ஜன்னலுடைய; மாட கூடங்கள் நீங்கி - மாட மாளி கையை விட்டு; திருமாலையே - மகாவிஷ்ணுவையே; மனம் தாங்கி - உளத்தில்தரித்து; கெடுமதியினால் - கெட்ட புத்தி யால்; ஒரு பாங்கி - ஒரு தோழி; நன்கு வகுத்த - நன்றாகத் தொகுத்துரைத்த; வாய்மையும் - உரையும்; மறந்து போயின வண்ணம் - மறந்து போனதன்மை; ஓர்கிலன் ஏங்கி - ஏங்கி உணரவில்லை; பந்தமாதிய - பற்றுக்கள் முதலிய; தொந்தம் நீங்கிய - தொடர்பு நீங்கிய; பரமஞானிகள் என்ன - மிகுந்த ஞானிபோல; மனப்பற்று நீத்தவர்பன்ன - உளப்பற்றறுத்த வர் கூற; முன்னைப் பழைய வாசனை மன்ன - முன்சென்ம நினைப்பு விளங்க; என்றன் பாவை - என் பெண்; கோவை யாரமும் - முத்துமணிகள் கோத்த மாலைகளும் (மார்பில்); பரிதிபோல் - சூரியன்போல; ஒளிமின்ன - சுடர்விட; ஏகினள் - சென்றாள்; மாலைவாய்ப்படு வேலை - சூரியன் மறையும் மாலை நேரத்தில்; பின் முற்றுமாலையாய் - பின் முதிர்ந்த மயக்கத்துடன்; இந்தமாது - இப்பெண்; பாலை வனத்தில் - சுடுசுரத்தில்; போவதென் சூது - செல்வதென்ன மாயம்; பாதமலரும் - மலரடிகளும்; வேகுமிப்போது - இப் போது வெந்து போகும்; பரிமளத் தண்பாயலில் - வாசனை யும் குளிர்ச்சியும் மிக்க நடை பாவாடையில்; நடக்க - நடந்து செல்ல; கூசும் என் மகட்குத்தான் - அஞ்சும் என் பெண்

ணிற்கு ; சுகம் ஏது - நலம் ஏது (இன்பம்) ; ஆலவாய்ப்பட நாக மாமலை - விடமுள்ள வாயுள்ள படங்களை உடைய சேடாத்திரி ; ஐயன் மேல் - தலைவன் மீது ; உளம் காதல் - மனத்திலன்பு ; விஞ்சியல்லவோ - மிக்கதாலன்றோ ; இவள் போதல் - இவள் அங்கு செல்லுதல் ; இதற்கையம் வேறென்ன ஓதல் - இதில் சந்தேகம் வேறு என்ன கூறுவது ; இனியாரைத் தான் - இனி வேறுயாரையோ ; இந்த ஊரைத்தான் - இவ் வூரையோ ; மற்றையவரைத்தான் - மற்றும் பிறரையோ ; எண்ணி நோதல் - நினைந்து வருந்துவது ; காலைவாய் - காலையிலும் ; பகல் வேளைவாய் - பகற்போதிலும் ; மெத்தக் கனல் எரித்திடும் காட்டில் - மிகு வெம்மை காயும் பாலையில் ; உடல் கருகவே அவள்பாட்டில் - மேனி கருநிறம் கொள்ள அவள் துன்பத்தோடு ; செல்ல - போக ; கண்டதாரிந்த நாட்டில் - இந்நாட்டில் யார் பார்த்தார்கள் ; வெகு காலம் - நீண்டகாலமாக ; வல்லவர் - கற்றறிந்த வல்லவர்கள் ; பாடும் - இசைக்கும் ; ஓர் கவி - ஒரு செய்யுள் ; காணுவார் - கற்பனையாகக் காண்பார்கள் ; எழுது ஏட்டில் - தாம் வரையும் ஏடுகளில் ; ஆலகாலமும் - ஆலகாலவிடமும் ; நேரிலாதன வாகுமே - ஒப்பாகாதது கொடிய ; அந்தக்காடு - அக்கானகம் ; எந்த அறிஞர் ஆய்குவர் ஈடு - எந்தப் பேரறிஞர் இதற்கிணை ஆய்ந்தறிவர் ; அதை - அக்காட்டை ; அண்டினோர் நெருங்கியவர் ; உடல் கூடு - மேனி சுருங்கி எலும்புக்கூடாகி ; மண்ணில் - நிலத்தில் ; அழிந்திடும் - அழியும் ; மெத்தக் குழிந்திடும் கண்கள் - விழிகள் மிகவும் குழிபோலாகும் ; ஆகா ஈதுஎன்ன பாடு - ஐயோ இஃதென்ன கஷ்டம் ; வேதனைக்கிடமாக வைத்து - துன்பத்துக்கு இருப்பிடமாகவைத்து ; எனை விட்டு நீங்கிய மின்னே - என்னை விட்டுப் பிரிந்த மின்னலனையாளே ; நிகர் வேறிலாது - வேறு ஒப்பிலாமல் ; ஒளிர்பொன்னே - சுடரும் பொன்னனையாளே ; தலை விதியை - தலை எழுத்தை ; நோவதும் என்னே - நொந்துகொள்வது ஏன் ; உடல் வெந்து நீறவும் - மேனி வெம்மையினால் சாம்பராகவும் ; நொந்தும் - வருந்தியும் ; ஆவதென் - ஆகக்கூடியதென்ன ; விளிதல் செய்குவன் இன்னே - இப்போது வருந்துவேன் ; காதம் ஆயிர

மாயினும் - வெகுதூரத்துக்கப்பாலிருப்பினும்; காடு மேவிய வன்னி - காட்டிலுள்ள அக்கினி; சுடும் - எரிக்கும்; கண்டு - பார்த்து; கலங்குமே பல பன்னி - பல பன்றிகள் உளம் கலங்கும்; மலர் கருகுமே - பூக்கள் தீயும்; குழற்சென்னி - தலையிலுள்ள கூந்தலில்; செழுங்கஞ்ச நேர்பதம் - தாமரை ஒத்த அடிகள்; அஞ்சவேம் - பயப்படும்படி வெந்துபோகும்; அதை - அந்தப் பாலையை; கடக்குமோ என்றன் கன்னி - என் கன்னிப்பெண் கடப்பாளோ; போன ராத்திரி வேளையில் - கடந்த இரவு நேரங்களில்; மெத்தைப்பூ உலர்ந்தது கண்டு - கிடக்கையில் மலர் காய்ந்தது நோக்கி; மிகப் புழுங்கினேன் உளங்கொண்டு - மனத்தில் மிகவும் வேதனையடைந்தேன் மலைபோலு மாமுகைரண்டு - மலையனைய பெரு முலைகள் இரண்டு; புணர் - கூடும்; போகசாதன காமம் மீறிய - இன்பத்துக்குத் துணையாம் அன்பு அதிகம் விஞ்சிய; பொலிவு - அழகு; காட்டுவதுண்டு - காண்பித்தல் உண்டு; ஆன தாலிந்தவாலை - அதனால்இச் சிறுமி; சாமளமான ரூபனை - மரகத வண்ணவடிவனை; நாடி - விரும்பி; முதிர் அமுதம் போல் கவிபாடி - நன்கு முதிர்ந்த அமிழ்தம் போல இசைபாடி; அந்த அண்ணலார் தமைத்தேடி - அத்தலைவரைத் தேடி; சுரம் அணுகினாள் - பாலைவனம் சேர்ந்தாள்; இந்தக் குமரி யானவள் - இந்தக் குமரிப்பெண் (கன்னி); அறைகுவேன் ஒரு கோடி - நான் ஒரு குறிப்புக் கூறுவேன்; செய்ய பாதமும் - சிவந்த அடிகள்; நோவத்தான் - வருத்தமுற; இவள் சென்றதே - இவள் போனதே; பெருந்தோடம் - பெருங் குற்றம்; செய்யும் செய்கையே - புரியும் செயல் யாவும்; வெறும் வேடம் - வீண் நடிப்பு; இந்தச் சிறுசிலே - இச்சிறு வயதில்; இது பாடம் எவர் செப்பினாலும் - இந்தக் கல்வி யார் உரைத்தாலும்; தன் கற்பனைமதி தீர்கிலாள் - தன் மனத்தில் கற்பனையாலுண்டாய அறிவை போக்ககில்லாள்; என் விசேடம் - என்ன சிறப்பு; ஐயையோ - அந்தோ; ஒரு பெண் பிறந்ததை - இவ்விதம் ஒருமகள் தோன்றியதை; யாரிடத்து உரை செய்வேன் - எவரிடம் கூறுவேன்; இனி - இனிமேல்; யாரை யாரை யான் வைவேன் - வேறு எவர் எவரைத் திட்டு

வேன்; இதையறியவே – இதை உணரவே ; உளம் நைவேன்– மனம் வருந்துவேன் ; மதியறிவிலாதவர் - புத்தியில் உணராதவர்கள் ; தெரிகிலாது - அறியமுடியா (இறைவன்) ; உயர் அருளினால் மேலான அருளால் - இனி உய்வேன் - இனி ஜீவிப்பேன்.

---

செந்தின்மாநகர்வாழ் கந்தநாதனிரு என்ற சந்தம்

தங்கரூபமெனு மங்கராகவொளி
தங்குமின்னல் மாலையே மொழி
பொங்குகன்னல் ஆலையே என்று

தங்கவாடையணி எங்கள் சாமியிரு
தாளையேந்திச் சிரமே மனந்
தாங்கியேத்தில் வரமே மிகத்
தானளித்தல் திரமே பல
சாற்றிலென்னவவன் மாற்றிலாததுதி
சாற்றுநூறு தரமே

மாநிவாச மறைச் சீநிவாசனிசை
வகுத்த சிந்து வாழியே இதைத்
துதித்த அன்பர் வாழியே தினம்
மதித்த நண்பர் வாழியே முடி
மாகநாகமலை யேகனோடுமலர்
மங்கைநாளும் வாழியே (10)

---

10) தங்கரூபம் எனும் - பொன்வண்ணமென்ற ; அங்கராக ஒளி - பூசும் களபத்தின் சோதி ; தங்கும் – இருக்கும் ; மின்னல் மாலையே - மின்னல் போன்ற மாலை (ஆரங்கள்) ; மொழி - வார்த்தைகள் ; பொங்குகன்னல் ஆலையே – பொங்கி வழியும் கரும்புச்சாறு பிழியும் யந்திரம் ; என்று – என ; தங்க ஆடையணி - பீதாம்பர மணிந்த ; எங்கள் சாமி - எம் இறைவன் ; தாளை ஏந்திச்சிரமே - திருவடிகளைத் தலையில் தாங்கி ; மனம் தாங்கி ஏத்தில் - மனம் இறுத்தித் தொழுதிடில் ; வரமே மிகத் தானளித்தல் - வரங்களை அவன் வழங்குதல் ; திரமே - உறுதி ; பல சாற்றில் என்ன - பல கூறி என்னபலன் ; அவன் -

அவ்விறைவன் ; மாற்றிலாத நுதி - ஒப்பிலாத தோத்திரங்களை ; சாற்றும் நூறு தரமே - நூறு தடவை கூறுங்கள் ; மாநிவாச - மகாலட்சுமி குடிகொண்ட ; மறை - வேதியன் ; சீநிவாசன் - ஸ்ரீநிவாசப் பெயரினான் ; இசை வகுத்த - இசையோடு பாடிய ; சிந்து வாழியே - திருமலைச் சிந்து வாழ்க ; இதை - இந்தச் சிந்துப் பாடலை ; நுதித்த - தோத்திரமாகப் பாடிய ; அன்பர் - பக்தர்; வாழியே - வாழ்க. தினம் - நாளும் ; மதித்த நண்பர் - பாராட்டிய நேயர்கள் ; வாழியே - வாழ்க ; முடிமாக நாகமலை ஏகனோடு - வானை முட்டும் சிகரமுடைய சேடாத்திரியுறை பரம்பொருளுடன் ; மலர் மங்கை - அலர்மேலுமங்கைத்தாயார் ; நாளும் - என்றும் ; வாழியே - வாழ்க.

---

**சீர்வளர் பசுந்தோகை என்ற சந்தம்**

திருவளர்த டஞ்சோலை மலையான் எங்கள்
திருமங்கை வருகங்கை யெதிர்பொங்கு மலையான்
தருவிடை வதிந்தோரை மலையான் பங்க
சாதர்பணி நாதனிரு பாதநினைவாமே

அந்தணரு வந்தோது மறையான் மதி
யன்பரரவிந்தமலர் நெஞ்சினிடை மறையான்
அந்தகர்த மக்கேது மறையான் மழை
யாழிமுகில் வாழியென நாளுநினை வாமே

ஒருசிந்து வருமன்பர் கவியான் அலை
யுயர்சிந்து குதிகொண்டு விசை முந்து கவியான
தெருள்சிந்து பவர்நெஞ்சு கவியான் இரு
சேவடியை யாவலொடு மேவிநினைவாமே

பொங்கர்மலி நாகமலை முடியான் ஒளி
பொங்கிவள ருங்கிரண சண்டனிக முடியான்
மங்கைகுழல் கொண்டதல முடியான் சரண
மாமலரை நேமமொடு யாமுநினைவாமே (11)

11) திருவளர் தடஞ் சோலை மலையான் - அழகு மிக்க பெருஞ் சோலைகள் உடைய மலையினான்; எங்கள் திரு மங்கை - எம் இலக்குமி தேவியும்; வருகங்கை - வானின் றிழிந்துவழி கங்கையும்; எதிர் பொங்கு - எதிரே விளங்கும்; மலையான் - வேங்கடமலையான்; தருவிடை வதிந்தோரை - கற்பக நிழலில் தங்கியுள்ள வானவரை; மலையான் - மறுத்தல் செய்யான்; பங்கசாதர் - மலரவன் பிரமா; பணி - வணங்கும்; நாதனிரு பாதம் - தலைவன் திருவடிகளை; நினைவாமே - சிந்திப்போமே; அந்தணர் - பிராமணர்; உவந்தோது - மகிழ்ந்து கூறும்; மறையான் - வேதத்தினான்; மதி - போற்றும்; அன்பரவிந்தமலர் - அன்பர்களின் தாமரை மலர் களை; நெஞ்சினிடை மறையான் - நெஞ்சில் மறையாமலணி வான்; மழை ஆழிமுகில் வாழி என - கடல் போல் மழை பொழியும் மேகம்; வாழி என - வாழ்க என்று; நாளும் - எப் போதும்; நினைவாம் - கருதுவோம்; ஒரு சிந்து வருமன்பர் கவியான் - ஒப்பற்ற சிந்துப்பாடல் உளத்துவரும் அன்பர் கவிதை ஏற்றவன்; அலை உயர் சிந்து - உயரமாக எழும்பும் அலைகடலை; குதி கொண்டு - தாவிக் குதித்து; விசைமுந்து - வேகமாகத் தாவும்; கவியான் - ஆஞ்சநேயனை, சிறிய திரு வடியாகக் கொண்டவன்; தெருள் சிந்துபவர் - தெளிவற்றவர்; நெஞ்சுகவியான் - மனத்து விரும்பி இரான்; இருசேவடியை - இரண்டு சிவந்த திருவடிகளை; ஆவலொடு - ஆசையுடன்; மேவி - சென்று; நினைவாம் - கருதுவோம்; பொங்கர் மலி - சோலைகள் நிறைந்த; நாகமலை - சேடாத்திரி; முடியான் - சிகரத்தில் இருப்பவன்; ஒளி பொங்கி வளரும் - ஒளிமிக்கு வளரும்; கிரணசண்டன் நிகர் - சூரியன் ஒத்த; முடியான் - மகுடத்தான்; மங்கை - ஆண்டாள்; குழல் கொண்டது அல - கூந்தலிற் சூடியதல்லாது பிற மலர்கள்; முடியான் - அணிய மாட்டான்; சரணமாமலரை - அவன் திருவடித்தாமரையை; நேமமொடு - நியமமொடு; யாமும் - நாமும் (கவிஞர் தன்னை உளப்படுத்தியது) நினைவாம் - கருதுவம்; ஏ - அசை.

# மதுரகவி
# ஸ்ரீவேங்கடேசன்
# சந்திரகலா மாலை

# பாராட்டுரை

ப. ஸ்ரீ. திருமலை அய்யங்கார்
காரியதரிசி, திருவல்லிக்கேணி தமிழ்ச்சங்கம்,
சென்னை

வடசொற்கும் தென்சொற்கும் வரம்பிற்றாய்
நான்மறையும் மற்றை நூலும்
இடைசொற்ற பொருட்கெல்லாம் எல்லையதாய்
நல்லறத்துக்கு ஈறாய் வேறு
புடைசுற்றுந் துணையின்றிப் புகழ்பொதிந்த
மெய்யேபோற் பூத்து நின்ற
வடைசுற்றுந் தண்சாரல் ஓங்கியவேங்
கடத்திற்சென் றடைதிர் மாதோ

—கம்பர்

உயர்வும், சிறப்பும் உள்ளது வடக்குத் திருமலையாகிய திருவேங்கடம். வைகுந்தம், வேங்கடம், மாலிருஞ் சோலை என்ற முத்திருப்பதிகளிலும் விளங்கும் ஓர் பரஞ்சுடரே அழகன். மண்ணவர் காணவொண்ணா அழகன் வைகுந்தன் என்பான். விண்ணவரே காணக் கிடக்கும் அழகு வைகுந்தனது. மண்ணவர் ஏறி விண்ணவர் இறங்கி இருவரும் கலந்து காணப்பெறும் அழகன் வேங்கடக்கோன். அது மண்ணவரையும் விண்ணவரையும் ஓங்கச் செய்யும் அழகு. விண்ணவரும், மண்ணவரும் சந்தி செய்ய நிற்பவனே வேங்கடவெற்பன். ஆகலின் வைகுந்தனது அழகே வேங்கடவனாய் இரட்டித்தபடி.

உலகிற் காணப்பெறும் நெடிய குன்றங்கள் பலவற்றுள்ளும், நிலத்தில் உள்ளோரது பசித் துன்பத்தை நீக்கி, நிறை பயன்கள் எல்லாவற்றையும் எப்பொழுதும் அவர் பெறப் பயன்படு குன்றுகள் சில; அச்சிலவற்றுள்ளும் தெய்வங்கள் தாமாக விரும்பும் மலர்களையுடைய தடாகங்களும், மேகங்கள்படியும் சிகரங்களும் உடைய குலவரைகள் சிறந்தன. அக் குலவரை

கள் சிலவற்றிலும் சிறந்தது, திருமால் குன்றம் (திரு மலை); கோனேரி, ஆகாச கங்கை, பாப விநாசம், பாண்டவ தீர்த்தம், குமாரதாரை, தும்புரு தீர்த்தம், ஆழ்வார் தீர்த்தம், முதலியன அங்கு உள்ள பல புண்ணிய தீர்த்தங்கள். வெற்றியைக் கொண்ட சக்ராயுதத்தைத் தரித்த, கார்மேகம் போன்ற கரு நிறத்தையுடைய தேவாதி தேவனாகிய ஸ்ரீநிவாசனது விளங்குகின்ற இரண்டு தூய திருவடிகளை ஏந்தப் பெற்ற அந்தத் திருவேங்கட மாமலையில் வாழ்கின்ற திர்யக்குக்களும் மோட்சத்தை அடைகின்றன. அலர்மேல் மங்கையுறை மார்பன் ''மலைகுனிய நின்ற பெருமாள்'' என்ற திருநாமம் பெற்று விளங்குகின்றார் சேடமலை மேல்.

உலகம் போற்றும் உத்தமக் கவியாய்த் திகழ்ந்தவர் அநுமந்தபுரம் ஸ்ரீ. உ. வே. மதுரகவி ஸ்ரீநிவாசய்யங்கார் சுவாமி இவ்வுத்தமர் திருவேங்கட நாதனைக் குறித்துப் பாடிய பாடல்கள் பல.

இவர் ஸ்ரீ வேங்கடேசன் சந்திர கலா மாலை என்ற அரிய நூல் ஒன்று பாடியுள்ளார். இம்மாலை சந்த மினிய, செந்தமிழில் உள்ள 96 வகைப் பிரபந்தங்களுள் எண் செய்யுள் என்னும் பெயரது. எண் செய்யுளாவது-பாட்டுடைத் தலைவரது ஊரினையும், பேரினையும் புனைந்து பத்துப் பாட்டு முதல் ஆயிரம் பாட்டு வரை பாடி எண்ணாற் பெயரிடுவது.

இந்நன்னூல் 16 செய்யுளாய் அமைந்திருத்தலீற், ''சந்திரகலா மாலை'', என்று பெயர் புனையப் பெற்றுள்ளது. சந்திரகலை 16 என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. சந்திரனுக்குப் பதினாறு கலைகள் இருப்பது போலப் பதினாறு பாடல்களால் ஒரே மகுடத்தால் இறைவன் புகழ் பாடுவது சந்திர கலா மாலையாகும். இச்சீரிய நூல் காப்புச் செய்யுள் ஒன்று நீங்கலாக 16 பாக்கள் கொண்டது. இச்சிறு மாநூல் ''கங்கை தவழ்

தரு சரண கமலமும் (1) என்று தொடங்கி ''அரவகிரி வாசனே! அமரர் பய நாசனே! அகிலசுர கண வீசனே!'' (16) என்று முற்றுகின்றது. இம்மாலையில் ஒவ்வொரு பாட்டும் பாட்டுடைத் தலைவரது மகிமையையும், தலத்தின் அருமை, பெருமைகளையும் மிகவும் அழகாக வர்ணித்து உரைக்கின்றது. ஆதலின் இது யாவரும் வியந்து அநுபவிக்கத்தக்கதே.

பொங்கும் மங்களம்
எங்கும் தங்குக.

சென்னை
2 - 6 - 1957

ப. ரெ. திருமலை அய்யங்கார்
காரியதரிசி.

# மதுரகவி
# ஸ்ரீவேங்கடேசன் சந்திரகலா மாலை

காப்பு

முளரிகள் முறுக்குஅவிழ நிறையமது உண்டுஅளிகள்
மூசிஇசை பாட மறையோர்
மூலமறை ஓதிநதி மூழ்கிநியம ஆதிவினை
முற்றிடக் கற்றைஒளி பாய்
இளவெயில் எரித்துஉதைய வரையில்எழு தினகரனை
இனியசெங் கனியாம் என
எண்ணிமிசை பாயும்அநு மான்இரு கழற்பதுமம்
எமதுமுடி மீதுபுனை வாம்
வளமிகு பொழில் சிகரம் வரும்அருவி கனகமணி
வாரிவந்து இழியும் ஓதை
மத்தள ஒலிக்குநிகர் வடவேங்கடத்து உறையும்
மாசிலாக் கரிய மணியை
துளவுஅணி தரித்துஇலகு மரகதச் சோதியைத்
துயரறு சுடர்க் கடவுளைச்
சுந்தரத் தோளனைப் பைந்தமிழ்ப் பாவினால்
சொல்லும் என்கவி தழையவே

---

இது காப்புச் செய்யுள். மதுரகவி, தாம் பாடத் தொடங்கிய பிரபந்தம் இடையூறு இல்லாமல் இனிது முடியும் பொருட்டு உயர்ந்தோர் வழக்கத்தின் படியே கடவுள் வணக்கம் கூறுகின்றார். இது அநுமனாகிய சிறிய திருவடியைப் பற்றியது ஆகும். ஏனெனில், மதுரகவி தாம் வழிபடும் கடவுள், அநுமனையே பாடி வழிபட்டுள்ளார் என்க.

வளம்மிகு பொழில் சிகரம் - வளப்பம் மிகுந்த காடுகள் சூழ்ந்த மலை உச்சியினின்று ; வரும் அருவி - ஒழுகி வரும் நீரருவியானது ; கனகமணி வாரி வந்து இழியும் ஓதை - பொன்னையும் மணிகளையும் அடித்துக் கொண்டு வந்து வேகமுடன் பெருகுகின்ற ஓசையானது ; மத்தள ஒலிக்கு நிகர் - மிருதங்கத்தின் தாள ஒலிக்கு ஒப்பாகச் சிறக்கும் ; வடவேங்கடத் துறையும் – தமிழ் நாட்டின் வடதிசையில் உள்ள திருவேங்கட மலைமேல் கோயில் கொண்டுள்ள ; மாசிலாக் கரிய மணியை - குற்றமற்ற கரிய மாணிக்கம் போன்றவனை ; துளவு அணி தரித்து - திருத்துழாய் மாலையைச் சூடி ; இலகு – பொலிகின்ற ; மரகதச் சோதியை - மரகதம் போல் பச்சை நிறத்துடன் ஒளிரும் அவனை ; துயரறு சுடர்க் கடவுளை – பிறவித் துயரத்தை போக்கும் ஒளி மிக்க இறைவனை ; சுந்தரத் தோளனை - அழகுமிக்க புயங்களை உடையவனை ; பைந்தமிழ்ப் பாவினால் சொல்லும் என் கவி - இனிய பசுமையான தமிழ்ப் பாக்களால் பாடுகின்ற என்னுடைய பாட்டுக்களால் ஆகிய இந்நூல் ; தழைய - சிறந்து விளங்குமாறு ; முளரிகள் முறுக்கவிழ - தாமரை மலர்கள் தமது இதழ்கள் விரிய (அது கண்டு) ; அளிகள் - வண்டுகள் ; நிறையமது உண்டு - வயிறு நிறையும்படி தேனைக் குடித்து ; மூசி - (அம்மலர்களை) மொய்த்து ; இசை பாட - ரீங்கார ஒலி செய்யவும் (செய்யும் படியும்) : மறையோர் - வேதியர்கள் , மூல மறையோதி – மூல மந்திரமாகிய ஓம் என்ற பிரணவத்தை உச்சரித்து ; நதி மூழ்கி - நதியில் நீராடல் செய்து ; நியம ஆதி வினை முற்றிட - செய்கடனாகிய காலை அனுட்டானங்களை முடியச் (செய்யும் படியும்) செய்யவும் ; உதய வரையில் - உதய பர்வதத்தின் மேல் ; கற்றை ஒளி பாய் இளவெயில் எரித்து எழு தினகரனை - தொகுதிப்பட்ட வெளிச்சத்தைப் பரப்பிக் கொண்டு, இளங்கதிர்களை வீசிக் கொண்டு எழுகின்ற சூரியனை ; இனிய செங்கனியாமென எண்ணி - இனிமை பயக்கும் (கனிந்து) சிவந்த பழமாகும் என மாறுபட நினைத்து ; மிசைபாயும் - (நுகர விரும்பி) அதன் மேல் தாவிய ; அநுமான்

இருகழற் பதுமம் - அநுமனின் இரு திருவடித் தாமரைகளை யும்; எமது முடிமீது புனைவாம் - எம்முடைய தலைக்கணி யாகக் கொள்வோம்.

அநுமன் (குழந்தைப் பருவத்தில்) இளஞ் சூரியனைக் கனிந்த பழம் என்று பிடிக்கப் பாய்ந்த பொழுது, அதனை அறிந்து சினந்த இந்திரனது வச்சிராயுதத்தினால் அடிக்கப் பட்டுச் சிதைந்த கன்னம் உடையவன்; அநு -ஹநு, கடவுள், கன்னம்; மாந - வடமொழிப் பெயர் விகுதி; அளிகள் இசை பாடவும், மறையோர் வினை முற்றிடவும், எழு தினகரனை என முடியும்.

## நூல்

கங்கைதவழ் தருசரண கமலமும் மழுங்காத
கஸ்தூரி நாம நுதலும்
கனகமணி மகுடமும் பவளவாய் மூரலும்
கருணைமழை பொழி விழிகளும்

திங்கள்நிகர் வதனமும் அகலாமல் மலர்மங்கை
சேர்ந்துவாழ் திரு மார்பமும்
தினகரனை அனைய ஒளி மகரகுண் டலம்மருவு
செவியும்ஆ சானு பாகும்
மங்குலொடு பச்சைமா மலையனைய வடிவமும்
வரஅபய கரதலமும் என்
மனமீது குடிகொண்டு வாழ்வடையு மாகருதி
வந்தருட் சேவை தருவாய்
அங்கண்மா ஞாலமும் எங்குமாய் நின்றருளும்
ஆதியே சோதி வடிவே!
அமிர்த ப்ரவாகவள மருவச் சுரேசர்புகழ்
அரவச் சிலாவா சனே! (1)

1) அங்கண்மா ஞாலமும் எங்குமாய் நின்று அருளும் ஆதியே - அழகிய இடமான பூமியிலும் மற்ற அண்டங்களிலும் வியாபித்து நின்று கருணை பொழியும் முதற் பொருளே ; சோதி வடிவே - சோதி சொரூபம் ஆனவனே ; அமிர்தப்ரவாகம் - தேவாமிர்தப் பெருக்கினால் ; வளமருவ - செழிப்பு அதிகம் பொருந்த ; சுரேசர் புகழ் - தேவேந்திரர்கள் புகழும்படியுள்ள ; அரவச்சிலா வாசனே - சேஷாசலத்தில் (சேடகிரியில்) நித்ய வாசம் செய்யும் ஸ்ரீநிவாசப் பெருமானே! கங்கை தவழ்தரு - கங்காதேவி தவழ்கின்ற ; சரண கமலமும் - (நினது) திருவடித் தாமரைகளும் ; மழுங்காத கஸ்தூரி நாமநுதலும் - என்றும் அழியாத பரிமள கஸ்தூரி திலகமிட்ட திரு நெற்றியும் ; கனகமணி மகுடமும் - பொன்னாலாகிய, இரத்தினங்கள் பதிக்கப் பெற்ற கிரீடமும் ; பவளவாய் மூரலும் - பவளம் போல் சிவந்த வாயிற் புன்சிரிப்பும் ; கருணை மழை பொழி விழிகளும் - தயை பெருக்கும் கண்களும் ; திங்கள் நிகர் வதனமும் - பூரணச் சந்திரனைப் போன்ற திருமுகமும் ; மலர் மங்கை - திருமகள் (மகாஇலக்குமி), பதுமாவதி ; அகலாமல் சேர்ந்து வாழும் - (விட்டுப் பிரியாமல்) இணைந்து நித்ய வாசம் செய்யும் ; திருமார்பமும் - மார்பகமும் ; தினகரனை அனைய ஒளி மகர குண்டலம் - சூரியனை ஒத்து ஒளி வீசுகின்ற மகர குண்டலங்கள் ; மருவு - (அணியாகப்) பொருந்திய ; செவியும் - காதுகளும் ; ஆசானு பாகும் முழங்கால் அளவு நீண்ட திருக்கரங்களும் ; மங்குலொடு - மேக நிறத்தோடு ; பச்சை மா மலையனைய - பச்சை நிறம் பொருந்திய பெரிய மலையை ஒத்த ; வடிவமும் - திருவுருவமும் ; வர அபய கர தலமும் - வரத ஹஸ்தம், அபய ஹஸ்தம் என்று சிறப்புப் பெற்ற இருதிருக்கரங்களும் ; என் மனமீது குடி கொண்டு - (உன் அடியனாகிய) என் மனத்தினில் குடி புகுந்து ; வாழ்வு அடையுமா(று) கருதி - நான் நல்வாழ்க்கை பெற்று உய்யுமாறு கிருபை செய்து ; வந்து - (என்) கண் முன்னே தோன்றி ; அருட்சேவை தருவாய் - உன் கருணை பொழியும் காட்சியை நல்குவாய் ! அரவச்சிலாவாசனே வந்தருட் சேவை தருவாய் என இயைக்க,

ஈற்றடியில் பிற்பகுதியாக வந்துள்ள, "அமிர்தப்ரவாக வள மருவச் சுரேசர் புகழ் அரவச் சிலா வாசனே" என்ற தொடர் பதினைந்து செய்யுட் பகுதிகளுக்கும் மகுடமாய் நின்றது காண்க!

---

கற்றதும் கேட்டதுங் கண்டதும் உண்டதும்
கங்குல்படு கனவாம் எனக்
கலையுணரும் அறிஞருரை பொய்யாது யான்கண்ட
காட்சிஇது கண்கூடதே
உற்றனஎ லாம்உனது சங்கற்ப மாயையிடை
உற்றனஎ னத்தெளிந்து உன்
உபயபத தாமரையில் அனவரதம் மனம்நாட
உறுதி கொண்டு இகவாழ்வு எலாம்
சிற்றினத் தவர்உறவு போலாகும் என்றுஅறத்
தேறினேன் வினைகள் எல்லாம்
செங்கதிர்க் கடவுள்முன் இருள்ஆகு மாறுநீ
செய்துஅருட் சேவை தருவாய்
அற்றவர் தினம்பரவும் ஏகாந்த மூர்த்தியே
அலர்மேலு மங்கை நாதா!
அமிர்த ப்ரவாகவள மருவச் சுரேசர்புகழ்
அரவச் சிலாவா சனே! (2)

---

2) அற்றவர் தினம் பரவும் ஏகாந்த மூர்த்தியே - அகதிகள் நாள்தோறும் துதிக்கின்ற நிச்சியப் பொருளே; அலர்மேலு மங்கை நாதா - அலர்மேல் மங்கைக்கு நாயகனே; அமிர்தப்ரவாகம் - தேவாமிர்தப் பெருக்கினால்; வளமருவ-செழிப்பு நிறையப் பொருந்த; சுரேசர் புகழ் - தேவேந்திரர்கள் புகழும் படியுள்ள; அரவச் சிலா வாசனே - சேஷாத்திரி தலத்தில் (சேடகிரியில்) நித்ய வாசம் செய்யும் ஸ்ரீநிவாஸப் பெரு

மர்னே ; கற்றதும் கேட்டதும் கண்டதும் உண்டதும் - கல்வி யும், கேள்வியும், காட்சியும், போகமும் ; கங்குல்படு கனவாம் என - இரவில் துயிலும் போது ஏற்படும் கனவு போல வாகும் என்று ; கலையுணரும் அறிஞர் உரை பொய்யாது - சாத்திரம் உணர்ந்த வல்லுநர் கூற்று (ஒரு நாளும்) பொய் யாத படி ; யான் கண்ட காட்சி இது - இது நான் அனுபவத் திற்கண்ட உண்மை ; கண்கூடதே - இது (யாவருக்கும்) வெளிப்படையாகப் பொருந்துவதே ; உற்றனவெலாம் - நிகழ்வனவெல்லாம் ; உனது சங்கற்பம் மாயை இடை உற்றன - உமது உறுதியான நினைவாலே ஆகிய மாயையின் இடமாகத் தோன்றினவாம் ; என - என்று ; தெளிந்து - தெளிவு பெற்று ; உன் உபய பாத தாமரையில் - உமது இரு திருவடித் தாமரைகளில் ; அனவரதம் - எப்பொழுதும் ; மனம் நாட - (என்) மனம் விரும்பி நிற்க ; உறுதி கொண்டு - திடப் படுத்திக் கொண்டு ; இக வாழ்வு எலாம் - இவ்வுலக வாழ்க்கை யாவும் ; சிற்றினத்தவர் உறவு போலாகும் என்று - அற்பர் களோடு சகவாசம் செய்வது போல் வீணாகுமென்று ; அறத் தேறினேன் - நன்கு உறுதியாகத் தெரிந்து கொண்டேன் ; (ஆதலால்) வினைகள் எல்லாம் - யான் செய்துள்ள பாபங்கள் எல்லாம் ; செங்கதிர்க் கடவுள் முன் இருளாகுமாறு நீ செய்து - சூரிய பகவானின் முன், இருள் மாய்வது போல நீ மாய்த்து ; அருட்சேவை தருவாய் - நினது கருணை பொழியும் காட்சியைத் தருவாய்.

அலர்மேல் மங்கை - திருச்சானூர் (திருச்சாருர்) தாயார் பெயர்.

---

பால்அனைய மொழியிலே பவளவாய் நகையிலே
பண்மருவு பாடல் தனிலே
பணிமருவும் இடையிலே அணிமருவு நடையிலே
பந்துஅனைய இணை முலையிலே
வேல்அனைய விழியிலே கோலமலர் அடியிலே
வேரிமலர் வாடை தனிலே
வில்புருவ நுதலிலே மங்கையர்கள் அனுராக
மேவிநாள் வீணாக வே

காலயமர் தூதர்வரு காலம் எனது ஆவிநிலை
காண்அரிது கண்காண நீ
கார்கால மழைநீலம் எனவந்து அருட்கண்
பார்த்தல் உனது கடனே
ஆல்அமரும் அரன்ஆதி மூவருக்கு அரியனே
அகிலாண்ட கோடி நாதா!
அமிர்த ப்ரவாகவள மருவச் சுரேசர்புகழ்
அரவச் சிலாவா சனே! (3)

---

3) ஆல் அமரும் அரன் ஆம் மூவருக்கு அரியனே - கல்லால மரத்தின் கீழ் (தட்சிணா மூர்த்தியாக) வீற்றிருக்கின்ற சிவன் முதலாகிய மூன்று பேருக்கும் (அயன், அரி, அரன்) உணர்தற்கு அரியவனாய் இருப்பவனே; அகிலாண்ட கோடி நாதா - சகல உலகிலும் வாழும் உயிர்களையெல்லாம் காக்கும் இறைவனே! அமிர்தப் பிரவாக - தேவாமிர்தப் பெருக்கினால்; வளருமவ - செழிப்பு நிறையப் பொருந்த; சுரேசர் புகழ் - தேவேந்திரர்கள் புகழும் படியுள்ள; அரவச் சிலா வாசனே - சேஷாத்திரி தலத்தி் (சேட கிரியில்) நித்ய வாசம் செய்யும் ஸ்ரீநிவாசப் பெருமானே!; பால் அனைய மொழியிலே - பால் போல் இனிய சுவை மிக்க பேச்சுகளிலே; பவளவாய நகையிலே - பவளம் போல் சிவந்த வாயின் புன் சிரிப்பிலே; பண் மருவு பாடல் தனிலே - இசையுடன் கூடிய பாடல்களிலே; பணி மருவும் இடையிலே - அரவு போன்ற நிதம்பம் விளங்கும் இடையினிலே; (மேகலாபரணம் விளங்கும் இடை எனவும் கொள்க); அணி மருவு நடையிலே - அழகு பொருந்திய (அன்ன) நடையிலே; பந்து அனைய இணை முலையிலே - பந்து போல் (பருத்துத் திரண்ட) இரு கொங்கை களிலே; வேல் அனைய விழியிலே - வேல் போல் வடிவமும் கூரிய பார்வையுமுடைய கண்களிலே; கோலமலர் அடியிலே - அழகிய மலர் போன்ற (மிருதுவான) மெல்லிய பாதங்களிலே; வேரி மலர் வாடை தனிலே - (குழலிற் சூட்டி யுள்ள) தேன் பொருந்திய பூக்கள் வீசும் வாசனையிலே; விற்புருவ நுதலிலே - வில் போல் வளைந்த புருவங்களை

உடைய நெற்றியிலே ; (மயங்கி அதனால்) மங்கையர்கள் அனுராக மேவி - பெண்களின் மேல் மோகம் (காம இச்சை கொண்டும்) ; நாள் வீணாகவே - வாழ்நாள்கள் எல்லாம் வீணாகவே கழிய, பின் ; கால யம(ர்) தூதர் வரு காலம் - காலதூதராம் யம கிங்கரர்கள் (எனது உயிரைக் கவர) வரும் பொழுது ; எனது ஆவி நிலை காண்பது அரிது - எனது உயிர் நிலைநிற்றிருத்தலைக் காணல் அரிதாகும். (அவர்கள் கவர்ந்தே செல்வர், ஆகவே) ; இறைவனாகிய நீ ; கார்கால மழை நீலம் என - கார்காலத்து நீல மேகம் போல ; கண் காண - என் கண்கள் பார்க்கும் படியாக ; வந்து - நேராக வந்து ; அருட் கண் பார்த்தல் - கருணை பொழியும் கண்களாலே, கடாட் சித்தல் ; உனது கடன் - உனது கடமையாகும்.]

---

வட்டநெடு வாரிதி வளைந்தபுவி ஆளும் முடி
மன்னனாய் இருந்தும் என்ன
மாணிக்க முதலான நவரத்ன கசிதமணி
மாளிகை இருந்தும் என்ன

எட்டுடன் இரண்டையும் உணர்ந்து பொருள் ஈதுஎன
இசைத்துஇசைத் தாலும் என்ன
ஏகாந்தம் ஆனபர வெளியிலே சஞ்சரித்
திட்டாலும் என்னஎளி தாய்

வெட்டவெளி தன்னிலே யோகமுறை யால்உடல்
மேலே கிளம்பி என்ன
வேதம்அறி யாதநின் பாதார விந்தமலர்
மேவல்அரி தாகும் அன்றோ

அட்டதிசை யும்பரவும் ஆனந்த சோதியே !
அனவரத நிர்வி காரா !
அமிர்த ப்ரவாகவள மருவச் சுரேசர் புகழ்
அரவச் சிலாவா சனே ! (4)

4) அட்டதிசையும் பரவும் ஆனந்த சோதியே - எட்டுத் திக்கிலுள்ளாரும் தோத்தரிக்கின்ற பேரின்ப ஒளிமயமாய் இருப்பவனே! ; அனவரத நிர்விகாரா - எப்பொழுதும் விகார மற்றிருப்பவனே! (ஒரு படித்தானவனே) அமிர்தப்ரவாகம் - தேவாம்ருதப் பெருக்கினால் ; வளமருவ - செழிப்பு நிறையப் பொருந்த ; சுரேசர் புகழ் - தேவேந்திரர்கள் புகழும்படி யுள்ள ; அரவச் சிலாவாசனே - சேடகிரியில் நித்திய வாசம் செய்யும் ஸ்ரீநிவாசப் பெருமானே! ; வட்ட நெடு வாரிதி - வளைந்த மண்டலமாகப் பெரிய கடல் சூழ்ந்த ; புவி - பூமியை ; ஆளும் - ஆளுகின்ற ; முடி மன்னனாய் இருந்தும் என்ன - கிரீட மணிந்த அரசனாயிருந்தும் என்ன பயன் ; மாணிக்க முத்லான நவரத்தின கசித - மாணிக்கம் முதலாகிய நவரத்தினங்கள் பதிக்கப்பட்ட ; மணி மாளிகை - அழகிய அரண்மனை ; இருந்தும் என்ன - இருந்தும் என்ன பயன் ; எட்டுடன் இரண்டையும் உணர்ந்து - பத்து உபநிஷத்துக் களையும் நன்கு அறிந்து ; பொருள் ஈது என - அவற்றிலுள்ள அர்த்த விசேடங்கள் இவையே என்று ; இசைத்து இசைத் தாலும் என்ன - திரும்பத் திரும்ப உபதேசித்தாலும் என்ன பயன்! ; ஏகாந்தமான - நிலைபேறுள்ள ; பர வெளியிலே, ஞானாகாசத்திலே ; சஞ்சரித்திட்டாலும் - நடமாடினாலும் ; என்ன - என்ன பயன்! (ஒன்றுமில்லையே) வெட்டவெளி தன்னிலே - திறந்த வெளியிடத்திலே ; யோக முறையால் - யோக மார்க்கத்தால் ; உடலம் - தேகமானது ; எளிதாய் - இலோசாகி ; மேலே கிளம்பி என்ன - (தலைக்கு) மேலே கிளம்பி என்ன பயன்! ; வேதம் அறியாத நின் பாத அரவிந்த மலர் - வேதங்களால் கண்டறியப் படாத நினது திருவடித் தாமரைகள் ; மேவல் - மேவுதல், அடைதல் ; அரிதாகும் அன் றோ - எளிதாகுமோ? எளிதிற் பெறக் கூடியதாமோ (அருமை யானதுஎன்றபடி) இதனால் பெற வைப்பது எம்பெருமானின் நிர்கேதுக் கிருபையாலேயே அவன் திருவடியைப் பற்ற முடியு மேயின்றி நாம் செய்யும் சாதனைகளால் (உபாயங்களால்) மட்டும் பயன் கிட்டாது.

என்புடலம் ஆகவந்து இட்டபா சவல் பிசைந்து
எண்ணரிய செல்வம் எல்லாம்
எய்திடக் குசேலனுக்கு அருள்புரியும் இறைவன்
எண்ணகில் லாமல் உனது [என்று
தன்பெருமை தனைஎடுத்து ஓதாமல் உனதுவாய்
தனில்உமிழ்ந் திடு சகத்தில்
சதகோடி ஒருமூலை தனில்ஊசி அளவுமண்
தனைஆளும் ஒரு மனிதனை
மன்புவன ராசேந்த்ர சார்வபூ மாஎன்ன
மதுரகவி பாடி யவர்தம்
வாசற் படிக்காவல் ஆகியான் வாழ்வனோ
மழைமருவு நீல முகிலே !
அன்புருவம் ஆகிவளர் தெய்வமே ! பவரகித
ஆதியஞ் சோதி உருவே !
அமிர்த ப்ரவாகவள மருவச் சுரேசர்புகழ்
அரவச் சிலாவா சனே ! (5)

---

5) மழை மருவு நீல முகிலே! - நீருண்ட நீல மேகம் போன்றவனே ! அன்புருவமாகி வளர் தெய்வமே - அன்பு வடிவமாகி ஓங்கி உயர்ந்த நெடியோனே ; பவரகித ஆதியஞ் சோதி உருவே - கன்மப் பிறப்பற்ற பரஞ்சோதியே ; அமிர் தப்ரவாக - தேவாமிர்தப் பெருக்கினால் ; வளமருவ - செழிப்பு மிகுதியாகப் பொருந்த ; சுரேசர் புகழ் - தேவேந்திரர்கள் புகழும் படியுள்ள ; அரவச் சிலா வாசனே! - சேடகிரியில் நித்ய வாசம் செய்யும் ஸ்ரீநிவாசப் பெருமானே! ; என்புடல மாக வந்து – (மிகவும் மெலிந்து இளைத்த) எலும்புக் கூடு போன்ற சரீரத்தோடு (துவாரகைக்கு) நடந்து வந்து ; இட்ட - கொடுத்த ; பாசவல் - செவ்விய அவலை ; பிசைந்து - (ஒரு பிடி) உண்டு ; (அதற்குப் பிரதி கடமையாக) ; எண்ணரிய - நினைத்தற்கும் அரிதாகிய (மிக்க) ; செல்வமெல்லாம் - ஐசுவரியம் அனைத்தும் ; எய்திட - பெறும் படி ! குசேல னுக்கு - பண்டை நண்பன் குசேலனுக்கு ; அருள் புரியும் இறை

வன் என்று - கிருபை பண்ணின சர்வேசுவரன் என்று ; எண்ணகில்லாமல் - நினைத்துப் பார்க்க மாட்டாமல் (தியானிக்காமல்) ; உனது தன் - உம்முடைய ; பெருமைதனை - சகல கலியாண குணங்களை எடுத்து ஓதாமல், உரக்கக் கூறி (அனைவர்க்கும் தெரியும்படி) சொல்லாமல் ; உனது வாய் தனில் உமிழ்ந்திடும் சகத்தில் – உமது வாயினின்று உமிழ்ந்த இந்தப் பூமியில் ; சதகோடி ஒரு மூலைதனில் - நூறு கோடி யோசனைப் பரப்பில் (எங்கோ) ஒரு மூலையிலே ; ஊசி அளவு மண்தனை ஆளும் - ஊசியின் நுனியளவுள்ள ; தரையை (உரிமையாகக் கொண்டு) ஆளுகின்ற ! ஒரு மனிதனை - ஒரு நரனை : மன் புவன ராசேந்திர! நிலை பெற்ற பூமியை ஆளுகின்ற மன்னாதி மன்னவனே ; சார்வ பூமா - சக்கரவர்த்தியே! ; என்ன - என்று பாராட்டித் துதித்து ; மதுரகவி பாடி – இனிய பாடல்களைப் பாடி ; அவர்தம் – அவர்களுடைய; வாசற்படிக்காவல் ஆகி(அவர் வரவு பார்த்து) வாயிலில் காத்துக் கிடக்கும் பஞ்சையாகிய ; யான் வாழ்வனோ - நான் வாழ்வேனோ?

---

புற்புதம் எனத்தகைய இவ்வுடலை யான்என்று
போற்றி வாளா விருந்து
புலன்ஆதி கரணங்கள் சென்றவழி யேதமது
புந்தியைப் போக விட்டு
கற்பிதம் எனக்கலைகள் வேதாந்தம் ஆதிநூல்
கட்டுக்கதை என்ன ஓதிக்
கரைவார்கள் உறவை ஒரு பொருளாய் மதித்துஉனது
கால்மலர் மறப்பது உண்டோ ?
சிற்பர ! சிதாகாச ! நிர்ப்பய ! நிராகார
சீரசா கரநி வாசா !
தீனசன மந்தார ! காம ரூபா ! மதுர
சேவிதா ! ஜெய விலாசா !
அற்புத விலக்ஷ்ண ! அனந்தபரி பூரணா !
ஆதிமத் யாந்த ரகிதா !
அமலப்ர வாகவள மருவச் சுரேசர்புகழ்
அரவச் சிலாவு சனே ! (6)

6) சிற்பர - அறிவிற்கு எட்டாதவனே ! சித்து ஆகாச - ஞானவெளியாய் இருப்பவனே ! ; நிர்ப்பய - பயமற்றவனே ! ; நிராகார-விஷ்ணுவே (யாரும் காணவியலா சூக்குமவடிவேவாய்) சீர்சாகர நிவாசா - பாற்கடலை வாழ்விடமாகக் கொண்ட ; தீனசன மந்தார – எளியவர்களுக்கு மருந்து போன்றவனே - காமரூபா - விரும்பிய உருவம் கொள்ளுபவனே!; மதுர சேவிதா - தரிசிப்பதற்கு இனியவனே ஜெய விலாசா – வெற்றியுடன் பரந்து விளங்குபவனே ; அற்புத விலக்ஷணா - அதிசயமான சிறப்பியல்புகளை உடையவனே ! ; அனந்த பரிபூரணா ! – அளவின்றி எங்கும் நிறைந்து இருப்பவனே ! ; ஆதி மத்யாந்தரகிதா – முதல் நடு ஈறு இல்லாதவனே ! ; அமிர்தப்ரவாக - தேவாமிர்தப் பெருக்கினால் ; வள்மருவ - செழிப்பு நிறையப் பொருந்த ; சுரேசர் புகழ் - தேவேந்திரர்களால் புகழும் படியுள்ள ; அரவச்சிலா வாசனே ! சேடகிரியில் நித்யவாசம் செய்யும் ஸ்ரீநிவாசப் பெருமானே ! புற்பதமெனத்தகைய - நீர்க்குமிழியென்று சொல்லும் படியான தன்மையுடைய ; இவ்வுடலை – இந்தவுடம்பை ; யான் என்று போற்றி - நான் என்று அகங்கரித்துக் காப்பாற்றி ; வாளாயிருந்து - சும்மாயிருந்து(வாழ்நாளை வீணாக்கி); புலனாதி கரணங்கள் சென்ற வழியே - ஐம்பொறிகளாகிய கருவிகள் போகின்ற படியே ; தமது புந்தியைப்போகவிட்டு; தங்கள் அறிவைச் செல்லவிட்டு; கலைகள் - கற்ற நூல்களை ; கற்பிதம் என - பொய்யாகப் புனையப்பட்டவை (கற்பனை) என்றும் ; வேதாந்தம் ஆதி நூல் – உபநிடதங்கள் முதலான நூல்களை ; கட்டுக் கதை என்ன - பொய்க் கதைகள் ஆகும் என்றும் ; ஓதி - சொல்லி ; கரைவார்கள் - ஆரவாரம் செய்யும் அற்பர்களுடைய ; உறவை - நட்பை ; ஒரு பொருளாய் மதித்து – ஒரு கௌரவமான காரியம் என எண்ணி ; உனது கால் மலர் - உனது திருவடித் தாமரைகளை ; மறப்பதுண்டோ ? –மறக்கலாகுமோ!

மந்தாரம் - இங்கு மந்தாரக் கல்லைக் காட்டுவது. அது ஒரு வகை மருந்துக்கல், "மருந்துவனாய் நின்ற மாமணி வண்ணா" என்றார் பெரியாழ்வாரும்

மணிமகுட முடியரசு தருகனக மலரின்ஒரு
மண்குயவன் இடுமல ரினால்
மனமுவந்து அனவரதம் அழியாத பேரின்ப
வாழ்வினை அளித்த உனது

தணிவிலா அருள்வாரி தனைநினைந்து உனதுபத
தாமரையில் அன்பு கூர்ந்து
தாசானு தாசனாய் வாழ்கின்ற அடியனேன்
தன்மீது கருணை கொண்டு

பிணியுறு பெரும்பவம் எரிந்துநீ றாகஅருள்
பெற்றிமை உனக்கு அருமையோ ?
பேசரிய வேதாந்த முடிவில்உறை சோதியே !
பெண்ணணங்கு உறையு மார்பா !

அணிமருவும் அனநடையின் மந்தமாருதம் உலவும்
ஆராமம் வான்அ ளாவும்
அமிர்தப்ர வாகவள மருவச் சுரேசர்புகழ்
அரவச் சிலாவா சனே ! (7)

---

7) பேசரிய - சொற்களுக்கப்பாற்பட்ட ; வேதாந்த முடிவில் - உபநிஷத்துகளில் ; உறை சோதியே – வாசம் செய்கின்ற சோதி வடிவானவனே ; பெண்ணணங்கு உறையும் மார்பா! - அலர்மேல் மங்கை (அகலகில்லாது) நித்ய வாசம் செய்யும் திரு மார்பை உடையவனே! ; அணி மருவும் அன நடையின் - அழகு பொருந்திய அன்ன நடையைப் போல ; மந்த மாருதம் - இளந்தென்றல் காற்று ; உலவும் - சஞ்சரிக்கின்ற ; ஆராமம் - சோலைகள் ; வானளாவும் - ஆகாயம் மட்டும் ஓங்கி வளர்ந்துள்ள ; அமிர்தப்ரவாகம் - தேவாமிர்தப் பெருக்கினால் ; வளமருவ - செழிப்பு நிறையைப் பொருந்த ; சுரேசர் புகழ் - தேவேந்திரர்கள் புகழும் படியுள்ள ; அரவச்சிலா வாசனே - சேடகிரியில் நித்ய வாசம் செய்யும் ஸ்ரீநிவாசப் பெருமானே! ; மணிமகுட முடியரசு - இரத்தினங்கள் பதித்த கிரீடத்தைத் தரித்த முடி மன்னனான தொண்டமான் ; தரு -

கொணர்ந்து இட்ட; கனகமலரின் - பொற்பூவைக் காட்டிலும்; ஒரு மண் குயவன் - ஒரு குலாலன் (பீமன் என்பவன்); இடும் மலரினால் - சமர்ப்பித்த மட்பூவினால்; மனமுவந்து - பெரிதும் மனம் மகிழ்ந்து; அனவரதம் அழியாத பேரின்ப வாழ்வினை அளித்த எப்பொழுதும் அழிவில்லாத பரமபத வாழ்வினை அவனுக்குக் கொடுத்த; தணிவிலா அருள்வாரி தனை நினைந்து - குறைவில்லாத கருணைக் கடல் தன்னை எண்ணி; உனது பத தாமரையில் – தேவரீருடைய திருவடித் தாமரைகளில்; அன்பு கூர்ந்து - பக்தி மிகுந்து; தாசானு தாசனாய்–அடியார்க்குஅடியவனாய்; வாழ்கின்ற–வாழுகின்ற; அடியனேன் தன் மீது-உமக்குச் சேஷபூதனான என்மீது; கருணை கொண்டு - கிருபை பண்ணி; பிணியுறு பெரும்பவம் - நோய்களுக்கு இடமாய்ப் பொருந்திய இப்பிறவி; எரிந்து நீறாக - தீய்ந்து சாம்பலாக; அருள் பெற்றிமை - அருள் செய்யும் தகைமை; உனக்கு அருமையோ? - உனக்கு ஒரு அரிய செயலோ?;

முதலடியில் திருவேங்கடவனிடம் மிகுந்த பக்தி கொண்ட ஒரு குலால பக்தனின் சரிதம் குறிக்கப்படுகிறது. தொண்டமான் சக்கரவர்த்தி, தங்க மலரால் பூசிக்கும் தன்னைக் காட்டிலும் ஒரு பக்தன் இல்லை என்று எண்ணியிருக்க, அவன் அகங்காரத்தைப் போக்க வேண்டும் என்று திருவேங்கடவன் எண்ணினார். இதனால் திருவேங்கடவன் அரசன் முன் தோன்றி, ஒரு யோசனை தூரத்தில் பீமவரம் என்னும் ஊரில், பீமன் என்ற ஒரு பக்தன் இருக்கிறான். அவன் ஒரு குலாலன். அவன் மனைவியின் பெயர் தமாலினி. அவர்கள் இருவரும் என் பக்தர்கள். அவர்களைத் தரிசித்தால், அந்த பக்தர்கள் எப்படிப் பட்டவர்கள் என்று தெரிந்து கொள்வாய், என்றார். எம்பெருமான் வார்த்தையைக் கேட்டுத் தொண்டமான் சக்கரவர்த்தி அங்ஙனமே குலாலர் வீட்டிற்கு வந்தான். அங்கே குலாலத் தம்பதிகள் இருவரும் பல உபசாரங்கள் செய்துவர, அவ்விருவர் மத்தியில் ஸ்ரீநிவாசர் பிரத்தியட்சமானார். அப்போது பீமனும், தமாலினியும் பகவானின்

பாதங்களின் மேல் விழுந்து வணங்கிப் பலவாறு போற்றித் துதித்து, அவர்களுக்கு அமுது செய்வித்தார்கள். பகவான் அவ்வமுதினை அங்கீகரித்து, கருடரை வரவழைத்துப் பத்மாவதியை வரச் செய்து, அந்தக் குலாலத் தம்பதியருக்கு ஸ்ரீநிவாச பத்மாவதி சமேதரராய்த் தரிசனம் தந்து, தன் சங்கு, சக்கரங்களைப் பீமனுக்குக் கொடுத்து, தொண்டமான் பார்த்துக் கொண்டு இருக்கும் போதே, அந்தக் குலாலர் தம்பதியினர் விமானம் ஏறிச் சொர்க்கலோகம் அடையுமாறு செய்தார். இவ்வரலாற்றை மதுரகவி முதலடியில் காட்டியுள்ளார்.

---

பொய்யான உடலையான் மெய்யான உயிர்என்று
போதமற ஏத மான
புத்தியொடு மாதர்மனை வீடுபுத் திரர்என்று
புண்ணாய் உளைந்து நொந்து

மையார்கடைக் கண்விழி மா தரார் மயலோடு
மருவிஅவர் பின்தொட ர்ந்து
மதிமாழ்கி ஒருவுஅரிய சனனசா கரம்அதனின்
மாழ்ந்து நிற்றல் கடனோ?

செய்யாத வேதநெறி ஒழுகிவாழ் முனிவரொடு
சேஏறும் ஈசன் ஆதி
தேவர்கள் தினம்பரவும் ஈசனே! தீசவினை
செய்தஅந் தணனை ஆளும்

ஐயா! அனைத்துஉலகும் உண்டுஉமிழும் வாயனே
அசுரகுல காலாந் தகா!
அமிர்தப்ர வாகவள மருவச் சுரேசர்புகழ்
அரவச் சிலாவா சனே! (8)

8) செய்யாத வேதநெறி ஒழுகி - எழுதாக்கிளவியாம் மறைகள் கூறிய மார்க்கத்தின் படியே நடந்து ; வாழ் முனிவரோடு - வாழ்கின்ற இருடிகளோடு ; சே ஏறும் ஈசன் ஆதி தேவர்கள் - இடபவாகனத்தில் ஏறும் சிவன் முதலாகிய தேவர்கள் ; தினம் பரவும் ஈசனே! - தினந் தோறும் துதிக்கின்ற இறைவனே! ; நீசவினை செய்த - இழிவான காரியங்களைச் செய்த ; அந்தணனை - பிராமணனை ; ஆளும் ஐயா! - (செய்த பிழைகளைப் போக்கி) ஆட்கொண்ட தலைவனே! ; அனைத்துலகும் உண்டு உமிழும் வாயனே - (ஊழிக் காலத்தில்) எல்லா உலகங்களையும் உண்டு ; (வயிற்றினடக்கி) பின் உமிழ்ந்த திருவாயையுடையவனே! ; அசுரர்குலகால அந்தகா - அசுரர் குலத்திற்கு முடிவுகால இயமன் ஆனவனே! ; அமிர்தப்ரவாகம் - தேவாமிர்தப் பெருக்கினால் ; வளமருவ - செழிப்பு நிறையப் பொருந்த ; சுரேசர் புகழ் - தேவேந்திரர்களால் புகழும்படியுள்ள ; அரவச்சிலா வாசனே! - சேடகிரியில் நித்ய வாசம் செய்யும் ஸ்ரீநிவாசப் பெருமானே! ; யான் - நான் ; பொய்யான உடலை - நிலையற்ற உடம்பை ; மெய்யான உயிரென்று - நிலையுடைய உயிரென்று (மாறுபட எண்ணி) ; போதம் அற - நல்லறிவு நீங்க ; ஏதமான புத்தியொடு - குற்றத்தையுடைய அறிவுடன் ; மாதர் மனை வீடு புத்திரர் என்று - காதல், மனையாள் வீடு மக்கள் என்று ; புண்ணாய் - (அவர்களால்) மனம் புண்பட்டு ; உளைந்து நொந்து - மிகவும் அலைந்து வருந்தி ; மை ஆர் கடைக்கண் விழி மாதரார் மயலொடு மருவி - அஞ்சனம் தீட்டிய கடைக்கண்ணால் மருட்டும் பார்வையையுடைய வேசியரிடத்து காதல் மோகம் கொண்டு ; அவர்பின் தொடர்ந்து - அவர்கள் பின்னே (பித்துப் பிடித்து) சென்று ; மதிமாழ்கி - சுய புத்தி கெட்டு ; ஒருவு அரிய - நீங்குதற்கு அரிதாகிய ; சனன சாகரம் அதனில் - பிறவிப் பெருங்கடலில் ; மாழ்ந்து நிற்றல் கடனோ - மயங்கி ஒளி மழுங்கிக் கிடத்தல் இயல்போ? ;

### நீச அந்தணனை ஆண்ட வரலாறு

ஸ்ரீசைலத்தின் மேற்கிலுள்ள நந்தனபுரம் என்னும் ஊரில் புரந்தரன் என்னும் பிராமணோத்தமனது குமாரனாகிய மாதவன் என்பவன், தன் மனைவியாகிய சந்திரரேகை என்பவளோடு பூஞ்சோலையில் சென்று விளையாடிக் கொண்டிருந்தான். அங்கு மாலினி என்ற சண்டாளக் கன்னிகையின் கட்டழகைக் கண்டு காமுற்று அவளோடு சேர்ந்து மனையாளைத் துறந்து, அப்புலை மங்கையோடு சென்று புலால் நுகர்ந்தும், கட்குடித்தும், கைப்பொருள் முழுவதையும் இழந்து, பின்பு வழிப்பறி உயிர்க்கொலை முதலிய கொடுந்தொழிலைப் புரிந்து, பொருட் சேர்த்து அவளுக்குக் கொடுத்து வந்தான், முடிவில் வறியவனாகிப் பல நோய்களையும் அடைந்து அவளால் விலக்கப்பட்டவனாய், பல பாவமும் தொடரப் பித்தன் போல அலைந்து திரிந்து, இத்திருமலை வந்து அடைந்தான். அடைந்த மாத்திரத்தில் தனது தீவினையெல்லாம் சாம்பலாகப் பெற்று முந்தைய பிரம தேஜஸைப் பெற்று நல்லறிவு கொண்டு, திருமாலைச் சேவித்து வழிபட்டுப் பரமபதம் அடைந்தான்.

---

இன்னம்எத்தனை செனனம் எய்துமோ அறிகிலேன்
இப்போது எடுத்த சென்மத்து
இன்னல்அல் லாதுசுகம் இறைஅளவது ஏனும்நான்
எய்திடக் கண்டது இல்லை

கன்னலுக்கு ஒப்பான மொழிமருவு மாதரார்
காமாந்த காரம் மூடு
கண்ணொளி மழுங்கிவீழ்ந்து உழல்கின்ற கன்மியை
காதலுக்கு உரிய கழுகை

பன்னரிய பாதகப் படுகுழியை அஞ்சாத
பஞ்சையைத் தஞ்சம் இலியைப்
பரம கிருபாநலம் பாலித்துஉன் அடியனில்
பாவனை புரிந்து ஆளுவாய்

புன்னை அம்கானலும் சண்பகச் சோலையும்
புண்ணியப் புனல்அருவியும்
பொற்புலவும் வானர மடந்தையர்கள் நாடிப்
புகுந்து விளையாடு மிடமும்

அன்னம்அமர்அரவிந்த வாவியும் புடைசூழ
அந்தரம் நிவந்து பொலியும்
அமிர்தப்ர வாகவள மருவச் சுரேசர்புகழ்
அரவச் சிலாவா சனே! (9)

---

9) புன்னை அம் கானலும் - புன்னை மரங்களைக் கொண்ட அழகிய சோலைகளும்; சண்பகச் சோலையும் - சண்பக மரங்களைக் கொண்ட சோலைகளும்; புண்ணியப் புனல் அருவியும் - நல்ல நீர் வீழ்ச்சிகளும்; பொற்புலவும் வானர மடந்தையர்கள் நாடிப்புகுந்து விளையாடும் இடமும் - அழகு சொட்டும் தேவ மாதர்கள் விரும்பிச் சென்று விளையாடும் இடங்களும்; அன்னம் அமர் அரவிந்த வாவியும் - அன்னப் பறவைகள்விரும்பித் தங்கும் தாமரைத் தடாகங்களும்; புடை சூழ - பக்கங்களில் சூழ்ந்திருப்ப; அந்தரம் நிவந்து பொலியும் - வானளவு உயர்ந்து விளங்குகின்ற; அமிர்தப்ரவாகம் - தேவாமிர்தப் பெருக்கினால்; வளமருவ - செழிப்பு நிறையப் பொருந்த; சுரேசர் புகழ்-தேவேந்திரர்கள்புகழும்படியுள்ள; அரவச் சிலா வாசனே - சேடகிரியில் நித்ய வாசம் செய்யும் ஸ்ரீநிவாசப் பெருமானே!; இன்னம் எத்தனை செனனம் எய்துமோ? (இந்தப் பிறவி போக) இனியும் எத்தனை பிறப்புகள் கிட்டுமோ?; அறிகிலேன் - தெரிகில்லேன் இல்லை; இப்போது எடுத்த சென்மத்து - இந்தப் பிறவியில்; இன்னல் அல்லாது - துன்பத்தையே யல்லாமல்; சுகம் - இன்பத்தை; இறையளவது ஏனும் - சிறிதளவு ஆயினும்: நான் - அடியேன்; எய்திடக் கண்டது இல்லை - அடைந்ததில்லை; கன்னலுக்கு - கரும்பின் சாற்றுக்கு; ஒப்பான மொழி - நிகரான இனிய பேச்சினை; மருவு - பொருந்திய (கொண்ட); மாதரார் - பெண்டிரின்; காம அந்தகாரம் மூடு - காமவிருளில் மறைக்கப்பெற்று; கண்ணொளி மழுங்கி வீழ்ந்து - பார்வை ஒளிகெட்டு இழி

வெய்தி ; உழல்கின்ற கன்மியை - அலைகின்ற தீவினையாளர்கிய என்னை ; காதலுக்கு உரிய கழுகை - உனது அன்புக்குரிய என்னை ; பன்னரியப் பாதகப் படுகுழியை அஞ்சாத பஞ்சையை - பழிபாவங்களைச் செய்வதற்குப் பயப்படாத அற்பத் தன்மையுடைய என்னை; தஞ்சம் இலியை-வேறு புகலிடம் இல்லாத என்னை ; பரமகிருபாநலம் பாலித்து - (உமது) மேலான கருணா குணத்தினாலே காத்து ; உன் அடியனில் பாவனை புரிந்து ஆளுவாய் - உமது அடியனாக நினைந்து ஏற்று ஆட்கொள்வீராக.

---

எத்தனை தரம்துதித் திட்டாலும் எனதுகுரல்
இருசெவிக்கு ஏற விலையோ
என்னபிழை செய்தாலும் இளமதலை தனைஅன்னை
ஏறிட்டு நோக்காள் கொலோ
தத்துவம்அ தாகான் புத்தியைத் திருத்திநிலை
தங்கிடச் செய்தல் பெரிதோ
சரணா கதிக்குரிய தெய்வம்என்று அருமறைகள்
சாற்றிடுதல் உன்னை அன்றோ
கத்துகடல் ஆடைஅணி உத்தமி தனக்குரிய
காதலன் நீயல் லவோ
கடுகளவ தேனும்நின் கருணைமழை பொழியும்இரு
கண்ணருள் கொடுத்து ஆளுவாய்
அத்துவித மார்க்கநெறி உற்றவர்கள் தேடரிய
அற்புத ஆனந்த வாழ்வே !
அமிர்தப்ர வாகவள மருவச் சுரேசர்புகழ்
அரவச் சிலாவா சனே ! (10)

---

10) அத்துவித மார்க்கநெறி உற்றவர்கள் - ஏகாத்மவாத நெறியில் ஒழுகும் அத்வைதிகளால் ; தேடரிய - தேடி (உன்னைக்) கிட்டுதற்கியலாத ; அற்புத ஆனந்த வாழ்வே - அதிசயப் பேரானந்தச் செல்வமே! ; அமிர்தப்ரவாகம் - தேவாமிர்தப் பெருக்கினால் ; வளமருவச் - செழிப்பு நிறையப் பொருந்த ; சுரேசர் புகழ் - தேவேந்திரர்கள் புகழும் படியுள்ள ;

அரவச்சிலா வாசனே - சேடகிரியில் நித்ய வாசம் செய்யும் ஸ்ரீநிவாசப் பெருமானே! ; எத்தனை தரம் துதித்திட்டாலும் - பல தடவைகள் தோத்தரித்தாலும் ; எனது குரல் – எனது மொழி ; உனது இரு செவிக்கு ஏற விலையோ? - உமது இரு காதுகளுக்கு எட்டவில்லையோ? ; என்ன பிழை செய்தாலும்- என்ன தவறு செய்தாலும் ; இள மதலை தனை - சிறு குழந்தையை ; அன்னை - தாய் ; ஏறு இட்டு - தன்னிடமிருந்து (தலையை நிமிர்த்து) ; நோக்காள் கொலோ? - கண் கொண்டு பார்க்க மாட்டாளோ? ; என் புத்தியை - எனது சலன அறிவை ; தத்துவமதாகத்திருத்தி - பலமுடையதாகச் செப்பனிட்டு ; நிலை தங்கிடச் செய்தல் - திறப் பட்டதாகச் செய்தல் ; பெரிதோ? – (உமக்குச்) சிரமமான காரியமோ? ; அருமறைகள் - அறிதற்கரிய வேதங்கள் ; சரணாகதிக்குரிய தெய்வமென்று - அடைக்கலம் புகுதற்குரிய இறைவன் இவனேயென்று ; சாற்றிடுதல் - (அறுதியிட்டுச்) சொல்லுதல் ; உன்னையன்றோ – உம்மையல்லவா ! ; கத்து கடலாடை உத்தமிதனக்கு–ஒலிக்கின்ற கடலாற் சூழப்பட்ட பூமிதேவிக்கு ; உரிய காதலன் - உரிய கணவன் ; நீயல்லவோ - நீர்தானே! ; கருணை மொழி பொழியும்நின் இரு கண்அருள் - கருணை மழை கொட்டுகின்ற உமது இரு கண்களின் கிருபையை ; கடுகு அளவேனும் கொடுத்து - மிகச்சிறிதளவாயினும் அருள் செய்து : ஆளுவாய் - ஆட்கொண்டு அருள்வாயாக ;

---

கதிஏதும் இன்றிஒரு மூலம்என ஓதும்
கரிதனைக் காக்க விலையோ
கற்புடைய பாஞ்சாலி அபயம்என வண்ணக்
கலைஅருள் சுரக்க விலையோ

மதிஉருவம் ஆனதுரு வனைஉலகின் மேலான
வாழ்வதனில் வைக்க விலையோ
மனம் வேறு செல்லாத மறையவர் குலத்துவரு
மங்கையைக் காக்க விலையோ

துதிஓதி உனைநாளும் மறவாது கவிமாலை
சொல்லி யான்அன வரதமும்
தொழுதுவந் தாலும்ஒரு துணையிலா அடியனைச்
சோரவிடல் நீதி யாமோ

அதிரூப மலர்மங்கை அகலாத மணிமார்ப
அனாதரட் சகபாந் தவா
அமிர்தப்ர வாகவள மருவச் சுரேசர்புகழ்
அரவச் சிலாவா சனே ! (11)

---

11) அதிரூப மலர்மங்கை - மிக்க அழகுடைய அலர்மேல் மங்கை நாச்சியார் ; அகலாத - விட்டுப் பிரியாத ; மணி மார்ப - அழகுடைய மார்பை உடையவனே! ; அனாத ரட்சக - திக்கற்றவர்களைக் காப்பவனே! ; பாந்தவா - (சகல) உறவும் ஆக்குபவனே! ; அமிர்தப்ரவாகம் - தேவாமிர்தப் பெருக்கினால் ; வளமருவ - செழிப்பு நிறையைப் பொருந்த சுரேசர் புகழ் - தேவேந்திரர்கள் புகழும் படியுள்ள ; அரவச் சிலா வாசனே - சேடகிரியில் நித்ய வாசம் செய்யும் ஸ்ரீநிவாசப் பெருமானே! ; கதியேதும் இன்றி - புகலிடம் எதுவுமில்லாமல் ; ஒரு மூலமென - ஆதி மூலமே! என்று ; ஓதும் - கூவிக் கதறிய ; கரிதனை - கஜேந்திரனை ; காக்கவிலையோ? - ஓடி வந்து காப்பாற்றினாய் அல்லவா? ; (அதுகிடப்ப) கற்புடைய பாஞ்சாலி - கற்புக்கணியாகிய திரௌபதியானவள் ; அபயமென - "கோவிந்தா! சரணம்" என்று அரற்ற ; வண்ணக் கலை - பல வர்ணங்களுடைய ஆடைகள் (மேன் மேல் வளருமாறு) ; அருள் சுரக்க விலையோ - கருணை புரியவில்லையோ? ; மதியுருவமான துருவனை - அறிவே வடிவான துருவனை ; உலகின் மேலான வாழ்வதனில் - மூன்று லோகங்களுக்கும் மேற்பட்டதான (அதி உன்னததிவ்ய) ஸ்தானத்தில் ; வைக்கவில்லையோ? - சுகமாக இருக்க வைத்தாய் அல்லவா? ; மனம் வேறு செல்லாத - மனம் வேறு ஒரு இடத்துச் செலுத்தா ; மறையவர் குலத்து வருமங்கையை - வேதியர் குலத்து வளர்ந்து வந்த பெண்ணாகிய சிந்தையந்

தியை ; காக்கவிலையோ - மோட்சமளித்து அங்கீகரித்தா யல்லவா ; (அங்ஙண் இருப்ப) யான் -நான் ; உனை நாளும் மறவாது துதியோதி - உம்மைத் தினமும் மறக்காமல் தோத்திரம் செய்து ; கவிமாலை சொல்லி - பாட்டுக்களை வரிசையாகப் பாடி ; அன வரதமும் - எப்பொழுதும் ; தொழுது வந்தாலும் - வணங்கி வந்தாலும் ; ஒரு துணையிலா அடியனை - ஒரு காப்பும் இல்லாத தொண்டனை ; சோர விடல் நீதியாகுமோ? - தளரவிடுதல் தருமமாகுமா?

---

கல்லையும் உருக்கலாம் வல்லியம் அழைக்கலாம்
 ககனமிசை ஏறி விடலாம்
கட்செவியின் மீதுசுக நித்திரை இயற்றலாம்
 கடல் மீதில் அணைக்கட் டலாம்

எல்லையும் வடிகட்டி உண்ணலாம் வெள்ளைமான்
 இந்துவினை அங்கை தொடலாம்
எரியினை விழுங்கலாம் புனலிடத்து உறையலாம்
 எவரையும் மடக்கி யிடலாம்

வல்லைவரு நரைதிரையை மாற்றலாம் பன்னூறு
 வயதுட னிருந்து உலாவலாம்
மனதினை அடக்கிஉனது அடிமலரின் அனவரதம்
 வைப்பதரி தாகும் அன்றோ

அல்லைநிகர் திருமேனி அப்பனே ! தெரிவரிய
 அதிரேக மாயை உடையாய்
அமிர்தப்ர வாகவள மருவச் சுரேசர்புகழ்
 அரவச் சிலாவா சனே ! (12)

---

12) அல்லை நிகர் திருமேனியப்பனே - இருளை ஒத்த கரிய திருவுடம்பினை உடைய சுவாமி! ; தெரிவு அரிய அதிரேக மாயையுடையாய் - அறிதற்கரிய மிகுதியான மாயையுடையவனே! ; அமிர்தப்ராவகம் - தேவாமிர்தப் பெருக்கினால் ; வளமருவ - செழிப்பு நிறையைப் பொருந்த ; சுரேசர் புகழ் - தேவேந்திரர்கள் புகழும்படியுள்ள ; அரவச் சிலா வாசனே! - சேடகிரியில் நித்ய வாசம் செய்யும் ஸ்ரீநிவாசப்

பெருமானே! ; கல்லையும் உருக்கலாம் - கடினமான பாறையையும் உருக்கியொழுகும்படி செய்யலாம் ; வல்லியம் அழைக்கலாம் - புலியையும் (அருகில்) வரும்படிச் செய்திடலாம் ; ககனம் மிசை ஏறி விடலாம் - ஆகாயத்தின் மேல் ஏறலாம் ; கட்செவியின் மீது சுகநித்திரை இயற்றலாம் - பாம்பின் மேலே சுகமாகப் படுத்துத் தூங்கலாம் ; கடல்மீதில் அணை கட்டலாம் - கடல்மேல் பாலம் கட்டலாம் ; எல்லையும் வடிகட்டி உண்ணலாம் - சூரியனையும், சாரத்தைப் பிழிந்து தின்னலாம் ; வெள்ளை இந்து மானினை - வெண்மை நிறமுடைய சந்திரனிடத்துள்ள மானுருப் போன்ற மருவினை ; அங்கை தொடலாம் , அழகிய கையால் தொடலாம் ; எரியினை விழுங்கலாம் - நெருப்புத் தழலை ஒரு சேர உட்கொள்ளலாம் ; புனலிடத்துறையலாம் - நீருக்குள்ளே வசிக்கலாம் ; எவரையும் அடக்கி விடலாம் - யாராயிருந்தாலும் கீழ்ப்படுத்திவிடலாம் ; வல்லை வரு - விரைவாய் வருகின்ற ; நரை திரையை மாற்றலாம் - வெளுத்த மயிரையும், உடலின் தோல் சுருக்கங்களையும் தடுக்கலாம் ; பன்னூறு வயதுடன் இருந்து உலவலாம் - பல நூறு வருடங்கள் ஆயுளுடன் இருந்து சஞ்சரிக்கலாம் ; ஆனால் மனதினை அடக்கி - (குரங்காகிய) மனத்தினை ஒடுக்கி ; உனதடி மலரின் - உமது திருவடித் தாமரைகளில் ; அனவரதம் - எப்பொழுதும் ; வைப்பது - நிலைத்து நிற்க வைப்பது (தியானிப்பது) ; அரிதாகு மன்றோ? - அரிய செயலாகும் அல்லவா ; திருவேங்கடவனை ''இராத்திரி மேனி அம்மான்'' என்று திவ்யகவியும் (திருவேங்கடத்தந்தாதி செய்யுள் 24) ''இருளன்ன மாமேனி'' என்று ஆழ்வாரும் கூறினர். ''அல்லையாண்டமைந்த மேனி அழகன்'' என்பார் கம்பர். ''கந்துகமதக்கரியை வசமா நடத்தலாம்'' என்ற தாயுமானவர் பாடல் ஒப்பு நோக்குக.

மோகம்எனும் இருள்ஊடு வேகமிகு பறவைபோல்
முடுகிநிலை தேற அரிதாய்
மூடனாய் முழுமக்கள் உறவாடி மூர்க்கனாய்
முத்திநெறி அறியா மலே

சாகரம் விழுந்தஓர் சருகுபோல் உழலும்என்
தன்னிலையை அயனும் எளிதாய்ச்
சாற்றுதற்கு ஒண்ணாது சிறுகுழவி மதலையைத்
தாய்தள்ளல் மனுநீ தியோ?

வேகமிகு பறவைமேல் நீருண்ட மேகம்என
மேவிஉன் பாத மலரான்
மேலே எடுத்துஇரு வினைப் பயன் அறுத்துஉனது
வீட்டினில் இருத்தி அருள்வாய்

ஆகம புராணமநு நீதிமுதல் ஆதியே!
அண்டபகி ரண்ட வடிவே!
அமிர்தப்ர வாகவள மருவச் சுரேசர்புகழ்
அரவச் சிலாவா சனே! (13)

---

13) ஆகம புராணம் மநுநீதி முதல் ஆதியே - வேத சாத்திரங்கள், புராணங்கள், மநுஸ்மிருதி முதலான நூல்களால் பிரதிபலிக்கப்பட்ட முதற்கடவுளே!; அண்ட பகிரண்ட வடிவே-இப்பிரபஞ்சம், அதற்குப் புறமான வெளி அண்டங்களுமாகிய வடிவுடையவனே!; அமிர்தப்ரவாகம் - தேவாமிர்தப் பெருக்கினால்; வளமருவ - செழிப்பு நிறையப் பொருந்த; சுரேசர் புகழ் - தேவேந்திரர்கள் புகழும்படியுள்ள; அரவச் சிலா வாசனே - சேடகிரியில் நித்ய வாசம் செய்யும் ஸ்ரீநிவாசப் பெருமானே; மோகமெனும் இருளூடு - காமப்பற்று என்னும் அந்தகாரத்தின் நடுவே; வேகமிகு பறவை போல் முடுகி - வேகமாய்ப் பறந்து செல்லும் வௌவால் போல் விரைந்து; நிலை தேற அரிதாய் - நிலைமையைத் தெரிந்து தெளிய அரிதாய்: மூடனாய் - கீழ்மகனாய்; முழுமக்கள் உறவாடி - அறிவிலாருடைய நட்புக் கொண்டு; முத்திநெறி அறியாமலே -

வீடு பேறு அடையும் மார்க்கத்தை அறியாமலே ; மூர்க்கனாய் - முரட்டுப் பிடிவாதம் உடையவனாய் ; சாகரம் விழுந்த ஓர் சருகுபோல் - சமுத்திரத்தில் விழுந்து அலையும் ஒரு துரும்பு போல ; உழலும் - இங்குமங்குமாய் அலையும் ; என்தன் நிலையை - என்னுடைய நிலையை ; அயனும் - பிரம்ம தேவனும் ; எளிதாய்ச் சாற்றுதற்கு ஒண்ணாது - எளிதே கூற வியலாது ; சிறு குழவி மதலையை - சிறு குழந்தையாகிய மதலை ; தாய்தள்ளல் மனுநீதியோ - தாய் புறக்கணித்தல் தர்மமாகுமோ? ; வேகமிகு பறவை மேல் - வேகமாய்ப் பறக்கும் கருடன் மேல் ; நீருண்ட மேகமென - சூல் கொண்ட மேகமென (நீலமேகமென) ; மேவி - ஏறிவந்து ; உன் பாத மலரால் - உன் தாமரைத் திருவடிகளால் ; மேலே எடுத்து (படுகுழியில் விழுந்த என்னை) மேலே தூக்கி நிறுத்தி ; இருவினைப் பயன் அறுத்து - நல்வினை தீவினை களால் விளையும் பயன்களை ; அடியோடு நீக்கி - முற்றும் நீக்கி ; உனது வீட்டினில் - உனது பரமபதத்தில் ; இருத்தி அருள்வாய் - நித்ய சூரிகளில் ஒருவனாய்ச் சேர்த்து அருள் புரிவாயாக.

---

வெங்கனலில் வீழ்கின்ற பிள்ளையைப் பெற்றதாய்
விழியினால் பார்த்துஇ ருந்தும்
வேவாது காவாத வெய்யகுணம் என்னவே
மேதினியின் மீதில் அடியேன்

மங்கையர்எனும் கொடிய தீயிடை விழுந்துமதி
மாழ்தல்நீ அறியாதது என் ?
வன்கண்மை செய்தாலும் உன்னையல்லால் எவர்
வந்து எனைக் காக்க வல்லார் ?

திங்கள்தவழ் தருசிகர பந்தியிடை மாறாத
தேன்அருவி பாய விளையும்
செந்தினை தனைக்குறவர் வந்தனைபு ரிந்துஅடிசில்
செய்துஉரக கிரிவா சனே !

அங்கணஎனத் துதிசெய்து உண்ணஅருள் அப்பனே !
அலர்மேலு மங்கை நாதா !
அமிர்தப்ர வாகவள மருவச் சுரேசர்புகழ்
அரவச் சிலாவா சனே ! (14)

---

(4) திங்கள் தவழ்திரு – சந்திரன் தவழ்கின்ற ; சிகர பந்தியிடை - மலை உச்சி வரிசையினின்று ; மாறாத - என்றும் வற்றாத ; தேனருவி பாய – இனிய நீரையுடைய அருவி நீர் பாய்தலால் ; விளையும் - விளைகின்ற ; செந்தினைதனை - செவ்விய தினையரிசியினைக் கொண்டு ; குறவர் -மலை வாசிகள் ; வந்தனை புரிந்து – வழிபாடு செய்து ; அடிசில் செய்து – உணவாக்கி, நிவேதனம் செய்து, (கூழ் படைத்து வணங்கும்) ; அம் கண எனத் துதி செய்து – அழகிய கண் களையுடையவனே (சர்வவியாபியே) எனத் துதித்து, (கண் ணோட்ட முடையவனே) ; உண்ண - அருந்த ; அருள் - அவர்களுக்குக் கருணை புரிகின்ற ; அப்பனே - திருவேங்கடத் தானே! ; உரககிரி வாசனே - சேஷாசலத்தில் உறைபவனே ; அலர்மேலு மங்கை நாதா – பத்மாவதி மணவாளனே ; அமிர்தப்ரவாகம் - தேவாமிர்தப் பெருக்கினால் ; வளமருவ – செழிப்பு நிறையப் பொருந்த ; சுரேசர் புகழ் - தேவேந்திரர்கள் புகழும் படியுள்ள ; அரவச்சிலா வாசனே - சேடகிரியில் நித்ய வாசம் செய்யும் ஸ்ரீநிவாசப் பெருமாளே ; வெங்கனலில் வீழ் கின்ற பிள்ளையை – செவ்விய தீயில் விழுகின்ற மக்களை ; பெற்றதாய் – ஈன்றதாய் ; விழியினால் பார்த்திருந்தும் – தன் கண்களால் பார்த்துக் கொண்டிருந்தும் ; வேவாது காவாத – வேகாதபடி தடுக்காத ; வெய்ய குணம் என்னவே - கொடிய குணமுடையவன் என்று செல்லும்படி ; நீ - தாயாகிய நீ ; மேதினியின் மீதில் – இவ்வுலகத்தில் ; அடியேன் - உன் தாச னாகிய நான் ; மங்கையரெனும் கொடிய தீயிடை வீழ்ந்து - பெண்டிர் என்னும் கொடிய நெருப்பிடை விழுந்து ; மதி மாழ்தல் - புத்தி மயங்கித் தடுமாறுதலை ; நீஅறியாதது ஏன் – அறியாதவர் போல் இருப்பது ஏன்? ; வன் கண்மை செய் தாலும் - கொடுமை புரியினும் ; உன்னையல்லால் – உம்மைத் தவிர ; வந்து எனைக் காக்கவல்லார் எவர் – கருணை கொண்டு வந்து என்னைக் காக்கந் தகுதி பெற்றவர் எவர் ;

கூனேறு சங்கமொடு மீனேறி விளையாடு
கோனேரி யுச்சி றந்த
கொந்துஅவிழ் மலர்ப்பொழிலும் நந்தன வனங்களும்
குமாரதா ரகையின் அழகும்

கானாறும் ஆகாச கங்கையும் பவநாச
கஞ்சமும் கமல மலரும்
காவியும் மலர்கின்ற வாவியும் நவரத்ந
கசிதகோ புரமும் ஒளிசேர்

வானாடர் பரவுமணி மானமும் கனகமய
மண்டபமும் அடியர் பரவி
வழிபாடு புரியுநின் சேவையும் கண்டுஅடியன்
வாழுநாள் உளது கொல்லோ ?

ஆனேறும் ஒருவனொடு மனம்ஏறி நாளும்வல
மாகவரும் அருளா ளனே !
அமிர்தப்ர வாகவள மருவச் சுரேசர்புகழ்
அரவச் சிலாவா சனே ! (15)

---

15) நாளும் – தினந்தோறும் ; வலமாக வரும் - வலப் பக்கமாகத் தங்கி வரும் ; ஆன் ஏறும் ஒருவனோடு - இடப வாகனத்தின் மேல் ஏறும் சிவனோடு ; மனம் ஏறி - அடியேன் மனத்தில் குடியேறி ; அருளாளனே - அருள் செய்யும் அப்பனே! ; அமிர்தப்ரவாகம் – தேவாமிர்தப் பெருக்கினால் ; வளமருவச் - செழிப்பு நிறையப் பொருந்த ; சுரேசர் புகழ் - தேவேந்திரர்கள் புகழும் படியுள்ள ; அரவச் சிலா வாசனே - சேடகிரியில் நித்ய வாசம் செய்யும் ஸ்ரீநிவாசப் பெருமானே! ; கூனேரு சங்கமொடு – வளைந்த சங்குப் பூச்சிகளோடு ; மீன் ஏறி விளையாடும் கோனேரியும் - மீன்கள் துள்ளி ஆடும் கோனேரி என்ற தீர்த்தமும் ; சிறந்த- சிறப்புப் பெற்ற ; கொந்து அவிழ் மலர்ப் பொழிலும் –

கொத்துக் கொத்தாக மலர்ந்த பூக்களுடைய சோலைகளும் ; நந்தனவனங்களும் – பூந்தோட்டங்களும் ; குமார தாரகையின் அழகும் - குமார தாரகை என்ற தீர்த்தத்தின் அழகும் ; கானாறும் - காட்டாறும் ; ஆகாசகங்கையும் - ஆகாச கங்கை என்னும் பேருடைய தீர்த்தமும் ; பவநாச கஞ்சமும் - பாபநாச தீர்த்தமும் ; கமல மலரும் – தாமரைப் பூவும் ; காவியும் – குவளை மலரும் ; மலர்கின்ற வாவியும் - விரிகின்ற தடாகமும் ; நவரத்ன கசிதகோபுரமும் - நவரத்தினங்கள் பதித்த கோபுரமும் ; ஒளிசேர் வானாடர் பரவும் மணி மானமும் - தேஜஸ்யுடைய தேவர்கள் தோத்தரிக்கின்ற ; அழகிய ஆநந்த விமானமும் ; கனகமய மண்டபமும் - பொன்மயமான மண்டபமும் ; அடியர் பரவி வழிபாடு புரியும் நின் சேவையும்-உன் தொண்டர்கள் துதித்துப் பூசனை புரியும் உனது (திவ்ய) சேவையும் ; கண்டு - கண் படைத்த பயனாகத் தரிசித்து ; அடியன் - தாசனாகிய யான் ; வாழும் நாள் உளது கொல்லோ? - ஈடேறும் நாள் உளதாவதோ?

கோனேரி – சுவாமி புஷ்கரணி ; குமாரதாரை, ஆகாச கங்கை, பாபநாசம் என்பன திருவேங்கடமலையில் உள்ள புகழ்பெற்ற தீர்த்தங்கள் ; குமாரதாரை - இது சுவாமி கோயிலுக்குச் சுமார் ஐந்தரை மைல் தூரத்தில் உள்ளது. தை மாதம், சுக்லபட்சம் பௌர்ணமியன்று விசேடமாக இந்தத் தீர்த்தத்தில் பலரும் நீராடல் செய்வர்.

ஆகாச கங்கை - இது சுவாமி ஆலயத்திற்கு வடதிசையில் 2 மைல் தூரத்தில் உள்ளது. இதில் பலரும் நீராடுவது வழக்கம் ; பாபவிநாசம் – இது ஸ்வாமி ஆலயத்திற்குச் சுமார் 3 மைல் தூரத்தில் உள்ளது. பலர் இங்கும் நீராடுவர்.

திருமறைஉ ணர்ந்தறிய அரிய நின் புகழினைத்
தேர்ந்துசிறி தளவு ஆயினும்
செப்புதற்கு உரியன்அன்று ஆயினும் குதலைமொழி
செப்புதஞ் சிறுவர் உரையைத்

தரும்இனிய தமிழ்எனக் கேட்டுமகிழ்வு எய்திடும்
தந்தைதாய் என்ன நாயேன்
சாற்றுபா மாலையை ஏற்றுமட் பூவினில்
தாளிணை தரித்து ஆளுவாய்

மருமலர்க் காஇழியும் மதுவினை அருந்திவரி
வண்டினம் உவந்து பாட
மயிலாட மணமருவி மந்தமா ருதம்உலவ
மாவிலுறை குயில்கள் கூவ

அருமாத வக்கிழவர் துதியோத வான்முகடு
அளந்துநிலை ஏணி போலும்
அரவகிரி வாசனே! அமரர்பய நாசனே!
அகிலசுர கணவீ சனே! (16)

---

16) மருமலர்க்கா இழியும் - வாசனையுடைய பூக்களைக் கொண்ட சோலையிற் பெருகி வழியும்; மதுவினை அருந்தி - தேனைக் குடித்து; வரி வண்டினம் - உடற்கீற்றுக்களையுடைய வண்டுக் கூட்டங்கள்; உவந்து பாட - மகிழ்ந்து பாட (அதற்கேற்ப); மயிலாட - மயில்கள் நடனமாட; மந்தமாருதம் - இளந்தென்றல் காற்று; மண மருவி உலவ பரிமளம் புரிந்து வீச; மாவில் உறைகுயில்கள் கூவ - மாமரங்களில் தங்கியிருக்கின்ற குயில்கள் இனிமையாகக்கூவ; அருமாதவக் கிழவர் - அரிய பெரிய தவத்தைச் செய்த இருடிகள்; துதியோத - தோத்திரங்கள் செய்ய; வான் முகடு அளந்து - ஆகாய உச்சியை எட்டும் படி உயர்ந்து; நிலை - நிலை நாட்டப்பட்ட; ஏணி போலும் - ஏணியைப் போன்ற; அரவகிரி சேஷாசலத்தில்; வாசனே - நித்ய வாசம் செய்பவனே; அமரர் பய நாசனே! - தேவர் பயத்தைப் போக்குபவனே!; அகில சுரகண ஈசனே - தேவகணங்கள் அனை

வருக்கும் ஈசனே ; திருமறையும் - வேதங்களும் ; உணர்ந்து அறிய அரிய - தெரிந்து அறிதற்கு அரியதாகிய ; நின் புகழினை - உனது புகழினை ; சிறிது அளவாயினும் தேர்ந்து - கடுகளவாயினும் தெரிந்து ; செப்புதற்கு - சொல்லுதற்கு ; உரியன் அன்று - தகுதியுடையவன் அல்லேன் ; ஆயினும் - அங்கண் இருந்தாலும் ; குதலை மொழி செப்பும் மழலைச் சொல்லில் பேசும் ; தம் சிறுவர் உரையை - தமது பிள்ளைகளின் வார்த்தைகளை ; இனிய தரு தமிழ் எனக் கேட்டு - இனிமை தருகின்ற தமிழாகும் எனக் (காது கொடுத்து) கேட்டு ; மகிழ்வெய்திடும் - பெரும் களிப்புக் கொள்ளும் ; தந்தை தாயென்ன - பெற்றோர்கள் போல ; நாயேன் - நாய் போல் கடைப்பட்ட அடியேன் ; சாற்று பாமாலையை - பாக்களால் சொன்ன இத்தப்பாட்டு மாலையை ; ஏற்று - (பூமாலையைப் போல) அங்கீகரித்து ; மண் பூவினில் - நில உலகில் ; தாளிணை தரித்து - திருவடிகளைத் தோய நின்ற திருக்கோலத்து இருந்து ; ஆளுவாய் - அடியேனை ஆட்கொண்டு அருள்வாயாக.

மதுரகவி ஸ்ரீவேங்கடேசன் சந்திரகலா மாலை

முற்றும்.

# மதுரகவி
# ஸ்ரீவேங்கடேசன்
# திருப்பதிகம்

# பாராட்டுரை

ப. ஸ்ரீ. திருமலை அய்யங்கார், காரியதரிசி
திருவல்லிக்கேணி தமிழ்ச் சங்கம், சென்னை.

வேங்கடமே விண்ணோர் தொழுவதும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதும்—வேங்கடமே
தானவரை வீழத் தன்னாழிப் படைதொட்டு
வானவரைக் காப்பான் மலை

இயற்பா — நான்முகன் திருவந்தாதி, 48

அன்னைமால் அருளேஜய நன்றியென் றென்றுஞ்
செய்யும்
நின்னையே இன்றுகாறும் என்னயான் புறக்க
ணித்தேன்
நின்னரண் புகுத்திஇன்றென் நின்பரங் கொண்ட
நீயென்
சென்னிமீ தப்பன்செந்தாள் செழிப்புறச் சேர்விப்
பாயே

தயாசதகம் — 91

ஸ்ரீநிவாஸப் பரம்பொருளாகிய திருவேங்கட முடையான் அபயம் அளிக்கும் அண்ணல். தொன்று தொட்டே திருவேங்கடத்தைப் பாடாத கவியே இல்லை எனலாம்.

படைப்புக் காலந் தொடங்கி தனி மேம்பாடுடைய செந்தமிழ்த் தென்பாண்டி நன்னாட்டில் நீர்வளம், நில வளம் பொருந்திய அநுமந்தபுரம் என்ற ஒரு நகரம் உண்டு.

இந்நகரஞ் செய்தவமோ மறையவர்கள் இயற்று தவ மென்கோ யானப், பொன்னகரந் தனிபுரக்கும் புரவலன்போ னலந்தழைக்கும் புலவர் கோமான். தென்னரங்க மான்மியஞ்செய் சுந்தரராஜப் பெயரோன்

செயுநற்பேறோ, என்னநிலந் துதித்தேத்தும் இசை உருக் கொண் டெழுந்ததென விலங்குஞ் சீமான்',

தலமேவும் தமிழ்த் தலைமைச்
சட கோப ராமானுசாரி யார்மெய்
வலமேவும் புதுவை இராமாநுஜ
நாவலர் சுதர்மானென் றேத்துங்
குலமேவும் துரைசாமி மூப்பனார்
முதற்பெரிய குழுவி னாப்பட்
பெலமேவும் தக்கமதிப் புடன்மதுரகவி
எனப்பேர் பெற்ற சிங்கம்;

முதலான பல சிறப்புப் பாயிரச் செய்யுட்களால், அநுமந்த நகரத்தில், வதிந்திருந்த ஸ்ரீமான் சுந்தரராஜ அய்யங்கார் அவர்கள் குமாரர், மதுரகவி ஸ்ரீநிவாஸய்யங்கார், என்பதும், இவர் மதுரகவி என்ற பிருதம் பெற்ற வரலாறும் அறிகின்றோம்.

இம்மதுரகவி ஸ்ரீநிவாஸய்யங்கார் சுவாமி, பல்கலை யுணர்ந்த பாவலர். அநுமன் எனுஞ் சிறிய திருவடி கழலை அநுதினமும் கருத்திருத்தி இன்புற்ற அன்புச் சீலர். வைணவ நன்னெறி ஓங்கித் தழைக்க வந்த தூப்புல் மாதேசிகன் தாள் தொழும் துய்யர். எக்கவியும் இமைப் பொழுதில் கடலின் மடை திறந்ததென இசைக்க வல்லோர். ஆசுகவி முதல் நான்கோடு அறிஞர் போற்றும் அந்தாதி மாலை முதலான எல்லாம் நன்கு பாடி அளித்த வித்தகர். ஏழுநாழிகைக்குள் 'திருக் கடிகை நரசிங்கப் பெருமாள் அந்தாதி' பாடிய சொல் லின் செல்வர். ஆறு கன்னற்குள் அறைவா எனக் கேட்பத், தேறுபல சந்த மெனும் தேமாலை—கூறுமனு, மந்தநகர் வாழ் ஸ்ரீநிவாசாரியன், என்றபடி ஆறு நாழிகையில், திருமாலிருஞ் சோலை மலை அழகர் பலசந்த மாலை இயற்றிய பண்பாளர். சொல்லழகும், பொரு ளழகும், தொடை அழகோடு, அணி மருவு நல்லழகு முதலான தசவழகும் பொருந்திய "திருவரங்கர் தந்தை

விடு தூது'' சாற்றிய சான்றோர். நான்மறை, ஆறு அங்கம் உணர்ந்தவரும், நல்லபத்தர் வாழும் ஸ்ரீவில்லிபுத்தூரில் திகழ்ந்த தூய புகழுடையவருமான ஸ்ரீவீரராகவாசாரியார் சுவாமி திருவடி ஸம்பந்தி. 'எழு பான் மூன்றாண்டில் இரும்பிணி வாய்ப்பட்டே இழு மென்னணை மேல் இருந்தே அழகான, கோதாத் துதியினைக் கூறிய மதிவாணர். எண்ணிறந்த நூல்கள் இயற்றியவர். பல ஆயிரம் பாடல்களைப் பல வண்ணத் திலும் பாடிய வித்தகர். தமிழ்ப் பிரபந்தங்களும், புரா ணங்களும் பாடிய பவித்திரர். உலகம் போற்றும் உயரிய ஞானி விலக்ஷணானந்த பரமாத்மாஜீயின் மாதுலர்.

மதுரகவியார் இயற்றிய பல ஆயிரக்கணக்கான கவி தைகளும், பிற நூல்களும் அச்சு வாகனம் ஏறாமல் வாளா இருக்கின்றன. அஞ்சிலே ஒன்று பெற்ற அனுமான் அன்னவர் அகத்தில் அமர்ந்திருந்தது அசத்தியம் அன்று. திருவேங்கடவன் திருவருளால் அனைத்து நூல்களும் அதிவிரைவில் அச்சுவாகனம் ஏறி மெய்அன்பர் கை யேறி வீற்றிருக்கும் என்பது திண்ணம்.

அத்தன்உயர் வேங்கடமாற்குப் பரகாலன் சொல் பாசுரங்கள் 1253ம் என்பது, தூப்புல் தோன்றும் வேதாந்தா குருமொழி. அநுமந்த நகரம் அய்யங்கார் ''ஸ்ரீவேங்கடேசத் திருப்பதிகம்'' ஒன்று பாடியுள்ளார். இது ஈராறு பாக்கள் கொண்டது 'பொன் பூத்த' என்று தொடங்கி பதி னொன்றாம் பாட்டு 'சேடமலை எம்பிரானே' என்று முற்றும். மாயன் வாழி... அருள் வாழி எனத் திகழ்வது பன்னிரண்டாவது எண்ணுள்ள வாழிப்பா. இத்திருப்பதிகத்தில் உள்ள சில பாடல் களுக்குக் குறிப்புரைகளும் வழங்கியுள்ளேன்.

பொங்கும் மங்களம்
எங்கும் தங்குக.

சென்னை
12 - 4 - 1957

ப. ரெ. திருமலை அய்யங்கார்
காரியதரிசி.

## ஸ்ரீ வேங்கடேசன் திருப்பதிகம், குறிப்புரை

1) எல்லா நூல்களும் மங்கல மொழி முதலில் வகுத்துக் கூற வேண்டுவது மரபாதலால், 'பொன்' என்று தொடங்கினார், மங்கலச் சொற்கள் இன்ன என்பதை,

சீர்மணி பரிதி யானை திருநிலம் உலகு திங்கள்
கார்மலை சொல்லெ ழுத்துக் கங்கை நீர்கடல் பூத்தேர்
பொன்
ஏருறு மிவைமூ வாறும் இதிற்பரி யாயப் பேநும்
ஆருமங் கலச்சொற செய்யுள் ஆய்ந்து முன் வைக்க
நன்றாம

என்ற நிகண்டினால் அறிக.

பொன்னும் மணியும் பொலிந் தோங்கிப் பார்மகட்கு
மின்னு மணி முடியாம் வேங்கடமே
— திருவேங்கடமாலை

பொன் - இலக்குமி ; பொன்பூத்த திருமார்பு - அகலகில்லேன் இறையுமென்று. அலர்மேல் மங்கையுறை மார்பு - (திருவாய் மொழி 6-10-10) வடிவார்தின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கை (திருப்பலலாண்டு - 2) புயம் தோள் ; துன்று நறுந் தொடைப்புயத்து (பிரமோ-சிவராத்திரி 1) புயங்கள் நான்கும் - தடக்கையோர் நான்கும் சுந்தர நால்தோள் முந்நீர்வண்ண (திருமங்கையாழ்வார் - திருவெழு கூற்றிருக்கை) பொதி - மலரம்பு ; அவிழ் - அலர்ந்த ; ஏடு அவிழ்திரு (கம்பன் - பால - திரு அவதாரப் படலம் 12) போது - பூ ; போதினான் முகத் திறையுறை (பிரமோத் பஞ்சாட் - 1) மலர் - பருவத்தரும்பு ; தென் - அழகு ; கிரணம் - ஒளி, கதிர், சோதி, ஒளி, தீ, விட்டுணு ; தினகரன் - சூரியன் ; தினகரன்றானுதயமுறு மமையமதிற் கூடினத்தை யோக வேதை யதாமென்று (ஏகாதசி கால நிர்ணய -5) நேர் - உவமை ; மின் - மின்னல் ; வினை - ஊழ்வினை, வஞ்சகம் ; மன் - ஆக்கம், நிலைபேறு ; மந்திரம், மிகுதி, சேடன் - அனந்தன், ஆதிசேடன், திருமால் சயனமாய் உள்ளவன், காசிபர் புத்திரன், ஆயிரம் பணா முடிகளை உடையவன் ; சேடனானமலை - சேடமலை, திரு வேங்கடமலை, சேடன் இவ்விடம் தவம் செய்ததால் இப்

பெயர் வந்தது ; விஷ்ணுவை வீற்றிருக்கப் பெற்றதாலும் தரணியைத் தாங்குவதாலும், மணிகளடங்கிய முடிகளைப் பெற்றிருப்பதாலும், இது சாட்சாத் ஆதிசேஷனே என்று உலகத்தோரால் உறுதியாக ஊகிக்கப் பெறுகின்றது. அதைச் சார்ந்துள்ள வெண்ணிற மெல்லிய மேகங்கள் அச்சேஷன் உடலிலிருந்து அப்பொழுதே கழன்ற பாம்புத் தோல் போலவும் பார்ப்பவர்களுக்குத் தோன்றும். (ஹம்சசந்தேசம் முதல் ஆச்வாசம 21) வண்ணம் - அழகு, நிறம், வடிவு ; நீலமணி வண்ணத்தான் - மாலே !மணிவண்ணா (திருப்பாவை - 21) 'வெள்ளியான் கரியான் மணிநிற வண்ணனென்றெண்ணி நாள் தொறும், தெள்ளியார் வணங்கும் மலைத் திருவேங்கடம் அடை நெஞ்சமே ! (பெரிய திருமொழி 1-8-2) சேடனான மலையுறை யும் நீலமணிவண்ணத்தானே - பை வாளரவின் பண நட்ட மிடும், மெய்வாண் மணிவண்ணனை வேங்கடவெற், பெய்தா மலர் சூடியீதஞ் செய்மினே, (திருவேங்கட அநுபூதி 108, திரு வேங்கடவர் மாலை - பக்கம் 703 .

2) இடும் - சேர்க்கும் ; ஏங்கி - இரங்கி, அழுது ; எஞ் ஞான்றும் - எப்பொழுதும் ; ஈட்டி - திரட்டி, தேடி ; ஈட்டியது - சஞ்சிதவினை ; துரும்பு - திரணம், துரும்பெனக் கனன்று சொன்னாள் (கம்பன் - நிந்தனைப் படலம் - 89) 'துறவிக்கு வேந்தன் துரும்பு' ; அந்தோ - அதிசய இரக்கச் சொல் ; மலை யிலே ஒரு நீலமழை - வேங்கடமென்னும், ஓங்குயர் மலையத்துச்சிமீமிசை ... நன்னிற மேகம் நின்றது போல... பொலிந்து தோன்றிய செங்கணெடியோன் (இளங்கோவடிகள் சிலம்பு, மதுரைக்காண்டம், காடு காண் காதை) வதிந்து - தங்கி ; வடிவத்தான் - திருஉருவத்தான் ; ஆனந்த வடிவத் தானே - காயமும் புலனு மந்தக்கரணமுமாகி எல்லாத்தேயமும் பரந்து நின்று மீளவுஞ் சிதைத்துச் சுத்த, மாயமுமாகி நீங்கி வருபெரு ஞானானந்த, மாயவெம்பெருமான் என்னை யாண்ட ருளாழியானே (மகாபாரதம் - துரோண பர்வம் - பதினோராம் போர்ச் சருக்கம).

3) தம்பிரான் - கடவுள், தேவாதி தேவன் ; ஆதி அந்தம்- அளந்த அற்புதமான வானவர் தம்பிரான் (பெருமாள் திரு மொழி 2—6).

4) அல் - இருள் ; அல்லைநிகர் திரு மேனி அழக 'அல்லையாண்டமைந்த மேனி அழகன்' (கம்பன் - அயோத்தி யா காண்டம் - குகப்படலம்).

5) நிகிலம் - எல்லாம். மானாங்காரமொடு - 'பொங்கைம் புலனும், பொறியைந்தும், கருமேந்திரியம், ஐம்பூதம், இங்கு இவ்வுயிரேய் பிரகிருதி மானாங்கார மனங்களே' (திருவாய் மொழி 10-7-10) வானாதியுலகனைத்துமாகி நின்று - 'தானே யாகி நிறைந்து எல்லாவுலகும் உயிரும் தானேயாய், தானே யா னென்பானாகித் தன்னைத் தானே துதித்து' (திருவாய் மொழி 10-7-2) ; ஜாலம் - மாயவித்தை ; மான் - வியவசாய ஹேது வான மகத்தத்துவம் ; ஆங்காரம் - அகங்காரம் ; கரணம் - உறுப்பு ; சலனம் - அசைவு ; வாசம் - இருப்பிடம், வாசத் தான் - 'இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் மாலிருஞ் சோலை என்றும், பொறுப்பிடம் மாயக் கென்பர் நல்லோர்' (இராமாநுச நூற்றந்தாதி - .06) நீ நானென்று ரைத்திடுவர் ... தத்வமஸி என்பர் - லோகம் சத்தியமன்று, அசத்தியம், காணப்படுகின்ற இடப் பொருளாகிய உலகமும் அதில் உள்ள பொருள்களும் அழியுந் தன்மை என்பது எல்லா மதத்தினருக்கும், சம்பிர தாயத்தினருக்கும் உடன்பாடே. அத்துவைத பக்ஷத்தில் உலகம் அசத்தியம் என்பதின் கருத்து யாது என்றால், நாம் உண்பதும், உடுப்பதும், நடப்பதும், பேசுவதும் ஆகிய செய்கைகள் அனைத்தும் பரமார்த்த தசையில் மித்தை (பொய்). விவகார தசையில் சத்தியம் (உண்மை). நிர்க் குணமான ஆத்மா ஒன்று, அன்றி இரண்டாவதான வஸ்து இல்லை. சுத்தப் பிரமம், மாயா சம்பந்தத்தாலே ஈசுவரன் என்றும், அவித்யா சம்பந்தத்தாலே ஜீவன் என்றும் விவகரிக்கப் பெறுகின்றான். சம்சரிக்கிறதற்குக் காரணம் யாதென்றால், அவித்தையே அன்றிவேறில்லை.மோக்ஷமாவது தானே பிரமம் என்று உணரும் ஞானமே. தனக்கு ஸஜாதீயமானதும், விஜாதீயமானதும், ஒன்றும் இல்லாததாய், தன்னிலும் ஒரு

தர்மம் இல்லாததான ஆத்ம வஸ்து பரமார்த்தமாயுள்ளது. பிரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டது, மாயையின் காரிய மாதலால் பொய்; ஒரு பிரஹ்மமே உபாதியில் பிரதிபலித்ததால் அந்தப் பிரதிபலனத்தால் ஜீவனாகவும், ஈசுவரனாகவும் ஏற்பட்டது.

ஜீவாத்மாவுக்கு நான் ஞாதா, நான் கர்த்தா, நான் போக்தா, இது முதலிய ப்ராந்திதான் சம்சாரம், அந்த ப்ராந்தி யின் நிவ்ருத்திதான் மோட்சம். 'தத்துவமஸி' என்கிற வேதாந்த வாக்கிய சிரவணத்தால் உண்டாகும் ப்ரஹ்மாத்மைக்ய ஞானத் தால் (தனக்கு ப்ரஹ்மத்தோடு ஐக்ய, ஞானத்தால்) அந்த ப்ராந்தி நிவ்ருத்தி உண்டாகிறது, என்று இப்படி அத்துவைத வேதாந்திகள் சொல்லுகிறார்கள் இப்படி ஜீவனுக்கு வந்த சம்சாரம் நீங்குவதற்கு வழி என்ன வென்றால் யாகம், தானம், ஹோமம் முதலிய வைதீக கர்மங்களைக் கொண்டு இந்த ஜீவாத்மா, ஈசுவரனை ஆராதித்தால் அவனுடைய அநுக்ரகத் தால் சித்த சுத்தி பிறக்கிறது. பிறகு மோட்சத்தில் ஆசை யுண்டாகி, அதற்காக வேதாந்த சிரவணத்தில் முயற்சிக் கிறான். பிறகு குருவின் உபதேசத்தால் 'தத்துவமஸி' என்கிற வேதாந்த வாக்கியத்தின் அர்த்த ஞானம் உண்டாகின்றது. இந்த வாக்கியத்தில் தத் என்கின்ற பதத்திற்கு சச்சிதானந்த சொருபமாய், சர்வவிஹார ரகிதமாய், அத்விதீயமான பிரஹ்மம் பொருள். த்வம் என்கின்ற பதத்திற்கு, முஞ்ஜம், என்று சொல்லப்படும். புல்லின் மேல் புரைகளைக் கழித்து அதன் நடுவில் இருக்கும் குருத்தை வேறாக எடுக்குமாப் போலே, சரீரம் இந்திரியம் முதலி உபாதிகளோடு (இங்கு உபாதி என்றால் தனக்கு ஸ்வபாவமாகவே இல்லாமல் நடுவில் வந்தவை என்று அர்த்தம்) கலந்திருக்கும் ஜீவாத்ம சொரு பத்தை விசாரத்தினால் (ஆராய்ந்தால்) அவைகளைக் காட்டி லும் வேறு பட்டதாக விவேகிக்கப்பட்ட சுத்தாத்ம சொரூபம் பொருள். இவை இரண்டுக்கும் அபேதம் (பேதமின்மை) தத், தவம் என்கிற வாக்கியத்திற்குப் பேதங்களைச் சேர்க்கைக்கு அர்த்தம். இப்படி குரு உபதேசத்தாலே பரோக்ஷ ரூபமான (கண் முதலிய) இந்திரியங்களால் நாம் ஒரு விஷயத்தை அறியும்

போது உண்டாகும் ஞானம், ப்ரத்யக்ஷம் அல்லது அபரோக்ஷ ஞானம் என்று பெயர் பெறும். அநுமானம் அல்லது சாஸ்திரத் தால் உண்டாகும் ஞானம் பரோக்ஷ ஞானம்) நிர்விசேஷ (ஒரு வித குணமும், தர்மமும் அற்ற) சின்மாத்ர ப்ரஹ்மாத் மைக்ய ஞானம் உண்டாகிறது. பின்பு குரு முகத்தாலே கேட்ட அர்த்தத்தை இடைவிடாமல் பாவனை பண்ணுவதால் **'தத்துவ மஸி'** வாக்கியத்தால் ஸாக்ஷாத்கார ரூபமான ஞானம் உண்டா கிறது. அப்போது சகல ப்ராந்தியும் கழித்து ப்ராந்திகளுக்கு மூலமான அவித்தையையும் கழித்து சக்கரத்தைச் சுழற்றி விட்டு நாம் கையை எடுத்து விட்டாலும், சக்கரம் சுழலுவது சிலகாலம் ,அநுவர்த்திக்கிறாப் போல, இந்தக் கர்மத்தால் ஆரம்பிக்கப்பட்ட (எடுத்த) சரீரம் மாத்திரம் சிலகாலம் நிற் கிறது. இந்த நிலைமைதான் ஜீவன் முக்யவஸ்தை என்று சொல்லப்படுகிறது. பின்பு பிராப்த கர்மம் (பலத்தைக் கொடுக்க ஆரம்பித்த புண்ணிய பாபகர்மம்) கழிந்ததும் சரீரம் கழிந்து விடுகிறது. இந்த நிலை விதேக முக்தி என்றும், கைவல்யம் என்றும், சொல்லப்படும். பரம மோக்ஷம் அதாவது அவித்யா ரூபமான ஆவரணம், நிச் சேஷமாய்க் கழிந்து, அகண்டானந்த (பரிபூரண ஆனந்த ரூபமான) பிரஹ்ம சொரு பாவிர்பாவம். இந்த மோக்ஷத்தைப் பெறுவதற்கு வேறு உலகங்களுக்குப் போக வேண்டாம். இருந்த இடத்திலேயே இது கிடைக்கும்.

6) கணம் - காலநுட்பம், மாத்திரை ; உனை... மாட்டேன் -(விரும்பி நின்றேத்த மாட்டேன்) (திருமாலை - 17) அடலாழிப் படை - (பொருமா நீள்படை ஆழிசங்கத்தொடு (திருவாய்மொழி 1-10-1) அறவனை ஆழிப்படை அந்தன்னை (திருவாய் மொழி 1-7-1) எண்படை ஏந்தி நின்றான் எழில் ஆழி இறையவனே (தேசிக மாலை – பரமபதபங்கம் 1).

7) செங்கனியே இன்பத் தேனே - எனக்குத் தேனே, பாலே, கன்னலே, யமுதே (திருவாய் மொழி 10-7-2) எட்டாத எம்பிரானே - எங்கள் நான் மறைக்குந் தேவர் அறிவிற்கும் பிறர்க்கும் எட்டாச் செங் கண்மால் (கம்பர் - பாலகாண்டம் - வேள்விப் படலம் 16) எட்டாத செங்கனியே இன்பத் தேனே–

வேதத்தை, வேதத்தின் சுவைப் பயனை விழுமிய முனிவர் விழுங்கும், கோதிலின் கனியை (பெரிய திருமொழி 2-3-2) தனியன் பிறப்பிலி தன்னைத் தடங்கடல் சேர்ந்த பிரானை, கனியைக் கரும்பினியின் சாற்றைக் கட்டியைத் தேனை அமுதை (திருவாய்மொழி 3-6-7) விழுமிய அமரர் முனிவர் கன்னன் கனியின் (திருவாய்மொழி 3-6-7) எழுதரிய திருமேனி எம்பிரான் - ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தாய், (கம்பர் - கிட்கிந்தா காண்டம் - வாலி வதைப்படலம் - 78) எழுதரிய பெருமான், பரம்பரன் - மேலோர்க்கும் மேலோன் அடியேற் கெம்பரம்பரனே, கொழுந்து - அஞ்சனக் கருமுகிற் கொழுந்து எழில் காட்டும் ஜோதி (கம்பர் - பாலகாண்டம், திரு அவதாரம் - 104).

8) கருணை மழை பொழிந்து - காரொப்பர் கருணை மழை பொழியு நீரால் (தேசிக மாலை - மெய்விரத நன்னிலத்து மேன்மை 22) அருளாளா திருமகள் வாழாகத் தானே - கடிமலராள் பிரியாத கச்சிநக ரத்தகிரி, யிடமுடைய அருளாளர் (தேசிகமாலை அடைக்கலப்பத்து-2) திருமகளும், திருவடிவுந் திருவருளுந் தெள்ளறிவும், அருமையிலா மையு முறவு மளப்பரிய வடியரசுங், கருமழிப் பணிப்பமைப்புங் கலக்க மிலா வகை நின்ற, அருள் வரதர் (தேசிகமாலை, அடைக்கலப் பத்து 10).

9) உறைந்து - இருந்து, தங்கி; மலைக்குகை - மலை முழை, முனிவர் வாசம் செய்யும் பிறை, பொந்து; வாய் - இடம்; வைகி - தங்கி; ஏடு - பனைஏடு; வைகையேட்டிலே தவழ்ந்த பேதை (மகாபாரதம் - சிறப்புப் பாயிரம் - 1) ஏட்டிலே யிருந்ததெல்லாம் - மாலைப் பெற வழி காட்டிய தேசிகர் வாசகமே! ஓலைப்புறத்தில் எழுதுகின்றோம் உள எழுது மினே, (தேசிகமாலை-பரமபத பங்கம் 8) வெள்ளைப் பரிமுகர்- தேசிகராய் விரகால் அடியோம், உள்ளத்து எழுதியது ஓலையில் இட்டனம் (தேசிக மாலை - அதிகார சங்கிரகம் - 56) படித்திட்டாலும் - தரித்திருந்தேனாகவே தாரா கணப்போர்,

விரிந்துரைத்து வெந்நாகத்துன்னை தெரித்தெழுதி, வாசித்தும், கேட்டும், வணங்கியும், வழிபட்டும், பூசித்தும் போக்கினேன் போது (இயற்பா - நான்முகன் திருவந்தாதி 63) எட்டு வகை யோகம் - எட்டு யோகாங்கம் (தேசிக மாலை அதிகார சங்கிரகம் 45) யோகத்தின் எட்டு அங்கங்கள் 1 இயமம் (அகிம்சை, சத்யம், களவு, காமத்தை அடக்குதல், பொருளைச் சேர்க்க முற்படாமை), 2. நியமம் (பரிசுத்தி, உள்ளதைக் கொண்டு திருப்தி அடைதல், விரதம், தவம், முதலியன செய்தல், வேதாந்த பரிசயம், செய்தல், எல்லாக் கருமங்களையும் பாவத்தால் ஸமர்ப்பித்தல்), 3. ஆசனம் (இருப்பு) – 1. பத்திரம் (பீஜத்தின் கீழ்ப்பாகமாக நரம்பின் இரு பக்கங்கங்களையும் இருகாற் பரட்டையுந் சேர்த்து அவ்விரண்டு கால்களையும் இரண்டு கைகளாலும் இறுகப் பிடித்து அசையாது இருத்தல்). 2. கோமுகம்-(சகண பக்கத்தி (பிருஷ்ட பாகத்தில்) லிருகாற்பரட்டையும் மாறவைத்து அவ்விருகாற் பெருவிரல்களாற் பிடித்திருத்தல்). 3. பங்கயம் (இரு தொடை மேலும் இரண்டு உள்ளங்காலை மாறித் தோன்ற வைத்தல்). 4, கேசரி – (பீஜத்தின் கீழ்ப்பாக நரம்பின் இரு பக்கங்களினும் இரண்டு பாடுகளையுஞ் சேர்த்து முழந்தாளின் மீது இரண்டு கைகளையும் நன்றாய்ப் பொருந்தும்படி வைத்து அக்கைகளின் விரல்களைச் செவ்வையாய் விரித்து வாய் திறந்து நாக்கை நீட்டிக் கொண்டு மூக்கு நுனியைப்பார்த்திருத்தல்) 5. சுவத்திகம் - (தொடைக்கும் முழங்காற்கும் இடையே இரண்டு உள்ளங்காலையும் செலுத்தி இறுமாந்திருத்தல்) என்று ஐந்தாம். 4. பிராணாயாமம் – இரேசகம் (மூக்கின் வலது துவார வாயிலாக விடுதல்) பூரகம் (வாயுவை மூக்கின் இடது துவார வாயிலாக உள்ளுக்கு இழுத்தல்), கும்பகம் (வாயுவை உள்ளே அடக்குதல்) செய்தலாம். 5. பிரத்யாகாரம் (இந்திரியங்களை உலக விஷயத்திலிருந்து திருப்புதல்) தாரணை (பகவானுடைய திருமேனியை மனத்திற் கொள்ளுதல் 7. தியானம் (இடைவிடாது பகவானைத் துதித்தல்) 8. சமாதி (அவ்வாறு தியானித்து நேரிற் கண்டாற் போன்ற நிலைமையை அடைதல்) என்பன,

இந்தச் சமாதிதான் அங்கியாகிக் கீழ்க்கூறிய ஏனைய அங்கமாகக் கொள்ளுகின்றது. இயமம் பத்து வகைப்படும் என்பதும், பிராணாயாமம இரு வகைப்படும் என்பதும் எண் வகைப்படும் என்பதும்) ஆகிய பிறவும், இவற்றின் விரிவை, **அட யோகப்பிரதீபிகை**, முதலியவற்றில் காண்க. செயற்கரிய செய்வர் பெரியர் (திருக்குறள் - அறத்துப் பால் - பாயிரம் - நீத்தார் – பெருமை - 6 ; ஒத்த பிறப்பினராய மக்களுள் செய் தற்கு எளியவற்றைச் செய்யாது அரியவற்றைச் செய்வர் பெரியர். செயற் கெளியவாவன :- இயமம், நியமம் முதலாய எண்வகையோக உறுப்புக்கள் ; இயற்றிட்டாலும் - முயற்சி செய்தாலும் ; வெற்பு - கண்ணன் அடியினை எமக்குக் காட்டும் வெற்புக் கடுவினையர், இருவினையுங் கடியும் வெற்புத் திண்மை. இது வீடு எனத் திகழும் வெற்புத் தெளிந்த பெருந் தீர்த்தங்கள் செறிந்த வெற்பும் புண்ணியத்தின் புகல் இது எனப் புகழும் வெற்புப் பொன் உலகிற் போகம் எல்லாம் புணர்க்கும் வெற்பு, விண்ணவரும், மண்ணவரும் விரும்பும் வெற்பு வேங்கட வெற்பு என விளங்கும் வேதவெற்பே (தேசிக மாலை அதிகார சங்கிரகம் 43) வெற்பென்று வேங்கடம் பாடினேன் வீடாக்கி, நிற்கின்றேன் நின்று நினைக்கின்றேன் கற்கின்ற, நூல், வலையில் பட்டிருந்த நூலாட்டி கேள்வனார், கால்வலையிற் பட்டிருந்தேன் காண். (இயற்பா - நான்முகன் திருவந்நாதி 40) உரகிரி – சேடமலை.

10) பாஞ்சாலி - பஞ்சவரைப் பல வகையுங் காத்தார் வந்தார் பாஞ்சாலி குழன் முடித்தார் வந்தார் தாமே (தேசிக மாலை, திருச்சின்ன மாலை – 9) பஞ்சவர் - பாண்டவர்கள் : பாஞ்சாலி – திரௌபதி, பாஞ்சால தேசாதிபதியாகிய துரு பதன் யாகத்தில் பிறந்தவள். இவள் இதற்கு முன் ஜாமத்தில் நளாயினி என் குமரி ; இந்திர சேனை என்னும் பெயரால் மௌத் கல்யனை மணந்து இருக்கையில் கர்மத்தால் மௌத்கல்ய மகரிஷிக்குத் குஷ்ட வியாதி உண்டாயிற்று. அப்படி இருந்தும் இந்திரசேனை, கணவனிடம் மிகவும் அன்பாய் இருந்தாள். இதனால் மகிழ்ச்சி அடைந்த முனிவர், இவளுக்கு

என்ன வரம் வேண்டும்? என்று கேட்டார். இவள் தனக்கு காம இச்சை நிறம்பாமையால் அதைப் பூர்த்தி செய்க, என வேண்ட அவ்விதமே ஐந்து வகையில், முனிவர் இவளுடன் களித்திருக்கையில் முக்தி அடைந்தார். இவளும் கணவனுடன் உயிர் விட்டாள். காம இச்சை நிறம்பாத இவள், காசிராஜனுக்குப் பெண்ணாகப் பிறந்தாள். சிவமூர்த்தியை எண்ணித்தவம் இயற்றினாள். சிவமூர்த்தி பிரத்யக்ஷமாகி, என்ன வரம் வேண்டுமெனக் கேட்க, பதி, பதி, பதி, பதி, பதி, என்று இவள் ஐந்து முறை கூறினாள். அவ்வகையே அம்மூர்த்தி அருளி மறைந்தனர். இதனால் துருபதன் குமரியாய்ச் சுயவரத்தில் அருச்சுனனால் கொண்டு வரப்பட்டுக் குந்தியின் கட்டளைப் படி ஐவரையும் மணந்து சுகத்திணிடனிருக்கையில், தன் கருத்தைத் தெரிவித்து முழுவதும் பொருந்தச் செய்து, ஐவருடன் இருந்து, இளம் பஞ்ச பாண்டவர்கள் என்று, தருமனுக்குப், பிரதி விந்தனையும், பீமனுக்குச் சுருதசோமனையும், அருச்சுனனுக்குச் சுருத கீர்த்தியையும், நகுலனுக்குச் சதர் நீகனையும், சகாதேவனுக்குச் சுருத சேனனையும் பெற்றுத் துரியோதனன் இறந்த பின்னர், அவள் கொண்ட சபதப்படி கூந்தலை முடித்துக் கலிபிறந்து, பாண்டவர் தமது இராச்சியத்தை விட்டுத் தவமேற்கொண்டு இமயமலை செல்லுகையில் அவர்களுடன் முழுவதும் செல்லாமல் இறந்தவள். இவள் முன் இறந்ததற்குக் காரணம், பாண்டவர் ஐவரும் கணவராயிருக்க அருச்சுனனிடம் அதிக அன்பு மிகுந்தபடியால் என்பர். இவள் பஞ்ச கன்னியரில் ஒருத்தி. பதிவிரதா சிரோன்மணி (அபிதான சிந்தாமணி பக்கம் 642 மதுரை தமிழ்ச் சங்கப் பிரசுரம் 1910) உற்பவித்தார் - பிறந்தார்; பாஞ்சாலி தனக்கு ஆடை பண்ணினாய் தருதுகிலென எழுந்து தங்களை வன்பொடு துச்சாதனன் சொலாமுன் வருகவென வரைமார்பின் உத்தரியம் வாங்கியீந்தா ரருகணுகு மட வரலை அஞ்சாமற்று கிலுரிவானமைந்த போதில் இருகை நறுமலர் தகைய வெம் பெருமானிணையடிக்கே இதயஞ் சேர்த்தாள் 246. ஆறாகி இரு தடங்கணஞ்சன வெம்புனல் சோர வளகஞ் சோர,

வேறானதுகி றகைந்தகை சோர மெய் சோர வேறோர் சொல்லுங், கூறாமற் கோவிந்தா ! கோவிந்தா ! என்று அரற்றிக் குளிர்ந்து நாவில், ஊறாதவமிழ் தூற உடல் புளகித்துள்ள மெலாம் உருகினாளே (240), அருமறை சொல்லிய நாமமாயிரமுமுரைத் தழைக்க அமரர் போற்றும், திருமலர்ச் செஞ் சேவடியோன் திருச்செவியிலி வண்மொழிசென்றிசைந்த காலை, மருமலர் மென்குழன்மானின் மண நடுங்காவகை மனத்தே வந்து தோன்றிக், கரிய முகிலனையானும் பிறரெவர்க்குந் தெரியாமற் கருணை செய்தான் (248 மகாபாரதம், சபாபருவம், சூதுபோர்ச் சுருக்கம். திரௌபதிக்கு ஆபத்திலே புடவையைச் சுரந்தது திருநாமமிறே (முமுக்ஷுப்படி, திருமந்திரப் பிரகரணம் 16. அதாவது மகாபெதஸ்சிலே துச்சாதனன், வஸ்த்ராபஹாரம் பண்ணுகின்றபோது, மகத்யாபதி ஸம்ராப்தே ஸமர்த்தவ்யோ பகவான் ஹரி, என்று முன்பே, ஸ்ரீவசிஷ்ட மகரிஷி சொல்லி வைத்ததை, சங்க சக்ரகதாபாணே துவாரகா நிலயாச்யுத, கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் சரணாகதாம், என்று சரணம் புகுந்த திரௌபதிக்கு அவ்வாபத்திலே, கோவிந்தேதி யதாக்ரந்தத் கிருஷ்ணாமாம் தூரவாஸிநம், என்கிறபடியே வாச்யனான கிருஷ்ணன் தூரஸ்தனாயிருக்கச்செய்தேயும் வஸ்த்ரத்தை வர்த்திப்பித்துக் கொடுத்தது அவ்வவதாரத்திற்கு வாசகமான, கோவிந்தன் என்கிற திருநாமமிறே) ; அஞ்சவித்த முனிவர் ஐந்து அவித்தானாற்றலகல் விசும்புளார் கோமான், இந்திரனே சாலுங்கரி, (திருக்குறள் - அறத்துப்பால், நீத்தார் பெருமை), புலன்களிற் செல்கின்ற அவாவைந்தனையும் அடக்கினானது வலிக்கு அகன்ற வானத்துள்ளார் இறைவனாகிய இந்திரனே அமையும் சான்று தான் ஐந்து அவியாது சாபம் எய்தி நின்று, அவித்தவனது ஆற்றல் உணர்த்தினான் ஆதலின், இந்திரனே சாலுங்கரி, என்றார்) ; பொறி வாயில் ஐந்து அவித்தான் - மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகள் வழிகளாக உடைய ஐந்து ஆசைகளையும் ஒழித்தவன் இருஷீகேசன்; (இந்திரியங்கட்கீசன் - தலைவன்) வ்யங்குவோன் - பிரகாசிப்பவன்.

## மதுரகவி
## ஸ்ரீ வேங்கடேசத் திருப்பதிகம்

பொன்பூத்த திருமார்பும் புயங்கள் நான்கும்
பொதியவிழ்செந் தாமரைமென் போது போலத்
தென்பூத்த திருமுகமும் கிரண சோதித்
தினகரன்நேர் மணிமுடியும் தெரியக் காட்டி
மின்பூத்த கரியமழை மேகம் என்ன
வெளியாகி அடியன்வினை விலக்கி ஆள்வாய்
மன்பூத்த ஆயிரவாய்ச் சேடன் ஆன
மலைஉறையும் நீலமணி வண்ணத் தானே (1)

---

பதிகம் என்பது ஒரே யாப்பில் பத்துச் செய்யுட்களாற் பாடப்பெறும், சிறு பிரபந்தம். இப்பதிகம் பதினொரு பாடல்களும், ஒரு வாழ்த்தும் கொண்டது. இப்பதிகத்தில் ஐந்தாவது பாடலும், ஏழாவது பாடலும் சிறந்த தத்துவப் பொருள்களைக் கொண்டுள்ளன. ஈற்றுச் செய்யுள் வாழ்த்தாக அமைந்துள்ளது. இது மங்களாசாசனம் ஆகும்.

1. மன்பூத்த - பெருமை பொருந்திய; ஆயிரம் வாய்ச் சேடன் ஆன - ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேட உருவினனான ; மலையுறையும் - கிரியில் நித்யவாசம் செய்யும் ; நீலமணி வண்ணத்தானே - நீலமணி போல நிறத்தை உடையவனே ; பொன்பூத்த திருமார்பும் - இலக்குமி பொலிகின்ற திருமார்பகமும் ; (பொன் - இலக்குமி) ; புயங்கள் நான்கும் - நான்கு திருத்தோள்களும் ; பொதி அவிழ் - முறுக் கவிழ்ந்த, இதழ் விரிந்த ; செந்தாமரை மென்போது போல - செந்தாமரையின் மெல்லிய பூப் போல ; தென் பூத்த திருமுகமும் - எழில் மலர்ந்த திருமுக மண்டலமும் ; கிரண சோதித் தினகரன் நேர்மணி முடியும் - கிரணங்களோடு பிரகாசிக்கின்ற சூரியனை ஒத்த ஒளி வீசும் இரத்தின கிரீடமும் ; தெரியக் காட்டி - கண்களுக்குத் தெரியும்படி நின்று ; மின் பூத்த -

மின்னல் தோன்றுகின்ற ; கரிய மழை மேகமென்ன - கார் மேகம் போல ; வெளியாகி - வெளிப்படையாக வந்து ; அடியன் - தாசனாகிய அடியேனுடைய ; வினை விலக்கி - இரு வினைகளையும் போக்கி ; ஆள்வாய் - ஆட்கொண்டு அருள்வாயாக!

எல்லா நூல்களும் மங்கல மொழி முதலில் வகுத்துக் கூற வேண்டுவது மரபு. ஆதலால் "பொன்" என்று தொடங்கினார். ஆதிசேடனே மலையாயினான், ஆதலின் சேடகிரி, சேஷாசலம் என்று பெயர் வழங்குவது. கிருதயுகத்தில் ஆதிசேட ரூபத்தில் இம்மலை இருப்பதால் சேஷாசலம் (சேடகிரி) என்று இதற்குப் பெயர் வந்தது என்பர்.

---

இலையிலே இடும்சோற்றுக்கு ஏங்கி ஏங்கி
எஞ்ஞான்றும் பலவினைகள் ஈட்டி ஈட்டி
நிலையிலே நில்லாத மனம்தான் சென்ற
நிலைமையிலே இதுகாறும் நீந்தல் ஒண்ணா
அலையிலே துரும்பாகி அலைந்தேன் அந்தோ
அருள்புரிந்து அடியனென ஆள்வாய் சேட
மலையிலே ஒருநீல மழையே போல
வதிந்தருளும் ஆனந்த வடிவத் தானே (௨)

---

2) மலையிலே ஒரு நீல மழையே போல் - திருவேங்கட மலையிலே ஒரு நீல மேகம் போல ; வதிந்தருளும் - நித்ய வாசம் செய்யும் ; ஆனந்த வடிவத்தானே - பேரானந்த வடிவமாய் இருப்பவனே ; இலையிலே இடுஞ்சோற்றுக்கு - பரிகலத்தில் இடுகின்ற உணவுக்காக ; ஏங்கி ஏங்கி - பலகாலம் பரிதவித்து ; எஞ்ஞான்றும் - எப்பொழுதும் ; பலவினைகள் ஈட்டி, ஈட்டி - பல தீய செயல்களை மீட்டும் மீட்டும் செய்து குவித்து ; நிலையிலே நில்லாத மனம் - ஒரு நிலையிலும் நிற்காமல் சலனமுடைய என் மனமானது ; தான் சென்ற நிலைமையிலே - தான் போன போக்கின் காரண

மாக ; இதுகாறும் - இதுவரையில் ; அலையிலே – சம்சாரமாகிய கடலிலே ; நீந்தல் ஒண்ணா துரும்பாகி அலைந்தேன் நீந்திக் கரையேற மாட்டாத துரும்பு போல் அங்கு மிங்கும் திரிந்தேன் ; அந்தோ இரக்கக் குறிப்பு. (ஆகையால் நீர்) அடியன் எனா - தாசனென என்னை ஏற்று ; அருள் புரிந்து-என் மேல்கருணை வைத்து ; ஆள்வாய்-ஆட்கொண்டு அருள்வாய்.

---

வன்பிறவி தனைநீக்கும் வகையும் தேரேன்
மனக்குரங்கை வசப்படுத்த மாட்டேன் அந்தோ
என்பிறவி எடுத்து எழுதற்கு எவரால் ஆகும்
இனிப்பிறவி எடுக்காமல் எதிரே வந்து
முன்பிறவி எடுத்து ஓதி உனது பாத
முளரியிலே மனம்செல்ல முன்னின்று ஆள்வாய்
தன்பிறவிக்கு அரசுதரும் கருணைக் குன்றே
தடநாக மலைஉறையும் தம்பி ரானே (3)

---

3) தன் பிறவிக்கு - தான் பிறந்த இராமகிருஷ்ணாதி அவதாரங்களுக்கு ; அரசுதரும் – மேன்மை தருகின்ற ; கருணைக்குன்றே - கருணைமலை போல் நிற்பவனே ; தடநாக மலையுறையும் – பெரிய சேஷாசலத்தில் நித்யவாசம் செய்யும்; தம்பிரானே – எம்பெருமானே ; வன்பிறவிதனை - கொடிய பிறவிப் பிணியை ; நீக்கும் - போக்கும் ; வகையும் தேரேன் - உபாயமும் அறியேன் ; மனக்குரங்கை - குரங்கு போல் தாவுகின்ற மனத்தை ; வசப்படுத்த - மாட்டேன் (ஒரு நிலையில் நிற்கும்படி) கட்டுப்படுத்த மாட்டுகிலேன் ; என் பிறவி - நான் எடுத்துள்ள பிறவிகளை ; எடுத்து எழுதற்கு - தெரிந்தெடுத்து முறையாக எழுதுவதற்கு ; எவராலாகும் - ஒருவராலும் முடியாது : இனிப்பிறவி எடுக்காமல் - இனி, யான் மறுபிறவி எடுக்காதபடி ; எதிரேவந்து - என் எதிரிலே தரிசனம் தந்து ; முன்பிறவி எடுத்தோதி - நான் இதற்கு முன்னாலே எந்தப் பிறவியில் உழன்றேன் என்பதைத் தெரியச் சொல்லி ; உனது பாத முளரியிலே - உனது திருவடித் தாமரைகளிலே ; மனம்

செல்ல என் மனம் நன்கு பதியும்படி ; முன்னின்றாள்வாய் - முன்னால், வந்து நின்று அடியேனை ஆட்கொண்டருள் வாய்ாக.

தன் பிறவிக்கு அரசு தரும் என்றவிடத்து திருவேங்கட முடையானை இராமனாகவும், கிருஷ்ணனாகவும் அவதாரம் எடுத்து, அவ்வவதாரங்களுக்கு மேன்மை தந்தான் என்பது உணர வேண்டுவது.

---

எல்லையிலாப் பிறவிதொறும் இடையூறு இன்றி
இனியமொழி நடையழகால் இணைவேல்
கண்ணால் !
முல்லைமுகை முறுவலினால் மாதர் ஆர்த்த
மோகமெனும் கருங்கடலில் மூழ்கி விட்டேன்
வல்லையெடுத்து உனதுகர மலரால் தீண்டி
மயுங்காதே! எனக்கருணை வைப்பாய் கொல்லோ
அல்லைநிகர் திருமேனி அழகா என்றும்
ஆயிரவாய்ச் சேடகிரி அமர்ந்துளானே (4)

---

4) அல்லை நிகர் திருமேனி அழகா - இருளை ஒத்த திருவுடம்பினையுடையவனே ! ; ஆயிரவாய்ச் சேடகிரி - ஆயிரம் தலையுடைய ஆதிசேட ரூபமான ; மலையில் - திரு மலையில் (சேஷாசலத்தில், ; என்றும் அமர்ந்துள்ளானே² எக்காலத்தும் எழுந்தருளியிருப்பவனே ; எல்லையில்லாப் பிறவிதொறும் - அளவில்லாத பிறவிகள் தோறும் ; இடையூறு இன்றி - ஒரு தடையுமின்றி ; இனிய மொழி (ஆல்) - இனிய பேச்சுக்களால்; நடையழகால் - (அன்னம் போல் நடக்கின்ற) நடையின் அழகினால் ; இணைவேல் கண்ணால் - வேலாயுதம் போன்ற கூரிய இரு கண்களால் ; முல்லை முகை முறுவலினால் முல்லையரும்பு போன்ற புன்சிரிப்பினால் ; மாதர் - பெண்டிர் ; ஆர்த்த - பிணித்த ; மோகமெனும் கருங்கடலில் - காமமாகிய பெரிய சாகரத்தில் ; மூழ்கி விட்டேன் - அமிழ்ந்து

போனேன் ; வல்லையெடுத்து - விரைவாக என்னைத் தூக்கி யெடுத்து ; உனது கரமலரால் தீண்டி - உனது செந்தாமரை மலர் போன்ற திருக்கைகளால் அடியேனைத் தொட்டு மயங்காதேயென கருணை வைப்பாய் கொல்லோ - வருந்தாதே என்று தேற்றிஅருள் செய்வாயோ ; 'அல்லையாண்டமைந்த மேனி அழகன்' - கம்பர்.

---

நீநான்என்று உரைத்திடுவர் நான்நீ என்பர்
நிகிலம்எலாம் மாயைஇது நினைப்பே என்பர்
மான்ஆங் காரம்ஒடு பூதம் என்பர்
மனம்ஆதி காரணத்தின் சலனம் என்பர்
தான்ஆன வகைஅறியார் தமையும் நோக்கார்
தத்வமஸி என்பர்இது ஜாலம் அன்றோ !
வானாதி உலகனைத்தும் ஆகி நின்று
வளர்சேட மலைஉறையும் வாசத் தானே (5)

---

5) வானாதி உலகனைத்தும் ஆகி நின்று - விண் உலகம் முதலாகிய உலகமெல்லாம் வியாபித்து நின்று; வளர்சேட மலை உறையும் வாசத்தானே - ஓங்கிய சேஷாசலத்தில் நித்ய வாசம் செய்பவனே ; நீ நான் என்று உரைத்திடுவர் - 'பரமாத்மா' நீ, 'ஜீவாத்மா' நான்தான் என வேறுபடுத்திக் கூறுவர் சிலர் ; நான் நீயென்பர் - நானே நீ என்பர் (அகம் பிரம்மா) சிலர் ; ஜீவாத்மா என்றும் கூறுவர் பலர் ; நிகிலமெல்லாம் மாயை - எல்லாம் பொய்த் தோற்றம் ; இது நினைப்பே என்பர் - இவற்றை (என்பது பிரமையை) மன மயக்கமே என்பர் சிலர்; பூதமொடு-ஐம்பூதங்களோடு சேர்ந்து; மான் ஆங்காரம் என்பர் - புத்தி தத்துவம், அபிமான தத்துவம் என்பர் ; மனமாதி காரணத்தின் - (அவை) மனம் முதலாகிய உள்ளிந்திரியங்களின்; சலனம் என்பர் - சஞ்சலம் என்றும் சிலர் கூறுவர் ; தானான வகையறியார் - நான் ஸத்தையான விதம் தெரிய மாட்டார்கள் ; தமையும் நோக்கார் - தம்மையும் (தாம் யார்? எங்கிருந்து வந்தோம் என்பதையும்) உள்நோக்கிச் சித்

திக்க மாட்டார்கள் ; (ஆனால் வாயினால்) தத்துவமஸி என்பர் - 'நீ அதுவாக ஆகிறாய்' என்று சுருதி வாக்கியம் காட்டிச் சித்தாந்தம் பேசுவர் ; இது ஜாலமன்றோ - இது நடிப்பு அல்லவா! (தெரிவிப்பாயாக) என்று பிரார்த்தித்தபடி,

''வானாதி உலகனைத்தும் ஆகிநின்று'' -என்ற விடத்து ''அந்தர் பஹிர்ச தத்ஸர்வம், வ்யாப்ய நாராயண ஸ்தக் என்ற சுருதி வாக்கியம் நோக்குக. கம்பரும் ''வானின்று வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பு எங்கும், ஊனும், உயிரும், உணர்வும் போல், உள்ளும் புறனும் உளன் என்பர்'' என்று கூறியுள்ளார்.

---

உனைக்கணமும் நினைத்துநினைத்து உருக மாட்டேன்
உனதுதிருக் கோயில்வலம் உவந்து செய்யேன்
மனைக்கண்இருந்து அறம்புரியேன் வாழ்நாள்எல்லாம்
வாளாமுற்று அறிவிலியாய் வாழ்ந்தேன் அந்தோ
அனைத்துலகும் அனவரதம் பணிந்து போற்றும்
அரவநெடும் கிரிஉறையும் ஆதி நாதா
பனைக்கைநெடும் கரிக்குஅருளுங் கரிய கோலப்
பாற்கரனே அடல்ஆழிப் படையி னானே (6)

---

6) அனைத்துலகும் - எல்லா உலகங்களும் ; அனவரதம் - எப்பொழுதும் ; பணிந்து போற்றும் - வணங்கித் துதிக்கின்ற ; அரவ நெடுங்கிரியுறையும் - சேஷாசலத்தில் நித்யவாசம் செய்கின்ற ; ஆதிநாதா - மூல முதற் பொருளே ; பனைக்கை நெடுங்கரிக்கு - பனைமரம் போன்ற தும்பிக்கையினையுடைய பெரிய யானையாகிய கஜேந்திரனுக்கு ; அருளும் - (அதன்) உயிர்காத்தருள் செய்த ; கரிய கோலப் பாற்கரனே - கரிய அழகிய சூரியன் போல் ஒளிர்பவனே, கருஞாயிறே ; அடல் ஆழிப்படையினானே - கொல்லும் தன்மையுடைய, சுதரிசனம் என்னும் சக்ராயுதத்தை ஏந்தியவனே ; உனை - இறைவனாகிய உன்னை ; கணமும் - ஒரு கண நேரமும் ; நினைத்து

நினைத்து உருக மாட்டேன் - தியானம் செய்து மனம் நெகிழ மாட்டுகிலேன்; உனது திருக்கோயில் - உம்முடைய புனிதமான கோயிலை; வலம் - பிரதட்சணமாக வருதலை; உவந்து செய்யேன் - மனம் மகிழ்ந்து செய்ய மாட்டுகிலேன்; மனைக்கண் இருந்து - இல்லற வாழ்க்கையில் நின்று; அறம் புரியேன் - (அவ்வறத்துக்குரிய) தருமங்களைச் செய்யேன்; வாழ்நாளெல்லாம் - வாழ்க்கை முழுவதும்; முற்று அறிவிலியாய் - முழு மூடனாய்; வாளா வாழ்ந்தேன் - வீணாக உயிர் வாழ்ந்தேன்; அந்தோ (இரக்கக் குறிப்பிடைச் சொல்).

---

எட்டாத செழுங்கனியே இன்பத் தேனே
எழுதரிய திருமேனி எம்பிரானே
சுட்டாத சுயம்சுடரே சுருதிக்கு எட்டாத்
துரிய நிலை கடந்து ஒளிரும் சுயம்பே யாவும்
விட்டார்கள் அந்தரங்க விமானம் ஏறி
விளையாடும் பரம்பரனே விரும்பி நாளும்
நட்டார்கள் தமைப்புரக்கும் ஞானக் குன்றே
நாகமலைக் கொழுந்துஉனையே நம்பி னேனே
(7)

---

7) எட்டாத செழுங்கனியே திரிகரணங்களுக்கும் அப்பாற்பட்ட சுவைப்பயனே; இன்பத் தேனே - சுவையுடைய தேன்போல் இனிமையுடையவனே; எழுதரிய திருமேனி எம்பிரானே - ஓவியத்து எழுதவொண்ணா திருவுருவம் உடைய எம்பிரானே; சுட்டாத சுயஞ்சுடரே - சுட்டிக் காட்ட இயலாத சுயப்பிரகாசமாய் இருப்பவனே; சுருதிக்கு எட்டா - வேதங்களால் அறிய மாட்டாத; துரிய நிலை கடந்து - ஆன்ம நிலைக்கு அப்பாற்பட்டு; ஒளிரும் - பிரகாசிக்கின்ற; சுயம்பே - (சுயம்புவே) தானான இறைவனே; யாவும் விட்டார்கள் - அனைத்தையும் துறந்த தவசிரேட்டர்களின்; அந்தரங்க விமானம் ஏறி - இதயப் பீடத்தில் ஏறி; விளை-

யூாடும் - திருவிளையாடல் புரியும் ; பரம்பரனே - மேலான பரம் பொருளே ; நாளும் விரும்பி நட்டார்கள்தமை - தினந் தோறும் மனம் வைத்து ; பக்தியோடு - அண்டினவர்களை ; புரக்கும் - இரட்சிக்கின்ற ; ஞானக் குன்றே - பரஞான சொரூபமாய்க் குன்று போல் விளங்குபவனே ; நாக மலைக் கொழுந்து - சேஷாசலத்தில் முளைத்தெழுந்த கொழுந்து போன்றவனாம் ; உனையே நம்பினேனே - உன்னையே நம்பி இருந்தேனே ; (என்னை இரட்சிப்பாயாக).

---

பாலன்என விளையாடும் பருவம் நீங்கிப்
பாவையர்கள் அதிமோகப் பரவை மூழ்கி
வேல்அனைய விழிமயக்கால் மயங்கி வீழ்ந்து
வேலைவாய்த் துரும்பாகி மெலிந்து தேம்பிக்
காலன்நகர் குறுகிமனம் கலங்கா வண்ணம்
கருணைமழை பொழிந்துஎனையும் காப்பாய் கொல்லோ
ஆலம்உமிழ் அரவகிரி அதனில் மேவும்
அருளாளா திருமகள்வாழ் ஆகத் தானே (8)

---

8) ஆலம் உமிழ் - விஷத்தை கக்குகின்ற ; அரவகிரி அதனில் மேவும் - சேஷாசலத்தில் எழுந்தருளியிருக்கும் ; அருளாளா - அருள் பாலிப்பவனே ; திருமகள் வாழ் ஆகத் தானே - இலக்குமி தேவி அகலகில்லாது நித்ய வாசம் செய்யும் திருமார்பினை உடையவனே ; பாலன் என விளையாடும் பருவம் நீங்கி - சிறு பிள்ளையாகி ஓடியாடி விளையாடும் சிறு பிள்ளைப் பருவம் நீங்கி (அதன் பின்) ; பாவையர்கள் - மாதர்களின் ; அதிமோகப் பரவை மூழ்கி - மிக்க காமமாகிய கடலிலே ஆழ்ந்து ; வேலனைய விழி மயக்கால் - வேலாயுதம் போன்ற கண்களின் வீச்சினால் ; மயங்கி வீழ்ந்து - தடுமாறி அவதிப்பட்டு ; வேலை வாய்த்

துரும்பாகி - கடலில் விழுந்த துரும்பு போல் அலைச்சல் பட்டு ; மெலிந்து தேம்பி - இளைத்து வருந்தி ; காலன் நகர் குறுகி - இயமலோகத்தைக் கிட்டி ; (வேதனைப்பட்டு இறப்பதற்கு முன்) ; மனம் கலங்கா வண்ணம் - (புத்தி தடுமாறி) மனம் சலன முறாதபடி ; கருணை மழை பொழிந்து - அருள் மாரி பெய்து ; எனையும் காப்பாய் கொல்லோ? - (நீசனாய்ப் போன) என்னையும் காப்பாற்று வாயா ; (காப்பாற்ற வேண்டும்).

"அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறை மார்பா" என்று விளித்தார் நம்மாழ்வாரும். "தெரியேன் பாலகனாய்ப் பல தீமைகள் செய்து விட்டேன்" என்றும், "கூடினேன் கூடி இளையவர் தம்மொடு அவர் தரும் கலவியை விரும்பி ஓடினேன்" என்றார் திருமங்கை மன்னன். மற்றும், "மாதரார் கயற்கண் என்னும் வலையுள் பட்டு அழுந்து வேனை" என்றார் தொண்டரடிப் பொடியும்.

---

காட்டிலே உறைந்துமலைக் குகைவாய் வைகிக்
கனல்நடுவே இருந்துபல காலம் நீங்கி
ஏட்டிலே இருந்ததுஎல்லாம் படித்திட்டாலும்
எட்டு வகை யோகம்எலாம் இயற்றிட் டாலும்
ஓட்டிலே எழுதும்எழுத்து ஒழிவது உண்டோ
உனதுஅருள்கண் பார்வை சிறிதுளதேல் என்றும்
வீட்டிலே குடியிருந்தால் பழுதுஉண் டாமோ
வெற்பரசா உரககிரி மேவி னானே (9)

---

9) உரககிரி - சேஷாசலத்தில் ; வெற்பு அரசா - (அந்த) மலைக்குத் தலைவனாக ; மேவினானே - எழுந்தருளி யிருப்பவனே ; காட்டிலே உறைந்து - காட்டிலே வசித்து ; மலைக்குகைவாய் வைகி - மலைக் குகைகளிலே தங்கி ; கனல் நடுவே இருந்து - பஞ்சாக்கினிக்கு மத்தியிலே நின்று ; பல

காலம் நீங்கி - பல வருடங்கள் போக்கி; ஏட்டிலே இருந்த தெல்லாம் படித்திட்டாலும் - சாத்திரங்களிலேயே கூறியவை எல்லாம் கற்றறிந்திட்டாலும்; எட்டு வகை யோகமெல்லாம் - அஷ்டாங்க யோகமெல்லாம்; இயற்றிட்டாலும் - பயின் றாலும்; ஓட்டிலே எழுதும் எழுத்து - மண்டை ஓட்டிலே எழுதிய விதியெழுத்தை; ஒழிவதுண்டோ! மாற்றுவதும் உண்டோ? (மாற்ற முடியாது) (ஆகவே) உனது அருட்கண் பார்வை - உன்னுடைய கடாட்ச வீட்சணம்; சிறிது உளதேல்- சிறிது அடியேன் மேல் விழுமானால் (வீடுபெறுவனே)! (அங்ஙண்) என்றும் - எக்காலத்தும்; வீட்டிலே குடியிருந்தால் - உனது பரம பதத்திலே தங்கியிருந்தால்; பழுதுண்டோமோ - உனக்கு ஏதேனும் குறையுண்டாமோ! (ஆகாதே).

"காயோடுத்துண்டு கனியுண்டுவீச, கடுங்காய் நிகர்ந்து நெடுங்காலம் ஐந்து, தீயோடு நின்று தவம் செய்ய வேண்டா திருமார்பானைச் சிந்தையுள் வைத்துமென்பீர்" (பெரிய திரு 3: 2 : 2) என்று திருமங்கை மன்னனும், "காயிலைதின்றும், கானில் உறைந்தும், கதித்தேடித், தீயிடை நின்றும் பூவலம் வந்தும் திருவீர்கான், தாயினும் அன்பன், பூமகள் அன்பன், தடநாகப் பாயல் முகுந்தன் கோயில் அரங்கம் பணிவீரே" என்று திவ்யகவியும் கூறியுள்ளவை நோக்குக. அஷ்டாங்க யோகம் என்பது இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாக்காரம், தாரணை, தியானம், சமாதி ஆகும்.

---

பஞ்சவர்கள் மறுபடியுற் பவித்தார் கொல்லோ
பாஞ்சாலி தனக்குஆடை பண்ணி னாயோ
அஞ்சுஅவித்த முனிவர்வசம் ஆய்விட் டாயோ
ஆனாலும் என்னளனை ஆள்தற்கு அம்மா
வஞ்சகமாய் நீமறந்தால் யாவர் காப்பார்
மரகதமா மலைபோல மயங்கு வோனே
கஞ்சமலர் புரையும்எழில் கண்ணா! ஞானக்
கடல்அமுதே உரககிரிக் கருணை வாழ்வே (10)

10) மரகதமா மலை போல-பச்சை மாமலை போல; மயங்குவோனே - விளங்குபவனே! கஞ்ச மலர் புரையும் - செந்தாமரை மலரையொக்கும் ; எழில் கண்ணா - அழகு பொருந்திய கண்களையுடையவனே ! ஞானக் கடல் அமுதே - பரஞான வாரிதியில் உள்ள அமுதம் போன்றவனே ! உரக கிரிக்கருணை வாழ்வே - சேஷாசலத்தில் நித்யவாசம் செய்யும் அருளாளனே; பஞ்சவர்கள் - பாண்டவர்கள் ; மறுபடி - திரும்பவும் ; உற்பவித்தார் கொல்லோ - ஜென்மம் எடுத்தார்களோ ? பாஞ்சாலி தனக்கு-திரௌபதிக்கு ; ஆடை பண்ணினாயோ- சேலை நெய்தாயோ ? அஞ்சு அவித்த முனிவர் - பஞ்சேந்திரியங்களையும் அடக்கிய முனிவர் (கௌதமர் போன்ற முனிவர்களின்) ; வசம் ஆய்விட்டாயோ - ஆதீனம் ஆனாயோ ? ஆனாலும் - அப்படியொரு கால் முனிவர் ஆதீனம் ஆனாலும் ; என்னை ஆளுதற்கு-என்னை ஆட்கொள்வதற்கு; என்ன - யாது தடை ; நீ - வஞ்சகமா மறந்தால் - கபடமாக நீ மறந்தாயானால்; யாவர் காப்பர் - என்னை எவர் இரட்சிப்பவர் ; 'அம்மா' - வியப்பிடைச் சொல்.

ஏன் பள்ளி கொண்டீரையா - ஸ்ரீரங்கநாதரே

என்ற இராம நாடகக் கீர்த்தனை ஒப்பு நோக்குக.

தாமரைக் கண்ணா என்ற விடத்து, 'கப்யாசம் புண்டரீகம் அக்ஷிணி'' என்ற சுருதி வாக்கியம் நோக்குக. ''தாமரைக் கண்ணான் உலகு'' என்றார் திருவள்ளுவனாரும் பாண்டவர்கள் மறு ஜென்மம் எடுக்காமல் உன் கிருபையால் சொர்க்கம் புகுந்தனர். ஆகவே நீ மனம் வைத்தால் என் பிறவிப் பிணியைப் போக்க முடியாதா ? உன் நாமம் சொன்ன திரௌபதிக்கு, உன் சங்கற்பத்தால், ஆடை சுரந்தாய் அப்படி உன் சங்கற்பத்தால் என்னை ஈடேற வைக்கலாமே என்பது உட்கருத்து.

தெருளூடு தெளிந்தமன முகத்தி னோடு
தேவர்அமுது ண்டவரும் தேங்கி நிற்கும்
அருளூறும்உனது அடியேன் அடைய நில்லா
அறிவிலேன் விலக்ஷண ஆனந்தன் என்பான்
கருவூடு நெடுங்காலம் கார்த்த கோலக்
காட்சிஅதை அறிந்திட்டான் இனிமே லேனும்
இருளூடும் இசையவிடாது அருள்வாய் ஈச
எம்ஆதி சேடமலை எம்பி ரானே (11)

11) ஈச - இறைவனே! ; எம்ஆதி - எம்முடைய முதற் பொருளே! ; சேடமலை எம்பிரானே - சேஷாசலத்தில் எழுந் தருளியிருக்கும் எம்பெருமானே! ; தெருளூடு - நல்லுணர்வின் இடையே ; தெளிந்த மனமுகத்தினோடு - தெளிவு பெற்ற உள்ளத்தை (காட்டும்) முகத்தினோடு - உள்ளத்தியல்பை வெளிக்காட்டும் கண்ணாடி முகம்,

(அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம் - குறள்)

அமுதுண்ட தேவரும் - அமுதத்தைப் பருகிய தேவர்களும் ; தேங்கி நிற்கும் - காத்துக் கூடி நிற்கும் படியான ; அருளூறும் உனதடியேன் - அருளைச் சுரக்கின்ற உனது திருவடி களையே ; அடைய கில்லா - நெருங்கமாட்டாத ; அறி விலேன் - மூடனாகினேன் ; (எனினும் ஒன்று கேள்) விலக்ஷணானந்தன் என்பான் - விலக்ஷணானந்தன் என்ற (மேல் மாயில் என்னும் தலத்தில் கோயில் கொண்ட) முனிவன் ; நெடுங்காலம் - பல வருடங்கள் ; கருவூடு - கருவிடையே இருந்து (உனது) ; கார்த்தக் கோலக் காட்சியதை - கரிய அழகிய திருமேனியின் தரிசனத்தை ; அறிந்திட்டான் - சேவித்து நல்லறிவு பெற்றான் (அதுபோல) ; இனிமே லேனும் - இனியாவது ; (அடியேனை) ; இருளூடுமிசைய விடாது ஆள்வாய் - அஞ்ஞான இருளில் உழலவிடாது அருள் செய்வாயாக.

"தேவர்களும் தேங்கி நிற்கும் உனதடி" என்ற இடத்து "வேங்கடவா! நின் கோயிலின் வாசல் அடியாரும் வானவரும், அரம்பையாரும் கிடந்து இயங்கும்" என்ற குலசேகரர் வாக்கும் நோக்குக.

---

மாயன்வாழி மழைவண்ணன் வாழி
வடமலையான் வாழி மலர்மங்கையர்
நேயன்வாழி மறைநிமலன் வாழி
நவநீதன் வாழிஅருள்நீதிசேர்
ஆயன்வாழி எனதப்பன் வாழி
என்தன்பன் வாழி உளையுண்டசெவ்
வாயன்வாழி மதுசூதனன் வாழி
நிலமங்கை வாழிஅருள் வாழியே (12)

---

11) மாயன் வாழி - ஆச்சரிய பூதனானவன் வாழி! ; மழை வண்ணன் வாழி - நீலமேக வண்ணன் வாழி! ; வடமலையன் வாழி - வடக்கினுள்ள திருவேங்கட மலையில் நித்ய வாசம் செய்பவன் வாழி! ; மலர்மங்கையன் நேயன் வாழி - அலர் மேல் மங்கையின் கேள்வன் வாழி ! ; மறை நிமலன் வாழி - வேதபுனிதன் வாழி! ; நவநீதன் வாழி - புதுமையானவன் வாழி ; அருள்நீதி சேர் ஆயன் வாழி - அருளும் தருமமும் சேர்ந்தவனாய்த் திருவாய்ர்பாடியில் வளர்ந்தவன் வாழி !; எனது அப்பன் வாழி - எனக்குத் தந்தை போல்வான் வாழி! ; எனது அன்பன் வாழி - என் அன்பிற்குரியவனகிய தோழன் வாழி! ; அளையுண்ட செவ்வாயின் வாழி - வெண்ணெய் திருடி அமுது செய்து சிவந்த வாயையுடையவன் வாழி! ; மதுசூதனன் வாழி - மதுசூதனன் வாழி ; நில மங்கை வாழி - பூதேவி வாழி! ; அருள்வாழி - உன் கிருபை வாழி! ;

**மதுரகவி ஸ்ரீ வேங்கடேசத் திருப்பதிகம் முற்றும்**

**மதுரகவி ஸ்ரீநிவாசன் துதி**

காசினியில் நிலையாத வாழ்வெலாம் கோடைவரு
   கானல் நீரென்று தேர்ந்து
  கண்டாலும் மண்ணாசை பெண்ணாசை வராத
   காசின்மேல் ஆசை கொண்டு
  களியாடி ஆடையணி வாகன ஆரோகண
   கணத்தினால் இருள் மூடிய
  கண்பெற்று மதிமாழ்கி விண்பெற்ற பேறுபெறு
   கடையனேன் உய்கு வேனோ

ஆசரப் பிரகிருதி அமையாமல் அடியன்உனது
   அம்புயப் பாத மீதில்
  அனவரதம் மாறாமல் அன்புவைத்து உனதுசுதை
   அமுதினை அருந்தி உண்மை
  ஆசார முறைநீதி அணுவேனும் விலகாமல்
   ஆழ்வார்கள் அகமாம் என
  ஆகமனன் மெழுகாக உருகி ஆனந்தகர
   அலைகடல் அழுந்த அருள்வாய்

ஈசா அகிலாண்ட நேசா கயிலைஉறை
   ஈசானன் வாசமல ரோன்
  ஏத்தரிய மாயா வினோதகல்யாணகுண
   வேகப் பிரதாபம் உடையாய்
  இங்குமாய் அங்குமாய் எள்ளுக்குள் எண்ணெய் போல்
   எங்குமாய் நின்ற முதலே
  இந்திரன் சந்திரன் சூரியன் வருணனோடு
   இயமனாய் இலகும் எந்தாய்

தேசுபெறு மரகத சியாமளா காரசுர
   சேவிதஆ காச ரூபா
  திவ்யபரி மளகந்த மந்தார நவரத்னத்
   திண்பு யாசல நாயகா
  சினகர விமானகோபுர மண்டப ஆதிஅணி
   சேர்ந்துஉரக ராக வடிவாய்ச்
  சிகரபந் திகண்மருவு சேடகிரி வாசனே
   சீனிவாசக் கடவுளே

ஈசா - இறைவனே ; அகிலாண்ட நேசா - எல்லா உலகங்களாலும் பக்தி செய்யப் படுபவனே! ; கயிலை உறை ஈசா - கைலாய மலையில் வசிக்கின்ற சிவபெருமானும், ஆனவனே ; நன் வாச மலரோன் - நறுமணம் வீசுகின்ற உந்தித் தாமரையில் தோன்றிய பிரமனும் ; ஏத்தரிய - தோத்திரம் செய்தற்கரிய ; மாயா விநோதா - ஆச்சரிய சக்தியுடைய லீலா விநோதனே! ; கல்யாண குண வேகப் பிரதாபமுடையாய் - சகல கலியாண குண பரிபூரணனாய் பிரகாசமுடையாய் ; எள்ளுக்குள் எண்ணெய் போல் - எள்ளினுள் எண்ணெய் மறைந்திருத்தல் போல் ; இங்கும் அங்குமாய் எங்குமாய் நின்ற முதலே - சர்வ வியாபியாய்ப் பரந்து நிற்கின்ற முதற்பொருளே ! ; இந்திரன் சந்திரன் சூரியன் வருணனோடு - தேவர்கள் தலைவன் இந்திரன், சந்திர? சூரிய, வருணபகவான் இவர்களோடு ; இயமனாய் - காலனாயும் ; இலகும் - விளங்குகின்ற ; எந்தாய் - எம்பெருமானே ! ; தேசு பெறு மரகத சியாமளாகார - ஒளி பெற்ற பச்சை மரகத மணிவண்ணா ! ; சுரசேவித - தேவர்களாலே வணங்கப்படுபவனே ! ; ஆகாச ரூபா - வான வடிவானவனே ! ; திவ்யபரிமள கந்த - என்றும் நறுமணம் பொருந்தியவனே ! ; மந்தார - மந்தார மரம் போல்? விழங்குபவனே ! ; நவரத்னத் திண்டியாசல நாயகா - நவரத்தினம் போல ஒளி வீசி, மலை போன்ற திண்ணிய தோள்களையுடைய இறைவனே ! ; சினகர விமானம் கோபுரம் மண்டபம் ஆதி - சந்நிதிகள், ஆனந்த நிலைய விமானம், சிம்ஹத்வார கோபுரம், கலியாண மண்டபம், திருமலை ராயன் மண்டபம் முதலானவை ; அணி சேர்ந்து - அழகுறப் பொருந்தி ; உரகராச வடிவாய் - ஆதி சேடனது வடிவமாய் ; சிகர பந்திகள் மருவு - மலையுச்சி வரிசைகள் அமைந்துள்ள ; சேடகிரி - சேஷாசலத்தில் ; வாசனே ! - நித்ய வாசம் செய்பவனே ! சீனிவாசக் கடவுளே - வேங்கடேசப் ; பரமபொருளே ; காசினியில் - இப்பூலோகத்தில் ; நிலையாத வாழ்வெலாம் - நிலைபேறு இல்லாத வாழ்க்கையெல்லாம் ; கோடை வரு கானல் நீர் என்று தேர்ந்து கண்டாலும் - முதுவேனிற் காலத்தில் தோன்றுகின்ற

பேய்த்தேர்போன்று நிலையில்லாதது என்று தெளிவுறத் தெரிந்திருந்தாலும்; மண்ணாசை பெண்ணாசை வாராத காசின் மேல் ஆசைகொண்டு- நிலத்து மேல் விருப்பம், மகளிர் மேல் காமம், பொருளின் மேல் ஆசை எனும் மூவாசைகளைக் கொண்டு; களியாடி - கட் குடியன் போல மயங்கித் தள்ளாடி; ஆடை - பட்டாடைகள் (அணிதல்) ; அணி - ஆபரணங்கள் (அணிதல்); வாகன ஆரோகணம் - (குதிரை, யானை, சிவிகை போன்ற வாகனங்கள் மீது ஏறி வலம் வருதல் போன்ற; கணத்தினால் - பேய்களால் ; இருள் மூடிய கண் பெற்று - அகந்தை மிகுந்த உடம்பைத் தாங்கி; மதிமாழ்கி - அறிவு கெட்டு ; விண்பெற்ற பேறு - சொர்க்கவின்பத்தை ; பேறு - பெற்றது போல மகிழும் ; கடையனேன் - நீசனாகிய நான் ; உய்குவேனோ - ஈடேறுவேனோ ! (மாட்டேனே) (ஆகவே) ; ஆசாரப் பிரகிருதி அமையாமல் - நிலைத்திணை சுபாவம் பொருந்தாமல் ; அடியன் - அடியேன் ; உனது அம்புயப் பாத மீதில் - திருவடித் தாமரைகளில் ; அனவரதம் - எப்பொழுதும் ; மாறாமல் அன்பு வைத்து - குன்றாத பக்தி வைத்து ; உனது சுதை அமுதினை அருந்தி - உனது தேவாமிர்தம் போன்ற அழகினைப் பருகி ; ஆசார முறை நீதி உண்மை அணுவேனும் விலகாமல் - நல்லொழுக்க முறை, தர்ம நெறி, சத்தியம், இவை சிறிதேனும் தவறாமல் ; ஆழ்வார்கள் அகமாம் என ஆக - ஆழ்வார்கள் பன்னிருவரும் என்னுள்ளத்தில் உள்ளார் என்னும் படியாக ; மனன் மெழுகாக உருகி - (அடியேன்) மனம் மெழுகு போல் நெக்குருகி ; ஆனந்தசுர அலைகடல் - பேரானந்த அலைகள் வீசும் பெருங்கடலில் ; அழுந்த அருள் வாய் - மூழ்கித் திளைக்க அருள் புரிவாயாக !

**மதுரகவி ஸ்ரீநிவாசன் துதி முற்றும்.**

# மதுரகவி
# ஸ்ரீ வேங்கடேசன்
# பலசந்த மாலை

# பாராட்டுரை

ப. ம்ரா. திருமலை அய்யங்கார், காரியதரிசி
திருவல்லிக்கேணி, தமிழ்ச்சங்கம், சென்னை.

மண்டல மகிழப் பாலார்
வாரியின் பற்று நீக்கி
எண்டவர் பலரும் வேண்ட
எழிற்பணி மலைமேல் யாழ்க்கைக்
கொண்டுறை முனிசொற் கேட்டுக்
கோனேரிக் கரையி னின்றோன்
முண்டக மலர்ப்பா தத்தை
முறையினிற் றொழுதல் செய்வாம்.

— திருவேங்கட தலபுராணம் - சிறப்புப் பாயிரம்-7

'நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ் வரம்பறுத்த தண்புனல் நாடு' (வேனிற் காதை)

என்றும், 'வேங்கட மலையுந் தாங்கா விலையுள், காவிரி நாடும்' (கடலாடுகாதை,) என்றும் :வீங்கு நீரருவி வேங்கடமென்றும், ஓங்குயர் மலையம் (காடு காண் கதை, என்றும் திருவேங்கடத் திருப்பதியை மிகச் சிறப்பாகப் பாராட்டியது, தமிழ்ப் பெருங்காப்பியமான **சிலப்பதிகாரம்**. சைவதலப் புராண நூல் ஆகிய, **சீகாளத்திப் புராணம்** 'அரவணைச் செல்வன் வாழும் அந்தமிழ் நிலத்தின் எல்லைத் திருமலை கண்டு கண்டோர் செறி வினைத் தொடரறுக்கும், பெருவரை கண்டிறைஞ்சிப் பிறங்கு வெள்ளருவி தாழும், பொருவரு மேம கூடப் பொருப்பினை இனிது கண்டான்,' என்று திரு மலையைச் சுட்டிக்காட்டி உள்ளது.

**திருவேங்கடதல புராணம்**, (திருப்பதி மான்மியம்) இயற்றியவர், **தேவாரநகரம் மதுரகவி** வீரராகவ சுவாமி ஐயங்காரவர்கள். இவரது நற்சீடரும், உறவின

மாகிய, **அநுமந்தபுரம் ஸ்ரீ உ. வே. மதுரகவி ஸ்ரீ நிவாஸய்யங்கார் சுவாமி, ஸ்ரீ வேங்கடேசன் பலசந்தமாலை,** என்ற ஒரு அரிய நூலை இயற்றியுள்ளார்.

இந்த நூல் 25 இனிய பாடல்களைக் கொண்டது. 'அண்டமாயிரங்கோடி (1) என்று தொடங்கி 'வருவாயே', (25) என்று முற்றும், நன் மாலை இதுவாகும். இதில் உள்ள 12, 13 ம் ஆம் பாடல்களை நோக்குபவர், இதன் ஆசிரியர் ஒரு அரிய **சித்திரகவி** யுமாவார் என்று அறிதியிடுவர். 'மறை மொழி தானே மந்திரம்', என்பதற்கேற்ப சில பாடல்கள் இதனையும் கொண்டு மிளிர்கின்றன.

பொங்கும் மங்களம்
எங்கும் தங்குக

சென்னை — ப. ரெ. திருமலை அய்யங்கார்

11—7—1957 — **காரியதரிசி**

# மதுரகவி ஸ்ரீவேங்கடேசன் பலசந்த மாலை

அண்டம் ஆயிரம் கோடி அமைத்தளித்து
உண்டு மீள உமிழ்ந்துஉயிர் ஓம்புவான்
வண்டு உலாவும் பொழில்வட மாமலைக்
கொண்டல் வண்ணன் குரைகழல் போற்றுவாம் (1)

**'சந்தம்'** என்பது செய்யுள் வண்ணம். இறைவனுக்குப் பூமாலை சூட்டப்படுவது போல இப்பாமாலை சூட்டப்பட்டதாகலின் இது **''பலசந்த மாலை''** எனப் பெயர் பெற்றது.

'மாலை' என்பது பல வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. திருவேங்கட மலையில் எழுந்தருளியிருக்கின்ற திருமாலின் திருவடிகளிலேயே சூட்டும் மாலை போலுள்ளதனால், ''ஸ்ரீ வேங்கடேசன் பலசந்த மாலை'' எனப்பட்டது. ''அடி சூட்டலாகும் அந்தாமம்'' ''செய்யச் சுடராழியான் அடிக்கே சூட்டினேன் பொன்மாலை'' ''கன்றினம் மேய்த்த கழலிணைக் கீழ், உற்ற திருமாலைப்பாடும் சீர்'' என்றார்.

1) ஆயிரம் கோடி அண்டம் அமைத்து - அளவற்ற பிரபஞ்ச உருண்டைகளைப் படைத்து ; அளித்து - காத்து ; உண்டு - தன் திரு வயிற்றுள் அடக்கி ; மீள உமிழ்ந்து - மறுபடியும் வெளிக் கொணர்ந்து ; உயிர் ஓம்புவான் - அப்பிரபஞ்சங்களில் உள்ள அனைத்துயிர்களையும், காப்பாற்றுபவனாகிய ; வண்டு உலாவும் - வண்டுகள் ரீங்காரம் செய்து திரியும் ; பொழில் - சோலைகளையுடைய ; வட மாமலை - வடக்கில் உள்ள திருவேங்கட மலையில் எழுந்தருளியிருக்கிறன் ; கொண்டல் வண்ணன் - மேகநிற வண்ணனாகிய

ஸ்ரீ வேங்கடேசனின் ; குரை கழல் போற்றுவோம் - ஒலிக்கின்ற வீரக்கழல்களை அணிந்த திருவடிகளைத் தோத்தரிப்போம் ;

''பாராயது உண்டு உமிழ்ந்த பவளத்தூணை'' (பெரிய திரு. 2:5:1) ''புவனம் படைத்து உண்டு உமிந்த'' என்றார் திருமங்கை மன்னரும் (பெரிய திரு 9:9:1).

சிந்தை நொந்து வேக மேவு தீய கால தூதுவர்
வந்து எதிர்ந்து பாசம் வீச வாடி ஆவி போகுமுன்
முந்து கங்குல் போல ஆதி மூல மென்ற யானைபால்
வந்த அந்த வண்ணம் ஆள்தி மாசில் சீநி வாசனே
(2)

2) மாசுஇல் சீநிவாசனே - குற்றமற்ற புனிதனான சீனிவாசப் பெருமானே! : சிந்தை நொந்து வேக - மனம் வருந்தி வாடி வதங்கும்படி ; மேவு - வருகின்ற ; தீய கால தூதுவர் - கொடிய யமபடர்கள் ; வந்து எதிர்ந்து பாசம் வீச - வந்து எதிரே நின்று என்மேல் பாசக் கயிற்றை வீசிக் கட்டி இழுக்க ; வாடி - பெருந்துயரமடைந்து ; ஆவி போகும் முன் - உயிர் போவதற்கு முன்னே ; முந்து கங்குல் போல - முற்பட்டு வருகின்ற இருட்டைப் போல, கரிய நிறத்தையுடைய ; ஆதிமூலம் என்ற யானைபால் - ஆதிமூலமே! என்று அழைத்த யானையிடத்து ; வந்த - கருடன் மேல் ஏறி வந்த ; வண்ணம் - அந்தப்படியே (அந்தக் கருடாருடனாய்) ; ஆள்தி (காட்சி கொடுத்து) என்னை ஆள்வாயாக!

சீதமதிக்கு இணையாகு முகத்தியர் சீதள
புற்பதநேர்
சூதமுலைத் துணைமீது இடையில் துயில்சோரன்
எனக்கருதி
ஆதரவு அற்றிடில்ஆர் துணைஎற்கு இனிஆதரம்
வைத்துஅருள்வாய்
ஓதுஅரவக் கிரிமீது உறைஅற்புத ஓமமறைப்
பொருளே (3)

3) ஓது அரவக்கிரி மீது உறை அற்புத - சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற சேஷாசலத்தில் நித்திய வாசம் செய்கின்ற அதி ஆச்சர்ய சக்தியுடையவனே! ; ஓம மறைப் பொருளே - யக்ஞ புருஷனே! ; சீத மதிக்கு இணையாகு முகத்தியர் - குளிர்ந்துள்ள சந்திரனுக்கு ஒப்பாகும் முகத்தைக் கொண்டுள்ள அழகிய மாதர்கள் ; சீதள புற்பத நேர் - குளிர்ந்த நீர்க்குமிழியை ஒத்த ; சூத முலைத்துணை மீதிடையில் - சூதாடு கருவியைப் போன்ற இரு கொங்கைகளின் மேல் ; துயில் - உறங்குகின்ற ; சோரன் - வியபசரிப்பவன் (திருடன்); என - என்று ; கருதி - நினைத்து ; ஆதரவு அற்றிடில் - தேற்றுவார் இல்லாமல் போனால் ; எற்கு - பாவியாகிய எனக்கு (உன்னையன்றி) ; ஆர் துணை - உதவியாவர் எவர்? ஆகவே ; இனி ஆதாரம் வைத்தருள்வாய் - இனி என் மேல் தயை வைத்துத் திருவருள் புரிவாயாக!

கார்உருவாய்க் கனல் உருவாய்க் கடல் உருவாய்க்
காண்பவனும்
பார்உருவாய் நீர் உருவாய்ப் பகல் உருவாய்
இருப்பவனும்
ஓர்உருவாய் மூவுருவாய் ஒளிஉருவாய் நின்றவனும்
ஏர்உருவாய் உரககிரி இடைமருவாய்
இருந்தோனே (4)

4) காருருவாய் - மேகத்தின் உருவமாய் ; கனலுருவாய் - அக்னி சொருபனாய் ; கடலுருவாய் - கடல் நீரின் வடிவமாய் ; காண்பவனும் - காணப்படுபவனும் ; பாருருவாய் ; பூமியின் வடிவமாய் ; நீருருவாய் - தீர்த்த ரூபியாய் - பகலுருவாய் - சூரியன் வடிவனாய் ; இருப்பவனும் - தோன்றுபவனும் ; ஓருருவாய் - ஏக மூர்த்தியாய் ; மூவுருவாய் - திரிமூர்த்தி சொருபமாய் ; ஒளியுருவாய் - சோதி ரூபமாய் ; நின்றவனும் - ஸ்திரமானவனுமாய் (உள்ளவன் யாவனெனில்) ; ஏருருவாய் - அழகிய வடிவத்தனாய் ; உரக கிரியிடை - சேஷாசலத்தில் ; மருவாய் - மருக்கொழுந்தாய் ; இருந்தோனே! - நித்ய வாசம் செய்பவனாகிய சீநிவாசனே!

அன்னநடைத் தேவகிதன் அருஞ்சுதனாய்
வந்தவனே !
பொன்னவனை உரங்கீண்டு புரந்துஅளித்தாய்
புவிஅனைத்தும்
மன்னுபொழில் வளம்சிறந்த வடமலைவாழ்
மாதவனே !
தென்னவனுக்கு அருள்சுரந்த சேவகனே
கண்வளராய் (5)

5) அன்ன நடைத் தேவகி தன் - அன்னத்தின் நடை போல, மென்மையான நடையையுடைய தேவகியின் ; அருஞ்சுதனாய் - பெறலரிய திருமகனாய் ; வந்தவனே! - அவதரித்தவனே! ; பொன்னவனை - இரணியாசுரனை ; உரம் கீண்டு - மார்பினை நகத்தால் கீறிப்பிளந்து ; புவியனைத்தும் புரந்து அளித்தாய் - பூமி முழுவதையும் பாதுகாத்தாய் ; மன்னுபொழில் வளஞ்சிறந்த - பொருந்திய சோலைகளால் வளப்பம் பெற்றுச் சிறப்புற்ற ; வடமலை வாழ் - வட வேங்கட மலையில் நித்ய வாசம் செய்கின்ற ; மாதவனே - திருமகள் கேள்வனே! ; தென்னவனுக்கு - பாண்டியனுக்கு ; அருள் சுரந்த - மீனவனாய் அருள் புரிந்த ; சேவகனே - வீரனே! ; கண்வளராய் - உறங்குவாயாக ; (துயில் கொள்வாயாக) !

அன்னம்பயில் நடையாள் கட லமுதம்தரு
மொழியாள்
சின்னம்சிறு வயதாள்அனு தினமும்தரி யாதுஉன்
பொன்னம்கழல் தனைநாடினள் புரிவோடுஅருள்
புரிவாய்
மன்னும் பொழில் அழகார் வடமலைமேல் உறை
மணியே (6)

6) மன்னும் - நிலை பெற்ற ; பொழிலழகுஆர் - சோலைகளின் எழில் நிறைந்த ; வடமலை மேல் – வட வேங்கட மலைமேல் ; உறைமணியே – நித்ய வாசம் செய்கின்ற மணி போன்றவனே! ; (என் மகளாகிய இவள்) ; அன்னம் பயில் நடையாள் - அன்னமும் நடைகற்கும் படியான அழகிய மெல்லிய நடையையுடையவள் ; கடலமுதம் தரு மொழியாள் - திருப்பாற் கடலில் தோன்றிய தேவாமிர்தம் போன்ற இனிய பேச்சினையுடையவள் ; (மேலும்), சின்னஞ்சிறு வயதாள் - இளம் வயதுடையவள் ; அனுதினமும் - தினந்தோறும் ; தரியாது - பொறுக்க முடியாமல் ; உன் பொன்னங் கழல்தனை நாடினள் - உன்னுடைய பொன் போன்ற அழகிய திருவடிகளை விரும்பி வந்துள்ளாள் ; (ஆகவே), புரிவோடு அருள் புரிவாய் - அன்போடு தயை புரிவாயாக !

பாசம்அனு பந்த வினையாலே உளைந்துபல
பாராகி வந்து பிறவா
ஊசாடி நின்ற எளியேன்ஆவி நின்கழலின்
ஊடாக நன்கு புரிவாய்
ஆசார புங்கவர்கள் நேசா சுயம்பு உருவம்
ஆனாய் அகண்ட வடிவாம்
ஈசா புயங்ககிரி மீதே உறைந்தசரு
வேசா நலங்கொள் இறையே (7)

7) ஆசார புங்கவர்கள் நேசா - ஆசாரத்தில் சிறந்தவர்களுடைய அன்பனே! ; சுயம்பு உருவமானாய் - தானாகத் தோன்றிய மூர்த்தியாய் ; அகண்ட வடிவாம் ஈசா - சர்வ வியாபியாகிய பெருமானே! ; புயங்ககிரி மீதே - சேஷாசலத்தின் மேல் ; உறைந்த சர்வேசா - நித்யவாசம் செய்யும் கடவுளே! ; நலம் கொள் இறையே - நற்குணங்கள் நிறைந்த எம்பெருமானே! ; பாசம் - சுற்றத்தாலும் ; அனுபந்த - உறவின் முறையாலும் வந்த ; வினையாலே – கர்மத்தாலே ; உளைந்து வேதனைப்பட்டு, பல பாராகி வந்து பிறவா –பல

தடவைகள் இவ்வுலகில் வந்து பிறந்து ; ஊசாடி நின்ற – போவதும் வருவதுமாய் இருக்கும் ; எளியேன் ஆவி – அற்பனாகிய எனது ஆத்மா (உயிர்) ; நின் கழலின் ஊடாக – உன் திருவடிகளினிடையே ஆகும்படி ; நன்குபுரிவாய் - மிகுந்த அருள் செய்வாயாக!

அங்கமும் மீதுஎழு சந்திர சூரியர்
அம்புயம்மேல் உறல்போல்
சங்கொடு நேமிகொள் அம்கையும் நான்மறை
சந்ததமும் கமழும்
பங்கம்இல் பாதமும் அன்புடை யேன்எதிர்
பண்புறநீ வருவாய்
மங்கள மாகிய கஞ்சுகி மாமலை
வந்துறைமா மணியே (8)

8) மங்களமாகிய – சுபங்களை வழங்கும் ; கஞ்சுகி மாமலை - சேஷாசலத்தில் ; வந்து – பரமபதத்திலிருந்து வந்து ; உறை – நித்ய வாசம் செய்கின்ற ; மாமணியே– சிறந்த இரத்தினம் போன்ற வேங்கடேசனே! ; அங்கமும் – நின் திருமுக மண்டலமும் ; மீதுஎழு - ஆகாயத்தில் உதிக்கின்ற ; சந்திர சூரியர் - சந்திரனும், சூரியனும் ; அம் - அழகிய ; புயம் மேல் உறல்போல் - திருத்தோள்கள் மேலே பொருந்திருப்பது போல (முறையே) ; சங்கொடு நேமீ கொள் அம்கையும் - பாஞ்ச சண்யத்தோடு, சுதர்சனத்தையும் ஏந்தி உள்ள அழகிய திருக்கரங்களும் ; நான்மறை - நான்கு வேதங்களும் ; சந்ததமும் – எப்பொழுதும் ; கமழும் - மணக்கின்ற பங்கம் இல் பாதமும் - குற்றமற்ற திருவடிகளும் ; அன்புடையேன் எதிர் - (உன்னிடத்து) பக்தியுடைய அடியேனுக்கு முன்பாக ; பண்புற - நான் தகைமை, பெறும்படியாக ; நீ வருவாய் - நீ பிரத்யட்சமாவாய் ;

ஆக மீதின் எழும் ஈளை காசமொடு
மாணி பூவிழுதல் அன்றியும்
மோக மோடுபல காம மாதிவினை
மூடிடாது அறிவு கூறவே
காக தாலபல ஞாய மாகவிழி
காணு மாறுவெளி ஆகுவாய்
மாக மீதின்உயர் சேட மாமலையில்
வாழு மேகநிற வண்ணனே. (9)

9) மாக மீதின் - ஆகாயம் வரையில்; உயர் - மேலோங்கி யுள்ள; சேட மாமலையில் - சேஷாசலத்தில்; வாழும் - நித்ய வாசம் செய்யும்; மேக நிற வண்ணனே - கார்முகில் வண்ணனே!; ஆகம்மீதின் - உடலினின்று; எழும் - மேலெழு கின்ற; ஈளைகாசமொடு - கோழையோடும், கண் நோயி னோடும்; மாணி - சிறிய வடிவில்; பூ விழுதல் - கண்ணின் கருவிழியில் விழும் வெண்பொட்டினோடும், அன்றியும் - மேலும்; மோக மோடு - மயக்க உணர்ச்சியோடு; பல காம மாதி வினை - காமம் முதலாகிய பல தீச் செயல்களும்; மூடிடாது - என்னைச் சூழாதபடி; அறிவு கூறவே - எனக்கு நல்லறிவு கூறி, நற்புத்தி புகட்டவே; காக தால பல ஞாய மாக - காக்கை ஏறிப் பனம் பழம் விழுந்தது, என்ற நியதி போல்; விழி காணுமாறு - என் கண்களால் தரிசிக்கும்படி; வெளியாகுவாய் - நீ வெளிப்பட்டுக் காட்சி தருவாய்;

தூது வந்தவர் அன்று விடுதூது
வந்திலர் தொண்டை மான்
துணிவு சேரவிறல் ஆழிதந்தவர்கை
தொடரும் ஆழி தருகிலார்
காதும் வென்றி தரும்வில் இறுத்தஅவர்
காமன் வில்லினை இறுத்திடார்
கனலை வாரிமுனம் உண்டுளார் கரிய
கனலை வாரி அருந்திடார்

சூதனாகி அருள் செய்தல் போல ஒரு
சூதனாகி அருள் செய்திடார்
சுகமுனிக்கு அருள் செய்தவர் எனது
சுகமொழிக்கு அருள் செய்திடார்
சீதமாமதி சிறை விடுத்த அவர்
சிறியள் என்சிறை விடுத்திடார்
சேடமா மாமலையின் மீது வாழும் அவர்
செய்தது என்ன மனு நீதியே. (10)

10) அன்று தூது வந்தவர் - அக்காலத்துப் பாண்டவர்களுக்காகத் துரியோதனனிடம், தூதாக வந்தவர்; விடு தூது - யான் கிள்ளையை விட்ட தூதினுக்கு; வந்திலர் - இசைந்து வந்திலர்; தொண்டைமான் துணிவு சேர - தொண்டைமான் சக்கரவர்த்திக்குத் திடவலிமை உண்டாகும்படி; விறலாழி தந்தவர் - வெற்றி பொருந்திய (சுதர்சன) சக்கரப்படையைக் கொடுத்தவர்; கை தொடரும் ஆழி - (எனது) கையில் இடையறாது வந்து கழலுகின்ற வளையல்களைக் கவர்ந்து கொண்டு; தருகிலார் - கொடுக்கிலார்; காதும் வென்றி தரும்வில் - பகைவர்களைப் போரில் அழித்து வெற்றி தருகின்ற சிவவில்லினை; இறுத்த அவர் - முறித்த அப்பெருமான்; காமன் வில்லினை - மன்மதனின் கரும்பு வில்லினை; இறுத்திடார் - முறித்திடார்; கனலை வாரி - நெருப்பினை முகந்து; முனம் - முற்காலத்து; உண்டுளார் - விழுங்கியவர், (இது போது); கரிய கனலை - கொடிய காம வெப்பினை; வாரியருந்திடார் - முற்றும் முடியப் போக்கித் தணித்திடார்; சூதனாகி - தேர் செலுத்தும் பாகனாகி; அருள் செய்தல் போல - அருச்சுனனுக்கு உதவியது போல; ஒரு சூதனாகி - என்னை இயக்கும் பாகனாகி; சுகமுனிக்கு அருள் செய்தவாறு - சுக மகரிஷிக்குக் கருணை செய்தது போல; எனது சுக மொழிக்கு - (தூதுவிட்ட) எனது கிளியின் செய்திக்கு; அருள் செய்திடார் - கருணை செய்திடார்; சீத மாமதி - குளிர்ந்த சிறந்த சந்திரனது; சிறை விடுத்த அவர் - காவலைப் போக்கி

யவர் ; சிறியள் என் சிறை விடுத்திடார் - இரங்கத் தக்க என்னுடைய இற்செறிப்பைப் போக்கினார் இல்லை. (ஆகவே) சேடமாமலையின் மீது - சேஷாசலத்தின் மேல் ; வாழும் அவர் - நித்யவாசம் செய்யும் அந்தவேங்கடேசன் ; செய்தது - அவர் ஆற்றிய முறையற்ற செயல்கள் ; என்ன மனு நீதியோ? - எந்த மனுதர்ம நெறியாகும்?

## தொண்டைமானுக்கு ஆழி தந்த கதை

தொண்டைமான் சக்கரவர்த்தி க்ஷத்திரியன் ஆயினும், தவ ஒழுக்கத்தில் சிறந்து முனிவரை ஒக்கும் பெருமை வாய்ந்தவன், திருவேங்கட முடையான் மீது பக்தி மேலிட்டு, அப்பெருமாளை எப்பொழுதும் சேவித்துக் கொண்டு திருமலையிலே வாசம் செய்திருந்தான். அதனை உணர்ந்த பகை அரசர்கள் அவனது நாட்டைக் கைக்கொள்ள தொண்டைமான் அதனைத் திருவேங்கடமுடையான் சந்நிதியில் விண்ணப்பம் செய்து வணங்கி நிற்க, பெருமான் தனது திருவாயுதங்களாகிய சங்கு, சக்கரங்களைக் கொடுத்து, 'இவற்றைக் கொண்டு நீ பகையரசரைத் தவறாது வென்றிடுக,'' என்று சொல்லி அருளினார். தொண்டைமான் அங்ஙனமே பகை வென்று, அரசு பெற்றான், என்ற வரலாற்றை வேங்கடாசல மஹாத்மியத்தில் பரக்கக் காண்க.

தலைவனது பிரிவு, தலைவிக்கு மெலிவை விளைத்து அவள் கையில் நின்ற வளைகள் கழன்று விழும்படிச் செய்தன. ஈண்டு, கைப்பொருள்கள் முன்னமே கைக் கொண்டார். காவிரி நீர், செய்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்'' என்பது நாச்சியார் திருமொழி.

காதலோடு மதனன்ஏவு கணையினோடு வெண்மதிக்
 கலையினோடு தென்றலான காலினோடு கன்னியர்
வாதமோடு சீதமேவு மலரினோடு மாலைவாய்
 மனதினோடும் எனதுகோதை மருவிவாடல்நீதியோ
சூதனோடும் இரதம் மன்னுதுரகம் ஓட வன்சிலைச்
 சூரர்ஓட வீரமேவு தும்பி ஓட வாகினி
நாதன்ஓட ராவணேசன் நடலை ஓட வன்தலை
 நாகமோட வாளிஏவு நாகதாணு ராஜனே (11)

11) இரதம் மன்னு துரகம் - தேரினில் பூட்டிய குதிரைகள் ; சூதனோடும் ஓட - பாகனோடும் ஓடவும் ; வன்சிலைச் சூரர் ஓட - வலிய வில்லைப் பிடித்த வீரர்கள் ஓடவும் ; வீரம் மேவு தும்பி ஓட - பராக்கிரமம் பொருந்திய யானைகள் ஓடவும் ; வாகினி நாதன் ஓட - சேனைத் தலைவனும் ஓடவும் ; ராவணேசன் – இலங்கை வேந்தன் இராவணனது ; நடலை ஓட – வஞ்சனைத் தன்மை ஓடவும் ; வன் தலை நாகம் ஓட - அவனுடைய மலை போன்ற பத்துத் தலைகள் உருண்டு ஓடவும் ; வாளி ஏவு - அம்பு செலுத்துகின்ற ; நாக தாணு ராஜனே! - நாக மலைக்கு அரசனே ; காதலோடு - அன்பினோடும் ; மதனன் ஏவுகணையினோடு – மன்மதன் விடுகின்ற மலர் அம்புகளோடும் ; வெண்மதிக் கலையினோடு - வெள்ளிய சந்திரனின் நிலாக் கதிர்களோடும் ; தென்றலான காலினோடு – வீசுகின்ற தென்றல் காற்றோடும் ; கன்னியர் வாதமோடு - பெண்டிர் வம்பலப்போடும் ; சீதம் மேவும் அலரினோடு - சில்லென்று தூற்றும் பழிச் சொல்லோடும் ; மாலைவாய் மனதினோடும் – மாலைப் பொழுது கண்டு மென்மைத் தன்மையுடன் இரங்கும் மனத்தினோடும் ; மருவி - பொருந்தி ; எனது கோதை - எனது பெண்ணாகிய இவள் ; வாடல் நீதியோ? - மெலிந்து தளர்தல் முறையோ ;

இது பிரிவாற்றாது வருந்தும் தலைவியின் நிலையைக் கண்ட தாய், தலைவனை நோக்கி இரங்கிக் கூறியது. ஆகவே இது, "இரங்கல் துறை".

இச்செய்யுளின் நடை — "வாடியோட வசை மன்னன் திருவரங்கராசரே" என்ற திருவரங்கக் கலம்பகச் செய்யுளின் (39) நடையைப் பின் பற்றியது.

நேசபாத நிகமணி வாசவா
வாச கேடகல் மாயத பாசுமா
மாசு பாதய மால்கட கேசவா
வாச வாணி மகனித பாசனே (12)

12) நேச பாத - அன்புருவான திருவடிகளை உடையவனே! ; நிகமணி வாசவா! — வேதங்களில் நித்யவாசம் செய்பவனே ; வாச — வஸ்திரத்தினால் (ஆடையினால்) உற்ற ; கேடு — நேரும்படியிருந்த அவமானத்தை ; அகல் - போக்கிய ; மாய ! - மாயனாகிய கோவிந்தனே ! ; தபா ! - சூரியனைப் போல் ஒளி வீசுபவனே ; சுமா - செந் தாமரைப்பூப் போன்ற கண்கள் உடையவனே ; மாசுபா - சிறந்த மங்களகரமானவனே ! ; தயமால் அன்பர்களுக்கு அருள் வழங்கும் திருமாலே! ; கடகேசவா! - திருவேங்கடமலைச் சாரலில் எழுந்தருளியிருக்கும் கேசவனே ! ; வாணி — சரஸ்வதி தேவியின் ; மகன் - கணவனாகிய பிரமதேவன் ; வாச l — நித்ய வாசம் செய்யும்படி இருப்பிடமாகுபவனே ! ; பாசனே ! - எல்லாப் பொருள்களுக்கும் ஆதாரமாயிருப்பவனே ! ; வா - என் முன்னே வந்து தோன்றுவாய்.

இது மாலை மாற்று. மாலை மாற்றாவது, எழுத்துக்களை ஈறுமுதலாகப் படிக்குமிடத்தும் பாட்டு மாறாமலிருக்கும் மிரை கவி வகை.

வாத மாதிர வாறுவ வாதவா
நேத வாசீனி வாச நியதனே
நேத யனிச வானிசீ வாதனே
வாத வாவறு வாரதி மரதவா (13)

**13)** மாதிரம் - திக்குகளில் வீசும் ; வாதம் - காற்றினால் ; ஆறுவ - சூடு தணிகின்ற ; ஆதவா! - சூரியன் போன்று ஒளிர்பவனே! ; நேதவா! - தலைவனே! (இறைவனே!) ; சீனிவாச - ஸ்ரீநிவாஸப் பெருமானே! ; நியதனே! - எப் பொழுதும் நிலையாயிருப்பவனே! ; (நே(தி)தயன் - முறை யாகக் கிருபை செய்பவனே! ; நிசவாணி - உண்மையான வனே! ; சீவா - ஜீவான்மாக்களுக்கு ; தனே - தனம் போல் வைப்பாகுபவனே! ; தவா அறுவார் - கெடாது வருகின்ற பிறப்பினை நீக்கிய ஞானிகளால் ; அதி - மிகுதியாகப் போற் றப்படுகின்ற ; மாதவா! - திருமகள் கேள்வனே! ; வா - என் முன்னே வந்து தோன்றுவாய்.

மாதவம் இன்றி ஏதமுயன்று மதிமாறி
வேதனை கொண்டு பாரிடைஎன்று மெலிவேனோ
சீதர சங்க பாணிய வண்டர் தினநாடு
பாத புயங்க பூதர கங்கை நகரானே (14)

**14)** சீதர - திருமகளை மார்பில் தரித்தவனே ; சங்க பாணிய - பாஞ்ச சன்னியத்தை இடக்கையில் ஏந்தியவனே ! ; அண்டர் - நித்திய சூரிகள் ; தினநாடுபாத - நாள்தோறும் சரண் அடையும் திருவடிகளையுடையவனே! ; புயங்க பூதர - அரவக்கிரியில் வாழ்பவனே! ; கங்கை நகரானே! - திருப்பதி யில் ஆகாசகங்கையுடன் எழுந்தருளியிருப்பவனே! ; மாதவம் இன்றி - பெருமை மிக்க தவங்களைச் செய்யாமல் ; ஏதம் முயன்று - தீய செயல்களைச் செய்து ; மதிமாறி - சுய புத்தி தடுமாறி ; வேதனை கொண்டு - துன்பங்களை அனுபவித்துக் கொண்டு ; பாரிடை - இந்தப் பூமியில் ; என்றும் மெலி வேனோ - வாழ்நாள் முழுவதும் வருத்துவேனோ?

ஆழி அடைத்தாய் அமுதளித்தாய் அண்டருக்குத்
தாழி உடைத்தாய் தயிர்அருந்தி—வாழியென
மண்ணளந்தாய் சேட மலைமேல் மகிழ்ந்து [உறைந்தாய்
எண்ணளந்தாய் என்பால் இரு.
(15)

15) ஆழி அடைத்தாய் - கடலைச் சேதுகட்டி பத்தித் தாய் ; அண்டருக்கு - தேவர்களுக்கு ; அமுதளித்தாய் – தேவா மிர்தத்தைக் (அவர்கள் உண்ணக்) கொடுத்தாய் ; தயிரருந்தி - (யசோதை உறியில் வைத்த) தயிரைத் (திருடித்) தின்று (பின்) ; தாழி உடைத்தாய் - தயிர்ப் பானையைத் திருவடியால் சிதைத்தாய் ; வாழி என – சேதனா சேத்திரங்கள் அனைத்தும் நல்வாழ்வு பெறட்டும் என (அருள் செய்து) ; மண்ணளந் தாய் – இப்பூமியைத் (திருவிக்ரமாவதாரத்தில் அளந்து கொண் டாய் (அங்ஙனாகிய நீ வந்து) ; சேடமலைமேல் மகிழ்ந்து உறைந்தாய் – சேஷாசலத்தின் மேல் உறைந்தாய் - சேஷா சலத்தின் மேல் உகந்து நித்யவாசம் செய்கிறாய் : எண்ணளந் தாய் – அறிவுக்கப்பாற்பட்டவனாயினாய் (அப்படிப்பட்ட நீ); என்பால் இரு - என் இதயத்தில் கிருபை செய்து இருப் பாக!

ஆவி அயர்ந்தனை மோகம் விளைந்தனை ஆரம்
எறிந்தனை நீ
நாவி மணம்கமழ் ஓதி அவிழ்ந்தனை நாளும் மெலிந்
தனையால்
காவில் உயர்ந்த எழுநாக தடம்திகழ் காரொளி
நப்பனையெம்
ஆவி முகுந்தனை மேவ நினைந்தனை ஆகு மருங்
குயிலே (16)

16) அருங்குயிலே – (வேங்கடத்தே நிரந்தேறிப் பரவும்; அரிய மேகமே! ; நீ - என் போலவே ; ஆவி அயர்ந்தனை – நீராவி கொண்டு எழுந்து புகையாகித் தளர்ந்தாய்! ; மோகம் விளைந்தனை – திகைப்புக் கொண்டாய் ; ஆரம் எறிந்தனை - மின்னலாகிய மாலையை எறிகின்றாய்! ; நாவி மணம் கமழ் ஓதி அவிழ்ந்தனை - கஸ்தூரி, புனுகு இவற்றின் மணம் வீசிப் பரவும்படியுள்ள செறிவு போகும்படி நெகிழ்ந்தாய்! ; நாளும் மெலிந்தனை - தினந்தோறும் தளர்ந்து போனாய்! ; ஆல் - அசை ; காவில் உயர்ந்து – சோலைகள் ஓங்கி வளர்ந்துள்ள ;

ஏழு நாகம் தடம் திகழ் - ஏழு மலையிடத்து விளங்குகின்ற ; காரொளி நம்பனை - கரிய நிறம் விளங்குகின்ற என் இறைவனை ; எம் ஆவி முகுந்தனை - எனது உயிராகிய வைகுண்ட நாதனை ; மேவ நினைந்தனை ஆகும் - அவனை அடைய எண்ணியவனாக வேண்டும்.

இது தலைவனைப் பிரிந்த தலைவி, மேகத்தை முன்னி லைப் படுத்தி இரங்கிக் கூறுதலாகும்.

கண்சுழலக் கரம்சோர காதலர்கள்
மருங்கு அமர்ந்து கலக்கம் எய்த
எண்சுழல மறலிபட ரெனைஅடராது
உனதடிக்கீழ் யிருத்தி ஆள்வாய்
மண்சுழல மலைசுழல மதிசுழலக்
கதிர்சுழல வானோர் வாழும்
விண்சுழலக் கடல்கடைந்த வித்தகனே
புயங்ககிரி மேவி னானே. (17)

17) மண் சுழல - பூமி அலைவுபடவும் ; மலை சுழல - மலை வட்டமாகச் சுற்றவும் ; மதி சுழல - சந்திரன் சுற்றித் திரியவும் ; கதிர் சுழல — சூரியன் சுற்றித்திரியவும் ; வானோர் வாழும் விண் சுழல - தேவர்கள் வசிக்கும் வானுலகம் சஞ்சலப் படவும் ; கடல் கடைந்த - திருப்பாற் கடலைக் (அமுதத் திற்காகக்) கடைந்த, வல்லவனே ; புயங்ககிரி மேவினானே - சேஷாசலத்தில் விரும்பி நித்யவாசம் செய்பவனே ! ; கண் சுழல - கண் ஒளியிழந்து இடுங்கவும் ; எண் சுழல — அறிவு சோரவும் ; கரஞ்சோர - கைகள் செயலற்றுத் தளர்ந்து விழவும்; காதலர்கள் - மனைவி மக்கள் முதலிய சுற்றத்தினர் ; மருங்கு அமர்ந்து - பக்கத்தில் (சுற்றி) உட்கார்ந்திருந்து ; கலக்கம் எய்த - அழுது வருந்தவும் ; எனை — என்னை ; மறலி படர் —

யம கிங்கரர்கள் ; அடராது - நலியாதபடி ; உனது அடிக்கீழ் - உனது திருவடியின் கீழ் ; இருத்தி - சேர வைத்து ; ஆள்வாய்- ஆட்கொண்டு அருள்வாயாக ! ;

ஏகனை அடியார் இதயானை மதனன்
எழுதரும் வடிவனை விஜயன்
பாகனைப் பரம பவித்திரன் தன்னைப்
பளகிலா உயிர்தொறும் உறைந்த
யோகனை மறைகள் உரைப்படும் பொருளை
உயர்வற உயர்ந்த ஈசனை
நாகனை நாக மலைமுடி உறையும்
நாதனை நணுகினம் நாமே (18)

18) ஏகனை - ஒப்பற்ற ஒருவனை ; அடியார் இதயானை - பக்தர்களது உள்ளத்தில் கோயில் கொண்டவனை ; மதனன் எழுது அரும் வடிவனை - மன்மதனாலும் எழுதற்கரிய பேரழகுடையவனை ; விஜயன் பாகனை - அர்ச்சுனனுக்குச் சாரதியாயிருந்தவனை ; பரம பவித்திரன் தன்னை - மேலான புனிதனை ; பளகிலா - குற்றமில்லாத ; உயிர் தொறும் - ஜீவான்மாக்கள் தோறும் ; உறைந்த - தங்கியிருக்கின்ற ; யோகனை - தியானத்திற்குரியவனை ; மறைகளுரை - வேத சப்தங்களில் ; படும் - பயிலும் ; பொருளை - அர்த்தமாகுபவனை ; உயர்வு அற உயர்ந்த ஈசனை - தமக்கு மேலான ஒரு தெய்வம் இல்லையென்று கூறும்படியுள்ள ஆதிப்பிரானை ; நாகனை - பரமபத நாதனை ; நாகமலை முடி - சேஷாசலத்தின் உச்சியில் ; உறையும் நாதனை - நித்ய வாசம் செய்யும் இறைவனை ; நாம் நணுகினம் - அடியோம் அடைந்தனன் ;

பொன்னவனை உரம்கீண்டாய் புவனம் காத்தாய்
புலியுடையான் நலிவுதரும் சாபம் தீர்த்தாய்
தென்னவனை மீனவனாய்ப் புரத்தல் செய்தாய்
செகம்அளந்தாய் பாண்டவர்க்குத் தூது சென்றாய்
மன்னவனாய் வனம்கடந்து தேவர்க் காக
வன்சிலையால் இராவணனை மடித்தாய் அன்னாள்
முன்னவனாய் நாகமலை முடிமேல் வைகும்
முழுமுதலே எனக்கிரங்கா மூலம் என்னே ? (19)

19) முன்னவனாய் - அவதாரங்களுக்கெல்லாம் முற்பட்டவனாய்; நாகமலை முடிமேல் வைகும் - சேஷாசலத்தின் உச்சிமேல் நித்ய வாசம் செய்யும்; முழு முதலே - ஆதியங்கடவுளே; பொன்னவனை - இரணியனை; உரம் கீண்டாய் - மார்பைப் (உகிரினால்) பிளந்து கொன்றாய்; புவனம் காத்தாய் - உலகத்தை இரட்சித்தாய்!; புலியுடையான் - புலித்தோலாடையை உடைய சிவபெருமானுக்கு; நலிவு தரும் - துன்பம் தந்த; சாபம் தீர்த்தாய்-பிரம்மசாபத்தைத் தீர்த்தாய்; தென்னவனை - பாண்டிய மன்னனை; மீனவனாய் - (நீ அவனது) மீன் கொடியில் எழுந்தருளியிருப்பவனாய்; புரத்தல் செய்தாய் - காப்பாற்றி வந்தாய்: செகம் அளந்தாய் - திருவிக்ரமனாய் பூ உலகை ஓரடியால் அளந்து கொண்டாய்; பாண்டவருக்குத் தூது சென்றாய் - கிருஷ்ணா அவதாரத்தில் (பாண்டவர் ஐவர்க்காகத் துரியோதனன்பால்) தூதனாகப் போயினாய்; அந்நாள் - இராமனாக அவதரித்த காலத்தில்; தேவர்க்காக - தேவர்களுக்கேற்பட்ட துன்பத்தைப் போக்குதற்காக; மன்னவனாய் - சடைமுடி தரித்தவனாய்; வனம் கடந்து - காடுகளைக் கடந்து சென்று (இலங்கை சென்று; வன்சிலையால் - வலிய கோதண்டம் என்னும் வில்லினால்;

இராவணனை - அரக்கன் இராவணனை ; மடித்தாய் - கொன்றொழித்தாய் ; (அப்படிப்பட்ட நீ) எனக்கு இரங்கா மூலம் என்னே ? — தாசனாகிய எனக்கு மனமிரங்கி அருள் செய்யாத காரணம் என்னே ; (மனமிரங்கி அருள வேண்டும் ; என்பது குறிப்பு) ;

எண்ணார் புரம்நகையால் எரிஈசா ! எறிதிரைசூழ்
மண்ணோர் பணிவடமா மலைவள்ளால்
மழைவண்ணா
கண்ணே கருமணியே மலர்க்கண்ணா
குழல் பண்ணா
நண்ணேன் உனைஎண்ணேன் இனிநல்காய்
ஒருவரமே (20)

20) எண்ணார்புரம்-பகைவருடைய ஆறு பட்டணங்களை; நகையால் - ஒளிமிக்க சுடராழியால் ; எரி - நெருப்பினால் சுட்டுப்பொசுக்கிய ; ஈசா ! -இறைவனே ! ; எறி திரை சூழ் வீசுகின்ற அலைகளையுடைய கடலால் சூழப்பட்ட; மண்ணோர்- உலகிலுள்ள மக்கள் ; பணி - வணங்கித் தொழுகின்ற ; வடமாமலை வள்ளால் !- வடக்கிலுள்ள திருவேங்கடமலையில் உறைகின்ற வரப்பிரசாதியே ! ; மழை வண்ணா - நீல மேக சியாமளனே ! ; கண்ணே ! - கண்போல் அருமையானவனே!; கரு மணியே - கண் மணியே !; மலர்க் கண்ணா - செந்தாமரை போன்ற கண்களையுடையவனே! ; குழல் பண்ணா - குழலிசை போல் இனிமையானவனே! ; உனை நண்ணேன் - உன்னைக் கிட்டினேன் இல்லை ; எண்ணேன் – (ஏனெனில்) உன்னை நினையாதொழிந்தேன் ; (எனினும்) இனி ஒரு வரமே நல்காய் – நீ இனி ஒரு வரம் கொடுப்பாயாக! உன்னை மறவாதிருக்க வேண்டும் என்னும் வரத்தை மதுரகவியார் இக் கவிதை மூலம் வேண்டுகின்றார்.

கண்ணார்காரணனேகரிக்கு ஆகிக்கரவு அடர்த்தாய்
தண்ணார் தண்கடல்வாய் தனிநின்று துயின்
றோனே
மண்ணோர் காவலனே வடமாமலை ஆதிக்கமே
எண்ணா ! வந்தடைந்தேன் இனிஎங்கு புகுவேனே
(21)

21) கண்ணார் - உயிர்கள் அனைத்திற்கும் (இன்றியமையாத) கண் போன்றவனே !; காரணனே ! - அனைத்துக்கும் மூலமாயிருப்பவனே ! ; கரிக்கு ஆகி - கஜேந்திரனைக் காப்பதற்கு உதவியாக வந்து ; கரவு அடர்த்தாய் - முதலையைக் கொன்றொழித்தாய் ; தண் ஆர் தண் கடல்வாய் - குளிர்ச்சி பொருந்திய அலைவீசாத அமைதியான கடற்கரை இடத்து ; தனி நின்று துயின்றோனே - தனிப்பட்டவனாய் (ஏழு நாள் தர்ப்ப சயனத்தில்) படுத்துக் கிடந்தவனே ! ; மண்ணோர் காவலனே ! - பூவுலகத்தவரை இரட்சிப்பவனே ! ; வடமாமலை ஆதிக்கமே ! - வட திருவேங்கட மலையின் தலைமை இறைவனே ! ; எண்ணா - ஞான சொரூபனே ! ; வந்து அடைந்தேன் - (நீயே கதியென) உன்னிடம் வந்து சேர்ந்தேன் ; இனி எங்கு புகுவேனே - இனிமேல் எவ்விடத்து அடைக்கலம் புகுவேன் ? உன்னையன்றிச் சரணில்லை என்றபடி.

அஞ்ச னா!சுத ரஞ்சித ! வாசுர
பஞ்ச னா !பவ பாசவி மோசனா !
கஞ்ச னாதியர் கால ! கலாநிதே
அஞ்ச னாசல வாதிநி வாசனே (22)

22) அஞ்சனா சுத ரஞ்சித ! - அஞ்சனா தேவியின் மகனாகிய ஆஞ்சநேயனுக்கு இனியனே ! ; ஆசுர பஞ்சனா !- அசுரர்களை அழித்தவனே ! ; பவபாச விமோசனா - பிறவிப்

பிணியைப் போக்குபவனே !; கஞ்சன் ஆதியர் கால - கம்சன் முதலான கொடியோரை அழித்த யமனே !; கலா நிதே ! - சகல கலைகளுக்கும் வைப்பாகுபவனே !; அஞ்சனாசல ஆதி நிவாசனே ! - அஞ்சனாத்திரியில் முழு முதலாய் எழுந்தருளி நித்ய வாசம் செய்பவனே !

இச்செய்யுள் தோத்திரமாக அமைக்கப்பட்டது.

அஞ்சனாதேவி சேஷாசலத்தை அடைந்து தவம் செய்து, ஆஞ்சநேயனைப் புத்திரனாகப் பெற்றாள். அக்காரணத்தால் இந்தப் பர்வதத்திற்கு 'அஞ்சனாத்ரி' என்ற பெயர் உண்டாயிற்று.

சாதனை பயின்று யோகினை முயன்று
தாழ்வினை அகன்று மடமாதர்
சாகசம் நிறைந்து பன்மொழி நயந்து
தாரணி திரிந்து மலையாதே
வேதனை ஒழிந்த போதனை மறந்து
மேன்மையை இழந்து நலியாதே
வீறுபெறு சங்கு நேமியும் விளங்க
மேவிஎன் அகந்தை கடிவாயே
பூதனை சுரந்த பாலினை அருந்து
பூரண நிறைந்த வடிவனாய்
பூமியை அளந்த சீதரம் உகந்த
பூரித நலம்செய் புவனேசா
மாதவி குருந்து தாதுஅவிழ் கரந்தை
வானுற வளர்ந்த வடநாக
மாமலை மருங்கு தாமரை மலர்ந்த
மாமழையில் நின்ற பெருமானே (23)

23) பூதனை சுரந்த பாலினை அருந்து - (தாயுருவாகி வந்து பேயாகிய) பூதனையின் நஞ்சு சேர்ந்த முலைப் பாலைக் குடித்து ; பூரணம் நிறைந்த வடிவனாய் - சர்வ வியாபியாய் எங்கும் நிறைந்துள்ள சொருபத்தை உடைய வனாய் ; பூமியை அளந்த : பூரித! - உன் திருவடியால் பூவுலகை அளந்து மிகு களிப்புக் கொண்டவனே ; சீதரம் - ஸ்ரீதேவியை மார்பில் தரித்தலில் ; உகந்த - கழிபெரு களிப்புக் கொண்டவனே ; நலம் செய் புவனேசா! - நன்மை யைச் செய்கின்ற லோக நாயகனே! ; மாதவிகுருந்து தாது அவிழ் கரந்தை - குருக்கத்திக் கொடிகள், குருந்த மரங்கள், பூவிதழ்கள் விரிகின்ற கரந்தைச் செடிகள் ; வானுற வளர்ந்த - மேலோங்கி வளர்ந்துள்ள ; வட நாகமாமலை மருங்கு - வடக் கிலுள்ள சேஷாசல மலையிடத்து ; தாமரை மலர்ந்த மா மழையில் - செந்தாமரைப் பூக்கள் மலர்ந்தது போன்ற அவய வங்களைக் கொண்டு, நன்னிற மேகம் போல ; நின்ற பெருமானே! - நிலை பெற்று நின்ற பெருமானே! ; சாதனை பயின்று - பொய் நடிப்புக்கள் பல செய்து ; யோகினை முயன்று - தியானிப்பதற்கு முயற்சி செய்து ; (பலிக்காமல் போக அதனால் ஏற்பட்ட) ; தாழ்வினை - அவமானம் ; அகன்று - விருத்தியாகி (மேலும்) ; மடமாதர் - மடப்பமுடைய பெண்டிரிடத்து ; சாகசம் நிறைந்து - பாசாங்குகள் பல செய்து ; பன் மொழி நயந்து - அவர் போலிப் பேச்சுக்களை விரும்பி ; தாரணி திரிந்து - பூமியில் திரிந்து ; மலையாதே - மயங்காதபடி ; வேதனை ஒழிந்த போதனை மறந்து - மாய யைக் கடந்த ஞான சொருபியாகிய இறைவனை மறந்து (அதனால்) ; மேன்மையை இழந்து - சிறப்பினை இழந்து ; நலியாதே - வருத்தாதபடி ; வீறு பெறு சங்கு நேமியும் விளங்க மேவி - மிகு பெருமை பெற்ற உனது பாஞ்ச சன்னியமும்,

சுதர்சனச் சக்கரமும் பொலியும்படி (என்முன்) எழுந்தருளி!; என் அகந்தை கடிவாயே - என் அகங்காரத்தைப் போக்கியருளுவாயாக!

ஈன நெடும்பவ வாரி அமிழ்ந்தனன்
ஏறும்விதம் தெரியேன்
ஞான சுதந்தரம் யான்அடை யும்படி
நாடினை வந்துஅருள்வாய்
கான வனம்தொறும் ஆனை இனம்பயில்
காமரு தண்சுனைசூழ்
வானம் அளந்துஉயர் நாக தடம்திகழ்
மாசில்அரும் பொருளே (24)

24) கான வனந்தொறும் - வாசனை வீசுகின்ற காடுகள் தோறும்; ஆனையினம் பயில் - யானைக் கூட்டங்கள் சஞ்சரிக்கின்ற; காமரு தண்சுனை சூழ் - அழகு பொருந்திய குளிர்ந்த சுனைகள் சூழ்ந்து; வானம் அளந்து உயர்நாக தடம் - ஆகாயம் வரையில் ஓங்கியுயர்ந்து இடமகன்ற சேடகிரியில்; திகழ் - விளங்க எழுந்தருளியிருக்கின்ற; மாசு இல் அரும் பொருளே! - பவித்திரமான பரம் பொருளே!; ஈன நெடும் பவ வாரி அமிழ்ந்தனன் - இழிவான பல பிறவிப் பெருங்கடலில் மூழ்கினனாகி; ஏறும் விதம் தெரியேன் - கரையேறும் வகை அறியேன்; நாடினை - (அப்படிப்பட்ட) என்னை நினைந்தவனாய்; யான் ஞான சுதந்தரம் அடையும்படி - அடியனாகிய நான் சுதந்தர அறிவு பெறும்படி; வந்து அருள்வாய் - என் முன் தோன்றி அருள் செய்வாயாக;

விகட வடிவுடை சகடு பொடிதர
மிடல்செய் அடியில்அடு விறலோனே
முகடு தொடுகுடுமி அடரும் வடமலையின்
முடியில் நடமிடு பெருமானே

பகடு நடவிய கடிய திடஎம
படர்கள் எனதிடை வருகாலை
மகுடம் ஒளிபட அடைவினோடு கடிய
அடிகொள் படியினொடும் வருவாயே (25)

25) விகட வடிவுடைய - பயங்கரமான வடிவத்தைக் கொண்ட ; சகடு - வண்டியானது ; பொடிதர - பொடிந்து துகளாய்ப் போகும்படி ; மிடல் செய் அடியில் - வலிமை பொருந்திய திருவடிகளால் ; அடு - பொன்றச் சிதைத்த ; விறலோனே! - வெற்றியை யுடையவனே! ; முகடு தொடு குடுமி - அண்ட முகட்டினைத் தொடுகின்ற சிகரங்கள் ; அடரும் - செறிந்துள்ள ; வடமலையின் முடியின் - திரு வேங்கடமலையின் உச்சியில் ; நடமிடும் பெருமானே! - உலா வருகின்ற இறைவனே! ; கடிய பகடு நடவிய - விரை வாக எருமை வாகனங்களில் ஏறிக் கொண்டு ; திட எம படர்கள் - உறுதியோடு யமகிங்கரர்கள் ; எனது இடை வரு காலை - என்னிடம் வந்து என்னுயிரைக் கவரும் போது நீ; மகுடம் ஒளிபட - (உனது) கிரீடங்கள் பிரகாசம் விளங்க ; அடைவினொடு கடிய அடிகொள் படியினொடும் - முறை மையாக விரைவுடன் வைக்கின்ற பாதங்களைக் கொண்ட நடையினோடும் ; வருவாயே - (காப்பாற்ற) எழுந்தருள் வாயாக!

---

### மங்கல வாழ்த்து

கங்கை வாழிமழை மங்குல் வாழிநவ
கண்டம் வாழிஅலர் மேல்உறை
மங்கை வாழிநில நங்கை வாழிஅநு
மந்தன் வாழிவா மல்கிய

திங்கள் வாழிஅவிர் சண்டன் வாழிநர
சிங்கன் வாழிவளை ஆழிசேர்
செங்கை வாழிஇரு ளங்கன் வாழிஎழு
சிந்து வாழிபல ஊழியே. (26)

பல ஊழியே – பல நெடுங்காலம் ; கங்கை வாழி! – புனிதமான கங்கா நதி வாழ்க! ; மங்குல் மழை வாழி! – மேகம் பொழியும் மழை வாழ்க ; நவகண்டம் வாழி! - பூமியின் விரிவாக அமைந்துள்ள ஒன்பது கண்டங்கள் வாழ்க! ; அலர் மேல் உறை மங்கை வாழி! – தாமரை மலரில் எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ தேவி வாழ்க! ; நில நங்கை வாழி! - பூ தேவி வாழ்க! ; அனுமந்தன் வாழி! - அனுமன் வாழ்க! ; வளமல்கிய திங்கள் வாழி! - வளப்பம் கொடுக்கின்ற சந்திரன் வாழ்க !; அவிர்சண்டன் வாழி! - விளங்குகின்ற சூரியன் வாழ்க! ; நரசிங்கன் வாழி! - நரசிங்கப் பெருமான் வாழ்க! ; வளை ஆழிசேர் செங்கை வாழி! – சங்கு சக்கரங்களைத் தாங்கியுள்ள அழகிய கைகள் வாழ்க! ; இருள் அங்கன் வாழி! – இருள் போலும் கரிய திருமேனியுடைய திருவேங்கடவன் வாழ்க! ; எழு சிந்து வாழி - ஏழு கடல்கள் வாழ்க!

**மதுரகவி வெங்கடேசன் பலசந்த மாலை முற்றும்.**

# மதுரகவி
# திருமலைமால்
# சப்தமணி மாலை

# பாராட்டுரை

ப. ரெ. திருமலை அய்யங்கார், காரியதரிசி
திருவல்லிக்கேணி, தமிழ்ச்சங்கம், சென்னை.

நாரதருங் கண்டுவக்கு நகை முகமுந்
திருவடியு நளினஞ் சேர்ந்த
சீரதிகந் தருமதுரத் திருமார்பும்
அருள்விழியுஞ் சிவந்த வாயும்
பாரதத்தில் கசைதாங்கும் பதுமமலர்க்
கரத்தழகும் பரிந்து பார்த்த
சாரதியாய் அமர்ந்தருளுந் தனிமுதலைப்
பரவிநலஞ் சார்ந்து வாழ்வாம்

—மதுரகவி தனிப் பாடல்

அநுமந்த நகரம் மதுரகவியார் இயற்றிய பாடல்கள் பல ஆயிரங்கள். பல பாவினங்கள். பாடிய வாய் தித்திக்கும், தே மதுரப் பாடல்கள்.

திருமலைமால் விஷயமாக அத்தேசிக பக்தர் பாடியுள்ள ஏழு பாடல்கள், ‘‘திருமலைமால் ஸப்தமணி மாலை’’ என்ற திருநாமத்துடன் திருமரு மார்பும் (1) என்று தொடங்கி, சுருதிமுடிச் சோதியானே (7) என்று முடிகின்றன. திருமரு மார்பும் பவளவாய் இதழும் சிவந்த செந்தாமரை விழியும், வேண்டுவன தந்திடு தடக்கையோர் நான்கும் பருவரலாற்று பாதமுமாகப் பட்சம் வைத்து அனுதினமும் பரிந்து கருணை கொண்டு எளியேன் கண் முன் வருவாய் கண்ணனே! கரியமா

மணியே! என்ற பிரார்த்தனையுடன் தொடங்குவதே இந்தச் சீனிவாசன் மாலையின் தனிச் சிறப்பு ஆகும்.

பொங்கும் மங்களம்
எங்கும் தங்குக.

சென்னை
6—5—1957

ப. ரே. திருமலை அய்யங்கார்
காரியதரிசி

# மதுரகவி
## திருமலைமால் சப்தமணி மாலை

திருமரு மார்பும் பவளவாய் இதழும்
சிவந்த செந்தாமரை விழியும்
தருஎன அடியார் தமக்குவேண் டுவன
தந்திடும் தடக்கைஓர் நான்கும்
பருவரல் அகற்று பாதமு மாகப்
பட்சம் வைத்து அனுதினம் பரிந்து
கருணைகொண்டு எளியேன் கண்முனம் வருவாய்
கண்ணனே கரியமா மணியே (1)

1) கண்ணனே - கண்ணபிரானே ; கரியமாமணியே - கருமாணிக்கமே! ; திருமரு மார்பும் – இலக்குமி தேவி எழுந்தருளியிருக்கின்ற திருமார்பமும் ; பவள வாய் இதழும் – பவளம் போல சிவந்த வாயுதடும் ; சிவந்த செந்தாமரை விழியும் - மிகச் சிவந்த அழகிய தாமரை மலர் போன்ற விழியும் ; அடியார் தமக்கு வேண்டுவன – தொண்டர்களுக்கு (அவர்கள்) விரும்பும் வரங்களை ; தரு எனத் தந்திடும் கற்பக விருட்சம் போல் வழங்கிடும் ; தடக்கை ஓர் நான்கும் - நீண்ட நான்கு திருக் கரங்களும் ; பருவரல் அகற்றும் – துன்பத்தைப் போக்குகின்ற ; பாதமுமாக - திருவடிகளையும் கொண்டு ; பட்சம் வைத்து - அடியேன்பால் பிரியங் கொண்டு ; அனுதினம் - தினந்தோறும் ; பரிந்து - என்மேல் அனுதாபம் வைத்து ; எளியேன் கண்முனம் வருவாய் - சிறுமையுடையவனாகிய என் கண்முன் தரிசனம் தந்திடுவாய் ;

எல்லா நூல்களும் மங்கல மொழியுடன் தொடங்குதல் மரபாதலின் 'திரு' என்று தொடங்கினார். பாதாதி கேச வருணனை பக்திப் பெருக்கினால் தடுமாறியபடி ''துயரறு சுடரடி'' ஆதலின், ''பருவரலகற்று பாதமென்றார்''.

பாவமே புரிந்து கோவமே மிகுந்து
பாவையர் பணிமுலை உவந்தேன்
ஆஎன அலைந்து செய்வன தேற்றாது
அலைகுவேன் என்செய்வேன் அந்தோ
மூவர்தம் முதலே மூலநா யகனே
முழுமுதல் ஆனமூர்த் தியனே
காவல்சேர் ஆழிக் கண்ணனே கருணை
கனிந்தபால் ஆழியங் கடலே (2)

2) மூவர்தம் முதலே - மும்மூர்த்திகளுக்கும் முதலானவனே! ; மூல நாயகனே - எல்லாப் பொருளுக்கும் காரணமாயிருக்கிற இறைவனே ; முழு முதலான மூர்த்தியனே - பரிபூரணமான கடவுளே ; காவல் சேர் ஆழிக் கண்ணனே - காக்கும் தொழிலை மேற்கொண்ட சக்கரப்படையை ஏந்திய கண்ணனே! ; கருணை கனிந்த பாலாழியங் கடலே - அருள் மிகுந்த பாற்கடல் போன்றவனே! ; கோவமே மிகுந்து - கோபம் மிகக் கொண்டு ; பாவமே புரிந்து - தீச் செயல்களையே செய்து (மற்றும்) ; பாவையர் – மாதர்களின் ; பணி முலை உவந்தேன் - அலங்கரிக்கப்பட்ட முலைகளை விரும்பினேன் ; ஆ என அலைந்து – "ஆ ! ஆ ! என்ன இன்பம்" என்று தேடி அலைந்து ; செய்வன தேற்றாது – செய்ய வேண்டிய நற் செயல்களை இன்னவென அறியாது ; அலைகுவேன் - திரி தருபவன்; என் செய்வேன் - நான் என்ன செய்வேன் ; அந்தோ - இரக்கக் குறிப்பு ;

கானலின்நீர் எனத்தோன்றும் காரண
காரியங்கள்எனக் கண்டு தேறி
ஊனம்அடைந்து உனையடைந்தேன் உனையல்லால்
எனக்குறுதி உரைப்பார் உண்டோ

தேனின்மடை திறந்தனைய திருமொழியால்
வாஎனவும் செப்பி டாயோ
வானவர்கள் அறியாத மகத்துவம் சேர்
திருமலைமேல் வதியும் மாலே (3)

3) வானவர்கள் அறியாத – தேவர்களால் அறிய மாட்டாத ; மகத்துவஞ் சேர் - பெருமையுடைய ; திருமலைமேல் வதியும், மாலே - திருமலைமேல் நித்யவாசம் செய்யும் திருமாலே ! ; காரண காரியங்கள் கானலின் நீரெனத் தோன்றும் எனக் கண்டு – காரண காரியங்கள் பேய்த் தேர் போலப் பொய்த் தோற்றங்களாம் என உணர்ந்து ; ஊனம் அடைந்து - பழி பட்டுக் கிடந்து (இப்போது) ; தேறி - தெளிவு பெற்று ; உனையடைந்தேன் - உன்னிடம் சரணம் புகுந்தேன் ; உனையல்லால் - உன்னைத் தவிர ; எனக்கு உறுதி உரைப்பாருண்டோ - எனக்கு நன்மை பயக்கும் வாக்குச் சொல்பவரும் உளரோ ? (இல்லையே) ; தேனின் மடை திறந்தனைய - தேன் பெருக்கெடுப்பது போல ; திருமொழியால் - இனிய திருவாக்குகளால் ; 'வா' எனவும் செப்பிடாயோ - 'வருக' என்று திருவாய் மலர்ந்து அருள மாட்டாயா !

சூரிய வெப்பத்தால் அருகில் நீர் இருப்பது போலத் தோன்றும். இது பொய்த் தோற்றம். எனினும் சூரிய வெப்பமாகிய காரணம் நிலையானது. அது உண்மைத் தோற்றமாகும். 'கண்டு' ஊனமடைந்து தேறி உனையடைந்தேன் என்று மாற்றிப் பொருள் கொள்ள வேண்டும்.

பொல்லாத வினைபுரியுப் பூரியன் என்று
இகழ்ந்தனையேல் புகல்வேறு உண்டோ
கல்லாதான் இவன்என்று கழித்த னையேல்
கதிவேறு காண்கி லேன்யான்
செல்லார்ந்த பொழில்வளம் சேர்திரு மலைமேல்
எழுந்தருளும் சீனி வாசா !
அல்லார்ந்த திருமேனி ஆர முதே!
ஆவிக்கும் ஆவி யானே (4)

4) செல்லார்ந்த - மேகங்கள் கவிந்துள்ள ; பொழில் வளஞ்சேர் - சோலைகளின் வளப்பம் பொருந்திய ; திருமலை மேல்-திருவேங்கட மலையின்மேல் ; எழுந்தருளும் சீனிவாசா - கோயில் கொண்டுள்ள சீனிவாசப் பெருமானே ; அல்லார்ந்த திருமேனி - இருள் போல் கரிய திருமேனியையுடைய ; ஆரமுதே - (திருப்தி பிறவாத) அரிய அமுதம் போன்றவனே ! ; ஆவிக்கும் ஆவியானே — உயிர்க்கும் உயிராகுபவனே ! ; பொல்லாத வினை புரியும் பூரியனென்று - தீய செயல்களையே செய்கின்ற அற்பன் என்று ; இகழ்ந்தனைபோல் - நீ இகழ்ந்து புறக்கணிப்பாயானால் ; புகல் வேறு உண்டோ - அடைக்கலம் வேறு உளதோ? (நீயே சரண் என்றபடி) ; கல்லாதான் இவன் என்று – (கற்க வேண்டிய நூல்களைக்) கற்காத மூடன் இவன் என்று (அடியேனை) ; கழித்தனையேல் - அகற்றுவாயானால் ; யான் - (திக்கற்ற) அடியேன் ; வேறுகதி காண்கிலேன் - உன்னையன்றிப் பிற கதியொன்றும் தெரிய இல்லேன்

''இருளன்ன மாமேனி'' என்றார் ஆழ்வாரும். ''இராத்திரி மேனியம்மான்'' என்றார் திவ்யகவியும் ''புகல் வேறுண்டோ, உன் சரண் அல்லால் சரணில்லை,'' என்றார் குலசேகரரும்.

அண்டாண்டாம் ஒருகோடி அமைத்து
அதனில்எனை இருத்தி அளவிலாத
துண்டரிகக் கூட்டுறவு தொலையாமல்
மயக்கிமருள் துயரத்து ஆக்கிப்
பண்டைவினை ஒழிக்காமல் பராமுகமாய்
இருந்தாயேல் பார்ப்பார் உண்டோ
மண்டலம் ஓர் அடிஅளந்த மணிவண்ணா
திருஉறையும் மார்பத் தானே (5)

5) மண்தலம் - இப்பூலோகத்தை ; ஓரடியளந்த - ஒருஅடியாலே அளந்திட்ட ; மணிவண்ணா - நீல மணி போன்ற நிறத்தையுடையவனே! ; திரு உறையும் மார்பத்தானே - மகாலட்சுமி நித்யவாசம் செய்யும் திருமார்பை உடையவனே! ஒரு கோடி அண்டாண்டம் அமைத்து - மிகப் பலவாகிய அண்டகோளங்களைச் சிருஷ்டித்து ; அதனில் - அவற்றின் ஒரு மூலையில் ; எனை இருத்தி - அடியேனைப் பிறக்க வைத்து ; அளவிலாத - எண்ணற்ற ; துண்டரிகக் கூட்டுறவு - குரூரர்களுடன் சகவாசம் ; தொலையாமல் - நீங்காதபடி மயக்கி - மயங்கித் தடுமாற வைத்து ; மருள் துயரத்து ஆக்கி - உன்மத்தமாகும் துன்பத்தில் வீழச் செய்து ; பண்டை வினை ஒழிக்காமல் - (என்) பழைய வினைகளைப் போக்காமல் ; பராமுகமாயிருந்தாயேல் - அலட்சியம் செய்வாயானால் ; பார்ப்பாருண்டோ - (என் மேல் கருணை வைத்து) நோக்குவாருண்டோ! (உன்னையன்றி இல்லை என்றபடி).

பைஅரவில் நடனமிடும் பதமலரைக்
கருதிஉனைப் பாடி டாமல்
வெய்யபல வினைபுரிந்து வீட்டியலின்
நெறிமறந்து வெறிதே நாளை
ஐயகழித் தனன்இறக்கும் அவதிதனை
அறியாதேன் அலம்வந்து ஏங்கும்
பையன்எனைப் புரந்துதயை பண்ணுக
எண்ணரியமனப் பதுமத் தானே (6)

6) எண்ணரிய - நினைத்தற்கும் அரியனாகிய ; ஐய - எம்பெருமானே! ; மனப்பதுமத்தானே - இதய தாமரையில் எழுந்தருளியிருப்பவனே! ; பை அரவில் - படத்தையுடைய பாம்பாகிய காளியன் தலைமேல் ; நடனமிடும் - காளிங்க

நர்த்தனம் புரிகின்ற ; பதமலரை - உன் திருவடித் தாமரைகளை ; கருதி - தியானித்து ; உனைப் பாடிடாமல் - (வாயால்) துதி செய்யாமல் ; வெய்ய பல வினை புரிந்து - கொடிய பல தீவினைகளைச் செய்து ; வீட்டியலின் நெறி மறந்து - இல்லறவொழுக்கத்தினை மறந்து ; வெறிதே - வீணாக ; நாளைக் கழித்தனன் - வாழ் நாளைக் கழித்து வருகின்றேன் ; இறக்கும் அவதிதனை அறியாதேன் - உயிர் போகும் நாள் இன்னதென அறியாதவனாய் ; அலம் வந்து ஏங்கும் பையன் - மனம் சுழன்று வருந்தும் அற்பனாவேன் ; எனை - (அப்படிப்பட்ட) என்னை ; புரந்து - இரட்சித்து ; தயை பண்ணுக - கிருபை புரிவாயாக!


நிதிவேண்டும் பொருள்வேண்டும் நினைந்தபடி
அடைந்திடும் நல்நிலைமை வேண்டும்
பதிவேண்டும் அதற்குரிய பாக்கியங்கள்
வேண்டும்எனப் பலகால் எண்ணும்
மதிவேண்டும் எனல்சிறிது உன் மலரடிமேல்
அன்பொழுக்கம் மாறா இன்பத்
துதிவேண்டும் அல்லாதுஎன் பெறல்வேண்டும்
சுருதிமுடிச் சோதி யானே (7)

7) சுருதிமுடிச் சோதியானே - வேதங்களால் பிரதிபாதிக்கப்படுகின்ற சோதி சொரூபமானவனே! ; (உம்மிடம் வந்து) ; நிதி வேண்டும் - பொன் வேண்டும் ; பொருள் வேண்டும் - மக்கட் பேறு வேண்டும் ; நினைந்தபடி அடைந்திடும் நன்னிலைமை வேண்டும் - (நான்) எண்ணிய படியே அடைய விரும்பும் நல்ல பதவி வேண்டும் ; பதி வேண்டும் - வீடு வேண்டும் ; அதற்குரிய பாக்கியங்கள் வேண்டும் - அந்த வீட்டிற்குரிய செல்வங்கள் வேண்டும் ; என - என்று ; பல

கால் - பல தடவை ; எண்ணும் - நினைக்கின்ற ; மதி வேண்டும் எனல் - புத்தி வேண்டும் என்று இறைஞ்சுதல் ; சிறிது - அற்பமானது ; (அதற்கு மாறாக) உன் மலரடிமேல் - உனது திருவடித் தாமரைகளில் ; அன்பு ஒழுக்கம் மாறா - பக்தி வைத்தல் நீங்காத ; இன்பத்துதி வேண்டும் - ஆனந்த மளிக்கும் தோத்திரங்கள் செய்தல் வேண்டும் (இதுவே பெரிது) ; அல்லாது - இதனைத் தவிர ; என் பெறல் வேண்டும் - வேறு எதனைப் பெற வேண்டும்? (இதுவே வேண்டும் என்றபடி).

திருவேங்கடவன் திருவடிகளில் என்றைக்கும் நீங்காத பக்தி கொண்டு, அவனைத் துதித்துக் கீர்த்தனம் செய்வதே பெறலரும் பேறாகும்.

மதுரகவி திருமலை மால் ஸப்தமணிமாலை முற்றும்.



# மதுரகவி ஸ்ரீநிவாச அய்யங்கார் வாழ்க்கை வரலாறு

பாண்டிய நாட்டில், மதுரை மாவட்டத்தில், கம்பம் பள்ளத்தாக்கில் ''அனுமன்-தன்-பட்டி'' என்ற அழகிய ஊர் அமைந்துள்ளது. இப்பிராந்தியத்தில மிகவும் பிரசித்திபெற்ற அனுமன், இங்கே கோயில் கொண்டுள்ளார். ஆஞ்சநேய பகவானைத தவிர பலவேறு தெய்வங்களும் இந்த ஊரில் கோயில் கொணடுள்ளனர். கம்பம் பள்ளத்தாக்கில் அமைந்துள்ள ஒவ்வொரு ஊரிலும், ஒரு சிவன் கோவிலையும், ஒரு பெருமாள் கோவிலையும் முதன்மையாக அமைத்துத் தங்களுக்கு உகந்த வகையில் வழிபாடு செய்வது, இப்பகுதி மககளின தொன்று தொட்டு வந்த பழக்கமாகும். இந்தத் தெய்வங்களுக்கு ஆராதனையும், பூசையும் செய்வதற்கு ஒவ்வொரு ஊரிலும ஒரு தெய்வக் குடும்பத்தை இப்பகுதி மககள் குடியேற்றினர்.

அனுமனுக்கு ஆராதனம் செய்ய வந்த அடியவர் வழியில், வைணவர் குலத்தில, வடகலை மரபில் ஸ்ரீ வத்ஸ கோத்திரததில், நலலான சக்கரவர்த்தி பரமபரையில், சம்மந்தபுரம் வழியில் மதுரகவி ஸ்ரீ நிவாச அய்யங்கார் தோனறினார். மருத்துவம், வைத்தியம், ஆன்மீகம், பிரவச்சனம், தமிழ்மொழி, சோதிடம் ஆகிய துறைகளில் இக்குடும்பத்தினர் தலைசிறந்து விளங்கினர். இதைத் தவிர, அண்ணல் காந்தியடிகள் வழியில், விடுதலை இயக்கத்திலும் இக்குடும்பத்தினர் பெரும்பங்கு ஏற்று விடுதலை வேள்வியிலும தொண்டாற்றினர்.

பல்வேறு அறிஞர்களையும், கவிஞர்களையும், கம்பம் பள்ளத்தாக்கும, அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் பெற்றுத் திகழ்கின்றன ஒவ்வொரு ஊரிலும், நான்கு அல்லது ஐந்து கவிஞர்களுக்கு மேல் தோன்றி

இன்றளவும், தமிழ்மொழிக்குத் தொண்டு செய்து வருகின்றனர்.

அனுமந்தன் நகரமும், அதற்குத் தொடர்புடைய தேவார நகரமும் பல்வேறு கவிஞர்களையும், அறிஞர்களையும் பெற்றுத் திகழ்கின்றன.

கிடைத்த விவரத்தின்படி, அண்ணா அய்யங்காருக்கு முன்பே, அனுமன் ஆராதனைக் கைங்கரியத்தில், மதுரகவியாரின் குடும்பம் ஈடுபட்டது நன்கு தெரிகின்றது. அண்ணா அய்யங்கார் ஒரு பெரும் புலவர். இவருடைய திருமகன் அழகர் அய்யங்காரும் ஒரு கவிஞர். இவர்கள் இயற்றிய நூல்கள் இன்றுவரை கிடைக்கவில்லை, அழகர் அய்யங்காரின் குமாரர் சுந்தரராஜ அய்யங்கார். இவர் முத்தமிழ்ச்சக்கரவர்த்தி என்ற பட்டத்தையும் பெற்றார். இவர் இயற்றியதாகப் பட்டர்பிரான் அந்தாதி, கோதைமாலை போன்ற அஷ்டப் பிரபந்தங்களும் கிடைத்துள்ளன மாம்பழக் கவிச்சிங்க நாவலரால், இவர் பெரிதும் போற்றிப் புகழ்ப் பெற்றவர். மதுரகவி என்ற பட்டமும் பெற்றவர்.

சுந்தரராஜ அய்யங்கார், அரங்கநாயகி தம்பதியருக்கு, மூத்த புதல்வராக மதுரகவி ஸ்ரீநிவாச அய்யங்கார் தோன்றினார். இளைய புதல்வராகக் கிருஷ்ண சுவாமி அய்யங்கார் தோன்றினார். இலட்சத்திற்கும் அதிகமான கவிதைகளை மதுரகவியார் இயற்றியுள்ளார். அனைத்து யாப்பு வகைகளிலும் அன்பர்கள் விருப்புக்கிணங்க இயற்றிப், பிரதிகளைத் தன் வசம் வைத்துக் கொள்ளாமல், பாடிய இடத்திலேயே கவிதைகளை விட்டுச் செல்லும் பழக்கத்தை மதுரகவியார் கைக் கொண்டிருந்தார். பதினாறு வயதில், மதுரகவி, என்ற பட்டத்தைப் பெற்றார். இவரைச் சுற்றி அறிஞர்களும், கவிஞர்களும், சோதிடர்களும், வைத்தியர்களும், சூழ்ந்து கொண்டே இருப்பார்கள். பல்வேறு நூல்கள் வெளிவருவதற்கு இந்த அறிஞர் சபையே மூல காரணமாகும். மதுரகவி நரகவி பாடாத வரகவி ஆவார்,

''தலமேவும் தமிழ்த்தலைமை சடகோப ராமானு
சாசாரி யார்மெய்
வலமேவும் புதுவை ராமனுஜ நாவலர் சுதர்மான்
என்றே ஏத்தும்
குலமேவும் துரைசாமி மூப்பனார் முதல்பெரிய
குழுவின் நாப்பன்
பெலமேவும் தக்க மதிப்புடன் ''மதுரகவி'' எனப்
பேர்பெற்ற சிங்கம்''

என்று இவர் மதுரகவிப் பட்டம், பெற்ற விவரத்தை அந்தோணிமுத்துப் புலவர் பெருமையாகப் பாடி மகிழ்கின்றார்.

மதுரகவியின் தம்பி அ.சு.கிருஷ்ணசுவாமி அய்யங்கார் ஒரு அரிய ஆசுகவி. தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுப் பன்முறை சிறை சென்றவர். இவரது மகன் ஏ.கே. ஸ்ரீ நிவாசனும் ஒரு கவிஞர். இவரும் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றவர். விடுதலை இயக்கத்திற்குப் பல கவிதைகளை இருவரும் அளித்துள்ளனர்.

இந்தக் குடும்பத்தினரைத் தவிர நாட்டாண்மை தொப்பையன் சேர்வை, அந்தோணி முத்துப் புலவர் சேஷாத்திரி நாயுடு, வெங்கிடசாமி நாயுடு, அழகர் சாமி நாயுடு, இராமானுஜம் சேர்வை, இராமசாமி சேர்வை, இஞ்ஞாசி முத்துப் பிள்ளை, சுப்பையா பிள்ளை, கார் மேகம் மாணிக்க ஆசாரி, ஆரோக்கியசாமி, பண்டிட் சவரிமுத்துப் பிள்ளை போன்ற கவிஞர்கள் இங்குத் தோன்றி, தமிழுக்கும், அனுமந்த நகரத்திற்கும், பெருமையைச் சேர்த்தனர்.

இது போலவே தேவாரநகரமும், மதுரகவி குடும்பத்திற்கு மிகவும் நெருங்கிய தொடர்புடையதாகும். மதுர கவி வீரராக அய்யங்கார், மதுரகவிக்குப் பெண் தந்த மாமா. செல்லம் அய்யங்கார் மைத்துனர். கவி சின்னம்மாள் மைத்துனி. அரங்கசாமி அய்யங்கார் மைத்துனர். ஸ்ரீ நிவாச அய்யங்கார் மைத்துனர். விலட்சணானந்த

சுவாமிகள் மருமகன். வீராச்சாமி அய்யங்கார் மைத்துனர் கிருஷ்ண ஸ்ரீநிவாச அய்யங்கார் மருமகன். டி. ஆர். நாரயண அய்யங்கார் மருமகன். டி.எஸ். விஜயராக அய்யங்கார் பேரன். இவர்கள் எல்லாம் இந்தக் குடும்பந்தில் தோன்றிப் பெரும் கவிஞர்களாக விளங்க, அரிகோவிந்தம் பிள்ளை, ஞானதேசிகம் பிள்ளை, முத்துக் கருப்பத் தேவர், தேவாரம் ஜமீந்தார் சுப்பிரமணிய செட்டியார், அப்புனுராமலிங்கம் செட்டியார், தேவுடு ஐயர், திரு ராமையா பிள்ளை, அன்ன காமாட்சி செட்டியார், நாராயண சாமி பாரதி, திரு.கே. ராஜ கோபால் நாயுடு போன்றவர்கள், தேவார நகரில் தோன்றித் தமிழுக்குத் தங்கள் கவிதைகள் மூலம் அரும் பெரும் தொண்டு புரிந்தனர்.

ஆழ்வார்களைப் போல அனுதினமும் அனுமனையும், ஆண்டாளையும், அரங்கனையும், அலர்மேலு மங்கையையும், அவள் நாதனையும் அன்பர்கள் விரும்பிய வண்ணம் மதுரகவி பாடிப்பாடிப் பரவசமானார். மதுரகவியார் இயற்றிய ஒவ்வொரு நூலுக்கும் ஒரு தனி வரலாற்றுச் சிறப்பு உள்ளது. இந்த முறையில் தான் திருமலைச் சிந்து, திருப்புகழ், வெளிவந்தன. திருமலைச் சிந்தின் பெருமையை நாம் எடுத்துச் சொல்லாமல், 1925ம் ஆண்டு அரங்கசாமி நாயுடு (தேவாரம்) அச்சிட்டபோது, தமிழ் வித்துவான் நா. கிருஷ்ணசாமி நாயுடு, இயற்றிப் போற்றிய வெண்பாவை இங்குக் குறிப்பிடுவது சாலவும் பொருந்தும்.

தேனோகற் கண்டோ திருமலைச்சிந்து அம்மதிரு
மானோங்கும் மார்பினணி மாலையோ—
யானோதல்
என்னாம் இசைச்சந்தம் ஏற்றபொருட் சுவையோர்
பொன்னாம் புலவரகம் புக்கு.

மதுரகவியார் நாழிகைக் கணக்கில் காளமேகத்தைப் போலக் கவிதைகளை நொடிப் பொழுதில் பாட வல்லவர்.

ஆறு நாழிகையில் திருமாலிருஞ்சோலைப் பலசந்த மாலையையும், ஏழு நாழிகைகளில் திருக்கடிகை அந்தாதியையும் மதுரகவி பாடியுள்ளார். இந்த அற்புதத்தைத் தனது கண்களால் கண்டு, தானும் மற்ற கவிஞர்களும் ஒன்று சேர்ந்து எழுதிய, வைபவத்தை, அந்தோணி முத்துப்புலவர் யாத்த கவிதையின் மூலம் நாமும் காண்போம்.

''பற்பலர்கள் விரைந்து எழுதப் பாவலர்கள் மனம்
களிப்பப் பாணி மாறாச்
சொற்பொருள் சீர்தொடை அணிநல்துறை யமகம்
திரிபுடன் சொல் சோர்வு உறாமல்
கற்பனை இரசம் ஒழுகக் கடலின் மடை திறந்தது
எனக் கழறினான் சொ
லற்புதுமை செப்ப எமக்கு ஆயிரம் நாவுளதோ
இவ்அவனி மீதே''

வில்வண்டிகளும், பெட்டி வண்டிகளும் வைத்தியத்திற்காக ஆட்களை ஏற்றிக் கொண்டு, மதுரகவியாரின் வீட்டின் முன்பு நிற்கும். பட்டுத்துணியின் மூலம் பெண்களின் நாடி பார்த்து, மதுரகவியார் மருந்து தந்த பசுமைக் காட்சிகள், இன்றும் நம் கண்கள் முன் நிற்கின்றன. இவர் வைத்தியத்தில் அன்று செய்த விந்தைகளும், அற்புதங்களும், கம்பம் பள்ளத்தாக்கில் இன்றும் கதைகளாகப் பேசப்படுகின்றன. இவர் இரசமணி கட்டிய வித்தகர். இவர் எப்பொருளையும், பச்சிலை மூலம் புடம் போட்டுப் பஸ்பமாக்குவதில் வல்லவர். எவரிடமும் வைத்தியத்திற்காகக் காசு வாங்கியதில்லை. ''சாமி மருந்துதர வேண்டாம், கைபட்டால் போதும், சீக்குக் குணமாகும்'' என்று கூறி, இரவு பகல் பாராமல் ஏழை, எளிய மக்கள் நம்பிக்கையுடன் இவரிடம் வந்து சென்றனர். 'கைராசிக்காரர்' என்ற பட்டமும் பெற்றார். இவருடைய வைத்திய அனுபவங்கள் பலவும் கவிதை வடிவில் வந்துள்ளன. ஆனால் அக்கவிதைகள் இன்று வரை நமக்குக் கிடைக்கவில்லை.

சோதிடக் கலையிலும், ஆருடத்திலும் இவர் வல்லவர். இவர் இராசிப் பொருத்தம் பார்த்து அமைத்துக் கொடுத்த கல்யாணங்கள் மிகவும் சிறப்பாக அமைந்தன. ஆருடத்தில் இவர் சொன்ன சொற்கள் பலித்தன. அன்பர்கள் விருப்புக்கிணங்க இக்கலைகளிலும், தனது அனுபவ நுணுக்கங்களைக் கவிதைகளாக இயற்றியுள்ளார்.

மதுரகவியார் தனது வாழ்நாள் முழுவதும் தமிழ் மொழிக்கு அயராது தொண்டு செய்தார். ஆறடி உயரமும், அதற்கேற்ற ஆசானுபாகுவான உடலும், மாநிறமும், மாறுகண்ணும், மாசில்லா முகமும், பளிச்செனத் தெரியும் திருமண் நெற்றியும், எங்கும், எவரும், ஏத்திப் போற்றி வணங்கத் தக்க தவவலிமையும், பொலிவும், பெற்று, உத்தமனாக, உபகாரியாக, ஊரார் போற்றும் வள்ளலாக மதுரகவியார் திகழ்ந்தார்.

தனது அந்திமக் காலத்தில் கூடத் தமிழை மறவாமல் அழகான கோதாஸ்துதி, என்ற அற்புத நூலை இயற்றி அருளினார்.

எழுபான்மூன் றாண்டில் இரும்பிணி வாய்பட்டே
இழுமென் அணைமேல் இருந்தே—அழகான
கோதாத் துதியிதனைக் கூறினேன் கூறுபவோ
கோதாப் புலவர் குழாம்

என்ற, இந்த வெண்பாவின் மூலம் மதுரகவியார் 73 ஆண்டுகள் வாழ்ந்த விவரம் நமக்குத் தெரிகின்றது. கோதாஸ்துதி என்ற நூல், 1936 ஆண்டு வெளியிடப் பட்டதாகும்.

மதுரை ஆசிரியர் கே. ஸ்ரீநிவாசன் அவர்கள் மதுரகவியார் விருப்பிற்கிணங்கத் திருவாராதனம் செய்து, தீர்த்தம் வழங்க, 1937ம் ஆண்டு, பங்குனி மாதம், உத்திர நட்சத்திரத்தில், உதய வேளையில், உற்றமும், சுற்றமும் சூழ்ந்திருக்க, மதுரகவியார் ஆசாரியன் திருவடி அடைந்தார்.

# மதுரகவி இயற்றிய நூல் விவரங்கள்

மதுரகவி ஸ்ரீநிவாச அய்யங்கார், இலட்சத்திற்கும் அதிக மான நூல்களை இயற்றி உள்ளார். இந்நூல்கள் பலவற்றிற்கும் பிரதிகள் இல்லை. கேட்ட மாத்திரத்தில் கேட்ட இடத்திலேயே பல்வகையாக யாப்பு வகைகளிலும் கவிதை பாடும் திறமை பெற்றவர் மதுரகவி. ஆனால் பாடிய கவிதைகளைக் கேட்ட அன்பரிடமே விட்டுச் சென்றார். தன்வசம் பிரதிகள் வைத்துக் கொள்ளும் வழக்கத்தை மதுரகவி கொண்டிருக்கவில்லை. இதனால் இவர் இயற்றியுள்ள பல நூல்களுக்குப் பிரதி கிடைக்க வில்லை. மதுரகவியார் இயற்றிய நூல்களின் விவரங்கள் கிடைத்த வரலாற்றுச் செய்திப்படி, ஆறு தலைப்புகளில் பிரித்து இங்குத் தரப் பெற்றுள்ளன.

| I. கவசம் பிரதி இல்லாத நூல்கள் | பாடல்கள் |
|---|---|
| 1) அயக்கிரீவர் மாலை | 10 |
| 2) அலங்கார கிருஷ்ணன் பதிகம் | 11 |
| 3) அலர்மேலு மங்கை நாச்சியார் மாலை | 10 |
| 4) அவதார இரகசியங்கள் | 20 |
| 5) அன்பில் மாலை | 30 |
| 6) அனுமன் அந்தாதி | 140 |
| 7) அனுஷ்டான மாலை | 30 |
| 8) அஷ்ட ஐஸ்வர்ய மாலை | 10 |
| 9) ஆசாரியன் அருளமுதம் | 1250 |
| 10) ஆண்டாள் கல்யாணம் | 10 |
| 11) ஆண்டாள் மாலை | 10 |
| 12) ஆதிகேசவன் மாலை | 10 |
| 13) ஆராவமுதன் மாலை | 30 |
| 14) ஆழ்வார்கள் அமுதம் | 4000 |
| 15) இரகுநாதன் தூதன் கோவை | 100 |
| 16) இராசக் கிரீடை | 16 |
| 17) இராதாகிருஷ்ண தத்துவ மாலை | 21 |
| 18) இருக்கை இருந்த பெருமான் மாலை | 10 |
| 19) உருக்குமிணி கல்யாணம் | 16 |
| 20) உலகளந்த உத்தமன் பதிகம் | 15 |

| | | பாடல்கள் |
|---|---|---|
| 21) | ஒப்பில்லா அப்பன் மாலை | 10 |
| 22) | திரிகூடல் திருஅந்தாதி | 105 |
| 23) | திருக்கோஷ்டியூர் மாலை | 10 |
| 24) | திருத்தங்கல் அப்பன் மாலை | 10 |
| 25) | திருநாராயணபுரம் செல்லப்பிள்ளை பதிகம் | 10 |
| 26) | திருப்பதி மாலை | 10 |
| 27) | திருவில்லிபுத்தூர் மாலை | 10 |
| 28) | திருமாலிருஞ்சோலைப் பலசந்த மாலை | 110 |
| 29) | திருவரங்கன் நீரோஷ்டக கொம்பில்லா யமக அந்தாதி | 101 |
| 30) | திருவரங்கப் பதிகம் | 10 |
| 31) | திருவள்ளூர் திருப்பதி மாலை | 20 |
| 32) | திருவில்லிபுத்தூர் மான்மியம் | 1250 |
| 33) | தினசரி வாழ்வு | 200 |
| 34) | தேர் வண்டிக்கால் சரித்திரம் | 410 |
| 35) | தேசிகன் மாலை | 10 |
| 36) | தேவநாதன் மாலை | 10 |
| 37) | நவதிருப்பதி மாலை | 10 |
| 38) | நாராயண வெண்பா | 3000 |
| 39) | நாரதகானம் | 30 |
| 40) | நாமக்கல் ஆஞ்சநேயர் பதிகம் | 21 |
| 41) | நூற்றெட்டுத் திருப்பதி சிலேடை வெண்பா | 110 |
| 42) | பத்மநாபன் மாலை | 10 |
| 43) | பத்திரிப் பதிகம் | 10 |
| 44) | பழமுதிர்ச் சோலைப் பதிகம் | 10 |
| 45) | பத்ராசலப் பெருமாள் பதிகம் | 10 |
| 46) | பரிமளரங்கன் பதிகம் | 10 |
| 47) | பக்தி யோகம் | 50 |
| 48) | பார்த்தசாரதி மாலை | 10 |
| 49) | பாகவத வெண்பா | 3501 |
| 50) | பிரபத்தி மார்க்கம் | 50 |
| 51) | பிரபந்த சாரம் | 10 |
| 52) | பிருந்தாவனப் பேறு | 1250 |
| 53) | புத்தூர்ப் புராணம் | 1250 |
| 54) | மதுராபுரி மாயக்கண்ணன் மாலை | 10 |
| 55) | மங்களா சாசன மகிமை | 121 |
| 56) | மகாபாரத சாரம் | 501 |

| | | பாடல்கள் |
|---|---|---|
| 57) | வாக்குண்டாம் மாலை | 103 |
| 58) | விவாக மாலை | 10 |
| 59) | வில்லிபுத்தூர் வெண்பா | 225 |
| 60) | வியூக சுந்தரராஜப் பெருமாள் சந்திரகலாமாலை | 17 |
| 61) | வைணவ வைபவம் | 101 |
| 62) | வைணவ இரகசியம் | 401 |

## II அனுபவ சோதிட நூல்கள்

| | | |
|---|---|---|
| 1) | அனுபவ சோதிட சிந்தாமணி | 1001 |
| 2) | அஷ்டவர்க்கம் | 200 |
| 3) | சோதிட மாலை | 108 |
| 4) | காரியசித்தி மாலை | 10 |
| 5) | கிரகக்கோள் நிவாரண மாலை | 108 |
| 6) | துரித நோய் நிவாரண மாலை | 108 |
| 7) | துரித விவாக மாலை | 10 |
| 8) | துரித துன்ப நிவாரண மாலை | 10 |
| 9) | பரிகார மாலை | 10 |
| 10) | பரிசுத்த நாடி மாலை | 10 |
| 11) | விவாகப் பொருத்த மாலை | 108 |

## III சித்த வைத்திய நூல்கள்

| | | |
|---|---|---|
| 1) | அனுபவ வைத்திய இரகசிய மாலை | 101 |
| 2) | அபூர்வ அனுபவ வைத்திய சிந்தாமணி | 1001 |
| 3) | ஆகார நியம மாலை | 50 |
| 4) | இரசமணி மாலை | 50 |
| 5) | இலேகிய மாலை | 50 |
| 6) | கைவைத்திய வழிகாட்டி | 101 |
| 7) | காயகல்பம் | 501 |
| 8) | காளமேக செந்தூரம் | 25 |
| 9) | செந்தூர சிந்தாமணி | 250 |
| 10) | சுர நிவாரணி | 50 |
| 11) | தைலப் பிரயோகங்கள் | 101 |
| 12) | துரித சகல ரோக நிவாரணி | 50 |
| 13) | நாடி மாலை | 101 |
| 14) | பச்சிலை மாலை | 250 |
| 15) | பட்சவாத நிவாரண மாலை | 101 |

| | | பாடல்கள் |
|---|---|---|
| 1௦) | பிரயோக இரகசியங்கள் | 25 |
| 17) | புட பஸ்பம் | 10ט1 |
| 18) | புடமிடா பஸ்பம் | 1001 |
| 19) | புதுமைப்புட இரகசியங்கள் | 201 |
| 20) | மூலிகைகள் மூலம் | 3001 |
| 21) | மேக ரோக நிவாரணி | 50 |

## IV வடமொழியிலிருந்து மொழிபெயர்த்த காவியங்கள்

| | | |
|---|---|---|
| 1) | பாதுகா சஹஸ்ரம் | 506 |
| 2) | கிருஷ்ண கர்ணாமிருதம் | 105 |
| 3) | கோதாஸ்துதி | 123 |
| 4) | அஸ்டபதி | 25 |
| 5) | கீதை வெண்பா | 601 |
| ௦) | தயா சதகம் | 105 |

## V கைவசம் உள்ள நூல்கள்

| | | |
|---|---|---|
| 1) | அனுமோபாக்கியானம் | 1000 |
| 2) | அழகர் பலசந்தமாலை (ஆறு நாழிகையிற் பாடியது) | 103 |
| 3) | அனுமன் அலங்கல் | 10 |
| 4) | அனுமக் கலம்பகம் | 120 |
| 5) | அனுமன் மாலை | 102 |
| 6) | அனுமப்பதிகம் | 12 |
| 7) | அனுமந்தபுரி சமய சஞ்சீவி மாலை | 10 |
| 8) | அத்தியாள நல்லூர் மான்மியம் | 225 |
| 9) | அஞ்சுமணி மாலை | 52 |
| 10) | ஆண்டாள் அஞ்சுமணி மாலை | 6 |
| 11) | இராமாவதார சாரமாலை | 1 |
| 12) | இராமாயண வெண்பா | 4000 |
| 13) | உருக்குமாங்கத சரிதம் | 1250 |
| 14) | கண்ணன் சரித்திரம் (கண்ணன் அவதாரம்) | 1232 |
| 15) | கோதை வெண்பா | 223 |
| 16) | கோகுலக் கண்ணன் மாலை | 47 |
| 17) | கண்ணபிரான் தாலாட்டு | 29 |

| | | பாடல்கள் |
|---|---|---|
| 18) | கண்ணன் துதி | 16 |
| 19) | சேடகிரி மாலை | 5 |
| 20) | சூடிக் கொடுத்தாள் மாலை | 101 |
| 21) | சேஷ பூதர மாலை | 32 |
| 22) | திருப்பத்தூர் சுந்தர ஆஞ்சநேயர் பதிகம் | 11 |
| 23) | திரிபுரசுந்தரி பதிகம் | 11 |
| 24) | திரிகூடல் அந்தாதி | 105 |
| 25) | திரிபுரசுந்தரி மாலை | 5 |
| 26) | திருமாலிருஞ்சோலை யமக அந்தாதி | 103 |
| 27) | திருக்கழுக்குன்ற மாலை | 6 |
| 28) | திருமலைச் சிந்து | 144 |
| 29) | திருக்கோதை மாலை | 11 |
| 30) | திருமால் துதி | 22 |
| 31) | திருக்குடந்தை மாலை | 11 |
| 32) | திருவரங்கப் பதிகம் | 9 |
| 33) | திருவரங்கப் பெருமாள் பதிகம் | 11 |
| 34) | திருவரங்கர் தத்தைவிடு தூது | 220 |
| 35) | திருப்புகழ் | 401 |
| 36) | திருக்கடிகை அந்தாதி (ஏழு நாழிகையிற் பாடியது) | 101 |
| 37) | திருவாழியான் மாலை | 2 |
| 38) | திருமால் சப்தமணி மாலை | 6 |
| 39) | திருநட்சத்திர மாலை | 27 |
| 40) | திருவரங்க நாச்சியார் பதிகம் | 11 |
| 41) | துரித நிவாரணப் பதிகம் | 10 |
| 42) | நாரதிய புராணம் (நாரதீயம்) | 100 |
| 43) | பாதுஹா சகஸ்ரம் | 505 |
| 44) | பட்டாபிரான் அந்தாதி | 101 |
| 45) | முத்திருப்பதி மாலை | 21 |
| 46) | வியூக சுந்தரராஜ மாலை | 26 |
| 47) | வேங்கடேசன் பலசந்தமாலை | 17 |
| 48) | வேங்கடேசன் சந்திரகலா மாலை | 16 |
| 49) | பெருந்தேவி நாச்சியார் பதிகம் | 11 |

## அச்சேறிய நூல்கள்

1) இராமாயண வெண்பா (உரையுடன்) I & II பாகங்கள். இராமாயணத்தை மதுரகவியார் வெண்பாக்கள் வடிவில் யாத்துள்ளார். 4000 வெண்பாக்கள் இதில் இடம் பெறுகின்றன. பாலகாண்டம் முதல் கிட்கிந்தா காண்டம் வரை முதல் பாகத்திலும், சுந்தர காண்டமும் யுத்த காண்டமும் இரண்டாவது பாகத்திலும் இடம் பெறுகின்றன. திரு. எம். கே. இராமன், என்ற கம்பனின் தெளிந்த, விரிந்த, இனிய, எளிய உரையுடன் இந்த அரிய நூல் வெளி வந்துள்ளது. பாடிய வாய் தேனூறும் வெண்பாக்களை, உரையுடன் காண்பது, ஒரு புதிய இலக்கிய இன்பமாகும்.

2) ஸ்ரீ கண்ணன் அவதாரம் :- 1232 பாடல்களில் கண்ணனின் லீலா விநோதங்களையும்; பிறகு அவன் வேடனின் அம்பினால் அடிபட்டதையும் உள்ளம் உருக்க மதுரகவி பாடுகின்றார். கம்பனின் உரையுடன் 750 பக்கங்களுடன் பல அரிய விளக்கங்களுடன், இந்த நூல் வெளி வந்துள்ளது.

3) நப்பின்னைப் பிராட்டியார் திருமணம் - நப்பின்னை வரலாற்றை, 75 பாடல்களில் மதுரகவி விரிவாக விளக்குகின்றார். கம்பன் உரையுடன் இந்த நூல் வெளி வந்துள்ளது.

4) கண்ணன் தாலாட்டு - 29 இல்லந்தோறும் ஒலிக்க வேண்டிய தாலாட்டுப் பாடல். இன்னிசைக்கு ஏற்ற எளிய இனிய தாலாட்டுப் பாடல்.

5) திருமலைத் திருப்புகழ் - 32

6) திருமலைச் சிந்து - 11

7) ஸ்ரீ வேங்கடேசன் சந்திரகலா மாலை - 16

8) ஸ்ரீ வேங்கடேசன் பலசந்த மாலை - 27

9) திருக்கடிகை அந்தாதி - 101

10) மதுரகவி திருப்புகழ் - 401

11) திருமலைப் பிரபந்தங்கள் - 250